120

T.N.L.A.D.
3.5.2000
V.101 No:2

(C)

D.
V.1,31 Poo.
Poo.101.
2.3316

120 —
2002

# 3–5–2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு .. .. | 319-320 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 320-352 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தமிழக மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது .. | 352-376 |
| * திரு. ஜி. நிஜாமுதீன் .. .. | 353-355 |
| திரு. இரா. பெர்னார்டு .. .. | 355-357 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 357-358 |
| திரு. வை. சிவபுண்ணியம் .. .. | 358-359 |
| திரு. பி.ஆர். சுந்தரம் .. .. | 359-361 |
| திரு. ஐ. கணேசன் .. .. | 361-362 |
| திரு. டி. மணி .. .. | 363-364 |
| திரு. ஏ.வி.ஏ. நாசர் .. .. | 364-365 |
| திரு. சி. வேலாயுதன் .. .. | 365-366 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி .. .. | 366-367 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் .. | 368-369 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. | 369-376 |

பக்கங்கள்

**4. அறிக்கைகள் அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு .. .. 377

**5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.**

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு .. } 377-477
(ஆ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல் }

* மாண்புமிகு திரு. கா.நா. நேரு .. .. 377, 384, 391, 394, 395,397, 403, 428-429, 433-434, 455-470.

திரு. ப. ரங்கநாதன் .. .. 392-394, 396-405.

திரு. ஜி.எல். வெங்கடாசலம் .. .. 405-411

* திரு. கே. சுப்பராயன் .. .. 411-418

திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் .. .. 418-423

திரு. இரா. விசுவநாதன் .. .. 423-431

திரு. ஐ. கணேசன் .. .. 432-436

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. 437-443

திரு. மு. அப்பாவு .. .. 443-446

* திரு. ம. சண்முகம் .. .. 446-449

* திரு. வி.கே. லட்சுமணன் .. .. 449-455

**6. அறிவிப்புகள்—**

(அ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு .. 391

(ஆ) பேரவை அலுவல்களில் மாற்றம் .. 477-478

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— .. .. 478**


223316

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 21, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 மே 3, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. டி.பி. ஏழுமலை அவர்கள் 30-4-2000 அன்று மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.பி. ஏழுமலை அவர்கள் 1952 முதல் 1957 வரை சைதாப்பேட்டை தனித் தொகுதியிலிருந்தும், 1957 முதல் 1962 மற்றும் 1962 முதல் 1967 வரை பொன்னேரி தனித் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும்,

அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 481, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**481—**

**காவல் துறையினர் குடும்பத்திற்கு உதவி**

***18050—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் கடமையாற்றும்போது சமூக விரோதிகளால் உயிர் துறக்கும் காவல் துறையினரின் குழந்தைகள் மேற்படிப்பு படிக்க உதவும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல் துறையில் கடமையாற்றும்போது வீரதீர செயல் புரிந்து உயிர் துறக்கும் காவல் துறையினரின் குழந்தைகளுக்கென மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகிய மேற்படிப்புகளில் சேர ஒவ்வொன்றிலும் தலா மூன்று இடங்களும், சட்டக் கல்வி பயில்வதற்கு இரண்டு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டம் ஏற்கெனவே அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், காவல் துறை உள்ளிட்ட அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால்,





அக்குடும்பத்தின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொள்ளாமல், புகுமுக வகுப்பிற்கு (தற்போதைய மேல்நிலைப் பள்ளிக்கல்வி இரண்டாம் ஆண்டு) மேல் உள்ள கலை, அறிவியல் மற்றும் தொழிற் கல்வியில், இறந்த அரசு ஊழியரின் குழந்தைகள் பட்டம் பெறுகின்றவரை, பெண் குழந்தைகளாக இருந்தால் திருமணம் நடைபெறுகின்ற வரை, இதில் எது முன்னதாக நடைபெறுகின்றதோ அதுவரை கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள் மற்றும் தங்கும் விடுதிக்கான கட்டணங்கள் ஆகியவற்றை அரசு ஏற்கின்ற திட்டமும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் உயிரிழந்த அந்தக் காவலர் குடும்பங்களைக் காப்பாற்ற முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். ஒரு காலத்திலே பட்ட மொட்டை மரமான மனைவி, எதிர்காலமற்ற குழந்தை, இருட்டறையில் குடும்பம் என்று சொல்லக்கூடிய அவல நிலையில் காவலர் குடும்பங்கள் இருந்தன. இன்று, நம்முடைய முதல்வர் கலைஞர் ஆட்சியிலே பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதை எண்ணும்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவலர்களும் உளமாரப் பாராட்டுவார்கள். அதேபோல, வனத் துறையிலே இருக்கக்கூடிய காவலர்களும், தீயணைப்புத் துறையிலே இருக்கக்கூடிய காவலர்களும் இறந்தால் அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற இந்தத் திட்டம் உதவுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே இத்திட்டம் அவர்களுக்கும் ஓரளவு உரியதாக இருக்க வேண்டும் என்றுதான் நான் கருதுகின்றேன். ஒருவேளை அப்படியில்லாத பட்சத்தில் இதை விரிவாக்குவதற்கும் அரசு முயற்சி மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமையாற்றும்போது மரணமுறுகின்ற காவலர்களுக்குரிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பொதுவாக, காவல் துறையினருக்குப் போதுமான ஊதியம் வழங்கப்படவில்லையென்ற ஒரு கருத்து இருக்கிறது. அது மற்ற

[2000 மே 3

அரசாங்க ஊழியர்களுக்கு இணையான அளவிலே இருப்பதில்லையோ என்ற ஓர் அச்சத்தைக் கிளப்புகிறார்கள். எனக்கு அதிலே முழுமையான விவரம் இல்லை. இருந்தாலும் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு ஊதிய உயர்வு, அதேபோல —Risk Allowance இதுமாதிரியான படிகளை உயர்த்திக் கொடுப்பதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுடைய நலனில் மிகுந்த அக்கறைகொண்டு, அவர்களுடைய ஊதியம்கூட மாதத்திற்கு எண்பது ரூபாய்தான் அடிப்படைச் சம்பளம் என்று இருந்த நிலையை மாற்றவும், அவர்களுடைய தேவைகளை உணர்ந்து, வசதிகளைப் பெருக்குவதற்கு ஏதுவாக, காவல் துறைக்கென இரண்டு Commission-களை நியமித்ததும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். முதலிலே ஆர்.ஏ. கோபால்சாமி அய்யங்கார், I.C.S. (Retired) அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவும், அதன்பின்னர் முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் I.A.S. அவர்களுடைய தலைமையிலே மற்றொரு குழுவும் அமைத்து, அவர்களுடைய பரிந்துரைகளையெல்லாம் ஏற்று, காவல் துறைக்குத் தேவையான பல நன்மைகளை வாரி வாரி வழங்கி வருவது இந்த அரசாகும். எண்பது ரூபாய் என்கின்ற அளவிலே இருந்த அவர்களுடைய மாதாந்திர அடிப்படை ஊதியத்தை முதன்முதலாக அடிப்படை ஊதியம் இருநூறு ரூபாய் என்று ஆக்கியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள் என்று கருதுகிறேன்.

காவலர்களுடைய துயர் போக்குவதற்காக ஒரு நாடகமே நடத்தி, அந்த நாடகத்திலே காவலர்களுக்காகப் பரிந்து பேசப்பட்டது என்பதற்காக அந்தக் கால ஆட்சியிலே அந்த நாடகமே தடைசெய்யப்பட்டது என்பதையும் மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்கள் உணர்வார்கள் என்றே நான் கருதுகின்றேன். எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், காவலர்களுடைய சம்பளத்தையோ அல்லது அவர்களுடைய நன்மைகளையோ பற்றிக் கவலைப்படாமல் இருக்காது. நிச்சயமாக அரசு ஊழியர்களுக்குச் சமமான வகையிலே அவர்களும் ஊதியம் பெறுகின்ற வழிவகைகள் காணப்படும். இப்பொழுதே காணப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.



2000 மே 3]

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்தம் குடும்பங்களுக்கு என்னென்ன சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன? இதிலே எத்தனை பேர் பயனடைந்தார்கள் என்பதைத் தங்கள் மூலம் முதல்வரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புச் சலுகைகள் என்கின்ற பெயரால் காவல் துறையினர் அரசு மருத்துமனைகளில் பெரிய வியாதிகளுக்கு, அறுவை சிகிச்சைகளுக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ள இயலாத நிலையிலுள்ளபோது, அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றால், அவர்களுக்கு உதவிட தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டம் இருக்கின்றது. ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு அரசு ஐம்பது இலட்சம் ரூபாய் வழங்கிவருகிறது. இந்தத் தொகை 21-5-1999 முதல் ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இந்த நிதிக்கு காவல் துறை ஊழியர்களிடமிருந்து மாதச் சந்தா பத்து ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

உள்நாட்டிலே சிகிச்சை செய்துகொள்ள அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை உதவி நிதியாக வழங்கப்படுகிறது. பிற நாடுகளில் சிகிச்சை பெற ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவியும், கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கு 10 சதவீதம் சாதாரண வட்டிக்கு கடன் உதவியும் அளிக்கப்படுகிறது. தனியார் மருத்துவமனைகளில் செய்யப்படும் இதய மாற்று அறுவை சிகிச்சை, நரம்பு அறுவை சிகிச்சை, புற்றுநோய், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகளுக்கு முக்கியமாக இந்நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது. இந்த வகையிலே பார்த்தால், ஆண்டுக் கணக்கில் எடுத்துக்கொண்டால்கூட, 1996-97-ல் 50 நபர்களுக்கு ஏறத்தாழ 42 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1997-98-ல் 97 நபர்களுக்கு ஏறத்தாழ 51 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1998-99-ல் 108 நபர்களுக்கு ஏறத்தாழ 83 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1999-2000-ல் 103 பேர்களுக்கு ஏறத்தாழ 62 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 482, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

482— [2000 மே 3

**உயர்நிலைப் பள்ளி**

***25685—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, நல்லூரில் இருக்கும் இளநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை திருத்தத்துடன் படிக்க பேரவைத் தலைவருடைய ஒப்புதல் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நல்லூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துரு பெறப்பட்டுள்ளது. அதுகுறித்து இயக்குநர் குழு ஆராய்ந்து முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 483, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

483—

**மொழிப்போர் தியாகிகள்**

***27741—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1965-ல் தமிழ்ப் பாதுகாப்புப் போராட்டத்தில் தீக்குளித்தும் நஞ்சுண்டும் இறந்த மொழிப்போர் தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பாடப்புத்தகத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?



2000 மே 3]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வரும் ஆண்டுகளில் புதிதாகப் பாடத் திட்டத்தை மாற்றி அமைக்கும்போதும், அதனைத் தொடர்ந்து பாடத் திட்டங்கள் எழுதும்போதும், பாடத்திட்ட வல்லுநர் குழுவினரை மொழிப் போர் தியாகிகளின் வரலாற்றைப் பாடத்திட்டத்தில் சேர்க்க முடியுமா என்று ஆலோசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டு மொழிக்காப்புப் போரில் தீக்குளித்தும், நஞ்சுண்டும் இறந்த கீழப்பளுவூர் சின்னசாமி, விராலிமலை சண்முகம், கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், கீரனூர் முத்து, ஆசிரியர் வீரப்பன், பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, மயிலாடுதுறை சாரங்கபாணி, சிவகங்கை ராசேந்திரன் ஆகிய இந்த வீரத் தியாகிகளினுடைய வரலாறுகள் இளைஞர்களுக்கு பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டியது இப்போது மிகமிக இன்றியமையாத தேவையாக இருக்கிறது. மொழி உணர்வும், நாட்டு உணர்வும் வளருவதற்கு இந்தத் தியாகிகளினுடைய வாழ்க்கை வரலாறு, கொடி காத்த குமரன் வாழ்க்கை வரலாறுபோல சொல்லித் தரப்பட வேண்டியது அவசியமாக உள்ள காரணத்தாலே, இதை வலியுறுத்தி, அரசு வரும் கல்வி ஆண்டிலேயே பாடத் திட்டத்திலே சேர்க்க முன்முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நேற்றைய மானியக் கோரிக்கையிலேகூட இந்த மொழிக்காப்புத் தியாகிகளுக்கு சென்னையிலே நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்து உள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மொழிப்போர் தியாகிகளினுடைய குடும்பங்கள், நிதி உதவி பெறுகின்ற தியாகிகளினுடைய குடும்பங்கள் பேருந்துகளிலே இலவசமாகப் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுமா? அதேபோல இந்த மொழிப் போர்த் தியாகிகளினுடைய வீர வணக்க நாளான சனவரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என்பது ஒரு சொற்பொழிவு அல்ல; 5 கேள்விகளைச் சேர்ந்தாற்போல கேட்கிறீர்கள். அதனால் உட்காருங்கள். (குறுக்கீடு) வரிசையாகக் கேட்டுக்கொண்டே இருந்தால் எப்படி நான் அனுமதிப்பது? மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

[2000 மே 3

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மிக முக்கியமான ஒரு கொள்கை அடிப்படையிலே அமைந்த கேள்வி. திரு. தீரன் அவர்களுடைய உணர்வு மதிக்கப்படத்தக்கது. ஆனால், பாடத்திட்டத்திலே அந்தத் தியாகிகளினுடைய வரலாற்றைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய பெயர்கள், விவரங்கள், வயது—அதுவரையிலேதான் பாடத் திட்டத்திலே இடம்பெறக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படி நிலைமை ஏற்படுகிறபோது, மொழிப் போருக்கு உயிர் துறந்தார்கள் என்பது மட்டுமல்ல, தங்கள் உயிரைத் தாங்களே அழித்துக் கொண்டார்கள் என்ற செய்தி மாணவர்களிடத்திலே, அந்த எண்ணம் வளரும். இந்த எண்ணம் வளரக்கூடாது என்று கருதிய அறிஞர் அண்ணா அவர்களே, அந்தக் காலக்கட்டத்திலேயே உயிரை இழப்பது தங்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வது முறையல்ல, அவசியமில்லை என்ற உணர்வை அண்ணா அவர்களே தெரிவித்தார்கள். அதன் பின்னர், ஒரு காலக்கட்டத்தில் அப்படிப் பலர் உயிரைத் தியாகம் செய்தபோது, கலைஞர் அவர்கள் "என்னிடத்திலே பற்று வைத்திருப்பதற்காக உயிரை விடுவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது; அப்படிப்பட்ட நிலைமை நாட்டில் ஏற்படக்கூடாது" என்று தெரிவித்தார்கள். மொழிக்காகப் போராடிய தலைவர்கள் அல்லது மொழி உணர்வை வளர்த்த அறிஞர்கள்—அவர்களுடைய வரலாற்றை, வரலாறு என்ற முறையில் ஒரு பாடத்திட்டத்தில் சேர்க்க முடியும். திரு. தீரன் அவர்கள் இங்கே ஒரே நிமிடத்தில் 5 பேர், 7 பேர் பெயர்களைச் சொன்னதைப்போல இந்தத் தியாகிகளைக் குறித்து பெயரும், வயதும், ஊரும்தான் சொல்ல முடியும். வேறு குறிப்பிடத்தக்க வரலாறு அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே இல்லை. அதற்கு மாறாக மறைமலையடிகளுடைய வரலாறோ, அறிஞர் அண்ணா வரலாறோ, நாவலர் சோமசுந்தர பாரதி வரலாறோ இடம் பெறுகிறபோது, மொழி உணர்வு நிச்சயமாக இடம்பெறும், இன்னும் சொல்லப்போனால், தேவநேயப் பாவாணர் போன்ற அறிஞர்களுடைய வரலாறு இடம்பெறக்கூடிய வாய்ப்பு உண்டு. மேலும் இந்த ஒரே நோக்கத்தில் பாடப் புத்தகத்தில் பாடங்களை இணைப்பது என்பது சற்றுக் கடினம். ஓர் ஆண்டிலே நாவலர் சோமசுந்தர பாரதி வரலாறோ அல்லது மறைமலையடிகளுடைய வாழ்க்கைக் குறிப்போ, அப்படித்தான் இடம்பெற முடியும். எனவே, பாடத் திட்டத்தில் இதைப் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை. மொழி உணர்வு என்பது பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டது. அதைவிட மேலானது. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய உணர்வில் கலந்து இருந்து மக்களிடத்திலே பதியவேண்டியது.



2000 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 484, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

484—

## மருத்துவமனை

***24000—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முத்துப்பேட்டைக்கு அருகில் பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனைகள் போதிய வசதிகளுடன் இயங்கிவரும் நிலையில் முத்துப்பேட்டை, ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 485, திரு. வி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்

485—

## தலைமை மருத்துவமனை

***26045—திரு. வி. அய்யலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 3

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மருத்துவமனையை தூத்துக்குடி மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி மருத்துவமனையில் தீக்காயங்கள் ஏற்பட்டு வருகின்றவர்களுக்கு என்று தனி வார்டு ஒதுக்கிக் கொடுத்து, A/C வசதி செய்து கொடுத்து, பிரேதப் பரிசோதனை அறைக்கும் குளிர்சாதன வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் இதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவில்பட்டி மிகவும் வளர்ச்சி அடையக்கூடிய பகுதி. அந்தப் பகுதியின் அருகிலுள்ள கிராமப் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்துதான் சிகிச்சை பெற வேண்டும். கன்னியாகுமரி நெடுஞ்சாலை அந்தப் பகுதியில் செல்வதாலும் தீப்பெட்டி ஆலைகள் அதிகமாக இருப்பதாலும், விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகிற சூழ்நிலை இருப்பதாலும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, மாவட்ட மருத்துவமனையாக உயர்த்திக் கொடுப்பதற்கு கருணை உள்ளத்தோடு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அய்யலுசாமி அவர்கள் கடந்த ஓராண்டு காலமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக உயர்த்தித் தர வேண்டுமென்ற வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து நான் முதலமைச்சரிடத்திலும் பேசியிருக்கிறேன். அந்த மாவட்டத்திலே, தூத்துக்குடியிலே மருத்துவக் கல்லூரி வருகின்ற காரணத்தினால், ஏதாவது ஓர் இடத்திலே மாவட்ட மருத்துவமனை தொடங்க



2000 மே 3]

வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையும் இருக்கிறபோது, திருச்செந்தூர் பகுதியில் மாவட்ட மருத்துவமனையை அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் வந்திருக்கிறது. அதேநேரத்தில் கோவில்பட்டிதான் மையமான இடம், அங்கேதான் ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் மாண்புமிகு உறுப்பினர் அய்யலுசாமி மூலமாகவும், வியாபாரிகள் மூலமாகவும் அரசுக்கு வந்திருக்கிறது. இருந்தாலும், இந்த இரண்டு இடங்களையும் பரிசீலித்து, இந்த இரண்டு இடங்களிலுமே மாவட்ட தலைமை மருத்துவமனைக்கான தகுதிகள் என்னென்ன இருக்கின்றனவோ, அத்தனைத் தகுதிகளையும் பரிசீலித்து, அத்தனை வசதிகளையும், அத்தனை படுக்கைகளையும் இரண்டு மருத்துவமனைகளுக்கும் கொடுப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தூத்துக்குடி பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே மருத்துவக் கல்லூரி வருகின்ற காரணத்தால் திருச்செந்தூரிலே தலைமை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டார்கள். கோவில்பட்டியிலும் கேட்டார்கள். ஆனால், தமிழக முதல்வர் அங்கு வந்திருந்தபோது, எங்களுடைய மாவட்டத்திற்கு வந்த நேரத்தில் இரண்டுமே தலைமை மருத்துவமனை அந்தஸ்துக்கு கொண்டு வரப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையில் திருச்செந்தூர் Union-ல் இருந்து 5 ஏக்கர் இடம் வேண்டுமென்று கேட்டார்கள். அந்த இடமும் கொடுத்தாகிவிட்டது. அதை தலைமை மருத்துவமனை அந்தஸ்துக்கு உயர்த்திக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதை அறிவித்தார்களோ அதைத்தான் நான் இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். இரண்டு இடங்களிலேயும் மாவட்ட மருத்துவமனைக்கு என்னென்ன அடிப்படையான வசதிகள், படுக்கைகள், அந்தத் துறைப் பிரிவுகளில் அமைக்கப்பட வேண்டுமோ, அத்தனையும் இரண்டு இடங்களிலேயும் அமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமை மருத்துவமனைகளைவிட, தாலுகா

[2000 மே 3

மருத்துவமனைக்கு வெளி நோயாளிகள் அதிகமாக வருகிறார்கள். வெளி நோயாளிகள் அதிகமாக வரக்கூடிய இத்தகைய தாலுகா மருத்துவமனைகளுக்கு, மாவட்ட மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களை—deputation என்று சொல்வார்கள்—மாற்றிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? உதாரணமாக ஸ்ரீவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு 10 மருத்துவர்கள் வேண்டும். 4 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். 2,500 வெளி நோயாளிகள் வருகிறார்கள். ஏழையெளிய, ஆதிதிராவிடர்கள், நெசவாளர்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். இதுபோன்ற இனங்களில் நடவடிக்கை உடனே எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல மாவட்ட மருத்துவமனைகளுக்கு வருகின்ற வெளி நோயாளிகளைப் போல சில இடங்களில் தாலுகா மருத்துவமனைகளிலும் வெளி நோயாளிகள் ஆயிரக்கணக்கில் வந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிப்பார்த்து இந்த அரசு தாலுகா மருத்துவமனைகளிலே வெளி நோயாளிகள் எண்ணிக்கை அதிகமானால், அதற்குரிய மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற ஒரு முடிவு எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தபோது ஸ்ரீவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் இப்போது 4 மருத்துவர்கள்தான் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த மருத்துவமனைக்கு 10 மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஏற்கெனவே ஒப்புதல் தந்திருந்ததால் இந்த மாதத்திலேயே மீதமுள்ளவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, இடையிலே தடைபட்டு இப்போது Letter of indent எல்லாம் வந்திருக்கிறது என்று அறிகிறேன். ஆனால் அதற்கு முன்பே வேலூரில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதாக அரசு அறிவித்து, அது இன்னும் நிலுவையிலே இருக்கிறது. இந்த ஆண்டு வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2000 மே 3]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலே இந்த அவையிலே தூத்துக்குடி பற்றியும், வேலூர் பற்றியும் அரசின் கொள்கைகளை அறிவித்திருக்கிறோம். இந்த ஆண்டு முதற்கட்டமாக வேலூரைவிட தூத்துக்குடிக்குத் தான் முன்னுரிமை தர வேண்டும். ஏனென்றால் அங்கே படுக்கைகள் அதிகம். அதுமட்டுமல்லாமல் அந்தச் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய எல்லா அடிப்படை வசதிகளும் அந்த மருத்துவமனையில் இருக்கின்றன. எனவே, அதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அடுத்து, வேலூ[illegible] பற்றி நாளைய தினம் மருத்துவத் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 486, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**486—**

**மரங்களைப் பாதுகாத்தல்**

**•9381—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் கிராமத்திலுள்ள செம்மனூர், தைவாகண்டலூர், கோட்டாங்கல் ஆகிய ஏரிகளிலுள்ள மரங்களைச் சமூக விரோதிகள் வெட்டியெடுத்துச் செல்வதைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள ஏரிகளில் உள்ள மரங்களை சமூக விரோதிகள் எடுத்துச் செல்வதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வினா எண் 487, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 மே 3

487—

## குடிநீர் வசதி

***14603—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் ஊராட்சி ஒன்றியம், பாலமதி பஞ்சாயத்தில், பாலமதி, செட்டேரி கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) ஆம்.*

*(ஆ) வேலூர் ஒன்றியத்தில் பாலமதி ஊராட்சியை சேர்ந்த பாலமதி மற்றும் செட்டேரி கிராமங்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1999-2000 ஆண்டு மேற்கொள்ளப்பட்டு நீர் ஆதாரம் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிவுற்று, திட்டத்திற்கான இதரப் பணிகள் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலமதி மற்றும் செட்டேரி போன்றவை மலைக் கிராமங்கள். இந்த இடங்களில் தண்ணீர் போதாத காரணத்தினால் பலமுறை வற்புறுத்தி இப்போது நீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைவிட தானங்குளம் என்ற இடத்தில் நன்றாக நீர் ஆதாரம் இருக்கிறது. அந்த இடத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்தால்தான் இந்த இரண்டு கிராமங்களுக்கும் நிரந்தரமாக தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க இயலும். ஆகவே, நீர் ஆதாரத்தை கண்டுபிடித்ததாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது எப்போது செயல்படுத்தப்படும்? எப்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எல்லாம் கட்டி தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2000 மே 3]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் ஒன்றியத்தில், பாலமதி ஊராட்சியை சேர்ந்த பாலமதி மற்றும் செட்டேரி கிராமங்களில் உள்ள குடியிருப்புகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு 1999-2000 ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றும் பொருட்டு நீர் ஆதாரமாக போதிராஜாகுளம் அருகிலே ஒரு திறந்தவெளி கிணறு உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. நீர் ஆதாரம் உருவாக்கும் பணிகள் முடிவுற்றதும், நீரின் தரம், மற்றும் நீரின் வரத்து, அளவு ஆகியவைகளைப் பற்றி உறுதி செய்யப்பட்டவுடன் விரிவான மதிப்பீடுகள் தயாரித்து திட்டப் பணிகள் இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 488, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

488—

## தடுப்பு அணை

***22265—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, சிங்கிலிமேட்டில் குடும்பகரட்டுப்பள்ளத்தில் தடுப்பு அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி சிங்கிலிமேட்டில் குடும்பக்கரட்டுப்பள்ளத்தில் தடுப்பு அணை கட்டும் பணி சாத்தியமில்லை.*

[2000 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இந்தப் பொருள் குறித்தா துணை வினா கேட்கப் போகிறீர்கள்?

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? சரி, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்திலுள்ள சித்தாற்று ஓடையிலே அணை கட்டுவதற்கு அங்கீகாரம் கொடுத்த பிறகும்கூட, நிலம் கையகப்படுத்துகிறபோது அதிகமான நட்டஈடு கேட்ட காரணத்தால் அங்கே தடுப்பு அணைகள் 4 இடங்களில் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடத்தில் உடனடியாக உத்தரவு போட்டு தெரிவித்தும்கூட, கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நான் முயற்சி செய்தும்கூட ஒன்றும் நடைபெறவில்லை. அந்தப் பகுதி விவசாயிகளுடைய கிணறுகள் பயன்பெறுவதற்கு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்றவகையில் இந்த நிதியாண்டிலாவது சித்தாற்றின் ஓடையிலே 4 இடங்களில் தடுப்பு அணை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டவணைப்புதூருக்குப் பதிலாக சித்தாற்றின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது உண்மை. இந்த ஆண்டு அந்தத் தடுப்பு அணைகளைக் கட்டுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு இருக்கிறேன். அவை கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 489, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.



2000 மே 3]

**489—**

**பம்பையாறு திட்டம்**

***26821—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் தொகுதியில் பம்பையாறு திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் வட்டம் மற்றும் மாத்தூர் கிராமத்தில் திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து பிரிந்து செல்லும் பம்பையாற்றின் குறுக்கே மதகு அமைக்கும் திட்டப் பணி எதுவும் ஆய்வில் இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பம்பையாறுத் திட்டம் குறித்து கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு பிரெஞ்சு அரசாங்கத்திற்கும், ஆங்கில அரசாங்கத்திற்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டு, கண்டமங்கலம் பகுதியிலே 7 ஏரிகளும், புதுவை மாநிலத்திலே 5 ஏரிகளும் பயன்படவேண்டும் என்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றுவது 60 ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டுள்ளது. மீண்டும், மீண்டும் இந்த அவையிலே 3 தடவை இந்த வினா, இந்த மன்றத்திற்கு வந்திருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி விவசாய மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்காக இதை மீண்டும் பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்த அணைகட்டினால், பாண்டிச்சேரி மாநிலத்தில் 13 ஏரிகள் பயன்பெறும்; ஆகையினாலே இரு மாநிலங்களுக்கும் உதவும் என்று ஒரு காலத்திலே கணக்கிடப்பட்டது. ஆனால், பாண்டிச்சேரி மாநிலம் தனக்கே முன்னுரிமை வேண்டும் என்று கேட்ட காரணத்தால், அத்திட்டம் அப்போதே கைவிடப்பட்டது. அடுத்து, இரண்டாவது மேல்வாடிக் கிராமத்தின் அருகே ஓர் அணை கட்டுவது என்று

முடிவெடுத்து, அதன்மூலம் 12 ஏரிகளுக்கு தண்ணீர் பாய்ச்சலாம் என்று பார்த்தோம். ஆனாலும் Benefit cost ratio சரியில்லை என்று தான் அதையும் விட்டுவிட்டார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து இதை வற்புறுத்தி வருகிற காரணத்தால், மாத்தூர் கிராமத்தின் அருகேயும், திருக்கோவிலூர் அணைக்கட்டிற்கு பிரிந்து செல்லும் பம்பை கால்வாயின் குறுக்கே ஒரு மதகினைக் கட்டி அதன் மூலமாகவும் வடலூர், திருமங்கலம், முத்தம்பட்டி ஆகிய ஏரிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்காக மதிப்பீடு ரூபாய் 185 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 490, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**490—**

**பேருந்து போக்குவரத்து வசதி**

***21906—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெங்களூரிலிருந்து கலிங்காவரத்திற்கு ஓசூர், சூளகிரி வழியாக தமிழ்நாடு மற்றும் கர்நாடக அரசுகள் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, Kalingavaram is a remote area and a lot of vegetables and cocoons are being produced in that area. They are finding it very difficult to transport it to Karnataka State where Bangalore and Kanakpura are selling points. They have got all relationship near Bangalore and they have to go to Bangalore for Educational and medical purposes.



Previously K.S.R.T.C. i.e. Karnataka State Road Transport Corporation has surveyed and sanctioned a bus and due to some reasons they have stopped that bus. May I know from the Hon. Minister for Transport whether steps will be taken to release a bus from our Corporation in consultation with K.S.R.T.C. at least on a reciprocal basis?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாநிலங்களுக்கு இடையே ஏற்படுகிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயக்குகின்ற பேருந்துகள் ஆகும். கலிங்காவரத்தில் இருந்து கிருஷ்ணகிரிக்கு, தடம் எண் 36 மூலமாக 12 நடைகள் பேருந்துகள் இருக்கின்றன. கிருஷ்ணகிரி வந்து அவர்கள் ஓசூர் செல்லலாம், பெங்களூருக்கும் செல்லலாம். நேரடியாக கலிங்காவரத்திலேயிருந்து பெங்களூருக்குச் செல்வதற்கான அடர்த்தி இருந்தாலும்கூட இது மாநிலங்கள் இடையிலே ஏற்படுகிற ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இப்போது செய்யப்படவில்லை. அடுத்து வருகிற ஒப்பந்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நாம் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 491, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**491—**

**பேருந்து இயக்குதல்**

***24987—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை-பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து வாடிப்பட்டி வழியாக குலசேகரன்கோட்டை கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த அரசு நகரப் பேருந்து 71-சி-யை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து வாடிப்பட்டி வழியாக குலசேகரன்கோட்டை கிராமத்திற்கு வழித்தடம் 71-சி மூலம் நான்கு தனிச் சுற்றுகள் இயக்கப்பட்டு வந்தன. குலசேகரன்கோட்டை விலக்கு

[2000 மே 3

முதல் குலசேகரன்கோட்டை வரை உள்ள சாலை சேதமடைந்துள்ளதால் ஜூன் 1999 முதல் பேருந்து இயக்க முடியாத நிலை உள்ளது. பேருந்து இயக்கம் தற்காலிகமாக வாடிப்பட்டி வரை இயக்கப்படுகிறது. சாலையை சரி செய்ய வாடிப்பட்டி ஒன்றிய ஆணையாளருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. சாலை சரி செய்யப்பட்டபின் பேருந்து மீண்டும் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 492, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

492—

**நெடுஞ்சாலையைச் சீரமைத்தல்**

***30966—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதியிலுள்ள தாழையூத்து நகர் (சங்கர் நகர்) இராஜவல்லிபுரம் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்திருப்பதால் அதனைச் சீரமைத்துச் செப்பனிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், அச்சாலை சீரமைக்கப்பட்டுவிட்டது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நெல்லைத் தொகுதி Urban Constituency Corporation—அதிகமான இடம். அதிலே பிரச்சினை இல்லை. தாழையூத்து நகர், இராஜவல்லிபுரம் அதேபோல் திம்மராஜபுரம்—மணப்பாறை வீடு இரண்டும் நீளமான சாலைகள். அவற்றை நபார்டு திட்டத்தின்கீழ் எடுத்து நிரந்தரமாக சீரமைக்க வேண்டுமென்று அமைச்சரிடத்திலே மனு தந்தேன். அந்த இரண்டு இந்த ஆண்டு நபார்டு திட்டத்தில் எடுத்து சீரமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



2000 மே 3]

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய சாலையான தாழையூத்து நகர்—இராஜவல்லிபுரம் சாலையும், இரயில்வே பீடர் ரோடு என்ற அந்தச் சாலையும், இரண்டும் ஒன்றுதான். இந்த சாலை 7.50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சாலையை நபார்டு திட்டத்திலே எடுத்து மேம்படுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு, நபார்டு திட்டத்தில் சாலைகளை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, பாலங்களைத்தான் எடுத்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். கிராமப்புற இணைப்புச் சாலைகளுக்கு நபார்டு திட்டம், இதுவரையில் சாலைகளே இல்லாத பகுதி, அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துகிற அந்தத் திட்டம், ஆகிய இந்தக் கிராமப்புற இணைப்புச் சாலைத் திட்டத்திற்குத்தான் இந்த ஆண்டு நபார்டு வங்கி முன்னுரிமை அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறது. என்றாலும் இதர மாவட்டச் சாலைகள் என்று கருதப்படுகின்ற O.D.R. சாலைகளையும் மேம்படுத்துவதற்கு நபார்டு வங்கியிலிருந்து உதவி வேண்டுமென்று தமிழக அரசின் நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த முடிவு தெரிந்த பிறகுதான் இதுபற்றிக் கூறமுடியும்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1969ஆம் ஆண்டு நெல்லையிலே ஈரடுக்கு மேம்பாலம் அமைக்கப்பட்டது. நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்போது 1½ கோடி ரூபாயில் அதைச் சீரமைக்கின்ற பணியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அந்த வேலை முடிய ஓராண்டுகாலம் ஆகும் போல் தெரிகிறது. பிரதான சாலையில் அந்தப் பாலம் இருக்கின்ற காரணத்தால், அதற்கு மாற்று வழிப் பாதையாக—அமைச்சர் அவர்களே வந்து பார்த்தார்கள்—ஸ்ரீபுரம்—தச்சநல்லூர் சிவசக்தி தியேட்டர் வழியாக செல்லுகின்ற சாலையில் நிலம் கையகப்படுத்துவதில் ஏதோ தகராறு இருப்பதாக 10 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை விரைவாகப் போடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 மே 3

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் கேட்கின்ற அந்தச் சாலை அமைப்புப் பணியை நானே நேரில் சென்று பார்த்தேன். தச்சநல்லூர் வழியாக வரக்கூடிய அந்தச் சாலை புதிதாக அமைக்க வேண்டிய ஒரு சாலையாக, புறவழிச் சாலையைப் போன்று இருக்கிறது. அதற்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அது இன்னும் முடிவடையவில்லை. இந்த ஈரடுக்கு மேம்பாலப் பணி முடிய ஓராண்டு ஆகும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். 3 மாத காலத்திலே முடிக்க வேண்டுமென்று ஒப்பந்தக்காரருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சாலையை போடுவதற்கு முன்பு ஈரடுக்கு பாலத்தினுடைய அந்தப் பழுது பார்க்கிற பணி முடிவடைந்துவிடும் என்று நான் கருதுகின்றேன் என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினருடைய அந்த வேண்டுகோள் புறக்கணிக்கப்படவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, பரிசீலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 493, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

493—

**பால் குளிரூட்டும் நிலையம்**

***24194—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டம், ஆர்.கே. பேட்டையில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிப்பட்டு வட்டம், ஆர்.கே. பேட்டையில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற



2000 மே 3]

எங்களுடைய பகுதியிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதோடு, நம்முடைய ஆவின் நிறுவனம் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் நட்டத்திலே இயங்குவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தேசிய பால்வள வாரியம் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய பால் பண்ணையாக விளங்குகின்ற சோழிங்கநல்லூரிலே இருக்கின்ற பால் பண்ணையை எடுத்து தாங்கள் நடத்துவதாக முன்வந்தபோது, அதை அரசு மறுத்திருக்கிறது. மீண்டும் அந்த முடிவை அரசு பரிசீலிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். புது டில்லியில் இருக்கிற Mother's Dairy இன்றைக்கு நாட்டிலேயே தலைசிறந்த பால் பண்ணையாக விளங்குகிறது. அந்த வகையிலே, சோழிங்கநல்லூரிலே இருக்கின்ற பால் பண்ணையை அவ்வண்ணம் ஆக்குவதற்கு உள்ள வாய்ப்பை N.D.D.C.-க்கு நம்முடைய அரசு வழங்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் காக்களூரில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பால் குளிரூட்டு நிலையத்திற்கு தற்போது நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் பால்தான் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. காக்களூரில் பால் குளிரூட்டு நிலையத்தின் முழு கொள்ளளவுக்கும் பால் கொள்முதல் செய்ய இயலாத நிலையில் ஆர்.கே. பேட்டையில் புதிய பால் குளிரூட்டு நிலையம் அமைக்க வாய்ப்பில்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், சோழிங்கநல்லூர் பால் பண்ணையை N.D.D.C.-ல் கேட்டார்கள். நம்முடைய அரசு அதை நாங்களே நடத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறது. சோழிங்கநல்லூரிலே உள்ள பால் பண்ணையை நம்முடைய தமிழக அரசுதான் நடத்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 494, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[2000 மே 3

494—

**மருத்துவமனைக்கு நிலம்**

***24734—திரு. நா. பெரியசாமி:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறையில் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி மருத்துவமனை அமைப்புக்காக நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முதல் மருத்துவமனை செயல்படத் தொடங்கும்?*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெருந்துறையில் மருந்தகம் அமைக்க 21-10-1999 நாளிட்ட, 179 எண்ணிட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மருத்துவ ஏற்பாடுகள் (Medical arrangements) செய்வது குறித்த சான்றிதழ் இயக்குநரிடமிருந்து பெற்று, அச்சான்றிதழ் புதுடில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இனி இது குறித்து அக்கழகம் அறிவிக்கை ஒன்றை அரசிதழில் வெளியிடும். இதன்பின்னர் வாடகைக் கட்டடம் ஒன்று தேர்வு செய்யப்பட்டு மருந்தகம் இயங்கத் தொடங்கும். அதன் பின்னரே இம்மருந்தகத்தைப் புதிதாகக் கட்ட நிலம் தேர்வு செய்யும் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை பகுதியில் நூற்பாலைத் தொழிலாளர்களும், கார் பழுதுநீக்குகிற பட்டறைத் தொழிலாளர்களும், பேக்கரி தொழிலாளர்களும் ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மேலே இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் மத்திய அமைப்பிலே விரைந்து அனுமதியைப் பெற்று அங்கே மருந்தகம் செயல்பட அமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல,



2000 மே 3]

எண்ணிக்கை வேறுபாடு இருந்தாலும், 36-க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் பெருந்துறைப் பகுதியிலே இருக்கின்றன. எண்ணிக்கை வேறுபட்டாலும், உங்கள் கணக்குப்படி, 2,800 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே மருந்தகம் அமைக்கப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஈரோட்டிலே மட்டும்தான் இருக்கிறது; 20 கிலோ மீட்டர் தூரம். ஆகவே, தொழிலாளர்களுக்குத் தேவை. அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறது. டெல்லிக்கு அனுப்பி இருக்கிறோம். அறிவிக்கை— Notification—Gazette-லே வெளியான உடனே வாடகைக் கட்டடம் தேர்வு செய்யப்படும். மருந்தகம் தொடங்கப்படும். பின்பு Site Selection Committee இடத்தை தேர்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 495, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

495—

**சார்பு நீதிமன்றம்**

***25240—திரு. குழந்தை தமிழரசன்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்து இருக்கிறது. தற்போது உளுந்தூர்பேட்டையில் உரிமையியல் நீதிமன்றம், முதன்மை உரிமையியல் நீதிமன்றம், உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் ஆகியவை இணைந்த மூன்று உரிமையியல் நீதிமன்றங்கள் அங்கே இயங்கி வருகின்றன. தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படுகின்ற விபத்துக்களால் எழுகின்ற எம்.சி.ஓ.பி. வழக்குகள், நில ஆர்ஜித வழக்குகள் இவை எல்லாம், மூன்று உரிமையியல் நீதிமன்றங்களில்

எழுகின்ற அப்பீல் வழக்குகள் எல்லாம் இப்போது விழுப்புரத்திலே இருக்கின்ற சார்பு நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்டு வருகின்றன. அங்கே சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று நானும், வழக்கறிஞர் சங்கத்தினரும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து வலியுறுத்தி மனு கொடுத்திருக்கிறோம். அந்த வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றத்திலேயும் தலைமை நீதிபதியைச் சந்தித்து மூன்றுமுறை மனு கொடுத்திருக்கிறார்கள். எனவே, முன்னுரிமை கொடுத்து—அங்கே இருக்கின்றவர்கள் இப்போது 75 கிலோ மீட்டர் சென்று தங்களுடைய வழக்குகளை நடத்தி வருகிறார்கள். விழுப்புரம் சென்று நடத்தி வருகிறார்கள். அதன் காரணமாக உளுந்தூர்பேட்டையிலேயே சார்பு நீதிமன்றம் அமைக்க மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருக்கோயிலூர் வருவாய்க் கோட்டத்தில் எந்தவிதமான சார்பு நீதிமன்றமும் இல்லை. அரசு நியதிப்படி ஒரு வருவாய்க் கோட்டத்திலே ஒரு சார்பு நீதிமன்றம் இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே முன்னுரிமை கொடுத்து, உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் விரைவில் திறக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பத்தில் என்னிடத்திலே விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பிலும் என்னிடத்திலே விண்ணப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் ஒத்துக்கொள்கிறேன். அதேபோன்று, உளுந்தூர்பேட்டையில் மூன்று நீதிமன்றங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள சொன்னார்கள். உண்மையிலேயே அங்கே நான்கு நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதேபோன்று, திருக்கோயிலூரில் இரண்டு நீதிமன்றங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைபோன்று, திருக்கோயிலூர் வருவாய்க் கோட்டத்தில் ஒரு Sub Court, சார்பு நீதிமன்றம் இல்லை என்பது உண்மை. அவருடைய கோரிக்கை நியாயமானது என்பதும் உண்மை. நிதிநிலை இல்லை என்பதும் உண்மை. அதனாலேதான் திறக்கப்படவில்லை என்பதும் உண்மை. இதைத்தான் அவருக்கு நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *496*, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



*முற்பகல் 10-10*

**496—**

**நீதிமன்றங்கள்**

***29551-அ—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத் தலைமையிடத்தில், குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத் தலைமையிடத்தில், உரிமையியல் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஒரு புதிய மாவட்டம். அதிலே, திருவாரூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி போன்ற இடங்களிலே எல்லாம் நீதிமன்றங்கள் இருக்கின்றன. குடவாசல் என்பது அந்த மாவட்டத்தினுடைய வடக்குப் பகுதியிலே, ஒதுங்கி விடுகிற பகுதியாக அமைந்து விடுகிறது. மேலும், குடவாசல் ஒரு வட்டத் தலைநகரம். குடவாசல், கொரடாச்சேரி, வலங்கைமான் ஆகிய பகுதிகளிலே இருக்கிறவர்கள் அங்கே நீதிமன்றம் அமைந்தால் மிகவும் நன்மையாக இருக்குமென்று எதிர்பார்க்கிறார்கள். மேலும், குடவாசலில், ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கோட்டம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, நான்காண்டுகளாக கோரிக்கை வைத்திருக்கிறோம். எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, குடவாசலில் குற்றவியல், உரிமையியல் நீதிமன்றம் அமைக்க, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மே 3

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசலிலே நீதிமன்றம் இல்லை என்பது உண்மை. அதன் தேவைகளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துகிறார்கள். ஆனால், உயர்நீதிமன்றத்திலே எனக்குத் தந்திருக்கிற குறிப்பில் "The Registrar, High Court, Madras has since stated that cases are not sufficient for the constitution of the Court at Kudavasal" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே ஒரு நீதிமன்றத்தைத் திறப்பதற்குத் தேவையான வழக்குகள் இல்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற கருத்து உண்மையாக இருக்குமானால், அதுபற்றி பரிசீலித்து, குடவாசலில் நீதிமன்றம் அமைக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டத்திற்கு ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் 1997-98ஆம் ஆண்டு அறிவித்தார்கள். அதன்படி, பொறையாறிலே குற்றவியல் நீதிமன்றம் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அது என்ன ஆயிற்று? அதைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மீண்டும் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தில், மாவட்ட தலைமை நீதிமன்றமும், கோட்டத்திலே சார்பு நீதிமன்றமும், வட்டத் தலைநகரத்திலே ஏதாவது ஒரு உரிமையியல் நீதிமன்றம் அல்லது குற்றவியல் நீதிமன்றமும் குறைந்தபட்சம் அமைக்க வேண்டும் என்பது ஆசை. அந்த ஆசையின் அடிப்படையில், அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான், ஒவ்வோர் ஆண்டும், அரசு, நீதிமன்றங்களை அனுமதித்துக் கொண்டு வருகிறது. இன்னும் சில வட்டங்களில்தான் கொடுக்கப்படாமல் இருக்கிறது. என்றாலும், நான் மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டதைப் போன்று, வரலாற்றிலேயே அதிகமான நீதிமன்றங்களை, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் தந்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு நினைவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.



2000 மே 3]

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி, தாலுகாவினுடைய தலைநகரம். ஏறக்குறைய 25 ஆண்டுகளாகத் தனி வட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அங்கே இதுவரை நீதிமன்றம் தொடங்கப்படவில்லை. 2 ஆண்டுகளுக்கு முன்பு, தஞ்சை மாவட்டத் தலைமை நீதிபதி, பேராவூரணிக்கு வருகை தந்து, அங்கே நீதிமன்றத்தைத் தொடங்குவதற்கான இடங்களையெல்லாம் தேர்வு செய்தார். ஆனால், இதுவரை அங்கே நீதிமன்றம் தொடங்கப்படவில்லை. விரைவில், அங்கே நீதிமன்றம் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் நீதிமன்றம் திறப்பது குறித்து, என்னிடத்திலே எந்தக் குறிப்பும் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி விவரமாக அறிக்கையைக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 497, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

497—

**கணினிப் பயிற்சி**

***21376—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளர் சீரமைப்புத் துறை மேல்நிலைப் பள்ளிகளில், கணினிப் பயிற்சி அளிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ், மதுரை மாவட்டத்தில் இயங்கும் செக்கானூரணி, மேலக்கால், நாட்டமங்கலம், தும்மகுண்டு, பாப்பாபட்டி ஆகிய மேல்நிலைப் பள்ளிகளிலும், தேனி மாவட்டத்தில் இயங்கும் வெள்ளையம்மாள்புரம் மேல்நிலைப் பள்ளியிலும், 1999-2000ஆம் கல்வி ஆண்டு முதல் கணினி பாடம் விருப்பப் பாடமாகக் கற்றுத் தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2000 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு, இருக்கையில் இல்லை.

வினா எண் *498*, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**498—**

**கட்டட வசதி**

***29931—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, முத்துராமலிங்கபுரத்தில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டட வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, முத்துராமலிங்கபுரத்தில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் திருச்சுளி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய முத்துராமலிங்கபுரம், அந்த ஒன்றியத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய ஊர்களில் ஒன்று. அங்கே இருக்கக்கூடிய பள்ளியிலே சுமார் 600 மாணவ மாணவியர் பயின்று கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே, சுற்றுவட்டாரத்திலே இருந்து நிறைய மாணவர்கள் அங்கே வரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் அங்கே புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைத்து தரப்பட்டது. அதற்கு நன்றி



2000 மே 3]

தெரிவிக்கக்கூடிய இந்த நிலையிலே, வரக்கூடிய ஆண்டிலே, அவர்களுக்கு அங்கே கட்டட வசதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா? அதற்குத் தேவையான இடவசதிகளையெல்லாம் அந்த ஊர் மக்களே இப்போது அரசிடத்திலே ஒப்படைத்து அனுப்பியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அங்கே இந்த ஆண்டு கட்டட வசதி ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *499*, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**499—**

**பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம்**

***18845—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் குஜிலியம்பாறை பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும், பழனி பதிவு மாவட்டம், குஜிலியம்பாறை பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு, அரசு கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மே 3

**திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்திலே 18 கிராமப் பஞ்சாயத்துகளும், ஒரு டவுன் பஞ்சாயத்தும் இருக்கின்றன. நிறைய விவசாயிகள் நஞ்சை நிலம், புஞ்சை நிலம், கட்டிய வீடு வாங்கி, வீட்டு மனை வாங்கி இவற்றை அந்த குஜிலியம்பாறையில் இருக்கிற பத்திரப் பதிவு அலுவலகத்திலே பதிவு செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, அரசாங்க இடம் புறம்போக்காக நிறைய இருப்பதாலும், இந்த ஆண்டு நிதியிலே கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, குஜிலியம்பாறையிலே ஒரு ஆண்டுக்கு மொத்தம் 758 ஆவணங்கள்தான் பதிவாகின்றன. குறைந்தபட்சம் ஒரு சார் பதிவு அலுவலகத்திற்கு 2,000 ஆவணங்கள் பதிவாக வேண்டுமென்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. அங்கே குறைவாகத்தான் ஆவணங்கள் பதிவாகின்றன. இதிலே, தமிழகம் முழுவதுமாக இருக்கக்கூடிய சார் பதிவு அலுவலகங்களிலே பழுதடைந்து இருப்பவைகளில், அதிக வருமானம் உள்ளதைக் கணக்கிலே கொண்டுதான் வருகின்ற காலகட்டத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 500, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர்.

**500—**

**கால்நடை மருத்துவமனை**

***29839—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சி, பரசேரியில் அமைந்துள்ள கிளை கால்நடை பராமரிப்பு நிலையத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவு பெறும்?



2000 மே 3]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சியில், பரசேரியில் அமைந்துள்ள கிளை கால்நடை பராமரிப்பு நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரசேரியினுடைய சுற்று வட்டாரத்தில் உள்ள எந்தப் பஞ்சாயத்திலும் கால்நடை மருத்துவமனை இல்லை என்பது மாத்திரமல்ல, சுற்றியிருக்கக்கூடிய கிட்டத்தட்ட 18, 20 ஊர்கள், அதாவது புன்னவிளை, எங்களது ஊர் கீழக்கருப்புக்கோடு, மேலக்கருப்புக்கோடு, பரசேரி, வில்லுக்குறி, முல்லைவிளை, தேன்குறி போன்ற அனைத்து ஊர்களும் விவசாயிகள் அதிகமாக வாழக்கூடிய ஊர்களாகும். இந்தப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உள்ளன. அடிக்கடி கால்நடைகளுக்கு நோய் வரும்போது, தேசிய நெடுஞ்சாலை வழியாக அனைத்துக் கால்நடைகளையும் அழைத்து வருவது, மிகவும் சிரமமாக இருக்கிறது. தரமான மாடுகளை அந்த வழியாக அழைத்து வருவது ஆபத்தாகக் கூட இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த பரசேரி கால்நடை ஆஸ்பத்திரிக்கு ஊர் பொதுமக்களாகவே, 1 ஏக்கர் இடம் வாங்கிக் கொடுத்து, ஊர் மக்களுடைய நன்கொடையின் சார்பில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால், அங்கு கால்நடை மருந்தகம் கட்டப்பட்டது. எனவே, அந்த அவசியத்தை கருதி, மறுபரிசீலனை செய்து, அதை மருத்துவமனையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று மீண்டும் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை கோட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் வில்லுக்குறி பேரூராட்சியில், பரசேரி என்ற கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் பரிந்துரையின்பேரில், வில்லுக்குறி கிராமத்தில் 23-1-1998 முதல் பார்வை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், பரசேரி கிராமம் அமைந்துள்ள குருத்தன்கோடு ஊராட்சியில் தக்கலை என்ற இடத்தில்

[2000 மே 3

கால்நடை மருத்துவமனையும், திங்கள்சந்தை, குருத்தன்கோடு ஆகிய 2 இடங்களில் கால்நடை மருந்தகங்களும், கீழ்விளை, மணவாளக்குறிச்சி, வெள்ளிச்சந்தை ஆகிய 3 இடங்களில் கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே மண்டைக்காடு, சேரமங்கலம், ஈசன்தெங்கு ஆகிய மூன்று இடங்களில் பார்வை கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த சிறப்புக் கால்நடைப பராமரிப்புத் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதியிலே இருக்கிற கால்நடைகளுக்கெல்லாம் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. எனினும், எதிர்வரும் ஆண்டுகளில் கால்நடைகளின் எண்ணிக்கையையும், அரசின் நிதி நிலையையும் கருத்தில்கொண்டு, பரசேரி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி *இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழக மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. மு. அப்பாவு ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானங்களும், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. வேலாயுதன், திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் கவன ஈர்ப்புகளும், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. நா. பெரியசாமி, திரு. ஏ.வி.ஏ. நாசர், திரு. ஐ. கணேசன், திரு. இரா. பொன்னார்டு ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்புகளும், இன்று காலையிலே திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் அறிவிப்புகளும் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். ஏராளமான உறுப்பினர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, தொகுதி சட்டமன்ற



2000 மே 3] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர் என்ற முறையிலே, முதலில் திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களை அழைக்கின்றேன். மற்றவர்கள் எல்லாம் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. ஜி. நிஜாமுதீன்.

முற்பகல் 10-20

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு, நாகை அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம் கிராமத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 6 பேர்களை சிங்கள இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதன் காரணமாக, அந்தப் படகில் சென்ற குமார், முனுசாமி, அஞ்சப்பன் ஆகியோர் அந்தப் படகிலேயே உயிர் இழந்திருக்கின்றார்கள். வேலுசாமி என்பவர் பலத்த காயங்களுடன் தஞ்சை மருத்துவமனையிலே சிசிச்சைப் பெற்று வருகின்றார். அவர்களுடன் சென்ற குமார், சந்திரசேகர், அரிச்சந்திரன் ஆகியோர் அந்த நால்வரையும் பத்திரமாகக் கரை சேர்த்திருக்கின்றார்கள். சிங்கள இராணுவம் எல்லை தாண்டி வந்து, இப்படி அட்டூழியங்களைச் செய்வது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. 1988-லிருந்து இன்றுவரை 128 பேர்கள் நம் தமிழர்கள் இதுபோன்று சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் நாகையைச் சேர்ந்த மீனவர்கள் மாத்திரம் சுமார் 54 பேர்கள் ஆகும். 1993-லிருந்து இன்றுவரை நாகை மண்டலத்திலே, இதுபோன்ற துப்பாக்கிச் சூடுகள் 26 சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இவற்றில் இறப்பு மாத்திரம் 29 பேர்கள். பலத்த காயம் அடைந்தவர்கள் 40 பேர்கள். இப்படி, தமிழ் இனத்தையே அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இலங்கை அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கையிலுள்ள தமிழர்களைத்தான் அழிக்கிறார்கள் என்று சொன்னால், அதையும் தாண்டி எல்லை தாண்டி, நமது பகுதிக்குள்ளே வந்து, இந்தப் பகுதியிலுள்ள மீனவர்களையும் சுட்டுத் தள்ளுவது அவர்களுடைய வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவத்திற்கு, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சாவிற்கு வந்திருந்து, இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட மறுநாளே, அரசு அதற்கான உதவித்தொகையை இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு, ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கியிருக்கிறது. அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்திலே நான் மற்றொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். இதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 மே 3

நாகூரிலேயிருந்து சென்ற ஒரு மீனவரை, இதேபோன்று, இலங்கை இராணுவம் சுட்டுத் தள்ளியது. அதற்கு நான் ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருந்தேன். சிறு, சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் கவன ஈர்ப்பை எடுத்து, எதையும் தட்டிக் கழிக்காமல் பதில் சொல்கின்ற இந்த அரசு, ஏனோ தெரியவில்லை. அந்தக் கவன ஈர்ப்பிற்கு மாநில அரசு நேரடி பொறுப்பில்லையென்பதால், அதை எடுத்துக்கொள்ள முடியாது என்று மறுப்பு அளித்திருக்கின்றது. பெரிய ஆச்சரியம் எனக்கு. சாதாரணமாக, யாராவது இரண்டு பேர் கற்பழிப்பு சம்பவங்களில் ஈடுபட்டால்கூட தயங்காமல் பதில் சொல்கின்ற அரசு இதை எப்படித் தட்டிக்கழித்தது என்று ஆச்சரியமாக இருந்து கொண்டிருக்கிறது. அப்போதே இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்து கவனம் செலுத்தியிருந்தால், இந்த மூன்று பேர்களைக் காப்பாற்றி இருக்கலாமோ, என்னவோ என்ற எண்ணம் எனக்கு தோன்றுகிறது. தமிழன் என்றாலே இளிச்சவாயன் என்ற அடிப்படையிலே, இலங்கை அரசு இதுமாதிரி தொடர்ந்து செய்து கொண்டிருப்பது, ஏன் நாம் விடுதலைப் புலிகளை ஆதரிக்கக்கூடாது என்ற நிலையைத் தோற்றுவிக்கக் கூடும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு தமிழனைக் காப்பாற்ற யாரும் இல்லை என்ற நிலையிலே, அங்கே ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கேயும் அழிவு, இங்கேயும் அழிவு, தமிழனுக்கு எங்கேயும் நிம்மதி இல்லை என்ற நிலை வரக்கூடாது என்பதற்காக நான் கூறுகின்றேன்.

ஒரு வேளை, மத்திய அரசு கையாலாகாத்தனமாக செயலற்று இருந்து கொண்டிருக்கிறதோ. இன்று நமது தூதுவர், அங்கேயிருந்து, அங்கேயுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, டெல்லி வந்துள்ளார் என்ற செய்தி அடிபட்டுக்கொண்டிருக்கின்றது. இங்கே தமிழன் செத்துக்கொண்டிருக்கின்றான், அதற்காக வந்திருக்கிறார் என்ற செய்தி வரவில்லை. ஆனால், இலங்கையிலுள்ள சிங்களவர்களைக் காப்பாற்றுவதற்காக, அங்கேயுள்ள தூதுவர், இங்கே வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி பத்திரிகையிலே அடிபட்டுக் கொண்டிருக்கின்றது. அப்படி என்றால், நமது தமிழன் எங்கேயும் உயிர் வாழ முடியாதா? இவர்களைக் காப்பாற்ற வழியே இல்லையா? மத்தியிலே நாம் கூட்டாட்சி நடத்திக்கொண்டிருக்கின்றோம்; அப்படி என்றால், நம்முடைய நிலை என்ன? இவ்வளவு சம்பவங்களுக்கு பிறகும், இலங்கை தூதரகம், நம்முடைய தமிழ்நாட்டிலே தேவையா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உடனடியாக இராஜ்ய உறவுகளை



2000 மே 3] [திரு. ஜி. நிஜாமுதீன்]

அறுத்து எறியவேண்டும். இலங்கை தூதர்களை இந்திய நாட்டிலேயிருந்து திருப்பி அனுப்ப வேண்டுமென்று நான் கடுமையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிலை நீடித்தால், இலங்கையில் மட்டுமல்ல, தமிழ்இனத்திலும், தமிழ்நாட்டிலும் இதுபோன்ற இனப்போர் உருவாகிவிடுமோ என்ற நிலை உருவாகிவிடக்கூடும். இந்த நாட்டின் இறையாண்மைமீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள். ஆகவே, இதுகுறித்து உடனடியாக கவனத்தில் கொள்ள வேண்டும். ஏதோ, எப்போதோ நடந்த சம்பவத்திற்காக, ஒரு இனப் பிரச்சினைக்கு ஆதரவு கொடுத்து, போர் தொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு இன விடுதலை இயக்கத்தை, நாம் தடை செய்து, அதை வன்மையாகக் கொச்சைப்படுத்திப்பேசியே காலம் கடத்திக் கொண்டிருக்கின்றோமே தவிர, எந்தத் தமிழரையும் காப்பாற்ற நாம் முன்வரவில்லை. எல்லாவற்றையும் அரசியல் கண்ணோட்டத் தோடு நோக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். பல இலட்சக்கணக்கான மக்களுடைய வாழ்வு மீன்பிடி தொழில். இன்று அவர்கள் கடலுக்குச் செல்ல முடியுமா, முடியாதா என்று அஞ்சக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, உடனடியாக இலங்கை இராஜ்ய உறவுகளை அறுத்து எறிந்து, இந்தத் தூதுவர்களைத் திருப்பி இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, அதன்மூலம் இறுதியான முடிவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஏதோ அவர் கொடுத்த தீர்மானம் ஒன்றை அரசு ஏற்கவில்லை என்று சொன்னார்கள். தீர்மானத்தை ஏற்பதும், ஏற்காததும் பேரவைத் தலைவருடைய பொறுப்பு. இது அரசின் பொறுப்பல்ல. திரு. இரா. பெர்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தண்ணீரில் பிழைக்க வைத்தான், எங்களை கண்ணீரில் மிதக்க வைத்தான்' என்ற பாடலின் வரிகளுக்கு ஏற்பதான் மீனவர்களின் நிலை உள்ளது. தொடர்ந்து இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூட்டிற்கு

[திரு. இரா. பெர்னார்டு] [2000 மே 3

தமிழக மீனவர்கள் பலியானது மிகுந்த வேதனை தருகிறது. தற்போது நாகப்பட்டினத்தில் 3 மீனவர்கள் சாகடிக்கப்பட்ட செய்தி அறிந்ததும் இரக்க உணர்வு கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் உயிர் இழந்தவர்களுக்கு 1 இலட்சம் ரூபாயும், அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் கொண்டவர்களாக இருந்தால் மேலும் 1½ இலட்சம் ரூபாயும் கிடைக்கும் என்று மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மேலும், தனது அவையின் அமைச்சரை, மூத்த அமைச்சர்களில் ஒருவரான மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அங்கே அனுப்பி அந்த 3 உடல்களுக்கும் அரசு சார்பில் மரியாதை செய்து, தனது சார்பிலும், முதல்வர் அவர்கள் சார்பிலும் மாலை வைத்து வந்ததோடு, இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அந்தப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, ஆறுதலும், அஞ்சலியும், அனுதாபமும் தெரிவித்து வந்திருப்பதற்கும் நன்றி பாராட்டுகிறேன்.

``பொறுத்தது போதும், பொங்கி எழு மகனே'' என்று 30 ஆண்டுகளுக்கு முன்னால் மனோகரா திரைப்படத்தில் ஒரு வசனம் வந்துள்ளது. அந்த உணர்வுகளைப் போலத்தான் இன்று கடல் திரையோடு போராடி வாழும் மீனவர்கள் 3 பேர்களை இலங்கை கடற்படை சுட்டு வீழ்த்திய செய்தி அறிந்தவுடன், இனிமேலும் பொறுக்க முடியாது இந்தக் கொடுமைகளை என மிகக் கவலையோடு கண் கலங்கி அண்ணாவின் இரங்கும் இதயத்தை இரவலாகப் பெற்றிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள் மிக வேதனை உணர்வோடு கண்டன அறிக்கை கொடுத்திருப்பதை, நன்றியுள்ள மீனவ மக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் என்றும் மறக்க மாட்டார்கள். இக்கொடுமைகளுக்கு மூலக் காரணம் கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்ததுதான். அந்த தாரைவார்ப்பினுடைய காலக் கட்டத்தில் கலைஞர் அவர்கள் எவ்வளவோ மறுப்பும், எதிர்ப்பும் தெரிவித்தபோதும் அதைப் பொருட்படுத்தவில்லை என்ற நிலையை இந்த இராமநாதபுரம், மண்டபம், இராமேஸ்வரம், அக்காமடம், தங்கச்சிமடம், பாம்பன், தஞ்சை, நாகப்பட்டினம் பகுதிலுள்ள மீனவர்கள் எண்ணி, எண்ணி வேதனைப்படுகிறார்கள். ஆகவே, கச்சத் தீவை உடனடியாக தமிழக மீனவர்களுக்கு—அந்தக் கச்சத் தீவில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கலாம் என்றும், அங்கேயிருக்கிற புனித அந்தோணியார் தேவாலயத்திற்கு எந்தவித விசா, பாஸ்போர்ட் இல்லாமல் போய் வரலாம் என்றும் ஆரம்பத்தில் இருந்தது....



2000 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும். முதலிலே பேசிய உறுப்பினர் எல்லாப் பிரச்சினைகளையும் சொல்லிவிட்டார், புள்ளிவிவரங்களையும் சொல்லிவிட்டார். ஆகையால், நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. இரா. பெர்னார்டு:** அவற்றை நிலைநாட்ட வேண்டுமென்று மிகுந்த பணிவன்போடு வேண்டுகிறேன். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சோக நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருப்பதற்காக கச்சத் தீவை மீட்க வேண்டும். அதில் குறைந்தபட்சம் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்தத் தீவை இலங்கைக்கும், இந்தியாவுக்கும் சம உரிமை உடையது என்ற அளவிற்கு ஆக்க வேண்டும் என்று இரக்கம் உள்ள தமிழக முதல்வர் அவர்களை மெத்தப் பணிவன்போடு மீனவ மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் இதே பிரச்சினையைக் குறித்து பலமுறை நான் பேசியிருக்கிறேன். அதை நிறைவேற்றி மீனவர்களைக் காத்திட இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பெர்னார்டு அவர்களும் இங்கே Facts of the case-ஐப் பற்றியெல்லாம் சொல்லிவிட்டார்கள். அதற்குள்ளே செல்ல நான் விரும்பவில்லை. இதுபோன்று மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றபோது இலங்கை கடற்படையினரால் அடிக்கடி சுட்டுத் தள்ளப்படக்கூடிய ஒரு நிலை தொடர்ந்து நிலவிக்கொண்டு இருப்பது, நாம் எல்லாம் மிகவும் வேதனைப்படக்கூடிய ஒரு செய்தி. இதிலேகூட 12 பேர்கள் படகிலே போகின்றபோது அந்த இலங்கை படையினர் மிருகத்தனமாக சுட்டு, அவர்கள் உடல் எல்லாம் சிதறி இருக்கிறது. மூளையெல்லாம் சிதறியிருக்கிறது. 3 பேர்கள் அங்கேயே இறந்துபோய், 3 பேர்கள் இப்போது தஞ்சை மருத்துவமனையிலே பாவம் அவர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசிற்கு எடுத்துச் சொல்லி உடனடியாக—காரணம் இதிலேகூட நாம் இன்னொன்றைக்கூட செய்திருக்கலாம். இந்தக் கேசை பொறுத்த அளவில் இலங்கைப் படையினர்தான் நம்முடைய பகுதிக்குள்ளே புகுந்து, அவர்கள் இவர்களைச் சுட்டதாகச் சொல்கிறார்கள். அப்படி இலங்கை படையினர் தங்களுடைய எல்லையை மீறி, நம்முடைய எல்லைக்கு வருகிறபோது இவர்களை

எப்படி அவர்கள் நம்முடைய ஆட்களையெல்லாம் பிடித்து வைத்துக்கொள்கிறார்களோ, அதேபோல அவர்களை நாம் பிடித்து வைத்துக்கொள்வதுதான் சரியான முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே நம்முடைய மத்திய அரசும் மாநில அரசும் கொஞ்சம் முயற்சி எடுத்து, நம்முடைய எல்லைக்குள்ளே புகுந்து இலங்கைப் படையினர் செய்யக்கூடிய அட்டகாசத்தை நாம் ஒடுக்கியாக வேண்டும். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, இதுபோன்ற நிகழ்வுகள் வராமல் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

மீனவர்களுக்கு ஏற்கெனவே ஒரு இலட்சம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் இன்னும் ஒரு இலட்சம் ரூபாயை அவர்களுக்கு எல்லாம் வழங்க வேண்டும். காரணம் இப்போது நாகை மாவட்டத்திலே மீனவர்கள் எல்லாம் போராட்டத்திலே குதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்வுகளால் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்று அவர்களுடைய பாதுகாப்பின்மையை அவர்கள் எல்லாம் உணர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குடும்பங்களுக்கு இன்னும் ஒரு இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாராளமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்கள் கொடூரமான முறையிலே. அவர்களைக் காண முடியாத அளவிற்கு முகத்திலேகூட 16 இடங்களிலே துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து, அடையாளமே தெரியாத அளவிற்கு அவர்கள் சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள். கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கிற மீனவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையோ என்ற அச்சம் தொடர்ந்து நிலவி வருகிறது. அதிலும் குறிப்பாக இலங்கைக் கடற்படையினரால். இப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசுதான் மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு இதிலே கவனம்



செலுத்தவில்லை என்பதைத்தான் எங்களுடைய இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் குற்றச்சாட்டாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போதுகூட இந்தப் பாதிப்பு ஏற்பட்டதற்குப் பின்னாலே அந்தப் பகுதியிலிருக்கிற மீனவர்கள் 2, 3 தினங்களாக படகுகளிலே மீன்பிடிக்கச் செல்லாமல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம், 'எங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. இந்தப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான ஒரு உத்தரவாதத்தை மத்திய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு மாநில அரசு உதவ வேண்டும்' என்பது. ஆகவே, இவற்றைப் பற்றிப் பரிசீலித்து, அதற்குரிய முடிவுகளைக் காண வேண்டும். தொடர்ந்து, இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இலங்கைக் கடற்படையினர் அத்துமீறி நம்முடைய எல்லைப் பகுதியிலே வருகிறார்கள். கடல் எல்லையின் அளவைத் தாண்டுவது நாமா, அவர்களா என்ற பிரச்சினை தொடர்ந்து இருக்கிறது. ஆகவே, நாம் தாண்டுகிறபோது அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, அதற்குரிய காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். அவர்கள் வருகிறபோது நம்முடைய நடவடிக்கை என்ன என்பதே கேள்விக்குறியாக இருக்கிறபோது உரிய பாதுகாப்பு வசதிகள நமது மத்திய அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படவில்லை என்பதுதான் இதிலே இருக்கிற பிரச்சினை. ஆகவே, தொடர்ந்து பல சாவுகளுக்கு ஆளாகிற தமிழக மீனவர்களைப் பாதுகாக்கிற நோக்கத்தோடு மத்திய அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு அதற்குரிய பாதுகாப்புகள் வழங்கப்படவேண்டும். கடலோரப் பாதுகாப்பையும் பலப்படுத்த வேண்டும். அதற்குரிய முயற்சிகளை எடுக்க நம்முடைய தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சிறப்புக் கவனம் செலுத்தி, மீனவர்களுடைய வாழ்க்கைக்கு, உயிருக்கு, பாதுகாப்பு அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28ஆம் தேதியன்று நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலிலே மீன்பிடிக்கச் சென்றபோது அங்கே இலங்கை இராணுவத்தினரால் சுடப்பட்டு, மூன்று மீனவர்கள் இறந்துவிட்டார்கள்

என்ற செய்தி பற்றி மிக விளக்கமாக உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியைப் பற்றி எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவிகூட, தன்னுடைய கடும் கண்டனத்தை மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். நாளைக்கு அங்கே ஒரு பெரிய மௌன ஊர்வலத்தை மீனவர்கள் எல்லாம் நடத்துவதாக இருக்கின்றார்கள். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இது ஒரு தொடர் கதையாகத்தான் நடந்துகொண்டிருக்கின்றது. நாம் இந்த மாமன்றத்தில் பேசுவதும் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதும், இதுதான் நடக்கிறதே ஒழிய, அதற்கு ஒரு நிரந்தர தீர்வுகாண என்ன செய்ய வேண்டுமென்பதற்கு இந்த அரசு இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இங்கே குறிப்பிட்டார்கள். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இலங்கை இராணுவத்தினர்தான் நம்முடைய எல்லையிலே வந்து இந்தச் செயல்களைச் செய்திருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி என்றால், நம்முடைய ரோந்து சுற்றுகின்ற இந்திய கடலோரக் காவல்படை அங்கே என்ன செய்து கொண்டிருந்தது என்பதுதான் கேள்வி. இவர்கள் சரியாக கவனம் செலுத்தியிருந்தால், அவர்களை விரட்டியடித்திருக்கலாம். அவர்கள் இன்று நம்முடைய எல்லையிலே புகுவதற்கு வழியில்லாமல் இருக்கும். அவர்களுடைய அலட்சியப்போக்கின் காரணத்தினால்தான் இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்காக இந்தக் கடலோரப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அந்த நேரத்திலே, அந்த நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருந்தபோது அந்தப் பணியிலே ஈடுபட்டுக்கொண்டிருந்த, ரோந்து சுற்றிக் கொண்டிருந்த நம்முடைய இந்திய கடற்படையினர் யார்? அவர்கள் ஏன் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதைக் கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்புகூட இராமேஸ்வரம் பகுதியிலேயிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு இதேபோல நடந்து, அதுகுறித்து இந்த அவையிலே பேசப்பட்டு, அவர்களுக்கு எல்லாம் நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இங்கே ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கூட பேசினார்கள். கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்ட காரணத்தினால் இந்த நிகழ்ச்சிகள்



எல்லாம் நடந்தன என்று கூறினார்கள். கச்சத்தீவு யாருடைய காலத்தில், யாரால், எந்த அரசால் தாரை வார்க்கப்பட்டது? இந்த அரசு அப்போது பதவியில் இருந்த காலத்தில் தான் கச்சத்தீவை தாரை வார்த்தார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதுகூட அந்த ஒப்பந்தத்திலே நம்முடைய மீனவர்கள் அங்கே அந்தக் கச்சத்தீவிலே செல்லும்போது அங்கே அந்த மீன் வலைகளையெல்லாம் உலர்த்திக்கொள்வதற்காக அந்த ஒப்பந்தம் இருக்கிறது என்றும், தற்போது அங்கு திருவிழாவிற்குச் செல்வதற்குக்கூட, அந்த மீன் வலைகளையெல்லாம் உலர்த்துவதற்குக்கூட அங்கே யாரும் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதெல்லாம் தெரிகின்றது. ஆகவே தற்போது இந்த மாநில அரசு மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி...

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ..இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கூட போட்டு மீண்டும் கச்சத்தீவை தமிழகத்திற்குக் கொடுப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கூறிக்கொண்டு, அங்கே இலங்கை சிறையிலே 10, 12 மீனவர்களைப் பிடித்து வைத்திருப்பதாகக் கூறுகின்றார்கள். அந்த மீனவர்களையும் விடுவிப்பதற்கு மாநில அரசு ஒத்துழைப்புக கொடுக்க வேண்டும். இன்றைக்கு இலங்கை அரசைப் பொறுத்தவரையில் நம்முடைய இந்திய அரசிடம் ஒரு பெரிய வேண்டுகோளை வைத்திருக்கிறது. இந்திய அரசு அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் பல பிரச்சினைகளை அங்கே இருக்கின்ற இலங்கை அரசு இப்போது கூறிக்கொண்டிருக்கிற காரணத்தினால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நம்முடைய உரிமையைப் பெற்று, கச்சத் தீவை மீண்டும் பெறுவதற்கு இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் நாம் பல தொல்லைகளுக்கு ஆட்பட்டது குறித்து இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் பல நேரங்களிலே எடுத்துரைத்தார்கள். இன்று நம்முடைய உறுப்பினர் நிஜாமுதீன் அவர்கள் அவருடைய

தொகுதியிலே நடந்த அந்த அநியாயமான, 3 மீனவர்களுடைய கொடுமையான சாவைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவருடைய உணர்வோடு என்னுடைய உணர்வையும் இதிலே சேர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமார் என்ற ஒரு மீனவர் தனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு, இந்த மாதம் கடைசியிலே திருமணம் நடக்க வேண்டிய நிலையில், அந்த மீனவர் இலங்கை சிங்கள வெறியர்களால் காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார். மேலும் முனுசாமி, அஞ்சப்பன் என்ற இரண்டு மீனவர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட உடனே கருணை உள்ளத்தோடு நம்முடைய முதல்வர் அவர்கள் உடனடியாக ஒரு இலட்சம் ரூபாய் அந்த குடும்பத்திற்கு நிவாரண நிதி அளித்ததுடன் நம்முடைய முதல்வருடைய நெஞ்சுரத்தோடு சிங்களர்களைக் கண்டிக்கக்கூடிய வகையிலே, மீனவர்களுடைய உள்ளம் குளிர அறிக்கையும் விட்டிருந்தார்கள். தமிழ்நாட்டினுடைய தமிழ் உணர்வு பெறற அத்தனைப் பேர்களும் நம்முடைய முதல்வர் அவர்களுடைய இந்தச் செயலுக்காக உளமார பாராட்ட வேண்டும்; பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மீனவர்கள் பாராட்டுகிறார்கள்.

அதேபோல இன்னும் 3 மீனவர்கள் குண்டடிபட்டு மருத்துவ மனையிலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகளையும், அந்த குடும்பத்திற்குத் தேவையான உதவிகளையும் நம்முடைய கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் நிச்சயமாக செய்வார்கள் என்று நம்பி எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு இரங்கலைத் தெரிவித்து குண்டடிபட்ட அந்த நல்ல நண்பர்களுக்கு முதல்வர் அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிய முதல்வரைப் பாராட்டி, இன்னும் கொஞ்சம் அதிகமான தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக 3 இலட்சம் ரூபாய் வரை வழங்க வேண்டும். இராணுவம் சுட்டுத்தள்ளி இருக்கிறது என்பதனை மறக்காமல், முதல்வர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டவர், குழந்தைக்கு எந்த நேரத்திலே பசி எடுக்கும் என்று தெரிந்து பாலூட்டக்கூடிய பாரம்பரியத்திலே வந்த முதல்வர் அவர்கள் நிச்சயமாக அந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கும் பாலூட்ட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.





முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28ஆம் தேதியன்று நாகை மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள் நம்முடைய தமிழகக் கடலோரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கி சூடு நடத்தி அதிலே 3 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள்; 3 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். கடலினுடைய எல்லை எப்படி வரையறுக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாக்கப்பட வேண்டும். நம்முடைய ரோந்துப் படை இந்தக் கடற்கரை முழுவதையும் கண்காணிக்கின்ற ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்றால்—தமிழ்நாட்டினுடைய மீனவர்கள் இலங்கைக் கடற்கரைப் பக்கம் சென்றாலும் சரி, கோவாவினுடைய கடற்கரைப் பக்கம் சென்றாலும் சரி, ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே 1993ஆம் ஆண்டில் கோவாவிற்கு மீன் பிடிக்கச் சென்றவர்கள் எப்படி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்ற விவரங்களெல்லாம் தரப்பட்டிருக்கின்றன. எனவே, தமிழகத்தினுடைய மீனவர்கள் நம்முடைய கடல் எல்லைக்குள்ளே எங்கே மீன் பிடிக்கச் சென்றாலும் சரி, அதைத் தாண்டிச் செல்லுகின்றபோது கோவாவிற்குச் சென்றாலும் சரி, இதரப் பகுதிகளுக்குச் சென்றாலும் சரி, அவர்களுக்குப் பாதுகாப்பில்லாத ஒரு நிலை நீடிக்கின்றது. இந்த நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு, ஏற்கெனவே நம்முடைய எல்லைக்குள்ளே அடுத்த நாட்டைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தாலோ அல்லது இதர பகுதியினரைக் கொண்டோ தாக்குதல் நடத்துகின்ற அந்தக் கொடுமையான நடவடிக்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் மத்திய அரசோடு மாநில அரசும் இதிலே கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நம்முடைய எல்லையைப் பாதுகாப்பதற்கான இந்த ரோந்துப் படை அவ்வப்போது குறிப்பாக இலங்கை ஓரமாக வருகின்ற இந்தக் கடற்கரைப் பகுதிகள் முழுவதையும் கண்காணிக்கின்ற ஒரு நிலை இருக்குமானால்தான் மீண்டும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்கு, பாதுகாக்க முடியும். அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயிரிழந்த நம்முடைய மீனவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற நிதியுதவிக்கும், அதுபோன்று அவர்களிலே காயம்

அடைந்தவர்களுக்குத் தந்திருக்கின்ற உதவிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துகொண்டு, மீனவர்களைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர், சுருக்கமாகப் பேசுங்கள். விவரங்கள் முழுவதையும் மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் பேசிவிட்டார். அதனால் கருத்தை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்படுவது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தற்போது நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட விதத்தைப் பார்க்கும்போது அந்த மீனவர்களை முகத்தில் அடையாளம் தெரியாத அளவிற்கு 16 இடங்களில் சுட்டு சேதப்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய எல்லைக்குள்ளே வந்த மீனவர்களுக்குத் தண்டனை கொடுக்கின்ற விதமாக இல்லை. இது நிச்சயமாக வெறித்தனத்தோடு நடத்தியிருக்கக்கூடிய ஒரு செயல். இந்தவகையிலே நாம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளிடம் தோல்வியைக் கண்டு கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே-அவர்கள் இந்திய இராணுவத்தின் துணையை நாடுகிற அந்தச் சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அங்கே இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, நம்முடைய இந்திய தேசத்தைச் சேர்ந்த, நம்முடைய மண்ணைச் சேர்ந்த, நம்முடைய தமிழர்களைக் காப்பதற்கு நம்முடைய இந்திய அரசு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நாம் வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால் மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித்துவிட்டு உயிரோடு திரும்பிவருவார்களா என்ற ஒரு எண்ணம் இன்றைக்கு கரையோர கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்களிடம் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த அச்ச உணர்வைப் போக்குகின்ற வகையிலே தமிழக அரசு கச்சத் தீவை மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தமிழ் மாநில தேசிய லீகின் சார்பாக வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.





மேலும், தமிழக அரசு, உயிரிழந்த மீனவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றது. அதற்காக தமிழ் மாநில தேசிய லீகின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற அதே நேரத்திலே, அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரவும் ஆவன செய்ய வேண்டும். அதேபோன்று, காயம்பட்டவர்களுக்கும் நிவாரண உதவி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பினைத் தந்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்படுவது என்பது அடிக்கடி நடக்கின்ற ஒரு சம்பவம் ஆகிவிட்டது. இதற்குக் காரணம் என்னவென்று எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம்கூட கோடிட்டுக் காட்டினார்கள். கச்சத் தீவு நம்முடைய கைவசமே இருந்திருக்கும் என்று சொன்னால், இலங்கை இராணுவம் கச்சத் தீவினுடைய பக்கத்தில் வருவதற்கு சற்று அஞ்சும். நம்முடைய மீனவர்கள், அது நம்முடைய பகுதி என்று உரிமை கொண்டாட முடியும்.

*முற்பகல் 10-45*

இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை கடந்த கால மத்திய அரசால் நாம் இழந்துவிட்டோம். கடந்த கால மத்திய அரசால் காஷ்மீரத்தினுடைய ஒரு பகுதியை இழந்திருக்கிறோம். அதுபோன்று, பூஞ்ச் பகுதியை இழந்திருக்கிறோம். அவை எல்லாம் நமக்குப் பெரிய பாதிப்பாக இல்லாமல் இருந்தாலும்கூட நம்மைப் பொறுத்தமட்டில் பெரிய ஒரு பாதிப்பு கச்சத் தீவு நம்மை விட்டுச் சென்றது. கச்சத் தீவை மீட்பதற்கு தமிழக அரசு அனைத்துவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்வது மட்டுமல்ல, மீண்டும் கச்சத் தீவில் மத்திய அரசினுடைய இராணுவத்தின் ஒரு பகுதியை நிரந்தரமாக நாம் அமைக்க நம்முடைய மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதை சாதித்தோம் என்று சொன்னால் பாரத நாட்டினுடைய எல்லைப் பகுதி, அதுவும் பாரதத் தாயினுடைய பாதமாகிய நம்முடைய தமிழ் மாநிலம் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட ஒரு வாய்ப்பாக அமையும். அதோடு இந்த மாநிலத்தினுடைய பொருளாதார நிலை அனைவருக்கும் நன்றாகத்

தெரிந்ததுதான். பட்ஜெட்டிலேகூட 600 கோடிக்கு மேலே நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது. இதுமாதிரி நிலையிலும்கூட ஏழைகளுக்கு உதவக்கூடிய நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலா ஒரு இலட்சம் ரூபாய் என்று அறிவித்தது நிச்சயமாகப் பாராட்டத்தக்கது. என்னைப் பொறுத்தமட்டில் இந்த நிதிநிலையில் இது ஒரு பெரிய மன இரக்கத்தோடு செய்த காரியம். அதை நிச்சயமாகப் பாராட்டியாக வேண்டும். அதேபோன்று, நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு வேண்டுகோளாக வைப்பது என்னுடைய தொகுதியில் கொலை செய்யப்பட்ட அந்த டேவிட் பால் மனோகருக்கு, 11-வது படிக்கக்கூடிய மாணவன் இருக்கிறான். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து ஏதாவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிலே எதைப் பேசுவது என்று வரையறை கிடையாதா? டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலே இருந்து மீன்பிடிக்கச் செல்லக்கூடிய தமிழக மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும், இலங்கைக் கடற் படையால் சுட்டுக்கொல்லப்படுகின்ற அவல நிலையும் ஒரு தொடர் கதையாக இருக்கிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு 3 மீனவர்கள் இலங்கைக் கடற்படையாலே சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையிலே நான் சில கருத்துகளை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெருக்கடி நிலை காலத்தில் ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தின் காரணமாக கச்சத் தீவு நம்முடைய கையைவிட்டுப்போனது. எனவேதான் மீன் பிடிப்பதற்கு தவிர்க்க இயலாத காரணங்களாலே மீனவர்கள்கூட சில நேரங்களிலே எல்லையை மீறி, செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்போது இந்த மீனவர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றால், ஒன்று, இந்தியாவிற்கும், இலங்கைக்கும் கச்சத் தீவு சம்பந்தமாக ஏற்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தை இரத்து செய்து கச்சத் தீவை மீட்க வேண்டும், அல்லது மீன் பிடிப்பதற்கு கரையைத் தாண்டி அல்லது எல்லையைத் தாண்டிச் செல்வதற்கு வாய்ப்பாக ஒரு புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசும் முதல்வர் அவர்களும் முயல வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே தமிழ்நாடு



முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் பாகிஸ்தான் சிறையிலே அடைக்கப்பட்டு இருந்தபோதும், அடிக்கொரு தடவை சிங்களப் படையாலே...

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் Point of Order எல்லாம் கிடையாது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அவர்கள் எல்லை தாண்டிப் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழக மீனவர்கள் பாதிப்புக்கு ஆளாகின்றபோதெல்லாம் மத்திய அரசோடு தொடர்பு கொள்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலையிலே அக்கறை காட்டுகிறவர். அதற்காக நான் பாராட்டுத் தெரிவிக்கிறேன். அதேநேரத்தில் இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையிலே நாம் அதிகமான அக்கறை கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். மிக முக்கியமான ஒரு காலக்கட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மீனவர்களைக் காப்பாற்ற முடியாத இந்த வேளையில்— இந்தியப் படைகள் காப்பாற்ற முடியாமல் இருக்கின்றன. ஆனால், அதே சமயத்தில் தமிழர்கள் தங்களுடைய சுய நிர்ணயத்திற்காகப் போராடி வரக்கூடிய இந்த நிலையில், அவர்கள் வெற்றி பெறக்கூடிய தருவாயில், விளிம்பிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தமிழர்களைக் காப்பாற்றாமல், மீண்டும் இலங்கையிலே தங்களுடைய உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய தமிழர்களுக்கு எதிராக இந்தியப் படையினுடைய உதவியைக் கேட்கக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்படக்கூடாது. அதை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது. மத்திய அரசுக்கு அதையும் வலியுறுத்த வேண்டும். நிரந்தரமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ.நா.-விலேகூட இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்றால், இந்தப் பிரச்சினையை, மீனவர்களுடையப் பிரச்சினையை எழுப்புவதற்கும் தமிழ்நாடு அரசு மத்திய அரசு மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகின்றேன். வணக்கம்.

*முற்பகல் 10-50* [2000 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினராலே தாக்கப்படுவது, நடைபெற்றுக்கொண்டு வருகிற சோகச் சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்படுவதற்கு, இதுவரையிலே நம்முடைய தமிழர்களுடைய தரப்பிலே ஏற்பட்ட உயிர் இழப்பு, உடைமை இழப்புகளை எல்லாம் தொகுத்து எடுத்து, இந்திய அரசாங்கத்தின் மூலமாக சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராக ஒரு வழக்குத் தொடுக்க தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்தால்தான் இப்படிப்பட்ட நிகழ்வுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், நஷ்டயீடுகூட அந்த சுடுகின்ற இலங்கை அரசிடமிருந்து பெறுவதற்குமான வாய்ப்பு ஏற்பட ஒரு சூழ்நிலை உருவாகும். அதேநேரத்திலே 1974-களிலே நம்முடைய கையிலேயிருந்த, கைவிடப்பட்ட கச்சத்தீவிலே மீண்டும் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமைகள் புதிய ஒப்பந்தத்தின் மூலமாக நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மூலமாக ஒரு வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இன்றைக்குக்கூட 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. நம்முடைய Indian Air Force-னுடைய Air Chief Marshal A.Y. Tipnis என்பவர் இந்த வாரம் இலங்கைக்குச் செல்லவிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அதிலே ஒரு குறிப்பிடத்தகுந்த செய்தி,

"Reports from Colombo have indicated that Sri Lanka is very keen on Indian Military assistance in stemming the tide of the LTTE offensive against Jaffna"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, தங்களுக்கு ஒரு நெருக்கடி வருகிறபோது நம்முடைய தயவை நாடுகிறார்கள். ஏற்கெனவே, அமைதிப்படையை அவமானப்படுத்தி, கட்டாயப்படுத்தி வெளியேற்றியவர்கள் மீண்டும் இப்போது நம்முடைய உதவியை



2000 மே 3] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

நாடுகிறார்கள். தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களோடும், வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களோடும், இராணுவத் துறை அமைச்சர் அவர்களோடும் கலந்து பேசி எக்காரணத்தைக் கொண்டும் நம்முடைய இராணுவம், அங்கே தங்களுடைய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிற தமிழர்களுக்கு எதிராக எவ்விதத்திலும் ஈடுபடக்கூடாது என்கின்ற ஒரு கருத்தை மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு தமிழ் மக்களிடையே, மீண்டும் அந்தத் தமிழர்கள் ஒடுக்கப்பட ஒரு வாய்ப்பு ஏற்படுமோ என்ற அச்ச சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அது 'இந்து' பத்திரிகையிலேயும் இன்றைக்கு செய்தியாக வெளிவந்திருக்கிற காரணத்தாலே தமிழக முதல்வர் அவர்கள் இதுகுறித்து ஆழ்ந்த அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தமிழக மீனவர்கள்-பாதிக்கப்பட்டவர்களுக்கு-உதவித்தொகையை அதிகப்படுத்தித் தரவேண்டும். காயப்பட்டிருப்பவர்களுக்கும் உரிய பாதுகாப்பையும், அவர்களுக்கு நிதி உதவியையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்தில் பெரும் வேதனையை ஏற்படுத்தியதும் அதன் விளைவாக இன்று கவன ஈர்ப்பு, ஒத்திவைப்பு அறிவிப்புகள் என இங்கே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன், திரு. இரா. பெர்னார்டு, திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. டி. மணி, திரு. ஏ.வி.ஏ. நாசர், திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. தீரன் ஆகியோர், அடிக்கடி நம்முடைய கடல் பகுதியில் தமிழகத்தினுடைய மீனவர்கள் வேட்டையாடப்படுகின்ற இந்த வேதனையான நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் என்கின்ற யோசனைகளையெல்லாம் அவரவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையிலே இங்கே எடுத்து வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் எந்த அளவிற்கு நிறைவேற்ற இயலும், எந்த அளவிற்கு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை நானும் சிந்தித்து, முடிந்தவரையிலே, இயன்றவரையிலே செயல்படுவேன் என்ற உறுதியை அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, அ.தி.மு.க. சார்பில் பேசிய நம்முடைய சுந்தரம் அவர்கள், இப்போதுள்ள இந்தப் பிரச்சினையை கச்சத்தீவுப் பிரச்சினையோடு இணைத்து, அதையும் அரசியல் ஆக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இங்கே உரையாற்றியது உள்ளபடியே இந்த வேதனையான நேரத்திலே தேவையற்ற ஒன்று என்பதே என்னுடைய கருத்து.

*முற்பகல் 10-55*

அவர் அந்தப் பிரச்சினையை எழுப்பிவிட்ட காரணத்தால், அதற்கு விளக்கம் தருவது என்னுடைய கடமையாகும. அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலேதான் கச்சத்தீவு இலங்கைக்குத் தரப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாயிற்று. அப்பொழுது அவர்கள் வெளியுறவுத் துறை அமைச்சரை தமிழகத்திற்கு அனுப்பி என்னிடத்திலே விவாதிக்கச் செய்து, வெளியுறவுத் துறை அதிகாரிகளையும் அனுப்பி அவர்கள் மூலமும் பல தகவல்களைச் சொல்லியனுப்பி, அந்தச் சூழ்நிலையிலே தமிழக அரசினுடைய எதிர்ப்பையும் நாங்கள் பதிவு செய்து, அதற்கு அப்பாலும் கச்சத்தீவை இலங்கைக்குத் தரவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை திருமதி இந்திரா காந்தி அம்மையார் விளக்கியதன்பேரில், கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அப்போது வழங்கப்பட்டபொழுது, தமிழக அரசினுடைய பிடிவாதத்தின் காரணமாக ஒப்பந்தத்திலே சேர்க்கப்பட்ட ஒரு ஷரத்து - யாத்ரீகர்கள், தமிழ்நாட்டு யாத்ரீகர்கள் கச்சத் தீவுக்குச் சென்று வரவும், தமிழக மீனவர்கள் கச்சத் தீவிலே மீன்பிடிக்கவும் தடை கூடாது என்ற ஒரு ஷரத்து - அதிலே சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன், அப்போது நடைபெற்ற கவர்னர் ஆட்சியில் கடிதப் போக்குவரத்து பரிவர்த்தனையின் அடிப்படையில் அந்த ஷரத்துகள் என்ன காரணத்தாலோ எடுக்கப்பட்டுவிட்டன. அந்த ஷரத்துகள் மீண்டும் இணைக்கப்பட வேண்டுமென்று தமிழக அரசு அன்று முதல் இன்று வரையிலும், எந்தத் தலைவருடைய தலைமையிலே மத்திய அரசு அமைந்தாலும் அவர்களிடத்திலே வாதாடிக்கொண்டுதான் இருக்கிறது. இப்போதும் வாதாடிக் கொண்டிருக்கின்றது; இப்பொழுது வாதாடவும் தயாராக இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.





கச்சத் தீவு அல்ல, இப்போதைய பிரச்சினை. தமிழகக் கடற்கரையிலேயிருந்து மீனவர்கள் தங்களுடைய பிழைப்புக்காக, வாழ்க்கைக்காக கடலிலே மீன்பிடிக்கச் செல்லும்பொழுது எல்லாம் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இன்று நேற்றல்ல, கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலமாக நமது நிஜாமுதீன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, எண்ணிக்கையிலே சற்று ஏற்றத்தாழ்வு இருக்கலாம். அடிக்கடி இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், பத்தாண்டுகளில், 1992 ஆம் ஆண்டில் இதுபோன்ற 6 சம்பவங்களில் 4 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் தமிழக மீனவர்கள். 11 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1993 ஆம் ஆண்டு 13 சம்பவங்களில் 8 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள், 16 பேர் காயமடைந்திருக்கின் றார்கள். 1994 ஆம் ஆண்டில் 17 சம்பவங்களில் 8 பேர் கொல்லப்பட்டு, 28 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1995 ஆம் ஆண்டில் 15 சம்பவங்களில் 16 பேர் கொல்லப்பட்டு, 14 பேர் காயமடைந்திருக் கின்றார் கள். 1996 ஆம் ஆண்டில் 37 சம்பவங்களில் 8 பேர் கொல்லப் பட்டு, 39 பேர் காயமடைந்து இருக்கின்றார்கள். 1997 ஆம் ஆண்டில் 21 சம்பவங்களில் 22 பேர் கொல்லப்பட்டு, 18 பேர் காயமடைந்திருக்கின் றார்கள். 1998 ஆம் ஆண்டில் 7 சமபவங்களில் 6 பேர் கொல்லப்பட்டு, 4 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1999 ஆம் ஆண்டில் 5 சம்பவங்களில் 2 பேர் கொல்லப்பட்டு 5 பேர் காயமடைந்திருக் கின்றார்கள். 2000 ஆண்டில் ஏப்ரல் 30 ஆம் தேதி வரையில், 8 சம்பவங்களில் 4 பேர் கொல்லப்பட்டு 6 பேர் காயமடைந்துள்ளார்கள்.

ஏறத்தாழ இப்பொழுது நடைபெற்றுள்ள சம்பவத்தையும் சேர்த்தால் 80 பேர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்த சம்பவங்கள், தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை மீனவக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 20 வயதுடைய குமார், 24 வயதேயுடைய முனுசாமி, 28 வயதுடைய அஞ்சப்பன், 28 வயதுடைய வேலுசாமி, 30 வயதுடைய சந்திரசேகரன் மற்றும் அரிச்சந்திரன் ஆகியோர் மீன்பிடிக்க, நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியிலிருந்து 29-4-2000 அன்று அதிகாலை 1 மணியளவில் மன்மதசாமி என்பவருக்குச் சொந்தமான இயந்திரப் படகில் சென்றுள்ளார்கள். 29-4-2000 அன்று காலை 10 மணியளவில் கோடியக்கரையிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது, இலங்கைக் கடற்படையைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டதில்,

குமார், முனுசாமி, அஞ்சப்பன் ஆகியோர் அதே இடத்தில் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியுள்ளனர். வேலுசாமி என்பவருக்கு தொண்டையிலே குண்டு பாய்ந்துள்ளது. அங்கே அருகில் மற்றொரு இடத்தில் இயந்திரப் படகிலே மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் உதவியோடு நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு திரும்பி இருக்கின்றார்கள். தொண்டையிலே துப்பாக்கி குண்டு காயம்பட்ட வேலுசாமி நாகப்பட்டினம் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இவர்கள் சென்ற விசைப்படகின் கேபின் பகுதியில் உள்ள கண்ணாடிகள் சேதம் அடைந்துள்ளன. படகின் உரிமையாளர் மன்மதசாமி கொடுத்த புகாரின் பேரில் நாகப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 269/2000, சட்டப் பிரிவுகள் 288, 326 மற்றும் 302, உப பிரிவு 25(1) ஆயுதச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11-00

இந்தச் செய்தி முதல்வர் அலுவலகத்திற்கு வந்த ஒருசில மணித்துளிகளிலேயே துப்பாக்கிச் சூட்டிலே இறந்த மூன்று பேர் குடும்பங்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கிடவும், காயம் அடைந்தவருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் ஆணையிடப்பட்டது மேலும், இந்திய-இலங்கை நல்லுறவில் பாதிப்பு ஏற்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டு மீனவர்களுடைய உயிர் பலியாவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும், மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு இனியாவது தமிழ்நாட்டு மீனவர்களின் உயிர் பலியாவதைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு ஓர் அறிக்கை வெளியிட்டேன். மத்திய அரசுக்கு கடிதமும் எழுதப்பட்டுள்ளது. அதற்கு இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து ஒரு பதிலும்கூட வந்திருக்கிறது.

என்னைப்போலவே தமிழகத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் மத்திய அரசுக்கு இத்தகைய வேண்டுகோளை விடுத்து, இலங்கை இராணுவத்திற்குக் கண்டனத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

1-5-2000 அன்று நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தாருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிவாரண நிதி, அறிவித்தவாறு வழங்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்துள்ளார். தற்போது



சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எதுவும் அங்கே இல்லை என்றும், 4-5-2000 அன்று இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையைக் கண்டித்து அமைதி ஊர்வலம் ஒன்று மீனவர்களால் நடத்தப்படவுள்ளது என்றும், நிலைமைகளைக் கண்காணித்து வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

இறந்த மீனவர்களுடைய குடும்பத்திற்கு தமிழக அரசின் சார்பில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று ஆறுதல் வழங்கியதோடு துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெறும் மீனவர்களையும் நேரில் பார்த்து விசாரித்துள்ளார். இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு நாம் அளித்த நிதி அன்னியில், மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபாயும் மீனவர் தனிநபர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் இவ்வாறு தொடர்ந்து கொல்லப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கண்டித்ததைப்போலவே, நானும் தமிழக அரசின் சார்பில், தமிழக மக்களின் சார்பில் கண்டிக்கின்ற கடமை உடையவனாக இருக்கின்றேன்.

இன்றுள்ள மத்திய அரசிடம் மாத்திரமல்ல, கடந்த காலத்திலே மத்திய பொறுப்பிலே இருந்த எல்லா அரசுகளிடமும் நாம் இதுபோன்ற கோரிக்கைகளையும், வேண்டுகோளையும் வைத்திருக்கிறோம். நம்முடைய முறையீடுகளைக் கடிதம் மூலமாகவும் நேரிலும் தெரிவித்து வந்திருக்கிறோம். 1997 ஆம் ஆண்டு மத்திய அரசின் வெளி விவகாரத் துறை அமைச்சராக இருந்த திரு. குஜ்ரால் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் தமிழக மீனவர்களின் இந்தப் பரிதாப நிலை குறித்து இலங்கை அரசின் அதிபரும், வெளி விவகாரத் துறை அமைச்சரும் டெல்லிக்கு வந்திருந்தபோது நேரில் கூறியிருப்பதாகவும், தமிழக மீனவர்களோடு இலங்கைக் கடற்படையினர் சுமுகமான முறையிலே நடந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். என்றாலும், இத்தகைய கொடுமைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன என்பது வருந்தத்தக்கது.

மத்திய அரசுக்கு இந்தச் சம்பவம் குறித்து நமது அரசின் சார்பில் தற்போது வலியுறுத்தியதின் காரணமாக மத்திய அரசின் வெளி விவகாரத் துறை, இலங்கை அரசின் டெபுடி ஹைகமிஷனரின் கவனத்திற்கு மத்திய அரசின் ஆழ்ந்த வருத்தத்தைக் கொண்டு சென்றுள்ளது. மேலும், இலங்கையிலே உள்ள இந்திய தூதுவருடனும்

தொடர்புகொண்டு, இலங்கை அதிகாரிகளிடம் இச்சம்பவம் குறித்து நேரில் எடுத்துச்சென்று எதிர்காலத்திலே இதுபோன்ற நிகழ்வுகளில் நிதானமான போக்கைக் கடைபிடிக்க வலியுறுத்த வேண்டுமென்றும் தெரிவித்திருப்பதாக நேற்று மத்திய அரசிலிருந்து நமக்குத் தகவல் வந்துள்ளது. இன்று வந்துள்ள கடிதத்தில்,

"From the Ministry of External Affairs, New Delhi reference your letter dated 29-04-2000.

Regarding the unprovoked firing on some Indian Fishermen by the Sri Lankan Navy on 29-04-2000 near Kodiakarai, Government of India's strong concern on the incident has been conveyed to the Sri Lankan High Commission in Delhi and the concerned authorities of Sri Lanka in Colombo. The Sri Lankan Government has been requested to ask its Navy personnel deployed in the area to act with restraint.

As discussed with you on phone, I have requested the Navy authorities here to ask their detachment for a detailed report on the incident including their assessment on the involvement of the Sri Lankan Navy. The Naval detachment is being instructed to by NHO to get in touch with the district authorities." என்று குறிப்பிடப்பட்டு, இன்றைக்குக் கடிதம் டெல்லியிலேயிருந்து நம்முடைய அரசுக்கு வந்திருக்கிறது.

முற்பகல் 11-05

நாம் நம்முடைய குரலைத் தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், இலங்கை இராணுவம் அதனுடைய வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. கேட்டால் கடல் எல்லையைத் தாண்டி நம்முடைய மீனவர்கள் வந்துவிட்டார்கள் என்று ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். அது உண்மையாக இருந்தால்கூட, அப்படித் தாண்டிச் சென்றிருந்தால்கூட, அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை, அமைதியான முறையிலே அவர்களைக் கைது செய்து இலங்கைக்கு எடுத்துச் சென்று, புகார் கூற வேண்டும். இந்திய இராணுவத்திடமோ அல்லது இந்திய அரசுக்கோ அந்தப் புகாரைத் தர வேண்டுமேயல்லாமல், அவர்களை அந்த இடத்திலேயே கொன்று குவிக்க என்ன உரிமை இலங்கை இராணுவத்திற்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த உரிமையை யார் கொடுத்தது என்பதும் எனக்குப் புரியவில்லை.





இந்தச் சம்பவத்தை வைத்து இங்கே பேசிய பேச்சுக்களில் வேறு சில கருத்துகளும் வெளிப்பட்டன. அவற்றிற்கெல்லாம் நான் பொறுப்பல்ல; பொறுப்பாகவும் இருக்கக்கூடாது. பேசியவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்துகிற ஒரு வழியாக இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், இரு நாடுகளுக்கும் உள்ள உறவைப் பற்றி, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழகத்திலேயுள்ள பல அரசியல் கட்சிகளுக்கும் ஒருமித்த உணர்வு உண்டு.* வெளிநாட்டு விவகாரங்களிலே நம்முடைய அரசு என்ன கொள்கையைக் கடைபிடிக்கிறதோ அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வது என்பது நாம் கடைபிடிக்கின்ற ஒரு கொள்கையாகும். எனவே, இங்கே பேசிய பல கருத்துகள் அவரவர்களுடைய உணர்ச்சி வசப்பட்ட கருத்துகளாக இருந்தாலும்கூட, இவை எல்லாம் இந்த நிகழ்ச்சியின் காரணமாக இங்கே வெடித்துச் சிதறிய கருத்துகள் என்ற அளவிலே இலங்கை அரசும் எடுத்துக்கொள்ள வேண்டும்; இந்திய அரசும் எடுத்துக்கொண்டு, எவ்வளவு வெப்பமான விவாதமாக இது அமைந்தது, அதற்கு என்ன காரணம்? 3 மீனவர்கள் உயிர் என்பது சாதாரணமானதல்ல. இதுவரையிலே இந்த 10 ஆண்டு காலத்திலே 100 மீனவர்கள் ஏறத்தாழ கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதும் சாதாரண விஷயமல்ல. அவர்களுக்கு நாம் தருகின்ற நிதி மாத்திரம் அந்த உயிர் நஷ்டத்தை அந்தக் குடும்பத்திற்கு ஈடுகட்டிவிடாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

பல உறுப்பினர்கள் ஒரு இலட்சம் போதாது, 3 இலட்சம் தர வேண்டுமென்று சொன்னார்கள். ஞானசேகரன் சொன்னார். (குறுக்கீடு) இரண்டு இலட்சமா? ஞானசேகரன் இரண்டு இலட்சம் என்றார். நம்முடைய ஐ. கணேசன் 3 இலட்சம் என்றார். போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொருவரும் சொன்னார்கள். ஒரு நல்ல வழி, நம்முடைய உறுப்பினர்களுக்கும் அதிலே உள்ள அனுதாபத்தை வெளிப்படுத்துகிற வகையில், 50 இலட்சத்தை 60 இலட்சமாக ஆக்கித் தந்திருக்கிறோம், சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு திட்டத்தில். அந்த உறுப்பினர்களுடைய கட்சியின் சார்பாக அந்த உறுப்பினர்கள் எல்லாம் ஓரளவு தொகையைத் தந்து, இன்னும் தர வேண்டிய மிச்சம் எவ்வளவு என்று கருதுகிறார்களோ அதை ஈடுசெய்வார்களானால், அதை வாங்கி நான் அந்தக் குடும்பங்களுக்குத் தரத் தயாராக இருக்கின்றேன். உறுப்பினர்களுடைய உளப்பாங்கை இதிலே நான் தெரிந்துகொள்ளவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: ஒரே ஒரு clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No.

திரு. சி. ஞானசேகரன்: 7 Fishermen have been imprisoned in Sri Lanka.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசாமல் உட்காருங்கள், நேரம் ஆகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். மீதமுள்ள கவன ஈர்ப்புகள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களும்— (குறுக்கீடு) சுந்தரம், நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: முக்கியமான பிரச்சினைக்கு முதல்வர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஒன்றும் கிடையாது. எதுவும் முக்கியம் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் சொல்வதற்கு எல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்று கட்டாயம் கிடையாது, உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இது முக்கியமான பிரச்சினை என்று நீங்கள் நினைக்கவில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: 10 மீனவர்கள் இலங்கைச் சிறையிலே இருக்கிறார்கள். அவர்களை மீட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதை எப்படியோ சொல்லிவிட்டார். அதனால் நான் பதில் சொல்லியாக வேண்டும். அங்கே, இலங்கையிலே சிறையில் இருக்கின்ற மீனவர்கள் பற்றி என்ன என்று கேட்டு அவர் அநேகமாக அவைக் குறிப்பிலும் பதிய வைத்துவிட்டார் என்றே கருதுகிறேன். முதலிலேயும் பேசியிருக்கிறார். பாகிஸ்தான் சிறையிலே இருந்தவர்களை மீட்ட இந்த அரசு இலங்கைச் சிறையிலே இருப்பவர்களையும் மீட்கத் தயங்காது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன்.

முற்பகல் 11-10

*திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1999-2000ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 248 முதல் 252 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000–2001, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2000-2001 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 23 - கூட்டுறவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 66,48,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1685, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்டத்தில் மழை பொய்த்துப் போனதால் விவசாயிகளுக்கு வழங்கிய கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3164, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் பொது மக்களிடமிருந்து வந்துள்ள கோரிக்கைகளை ஏற்று புதிய மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு உத்தரவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவுத் பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4658, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவுத் துறை மூலமாக சேலம் மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1426, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"திருப்பூர் வளர்மதி கூட்டுறவு சிறப்பங்காடியின் நிர்வாகம் ரேசன் கடைகளை நடத்த மறுத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1773, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், மேலப்பனையூர் கிராம அங்காடியைப் பிரித்து மேலமருதூர் கிராமத்தில் புதிய அங்காடி திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2152, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரம், கணவாய்புதூர் ஊராட்சி, கே. மோரூரில் கூட்டுறவுத் துறை மூலம் மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1607, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2000 மே 3

"ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் நடப்பு ஆண்டில் புதிதாக ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3487, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2756, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2976, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் எவ்விதத் தொழில் வளர்ச்சியும் இல்லாததால் நடப்பு ஆண்டில் அங்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை உருவாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3750, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் கே.சி.சி. பாங்க் கிளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2000 மே 3] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2388, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1459, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவுத் தேர்தல்களில் ஆள் மாறாட்டத்தைத் தவிர்ப்பதற்காக எல்லா உறுப்பினர்கட்கும் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3254, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பேரூராட்சியில் கூட்டுறவுக் கடன் சங்கம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4073, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், பெத்தநாய்க்கன்பட்டி, பிலிப்பாக்குட்டை ஆகிய பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் நலன் கருதி LAMP சங்கம் புதியதாக அமைப்பது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1105, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால பயிர்க் கடன்களை வட்டியில்லாமல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 287, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்ட விவசாயிகளின் விவசாயக் கடன்களையும் வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2514, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், சின்னம்மநாயக்கன் பாளையம் விவசாய மக்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன்பெற சுமார் 10 கிலோமீட்டர் செல்ல வேண்டியுள்ளதால் சின்னம்மநாயக்கன் பாளையத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4226, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் மற்றும் ரிஷிவந்தியம் ஒன்றியங்களில் குடும்ப அட்டைகள் முறையாக வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3608, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir,

"to discuss the need to take necessary steps to continue the studies of the students who were made to discontinue their education in unapproved co-operative training institute", I move—

"That the sum of Rs. 66,48,83,000/- allocated under Demand No. 23—Co-operation be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1857, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி, பட்டபுள்ள கிராமத்தில் பகுதி நேர ரேசன் கடை திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,48,83,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1868,12,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1930, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நியாயவிலைக் கடைகளில் மாதம் முழுவதும் ரேசன் பொருட்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4158, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடும்ப அட்டைகளுக்கு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் அளவை கிராமப்புற மக்களுக்கும் 10 லிட்டர் என்று உயர்த்தி வழங்கிட



வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4588, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் சர்க்கரையை ஒரு கிலோ பாலிதீன் பையில் அடைத்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1660, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் தொகுதியில் புதிய குடும்ப அட்டைகள் வேண்டுமென மனு கொடுத்துள்ள மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3579, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடும்ப அட்டை இல்லாமல் விடுபட்டவர்களுக்கு விசாரணை செய்து உடனுக்குடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2225, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நியாயவிலைக் கடைகளில் சர்க்கரை, மைதா போன்ற உணவுப் பொருட்களை சரியாக எடையிட்டு பாலிதீன் பைகளில் அடைத்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1366, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் தனியார் மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்கி வருவதற்குப் பதிலாக அந்தந்தப் பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3514, திரு. ஏ.வி.ஏ. நாசர்.



**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை முறையே பைகள் மற்றும் பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3728, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமையல் எரிவாயு (L.P.G.) விநியோகத்தை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2399, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1742, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மண்ணெண்ணெயை கூட்டுறவு பங்க் மூலமாக மட்டுமே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *1868,12,65,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3568*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பின்னவாசல் அரசு நேரடி கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *1868,12,65,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3930*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொது விநியோகப் பொருட்கள் எடை குறையாமல் இருக்க பாலிதீன் பைகளில் எடைபோட்டு கவர் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *1868,12,65,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4111*, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் பொருட்கள் தரம் உள்ளதாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *1868,12,65,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2815*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *1868,12,65,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3023*, திரு. ந. கருப்பண்ணா உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள குடும்ப அட்டை ஒன்றுக்கு பத்து லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *1868,12,65,000*-ல் ரூ. *100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5079*, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 மே 3

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3105, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir,

"To discuss the need to supply Rice and Kerosene throughout the month to the Ration Card holders through the Ration shops," I move—

"That the sum of Rs. 1868,12,65,000/- allocated under Demand No. 34—Civil Supplies be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2465, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கரைச்சுத்துப்புதூர், வல்லான்விளை, பிள்ளையார் குடியிருப்பு, பெத்தரெங்கபுரம், நக்கனேரி, அழகனேரி, குடுஉயர்நிதான்விளை, தோப்புவிளை (குட்டம்), வடிவம்மன்பட்டி, புஷ்பவனம், ரம்மதபுரம், காடுதுலா, இளையநயினார்குளம், புதியிருப்புவிளை, தாமரைக்குளம், பெருங்குளம், பெரியகுளம் (நெகருங்குளம்), சுண்டவிளை, அரசன்குளம், கொத்தன்குளம் (விஜயாபதி), தாமரைக்குளம் ஆகிய கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1868,12,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.



2000 மே 3] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறையின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கு அனுமதி கேட்டு இருக்கிறார்கள்; அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் இதிலே பேச இருக்கின்றார்கள். காலத்தின் அருமை கருதி, அவர்கள் தங்களுடைய பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, திரு. ப. ரங்கநாதன் அவர்களை முதலிலே அழைக்கின்றேன்.

---

@ 161 முதல் 254 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II—ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[2000 மே 3

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை, உணவு, பொது விநியோக முறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் 1844 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் ராக்டேல் என்ற ஊரில் முதலாளிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காக 28 கம்பெனித் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து தொடங்கியதுதான் நுகர்வோர் பண்டகசாலை. அந்த நுகர்வோர் பண்டகசாலைதான் இன்று உலகளாவிய இந்தக் கூட்டுறவு இயக்கத்திற்குத் தாய் ஸ்தாபனமாக இன்று அளவிலும், இந்த நிமிடம் வரையிலும் இருக்கின்றது. முதலாளித்துவத்தில் கிடைக்கின்ற இலாபம் முதலாளிக்குப் போய்ச் சேருகிறது; கூட்டுறவில் அதன் இலாபம் ஈவுத் தொகையாக, பங்குத் தொகையாக உறுப்பினர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. அதற்காகத்தான் நம் முன்னோர்கள் இந்த முதலாளித்துவத்தை ஒடுக்குவதற்காக — இலாபம் ஈட்டுவதே முதலாளித்துவத்தின் முக்கிய நோக்கம்; உறுப்பினர்களுக்கு சேவை செய்வதே கூட்டுறவின் முக்கிய நோக்கம் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடு தமிழ்நாட்டிலே இந்த கூட்டுறவு இயக்கத்தை 1904 ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் உள்ள, இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்ற இடத்தில் முதலாவதாகத் தொடங்கினார்கள். காசுக் கடன் கொடுப்பதற்காக அந்தச் சங்கம் தொடங்கப்பட்டது.

அதேபோன்று 1904ஆம் ஆண்டில்தான் சென்னை திருவல்லிக்கேணியில் சீனிவாச சாஸ்திரி என்ற ஒருவரால் 14 பேர்கள் ஒன்று சேர்ந்து திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுப் பண்டகசாலை என்று ஒரு குடிசையிலே தொடங்கினார்கள். இன்று அந்தச் சங்கம் ஆலமரம் போல் வளர்ந்து 1967 வரையில் சிறப்பாகவும் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆக மொத்த கூட்டுறவுச் சங்கங்களை தமிழ்நாட்டில் எடுத்துக்கொண்டோமேயானால் 28,314 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றிற்கு கலைஞர் அவர்களுடைய தலைமையிலான ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகுதான், 24 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த கூட்டுறவுத் தேர்தல்களை எல்லாம் நடத்தி இருக்கிறார்கள். ஒருசில



2000 மே 3] [திரு. ப. ரங்கநாதன்]

சங்கங்களுக்கு இன்னும் தேர்தலை நடத்தாமல் இந்தத் துறையினுடைய அதிகாரிகள் காலதாமதம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதிலே மாநில அளவில் இருக்கின்ற தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் 23-ல் பல தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் இதுநாள் வரை நடைபெறவில்லை.

அதேபோன்று தமிழ்நாட்டில் இயங்குகின்ற தலைமைக் கூட்டுறவு வங்கிகள், அதற்கு அடுத்த நிலையில் இருக்கின்ற 23 மாவட்ட கூட்டுறவு வங்கிகள், அதற்கு அடுத்த நிலையில் இருக்கின்ற 126 நகரக் கூட்டுறவு வங்கிகள், அதற்கு அடுத்த நிலையில் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 4,582—இந்தக் கூட்டுறவு வங்கிகள் எல்லாம் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக, விவசாயிகளினுடைய நலனிலே அக்கறை செலுத்துவதற்காகத் தொடங்கி நடத்தப்படுகின்ற வங்கிகள்.

முற்பகல் 11-20

இந்த வங்கிகளிலே பொது மக்களுடைய மொத்த வைப்புத் தொகை 14,000 கோடி ரூபாய் இருக்கிறது. ஆனால், துறையினுடைய அதிகாரிகளின் கவனக் குறைவினால் — நான் இந்த விஷயத்தில் மட்டும் அமைச்சரைக் குறை சொல்ல முடியாது — ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு மறுநிதி உதவியாக நபார்டு கடந்த ஆண்டு ரூ. 860 கோடி குறியீடு நிர்ணயித்திருந்தது. ஆனால், இதுவரையில் அந்த 860 கோடி ரூபாயில் தமிழ்நாடு பெற்ற மறுநிதி உதவி 200 கோடி மட்டுந்தான் என்று கணக்கிலிருந்து தெரிகிறது.

கூட்டுறவு வங்கிகள் பெற்றுள்ள வைப்புத் தொகையைக் கொண்டே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள் மூலமாக வேளாண் பணிகளுக்குக் கடனை வழங்க முடியும். அப்படி கடன் வழங்கப்பட்டால், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் 'நபார்டு' வழங்குகிற மறுநிதி உதவியைப் பெறத் தேவையில்லை. இதனால் கூட்டுறவு வங்கிகள் விவசாயப் பணிகளுக்கு மிகவும் குறைந்த வட்டியில் கடன் வழங்க ஏதுவாக இருக்கும். அதாவது Prime Lending Rate. இப்போது 14,000 கோடி ரூபாயை இந்தக் கூட்டுறவு வங்கிகளிலே வைத்துக்கொண்டு, நாம் எதைக் கேட்டாலும் 'நபார்டை' சொல்கிறோம்.

இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் தஞ்சை, நாகை மாவட்டங்களில் காவிரி டெல்டாப் பகுதிகளில் இருக்கின்ற

வறட்சி நிலைமையைக் கருத்தில்கொண்டு கூட்டுறவுக் கடனை, கூட்டுறவு வட்டியை இரத்துச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்து வெளிநடப்பு எல்லாம் செய்தோம். உடனே அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் 'நபார்டு' வங்கியினுடைய சட்ட திட்டத்தினால், அவர்களோடு நாம் வைத்துக் கொண்டிருக்கிற ஒப்பந்தத்தினால் இதைத் தள்ளுபடி செய்ய முடியாது என்று கூறினார்கள்; ஏற்றுக்கொள்கிறேன். கூட்டுறவுக கடனைத் தள்ளுபடி செய்ய முடியாது. ஏனென்றால், கூட்டுறவு என்பது பொது மக்களுடைய பணத்திலிருந்து இயங்குகிற ஒரு நிறுவனம். ஆனால், அந்த நிறுவனத்தில் இருக்கிற 14,000 கோடி ரூபாயை, தமிழ்நாட்டிலுள்ள பல கூட்டுறவு வங்கிகளில் இருக்கிற இந்த வைப்புத் தொகையை, ஆங்காங்கே இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் வழங்கிட வேண்டும். இந்த வங்கிகளில் நிருவாகப் பொறுப்பிலே இருப்பவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகிகள் எந்தெந்த மாவட்டங்களிலே வறட்சி ஏற்படுகிறது, மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, அவர்களாகவே நிருவாகக் குழுவைக் கூட்டி, அந்த மாவட்டத்திற்குத் தக்கதுபோல, விவசாயிகளினுடைய சுமையைக் குறைப்பதற்காக, அவர்களுடைய நிலைமையைக் கருதி, கடனிலே வட்டியிலே தள்ளுபடி செய்ய வேண்டும். இதுதான் மற்ற மாநிலங்களில் நடைபெறுகிறது. ஆந்திர மாநிலத்திலே, கர்நாடக மாநிலத்திலே, கேரளத்திலே, மஹாராஷ்டிரா மாநிலத்திலே, ஒரிஸ்ஸா மாநிலத்திலே இந்த முறையைத்தான் கையாளுகிறார்கள். ஆனால் இங்கே—

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தினுடைய தலைவராக இருக்கிறார்கள். நேற்று அனைத்துக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும், மத்திய வங்கித் தலைவர்களையும் அழைத்துப் பேசும்போது, அந்தக் கூட்டத்திலே அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். அங்கே இவர் இதைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்து பதிலும் பெற்றிருக்கிறார். இப்போது சபையிலே பதிவு செய்கிறார்.

தமிழகத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்கெனவே விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது, 'நபார்டு' வங்கியோடு எந்த ஒப்பந்தமும் இல்லாதபோது, 500 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து தந்தார்கள். அதைப்போல, விவசாயிகள் மழை, வெள்ளக் காலங்களில் பாதிக்கப்பட்டபோது கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று



மற்ற உறுப்பினர்கள் எண்ணுவதற்கு முன்பாக அதை எழுப்பியவரே நம்முடைய முதல்வர் அவர்கள்தான். ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தப்படி கடனைத் தள்ளுபடி செய்வதற்கு 'நபார்டு' வங்கி அனுமதி அளிக்கவில்லை. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு நம்முடைய ரங்கநாதன் அவர்கள் பேசினார்கள். 'நபார்டு' வங்கியினுடைய ஒப்புதல் இல்லாமல் பாண்டிச்சேரியிலே கடனைத் தள்ளுபடி செய்த காரணத்தால் அவர்களுக்கு மறுநிதி உதவி வழங்கப்படவில்லை.

கேரளாவிலே தள்ளுபடி செய்கிறார்கள் என்று சொல்கிறார். கேரளாவிலே வட்டியைத் தள்ளுபடி செய்யவில்லை. Penal interest—தவறுதல் வட்டியை, கூட்டுறவு நிறுவனங்களே சொல்லி, ஆண்டிற்கு ஒரு முறை என்று சொல்லி, வசூல் செய்கின்ற தேதியை வைத்து தள்ளுபடி செய்து தருகிறார்கள். மற்ற மாநிலங்களில் யாரும் விவசாயிகளுக்குத் தரப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஒரு கேள்விகூட எழுப்பவில்லை. இப்போது இராஜஸ்தான், குஜராத் மாநிலங்களிலே வறட்சி நிலவுகிறது. இருந்தாலும்கூட அங்கு எந்த விவசாயிக்கும் கடனைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை.

*முற்பகல் 11-25*

அதுபோல, நபார்டு நிறுவனத்திடமிருந்து நாம் பணம் பெறத் தேவையில்லை என்று சொன்னார். நபார்டு நிறுவனத்திடமிருந்து நாம் பணம் பெறாமல் போனால் குறைவான வட்டிக்கு விவசாயிகளுக்கு நம்மால் பணம் தர இயலாது. ஏனென்றால் நபார்டு நிறுவனம் 5 சதவீதத்திற்கு நமக்கு வட்டிக்குத் தருகிறது. நம்மிடம் 14,000 கோடி ரூபாய் வைப்பு நிதியாக இருந்தாலும்கூட நாம் வைப்பு நிதி பெறுகிறபோது பொதுமக்களிடம் 13 சதவீதம், 15 சதவீதம், 18 சதவீதம் என்று பல்வேறு காலகட்டங்களிலே 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று சொன்னால், 18 சதவீதம் வரை வைப்பு நிதிக்கு வட்டி நாம் தருகிறோம். இதை விவசாயிகளுக்கு 12 சதவீதத்திற்குத் தர இயலாது. நபார்டு நிறுவனத்திடமிருந்து 5 சதவீதத்திற்குப் பெற்றால்தான் தர முடியும். நபார்டிலிருந்து வாங்குகின்ற மறுநிதியை வாங்கிக் கொடுக்கின்றபோதுகூட 65 சதவீதம் நபார்டு நிதியைத் தர வேண்டும், 35 சதவீதம் மத்திய வங்கியினுடைய நிதியைத் தர வேண்டும். அப்படித் தந்தால்தான் அவர்கள் அந்தப் பணத்தைத் தருகிறார்கள். எனவே, நபார்டு நிறுவனத்திடமிருந்து பெற்றால்தான் குறைவான வட்டிக்கு நம்மால் தர இயலும்.

[2000 மே 3

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முழுமையாகப் பேசுவதற்கு முன்பே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் கூட்டுறவுக் கடனை இரத்துச் செய்யச் சொல்கிறார்கள். அது முடியாது, இயலாத காரியம் என்று சொல்லிவிட்டுத்தான் விளக்கம் நான் சொன்னேன். ஆகவே நீங்கள் 14,000 கோடி ரூபாயை விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, 65 விழுக்காடு கடனாக நீங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்தாலும் அல்லது 50 விழுக்காடு கொடுத்தாலும் மீதி 50 விழுக்காட்டை மற்றப் பணிகளுக்கு நீங்கள் கொடுத்தால், நிச்சயமாக அதிலிருந்து வருமானத்தைப் பெற்று விவசாயிகளுக்கு நீங்கள் 5 விழுக்காடு வட்டியிலே கடன் தர முடியும். ஆனால், நீங்கள் மற்ற தொழில்களில் ஈடுபடுவது கிடையாது. இந்த 14,000 கோடி ரூபாயை என்ன தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள் என்று சொன்னால், மத்திய வங்கிகள், நகர வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிகள், இவையெல்லாம் வெறும் வட்டிக்கடை நடத்துவதுபோல நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நகையின் மீது கடன், வீட்டுக்கு, புதிதாக வீடு கட்டுவதற்கு அல்லது வீடு வாங்குவதற்கு 10 இலட்சம் ரூபாய் வரையில் கடன். இதைத் தாண்டி நீங்கள் கமர்ஷியல் வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் செயல்படுகிறதே—அதாவது ஏற்றுமதி இறக்குமதிக்குக் கடன் கொடுப்பது, பெரிய தொழில்களுக்குக் கடன் கொடுப்பது, சிறிய தொழில்களுக்குக் கடன் கொடுப்பது இந்தவித பணிகளில் இதுநாள் வரையில் தமிழ்நாட்டிலே இருக்கிற கூட்டுறவு வங்கிகள் ஈடுபடவேயில்லை. இதனால்தான் இவர்கள் மற்ற மாநிலங்களைப் போல விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதற்கு இந்தத் துறை தயங்குகிறது. அப்படி நீங்கள் குறைந்த வட்டியில் கடன் கொடுத்தாலும் வங்கிகளிலே நட்டம் ஏற்படாது. ஏனென்றால், நீங்கள் மற்ற தொழில்களுக்குக் கடன் கொடுக்கிறபோது அங்கே கூடுதலாக வட்டி வருகிறது; 24 சதவீத வட்டி. இப்போது ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். நமது தமிழ்நாடு மின்சார வாரியம் பல நிதி நிறுவனங்களில் கடன் வாங்குகிறது. TIIC—Tamil Nadu Industrial Investment Corporation பல நிறுவனங்களில் கடன் வாங்குகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வட்டிக்குக் கொடுக்கலாம். நீங்கள் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 சதவீதத்திற்குக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கினால், மின்சார வாரியம் திவாலாகிவிடும்.



2000 மே 3]

**திரு. ப. ரங்கநாதன்:** நான் 24 சதவீதம் என்று சொன்னது Priority Sector......

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அடிப்படையைத் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள் வேளாண் உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்வதற்காக உருவாக்கப்பட்டன. மற்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வியாபாரத்திற்காக உருவாக்கப்பட்டன. அதிலே வசூல் ஆகவில்லை என்றால் மத்திய அரசு அதற்காகப் பணம் தருகிறது. ஆனால் நமக்கு அதுபோல பணம் தருவதில்லை. வட்டியைப் பற்றிச் சொன்னார். மத்திய வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வேறு பணிகளுக்குத் தருவதுபோல நாம் தந்தால் நபார்டு நிறுவனம் ஒத்துக்கொள்வதில்லை. நபார்டு ஒத்துக்கொண்டால் அதை வழங்கலாம். ஒவ்வொன்றிற்கும் நபார்டினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் மற்ற பணி என்று சொன்னால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். கிராமப்புறத்தில் இருக்கின்ற மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்ற பணி செய்கிறவர்களுக்குக் கடனை வழங்கலாம் என்று சொல்லி இருக்கிறாகள். இந்த ஆண்டு கட்டடம் கட்டுவதற்கு உரிய நிதியை கூடுதலாகத் தரலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படித்தான் நம்முடைய பணியைத் தொடர முடியுமே தவிர, தொழில் கூட்டுறவு என்று சொன்னால் Spinning Mills, Sugar Mills இரண்டைத் தவிர மாற்றுப் பணிகளுக்கு செல்லுமானால் தலைமை வங்கியினுடைய அனுமதி பெற வேண்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** நேரம் இல்லை, நான் அதற்கு மீண்டும் விளக்கம் சொல்வேன், அவரும் விளக்கம் சொல்வார். எனவே, ஒரே ஒரு கருத்தைச் சொல்கிறேன், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாராட்டிரா மாநிலத்தில், குஜராத் மாநிலத்தில், கர்நாடக மாநிலத்தில் அல்லது கம்யூனிஸ்ட்கள் ஆளுகிற மேற்கு வங்க மாநிலத்தில் கூட்டுறவு வங்கிகளில் இருக்கின்ற உபரி நிதியிலிருந்து அனைத்துத் தொழில் செய்பவர்களுக்கும் கடன் அளிக்கப்படுகிறது. மகாராட்டிரா மாநிலத்தில் காஸ்மோஸ் பேங்க் என்ற ஒன்று புனேயில் இருக்கிறது. காஸ்மோஸ் நகரக் கூட்டுறவு வங்கி, புனே மத்தியக் கூட்டுறவு வங்கி, 217 கிளைகளை வைத்து நடத்துகிறார்கள். கிட்டத்தட்ட ரூ.2,000 கோடி அங்கே வைப்பு நிதி இருக்கிறது. அவர்கள் எல்லாத் துறைகளுக்கும் உதவி செய்கிறார்கள்.

அவர்களும் நபார்டில் இருந்து பணம் வாங்குகிறார்கள். அவர்கள் எப்படிச் செய்கிறார்கள் என்று தெரியவில்லை.....

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of order.

**திரு. ப. ரங்கநாதன்:** நான் yield ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உங்கள் பேச்சை முடிக்கச் சொன்னேன், எவ்வளவு நேரம் பேசுவீர்கள் நீங்கள்? தொடங்கி வைத்துப் பேசியதாலே 15 நிமிடம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** எனக்கு அளிக்கப்பட்ட நேரத்தில் அமைச்சர் அவர்கள் 10 நிமிடம் பேசியிருக்கின்றார்கள். முக்கியமான விஷயம் பேசுகிறேன்.

மாநிலங்களிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள், கடந்த ஆண்டு 1998-99 தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு வந்தபிறகு நான் சொல்கிறேன். கடந்த ஆண்டு மட்டும் புள்ளிவிவரம் தருகிறேன். Housing Federation 20 கோடி ரூபாய் இலாபம் வந்திருக்கிறது. அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பொறுப்பேற்ற பின்பு. L.D. Bank 5 கோடி ரூபாய் இலாபம். Consumer Federation 10 இலட்சம் ரூபாய் இலாபம். T.N.S.C. Bank சுமார் 2,000 கோடிக்கு வைப்பு நிதி இருந்தும், மிகப்பெரிய லேவாதேவி செய்தும், இலாபம் 2.50 கோடி ரூபாய். TANFED எல்லா இழப்பும் சேர்த்தால் 6 கோடி ரூபாய் இழப்பு. 18 சர்க்கரை ஆலைகள் — இந்தியாவில் இருக்கின்ற எல்லா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் இலாபத்தில் செல்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கிற சர்க்கரை ஆலைகளுக்கு இழப்பு. இதுவரையில் மொத்த இழப்பு 507 கோடி ரூபாய். ஏனென்றால் அவற்றில் அதிகாரிகள்தான் S.O. ஆக இருக்கிறார்கள். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வரவில்லை. அதற்கு தேர்தலும் வைக்கவில்லை. அதிகாரிகள் எல்லாம் நேர்மையானவர்கள் என்று நீங்கள் சொல்லி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் நல்லவர்கள் இல்லை. தேர்வு செய்யப்பட்ட தலைவர்கள் எல்லாம் தவறு பண்ணுகிறார்கள். அதனாலே அதிகாரிகளை வைத்து நடத்தினால் சிறப்பாகச் செயல்படும் என்று





சொல்லி, அதிகாரிகளை வைத்து நடத்துகிறீர்கள். அதிலே Loss 507 கோடி ரூபாய். அதேபோல கூட்டுறவு நூற்பாலைகள் 19 இருக்கின்றன. 19 கூட்டுறவு நூற்பாலைகளும் loss-லே இருக்கின்றன. ஆனால், தனியார் நூற்பாலைகள் இலாபத்தில் போகின்றன. தனியார் ஆலைகள் இலாபத்தில் வரும்போது கூட்டுறவு நூற்பாலைகள் ஏன் loss-லே வருகின்றன? அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

சிறுதொழில் முன்பணக் கடன். நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் — இங்கே படித்து வேலையில்லாமல் கிட்டத்தட்ட 70 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். நகர வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள், இந்த வங்கிகள் எல்லாம் அரசுத் துறையில் பணியாற்றுகின்ற பணியாளருடைய ஜாமீனைப் பெற்றுக்கொண்டு 2 இலட்சம் ரூபாய் வரையில் கடனை வழங்கினால், கிராமப்புறத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கு சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதற்கடுத்து, இங்கே அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், அண்மையில் ஒரு கூட்டுறவு வார விழா நடத்தினோம். இந்தக் கூட்டுறவு வார விழாவில் ஓர் அழைப்பிதழ் அடித்தார்கள். இந்தக் கூட்டுறவு வார விழாவை இந்தியா முழுவதும் நடத்துவது, ஒன்றியம்தான் நடத்தவேண்டும். ஆனால், இங்கே அதிகாரிகள்தான் நடத்துகிறார்கள். நான்தான் தலைவனாக இருக்கிறேன். நான் அதை முதலமைச்சரிடம் போய் சொல்லவில்லை நான் சொல்லியிருந்தால் அவர் இதைக் கண்டிப்பாக கேட்டிருப்பார். இது ஒரு சாதாரண விஷயம் என்பதால் நான் சொல்லவில்லை. இதிலே என்ன செய்கிறார்கள் பாருங்கள், தலைமை, அமைச்சர் தான் போடவேண்டும். அதிலே விழா மலர் பெறுதல் மாண்புமிகு வீராசாமி அவர்கள், பிறகு துரைமுருகன் அவர்கள், கூட்டுறவு நிறுவனத்தை தொடங்கி வைக்க ஒருவரைப் போட்டார்கள். புகைப்படக் கண்காட்சியை தொடங்கி வைப்பதற்கு அந்தத் துறைச் செயலாளர் திரிபாதியை போட்டிருக்கிறார்கள். அவருக்கு கீழே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்தபிறகு அமைச்சர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே சுந்தரம், என்.கே.கே. பெரியசாமி, அப்புறம் அந்தியூர் செல்வராஜ், பிச்சாண்டி எனப் போட்டிருக்கிறார்கள். இது எப்படி நியாயம்? (அழைப்பிதழை மாண்புமிகு முதலமைச்சரிடம் காண்பித்தார்)

அதாவது Protocol என்ன சொல்லுகிறது என்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவி தலைமைச் செயலாளருக்கு இணையான பதவி என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை கேவலப்படுத்துகிறார்கள் அதிகாரிகள் என்றால் இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

முற்பகல் 11-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இதில் வரவேற்பாளரே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன், எம்.எல்.ஏ. அவர்கள், தலைவர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் என்று முதல் பெயரே அவர் பெயர்தான் போடப்பட்டிருக்கிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே, நான் எனக்காகச் சொல்லவில்லை. அதிலே அமைச்சர்களுடைய பெயர்களை எங்கே போட்டிருக்கிறார்கள் என்பதை தயவுசெய்து நீங்கள் பாருங்கள். உங்களுடைய அமைச்சர்கள்; அதற்கடுத்து, அதே கேரள மாநிலத்தில் நிகழ்ச்சியை எப்படி போட்டிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள் (குறுக்கீடு) இல்லை. இல்லை. நான் சொல்லுகிறேன், கேரள மாநிலத்திலே பாருங்கள். கேரளாவில் அண்மையிலே ஒரு நிகழ்ச்சி அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்துகிறது. அங்கே என்ன செய்திருக்கிறார்கள் என்றால், அமைச்சர் குத்துவிளக்கு ஏற்றுகிறார், அகில இந்திய Federation Chairman, துணைத் தலைவர், அங்கே கேரளாக்காரர், Vice Chairman, M.M.Hassan Felicitate செய்கிறார். பிறகு நாராயணன் என்று ஒரு சேர்மென் RUDCO. அதற்கடுத்து, மாநில பிரசிடெண்ட், எர்ணாகுளம், District Co-operative Bank President, K.K. Narayanan, President, Kannanur District Co-operative Bank, அதற்குப் பிறகு எம்.பி. பெயரை போட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்துதான், குருவில்லா ஜான், I.A.S., Secretary, Co-operation Departmant, Kerala, அதற்கடுத்து B.B. Joy, I.A.S., Registrar, Co-operative Societies, Kerala இதையும் பாருங்கள் (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

தமிழகத்தில் மொத்தம் உள்ள கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிகள் 114. அந்த 114-ம்—ஒரு காலத்தில், 1967-லிருந்து கலைஞர்தான் ஆட்சியில் இருந்தார். 1967-லிருந்து 1976-வரை நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். 1977 வரையிலே அது இலாபத்தில் போய்க்கொண்டிருந்தது. அந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகள்

223316
சென்னை-600 009



இலாபத்தில் இருந்தன. ஆனால், அதிகாரிகள் 24 வருடங்களாக இருந்து அதில் 74 சொசைட்டிகள் நட்டத்தில் இயங்குகின்றன. அதிகாரிகள் வந்ததற்குப் பிறகு நட்டத்தில் இயங்குகின்றன.

அதேபோல, மொத்த விற்பனை பண்டகசாலைகள் 36. அவ்ற்றிலே இலாபத்தில் செயல்படுபவை 11. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். Winding-up செய்யப் போகிறேன். நட்டத்தில் செயல்படுபவை 22. இந்த இழப்புகளுக்கு யார் காரணம் என்றால், 23 ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த காரணத்தால், அதிகாரிகள் பொறுப்பில் இருந்த காரணத்தால், ஏறத்தாழ இந்தத் துறையிலே 5 ஆயிரம் கோடிக்கு மேல், இந்த 23 ஆண்டுகளில் அதிகாரிகள் நட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் துறையிலே இப்போது மூடுவிழா நடத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவந்த பின்புதான் நீங்கள் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளீர்கள்.

அப்படி இருப்பினும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றுகின்ற செயலாளர்கள் வட்டிக்கடை வைத்து நடத்துகிறார்கள். அவர்களை மாற்ற முடியாது.

D.C. Bank தலைவர்கள் எல்லாம் இங்கே உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரமே கிடையாது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. எல்லாவற்றையும் அதிகாரிகள்தான் செய்கின்றார்கள். உதாரணமாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. ஜி.எல். வெங்கடாசலம். (குறுக்கீடு) 22 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு பேசும் வாய்ப்பை cut செய்யலாமா? (குறுக்கீடு) சரி. பிறகு என்மேல் குறை சொல்லக்கூடாது.

**திரு. ப. ரங்கநாதன்:** ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். இப்போது ஒரு G.O. போட்டிருக்கிறார்கள். தொடக்க வேளாண்மைக்

V.21, 31 A 00 100.101.2

கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகின்ற செயலாளர்களைப் பணிமாற்றம் செய்வதற்கும், தவறு செய்பவர்களைப் பணியிலிருந்து நீக்குவதற்கும் இப்போது அதிகாரம் இல்லை. அவர்கள் எல்லாம், ஒவ்வொரு செயலாளரும், 60 இலட்சம் கையாடல் செய்திருக்கிறார்கள்—அமைச்சருடைய தொகுதியிலேகூட, அவருடைய மாவட்டத்திலே காட்டூர் என்ற ஊரில்—ஒரு தொடக்க வேளாண்மை வங்கியின் செயலாளர் 50 இலட்சம் ரூபாயை எடுத்திருக்கிறார். அவரை வேலையைவிட்டு எடுக்க முடியவில்லை. அவரை கைது செய்ய முடியாது. அதேபோல, இங்கே திருவள்ளூர் மாவட்டத்திலே ஓர் ஊரில் 17 இலட்சம் ரூபாயைத் திருடியிருக்கிறார். அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், அதிகாரிகள், அதிகாரிகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். மாவட்ட கூட்டுறவு வங்கியினுடைய தலைவர் சென்னை கூட்டத்திற்கு வரவேண்டுமென்றால், அமைச்சர் நடத்துகிற கூட்டத்திற்கு வருவதற்கு, இங்கே வந்து தங்குவதற்கு அவருக்கு அலவன்ஸ் கிடையாது. அவர் என்ன வீதியிலா படுத்துத் தூங்கமுடியும்? இந்த நிலைமை இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன் இதற்கு ஒரு G.O. போட்டிருக்கிறார்கள் பாருங்கள்.

முற்பகல் 11-40

In G.O. Ms. No. 55, Co-operation, Food and Consumer Protection Department, dated 24-3-2000, "The Tamil Nadu Primary Agricultural Co-operative Bank Common Cadre Service Regulations 2000 as appended to this order for governing the post of Secretary of the Primary Agricultural Co-operative Bank brought under the above said common cadre is also approved.".

அதைப்போட்டுவிட்டு, இந்த அதிகாரத்தை யாருக்குக் கொடுக்கிறார்கள் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள், the Joint Registrar of Co-operative Societies—Joint Registrars நிறைய பேர் இருக்கிறார்கள். ஒரு காலத்திலே Joint Registrar-ரே கிடையாது. இப்போது 100 Joint Registrars, 500 Deputy Registrars 10,000-க்கு மேலே Co-operative Sub-Registrars என்று அதிகாரிகளெல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் — "The Joint Registrar of Co-operative Socjeties in the region concerned shall be the Cadre Authority in respect of Primary Agricultural Co-operative Bank for a period of three years from the date of coming into force of these regulations.".



அதாவது, இந்த செகரட்டரிகளை மாற்றுவது, அதற்கு மொத்தம் 20, 30 பக்கங்களுக்குப் போட்டிருக்கிறார்கள், எல்லா அதிகாரங்களையும் Joint Registrars-களிடம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர்களெல்லாம், சும்மா, டம்மியாக, அவர்கள் வெள்ளைச் சொக்காயைப் போட்டுக்கொண்டு போய்க்கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையிலே அடிக்கடி குறுக்கிடுவதற்கு நான் வருந்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள், தொடர்ந்து நேற்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்களைப் பற்றி, மாற்றி மாற்றி இங்கே பதிவு செய்கிறார். ஏற்கெனவே common cadre என்று, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை இல்லை. செயலாளர்களை மாற்ற முடியாது. விவசாயிகளுடைய குறைகளைக் கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள், பல விவசாயச் சங்கங்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க, common cadre-ஆக ஆக்கினார்கள். முதலிலே அவர்களை முதுப் பணி நிலைக்குக் கொண்டு வருகிறபோது, மூன்று மாத காலத்திற்கு அவர்களுடைய சீனியாரிட்டி, அவர்களுடைய பணம், எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள், 'A' சங்கத்தில் இருக்கிறார்களா, 'B' சங்கத்தில் இருக்கிறார்களா, 'C' சங்கத்தில் இருக்கிறார்களா என்பதை ஆய்வதற்காகத்தான் இணைப் பதிவாளர் தலைமையிலே இப்போது மாறுதல் செய்ய அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. நேற்று மத்திய வங்கித் தலைவர்களெல்லாம் கேட்டுக்கொண்ட பிறகு, மத்திய வங்கியிலே இருக்கிற இணைப் பதிவாளர் தலைமையிலே அதை வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மாற்றித் தருகிறோம் என்று, அதையும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம். மீண்டும் மீண்டும் புதிதாக ஏதோ சொல்வதுபோல சொல்லிக்கொண்டு இருப்பது அவ்வளவு சரியாக இருக்காது.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுவதற்கு உங்களுக்கு ஒரு நிமிடம் தருகிறேன்; தந்துவிட்டு உங்களில் ஒருவர் பேசுவதைக் குறைத்துவிடுவேன், பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டத்தில், 1976 வரைக்கும், தலைவர்தான் இருந்தார். அதாவது, நம்முடைய தமிழ்நாட்டிலே கூட்டுறவுச் சட்டம் என்பது முதன்முதலில் 1932-லே உருவாக்கப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்திற்கு சில அதிகாரங்களைக் கூடுதலாகக் கொடுத்து, 1961-லே, 1963-லே பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்தார்கள். அதே சட்டத்தைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள், 1976 வரையில், ``அதுதான் உண்மையான சட்டம்; மக்களை மக்களே தேர்ந்தெடுத்து, கூட்டுறவை வலிமைப்படுத்துகிற சட்டம்" என்று அந்தச் சட்டத்தை அவர் திருத்தவே இல்லை. ஆனால், அதற்குப் பின்பு எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் 1983 ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தை மாற்றி, 1988 ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சி, அலெக்சாண்டர் ஆட்சி காலத்தில், ஒரே இரவில் அனைத்து அதிகாரங்களையும், அதிகாரிகளும், பதிவாளரும், கூடுதல் பதிவாளரும் பெற்றுக் கொண்டார்கள். நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்துவது, கூட்டுறவாளர் என்ற முறையில், இந்த 1983, 1988 சட்டத்தை நீங்கள் நீக்கினால், நிச்சயமாக தமிழ்நாட்டிலே ஒரு நல்ல கூட்டுறவு நிறுவனம் செயல்படுவதற்கு வசதியாக இருக்கும். இப்போது இழப்பீடாக இருக்கின்ற அனைத்து மொத்த விலைப் பண்டக சாலைகள், திருவல்லிக்கேணி பண்டகசாலை, உங்களுக்கே தெரியும்; கோயம்புத்தூர் சிந்தாமணி உங்களுக்குத் தெரியும்; மதுரை பாண்டியன் ஸ்டோர்ஸ், தெரியும்; அதேபோல, திருச்சி சிந்தாமணி — அது அமைச்சர் அவர்கள் தொகுதி — அதெல்லாம் இலாபத்திலேதான் இருந்தன. ஏன் இடையிலே நஷ்டம் வந்தது, 23 வருடங்களிலே? அதிகாரிகள்தான் நஷ்டப்படுத்தினார்கள். 5,000 கோடி ரூபாயைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள் அதிகாரிகள். நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்களா? 507 கோடி ரூபாய் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே இழப்பு ஏற்பட்டது. கடந்த வருடம்கூட, 186 கோடி ரூபாய் இழப்பு. அமைச்சர் நடவடிக்கை எடுத்தாரா? இதில் அவர்களாலே நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால், அதிகாரிகள் ஆங்காங்கே தடைகற்களைப் போடுகிறார்கள். அமைச்சருக்கே தெரியாது. நீங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள்தான் தப்புப் பண்ணுகிறார்கள் என்று சொன்னால், எப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களெல்லாம் தப்புப் பண்ணுவார்கள்? சொல்லுங்கள் நீங்கள். எந்தத் தலைவர் தப்புப் பண்ணினார் என்று சொல்லுங்கள். நீங்கள் அதிகாரமே கொடுக்காமல், ஏதோ ஒரு தேர்தலை நடத்தி, தலைவராகப் பொறுப்பிலே உட்கார வைத்தீர்கள் என்று சொன்னால், எப்படி அவர்கள் பணி செய்ய முடியும்? அன்றைக்குத்





தேர்ந்தெடுத்த தலைவர்கள் எல்லாம் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் சம்பாதித்து வைத்து போயிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் சட்டத்தை உடனடியாக மாற்றுவதற்கு இன்றே அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) இந்த வாய்ப்புக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய கிராம மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே பணிபுரிந்து கொண்டிருக்கிற, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, சில கருத்துகளை இங்கே பேசலாம் என்றிருக்கிறேன்.

இப்போது அனைத்து விவசாயிகளுக்கும் பயனளிக்கின்ற வகையிலே, கடந்த ஆண்டு சிறு விவசாயிகளுக்கு மட்டும் குறித்த காலத்திலே கடனைச் செலுத்துவதற்கு 6¼ சதவிகிதம் என்ற அடிப்படையிலே, ஊக்கத் தொகையை அளித்த நம்முடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அனைத்து விவசாயிகளுக்கும் குறுகிய, நீண்டகாலக் கடன்பெற்ற விவசாயிகள் அனைவருக்கும், குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தினால், அவர்களுக்கு 7 சதவிகிதம் ஊக்கத் தொகையை அளித்திருக்கிறார்கள். இதனை, இப்போது கிராமத்திலே இருக்கிற அனைத்து விவசாயிகளும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், குறித்த காலத்தில் கடன் தவணையைச் செலுத்தத் தவறினால், அந்தத் தவணை தவறிய கடனுக்கு அபராத வட்டியையும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதனையும் விவசாயிகள் இப்போது மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரத்தில், கிராமங்களிலே நடைபெறுகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பணியாற்றும் செயலாளர்கள் நீண்ட

காலமாக ஒரே இடத்தில் பணியாற்றினால், விவசாயிகளினுடைய நிலைமையும் பாதித்து, அதேபோன்று அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலும் நிறைய குறைபாடுகளும், முறைகேடுகளும் நடக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, இந்த அரசானது, அவர்களுக்குப் பணிமாற்றம் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. அதுவும் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப் போன்று, இணைப் பதிவாளர்களுக்கு அந்தப் பணிமாற்றம் வழங்குகிற அதிகாரம் அளிக்கப்படுகின்ற நிலைமையை மாற்றி, இப்போது மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக இணைப் பதிவாளர் அந்த மாறுதலை வழங்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அதனைகூட மாற்றி, மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமித்து, அதன்மூலமாக அவர்களுக்குப் பணிமாற்றம் செய்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

நம்முடைய தலைவர், மாண்புமிகு கலைஞர் அவர்கள், 1989-90 ஆம் ஆண்டு, மூன்றாவது முறையாக பொறுப்பேற்றபோது, தர்மபுரி மாவட்டத்தில், தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக மகளிர் குழுக்களை ஆரம்பித்து, அதன்மூலமாக மகளிரிடையே ஒற்றுமையும், அதேபோன்று சிறு சேமிப்பு என்ற நல்ல பழக்கத்தையும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலே அனைத்து இடங்களிலும் அதுபோன்ற மகளிர் குழுக்கள் திறம்பட இப்போது செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், இந்த மகளிர் குழுக்கள் அனைத்தும் 32 கோடி ரூபாயை சிறு சேமிப்பாக சேமித்திருக்கிற நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் 6 கோடி ரூபாயை சிறு சேமிப்பாக சேர்த்திருக்கின்ற நல்ல வளர்ச்சியை, தர்மபுரி மாவட்டத்து மகளிர் குழுக்கள் பெற்றிருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த மகளிர் குழுக்களுக்குக் கடன் வழங்கினால் அதனைத் திருப்பிச் செலுத்துகின்ற நல்ல வாய்ப்பும் பெறலாம்; அதேபோன்று, அந்த மகளிர் குழுக்களுக்குக் கடன் வழங்குவதன் மூலமாக சுய வேலையைத் தொடங்குவதற்கு நல்ல வாய்ப்பாக அமையும் என்ற முறையில், சுய வேலையைத் தொடங்குகின்ற அந்த மகளிர் குழுக்களுக்குக் கடனாக,





தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும் ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் கடனாக, தர்மபுரி மத்திய கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. இதனைத் தாய்மார்கள் எல்லாம் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட அனுமந்தபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே கடந்த 1987 ஆம் ஆண்டு, கடந்த கால ஆட்சியிலே 12 நபர்கள் சுமார் 63 பவுன் நகைகளை அடகு வைத்து நகைக் கடனாகப் பெற்றிருந்தார்கள். ஆனால், அங்கே பணியாற்றிய செயலாளரும், தனி அலுவலரும் மற்றும் வங்கி அலுவலர்களும் சேர்ந்துகொண்டு, அன்றைக்கு அந்த நகைகளைக் கையாடல் செய்து, அந்தப் பணத்தைச் செலுத்திய அந்த 12 விவசாயிகளுக்கு அந்த நகையைத் திருப்பி தர முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மறுபடியும் அந்த நிர்வாகமானது, அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து இப்போது அந்த நகைகள் எல்லாம் நீதிமன்றத்திலே வைக்கப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வழக்குகளை அரசும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் விரைவாக நடத்தி, வேண்டிய நடவடிக்கையை எடுத்து அந்த விவசாயிகளுக்கு நகைகளைத் திருப்பிக் கொடுக்கின்ற நல்ல வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே, அந்த விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

தர்மபுரி மாவட்டத்திலே இயங்கக்கூடிய மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் 29, கடந்த ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்தன. நமது கழக அரசு பொறுப்பேற்றவுடன், இப்போது புதியதாக 7 மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, 3 மத்திய கூட்டுறவு வங்கிகளையும் தொடங்குவதற்கு வேண்டிய அனுமதியைப் பெற்று, தொடங்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. ஆக, இந்த 4 ஆண்டுகளில் 10 கிளைகள் தொடங்கப்படுவதற்கு நமது அரசானது அனுமதி அளித்திருக்கிறது.

[திரு. ஜி.எல். வெங்கடாசலம் ] [2000 மே 3

மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளைகள் 36 ஆக இருந்தாலும், அவற்றில் 14 வங்கிகள்தான் சொந்தக் கட்டடங்களில் இயங்கக்கூடிய நிலையிருக்கிறது. சொந்தக் கட்டடம் இல்லாத மீதியிருக்கின்ற அந்த 22 மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகளுக்கு சொந்தக் கட்டடம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கிடு செய்து தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரு மத்திய கூட்டுறவு வங்கி கம்பைநல்லூரில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டு, நல்ல நிலையிலே இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வட்ட தலைநகரங்களிலும், நிலவள வங்கி தொடங்கப்படும் என்று நல்ல அறிவிப்பைத் தந்தார்கள். அதன் அடிப்படையிலே எங்களுடைய தொகுதியிலும், பாலக்கோடு நகரத்திலும், அதேபோல பாப்பிரெட்டிப்பட்டியிலும் இப்போது நில வள வங்கிகளை தொடங்குவதற்கு வேண்டிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, 'நபார்டு' வங்கிக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இந்த அனுமதியை விரைவாகப் பெற்று பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி போன்ற வட்டத் தலைநகரங்களில், புதியதாக நிலவள வங்கிகளை ஆரம்பிப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓசூர், அரூர், பாலக்கோடு போன்ற நகரங்களில், நகர வங்கி தொடங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று அந்த பகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது ரேஷன் கடைகள் ஆரம்பிப்பதற்கு கடந்த கால ஆட்சியிலே இருந்த நிபந்தனைகளெல்லாம் தளர்த்தப்பட்டு இப்போது ஏராளமான ரேஷன் கடைகள் தொடங்கப்பட்டு நல்ல நிலையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால், இன்னும் புதியதாக ரேஷன் கடைகள் தொடங்கப்படும் நேரத்தில், நம்முடைய வட்ட அலுவலர் அவர்களும், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த இணை இயக்குநர் அவர்களும் பரிந்துரை செய்தும்,



2000 மே 3] [திரு. ஜி.எல். வெங்கடாசலம் ]

அது மாவட்ட ஆட்சியருக்கு செல்கின்றபோது இன்னும் சில கடைகள் பிரிக்கப்படுவதற்கு ஆணைகள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்ற நிலை இப்போது மாவட்ட ஆட்சியரால் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதனைகூட, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றி, இந்தத் துறை அனுமதியும், பரிந்துரையும் செய்தால் அனைத்து மாவட்ட ஆட்சியரும் வழங்கலாம் என்ற நல்ல வாய்ப்பை நீங்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது குறிப்பாகச் சொல்லப்போனால், அனுமந்தபுரத்திலேயிருந்து சென்னம்பட்டி வரை ஆதிதிராவிடர்கள் வாழுகின்ற பகுதி. அந்த கிராமத்தில் 500 ரேஷன் கார்டுகள் இருந்தாலும், தூரம் குறைவாக இருக்கின்றபடியால், 1 கி.மீ. இருக்கின்ற காரணத்தைக் காட்டி, இப்போது அந்த ஆதிதிராவிட மக்கள் வாழுகின்ற பகுதியிலே நியாயவிலைக் கடை தொடங்கப்பட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சுமார் 3 அல்லது 4 ஊராட்சிகளை உள்ளடக்கிய பெரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக திருமல்வாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, பாப்பிரெட்டிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, பெரியாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, அதேபோன்று காவேரிப்பட்டினம் பகுதியில் போத்தாவரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, பையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி எல்லாம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பிரித்து, விவசாயிகள் நலனைக் கருதி, புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்கிட ஆணை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தர்மபுரி மாவட்டத்திலே நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை பல வருடங்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய மொத்த விற்பனை பண்டகசாலையை நம்முடைய சொந்தக் கட்டடத்திலே இயங்குவதற்கு, நிதி ஒதுக்கீடு செய்து, சொந்தக் கட்டடம் கட்டித் தர, அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஜி.எல். வெங்கடாசலம் ] [2000 மே 3

நம்முடைய கிராமங்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அதுவும் குறிப்பாக பெண்கள் அதிகமாக பங்கு பெற்றுக்கொண்டு இருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கங்கள், அதேபோன்று பொருட்களை வாங்குமிடமான ரேஷன் கடை கட்டடங்கள் போன்றவைகளுக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாத ஒரு நிலைமை கிராமங்களில் இன்றளவும் இருந்து கொண்டிருக்கிறது. அதனை மாற்றித் தருவதற்கு, அதுவும் குறிப்பாக நமக்காக வழங்கப்பட்டு இருக்கின்ற சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அந்த நிலையைக் கூட, மாற்றி, அந்த ரேஷன் கடை கட்டடங்கள், அதேபோல பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் தொடங்குதற்கு நாங்கள் பரிந்துரை செய்தால், அந்த நிதியிலிருந்து கட்டக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல 11-55*

நம்முடைய மத்திய அரசால், அதாவது, பொதுத் துறையிலே இருக்கின்ற காப்பீட்டுக் கழகத்தை தனியார்கள் நடத்தலாம் என்ற நிலை இப்போது வந்திருக்கிறது. அந்த நிலையிலே, நமது கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும், ஊழியர்களும் ஈடுபடவேண்டும். காப்பீட்டுக் கழகத்திலே அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்கின்றார்கள். அதனைக் கருத்தில்கொள்ள வேண்டும். அதேபோன்று, நம்மிடையே இருக்கின்ற கட்டடங்களையும், அடகு வைத்துள்ள நகைகள் போன்றவற்றையும் காப்பீட்டுக் கழகத்தில் நாம் இன்ஷூரன்ஸ் செய்கின்றோம். அதனைக்கூட, நம்முடைய கூட்டுறவுத் துறையிலே, இப்போது தனியார் துறைக்கு அனுமதி வழங்குவதைப்போல, கூட்டுறவுத் துறையும், அந்தக் காப்பீட்டுக் கழகத்தை எடுத்து நடத்தி, அதன்மூலமாக நம்முடைய ஊழியர்களையும், நம்முடைய சொத்துக்களையும் பாதுகாக்கின்ற வகையிலே, அந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை, நாம் காப்பீட்டுக் கழகத்தை ஆரம்பிக்க, இந்தத் துறையானது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நிறைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கூடுதலாக கட்டடம் இல்லாத நிலை இருக்கிறது. அந்த நிலையினைக் கருத்தில்கொண்டு கூடுதல் கட்டடங்களை வழங்கி, நம்முடைய விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையையும் நிறைவேற்றித் தருமாறு, நம்முடைய மாண்புமிகு அமைச்சரை



2000 மே 3] [திரு. ஜி.எல். வெங்கடாசலம் ]

கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கையின்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, ஒருசில கருத்துகளைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்தக் கொள்கை குறிப்புகளிலே, கூட்டுறவுத் துறை, நடைமுறையில் அதனுடைய மெய்யான நோக்கத்தை சென்றடைய முடியாதவாறு சீரழிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது சீரழிந்ததற்கான காரணங்கள், அந்தச் சீரழிவை அகற்றி நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்குரிய மாற்று கொள்கை நிலைகளை உள்ளடங்கியதாக இந்தக் கொள்கைக் குறிப்பு இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதுபற்றிப் பேசுவதற்கு விரிவான விவரங்களும், அவசியமும், தேவையும், இருந்தாலும்கூட, அதற்குரிய காலம் இல்லை என்கின்ற காரணத்தால், நான் அந்த விவரங்களுக்குள்ளே இப்போது போக விரும்பவில்லை. சில குறிப்பான விவரங்களை மட்டுமே சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் முதலிலே எடுத்துக்கொள்ள விரும்புவது, மாநில அரசால் அமைக்கப்பட்டது முருகராஜ் கமிட்டி. கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட, அந்தக் கமிட்டி, அதற்குரிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கி விட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அரசு மூன்று ஆண்டுகாலமாக, அதை பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி, பரிசீலனைக்கே மூன்று ஆண்டு காலம் நிறுத்தி வைத்திருப்பது என்பது, அவ்வளவு நல்லதல்ல. அதுவும், அந்தப் பரிந்துரையிலும் சரி, ஓய்வூதியம் வழங்குவதிலேயும் மாநில அரசுக்கு எந்தவிதமான பணச் சுமையும் இல்லை. வங்கி நிருவாகம், ஊழியர்களின் நலன்களுக்காக, வைப்பு நிதியின் ஒரு பங்காகச் செலுத்துகின்ற, அந்தத் தொகையைக்கொண்டே ஓய்வூதியம் வழங்கிவிட முடியும் என்று தெளிவாக, தீர்மானமாக, தெரிவிக்கப்பட்டிருந்தும்கூட, இன்றுவரை மாநில அரசு, அதன்மீது ஒரு முடிவு எடுக்காமல் இருப்பது, எளிய ஒரு பிரச்சினைக்குக்கூட, எளிய முறையில் தீர்வு காண முடியவில்லையா, முயலவில்லையா என்று என்னால் புரிந்துகொள்ள

முடியவில்லை. இதுகுறித்த விவரங்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, வங்கி ஊழியர் சங்கம் விரிவாக கொடுத்திருக்கிறது. இன்று காலையிலேகூட, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்குரிய வழிவகைகள் குறித்து விரிவான விவரங்களை வங்கி ஊழியர் சங்கம் தயாரித்த விவரங்களை கொடுத்திருக்கின்றேன். அதிலே, அவர் என்ன குறிப்பு எழுதினார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைக்கு பதில் அளிக்கின்றபோது, இது குறித்து விரிவாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புவது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முதலீடு இல்லாமல், நிதி நெருக்கடிக்கு உள்ளாககப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த வங்கிகளுக்கு மறு முதலீடு செய்வதற்குரிய அறிவிப்பை, 6,700 கோடி மறுமுதலீடு செய்யப்படும் என்று நாடாளுமன்றத்தில், அன்றைய வேளாண் துறை இணை அமைச்சர் சோம்பால் அறிவித்த, அந்த அறிவிப்பின்படி, நமக்கு ஒரு 400 கோடி ரூபாய் வரையிலும் வரக்கூடும், அவற்றை நிச்சயமாக, இந்த மாநில அரசு விழிப்போடு இருந்து, தன்னுடைய பங்கைப் பெறுவதற்குரிய செல்வாக்கை, உரிய வழிமுறைகளில், உரியபடி செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை. அந்தப் பண்டச்சாலைகளுக்கு இருக்கிற நெருக்கடிகளை நினைத்தால், உண்மையிலேயே 'கல்லும் கரையும்' 'கடும் பாம்பும் நெஞ்சிளகும்'. அவ்வளவு துயரத்திற்கு ஆட்பட்டு இருப்பது அந்தத் துறையும், அந்தத் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்களும் தான். அவ்வளவு வேதனைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு என்ன காரணம்? மாநில அரசாங்கம் தன்னுடைய அரசியல் இலாபத்திற்காக, அரசியல் அனுகூலத்திற்காக, தேர்தல் வெற்றிகளை எளிதாக்கிக் கொள்வதற்காக பொது விநியோக முறையை அமலாக்குகிறது. அந்தப் பொது விநியோக முறையின் மூலம் கிடைக்கிற அனுகூலம், அரசாங்கத்தை நடத்துகிற அரசியல் கட்சிக்குக் கிடைக்கிறது. ஆனால், அதனுடைய பெரும்சுமை முழுவதும் அந்தப் பணியை நடத்துகிற கூட்டுறவுத் துறைக்கும், அந்தத் துறையில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும்தான் தண்டனையாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நான் மிகுந்த வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . .

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு விஷயம். நான் தொடர்ச்சியாக சொல்லி முடித்துவிட்டால், அவர் பின்னர் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன். இல்லையென்றால், அதற்குரிய காலம் எனக்குக் கிடைக்காமல் போய்விடும். அவர் குறித்து வைத்துக்கொண்டு கடைசியில் பதில் சொல்லலாம். அவருக்கு நீண்ட கால வாய்ப்பு இருக்கிறது. எங்களுக்கு காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய காலம் வரையறுக்கப்படவில்லை. அந்த வாய்ப்பை அவர் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஞாபகம் இல்லை என்றால் குறித்துக்கொள்ளலாம், அதில் ஒன்றும் தவறில்லை. குறித்து வைத்துக்கொண்டு பதில் சொல்லலாம். மிக நேர்த்தியாக பதில் அளிக்கக்கூடிய அமைச்சர்தான், அதனால் அவர் அப்படி பதில் அளிக்க வாய்ப்பிருக்கிறது.

நான் அடுத்து குறிப்பிட விரும்புவது, கோவையில் ஆசியாவிலேயே புகழ் பெற்ற ஒரு ஒளி நட்சத்திரமாக விளங்கிய கூட்டுறவு நிறுவனம், சிந்தாமணி. பல்வேறு வெளிநாட்டவர் விரும்பிவந்து பார்வையிட்ட ஓர் அமைப்பு. அந்தக் கூட்டுறவு சிறப்பங்காடி. அந்தச் சிந்தாமணியின் இன்றைய கதி என்னவென்றால், 6 மாத காலமாக கோவை சிந்தாமணி ஊழியர்களுக்குச் சம்பளமே வழங்கப்படவில்லை. ஆனால், அந்த ஊழியர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய பிடித்தம் செய்துள்ள சகல தொகையையும் சேர்த்துப் பார்த்தால் 2 கோடி ரூபாய் இருக்கும். அந்த 2 கோடி ரூபாயும் இன்று வரையிலும் வழங்கவில்லை. நான் மாண்புமிகு அமைச்சரை, மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், திடீரென்று அதிகாரத்தில் உள்ளவர்கள் வேட்டைக்கு கிளம்பினால் தமிழ்நாட்டில் யாரை வேட்டையாடப் போகிறோம் என்றால், சாதாரண ரேஷன் கடையில் அளந்து கொண்டிருக்கிற அளவையர்களை அல்லது பில் போடுகிறவர்களைப் போய் வேட்டையாடுகிறார்கள். அவர்களுக்கு வழங்க வேண்டிய நியாயத்தை, உரிமையை முழுவதும் வழங்கி விட்டு நீங்கள் போய் வேட்டையாடினால், ஒப்புக்கொள்ளலாம். புள்ளிமான்கள்

[திரு. கே. சுப்பராயன்] [2000 மே 3

முழுவதும் புலிக்குட்டிகளால் வேட்டையாடப்படுவதைப்போல, இன்றைக்கு தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பணியில் ரேஷன் கடையில் பணியாற்றுகிற ஊழியர்கள் மகா பெரிய குற்றவாளிகளைப்போல திரும்பத் திரும்ப வேட்டையாடப்படுகிறார்கள். அப்படி வேட்டையாடப்படுவதற்கு உரிய அடிப்படைகளைப் பற்றி சொல்கிற மாநில அரசு அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை வழங்கியிருக்கிறதா? அவர்களுக்கு எழுதுகிற பொருள் வழங்கியிருக்கிறதா? அவர்களின் கடைகளுக்கு வாடகை கொடுக்கிறார்களா அல்லது வேறு யார் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் கண்டு கொண்டது உண்டா? எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், தயவுசெய்து இதே மாநில அரசு வேறு ஒரு துறை —Labour and Employment துறை குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின்கீழ் ஓர் அரசாணை வெளியிட்டிருக்கிறது. அந்த அரசு ஆணைக்கு நேர் எதிரான ஓர் ஆணையை கூட்டுறவுத் துறை வெளியிடுகிறது. ஒரே அரசு இரண்டு ஆணைகளை எதிரும் புதிருமாக வெளியிடுகிறது. இதற்கான விவரங்களுக்குள்ளே போனால் இப்போது எனக்கு நேரம் இல்லை. ஆனால், அப்படி என்ன வெளியிடுகிறார்கள் என்றால், குறைந்தபட்ச கூலிச் சட்டம், High Court கூட, சென்னை உயர் நீதிமன்றம்கூட. இப்படி வெளியிட்டிருப்பது தவறு என்று சொன்னதற்குப் பிறகும்கூட மாநில அரசு தன்னைத் திருத்திக்கொள்ளவில்லை; திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்தக் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலைப் பற்றி சொல்ல விரும்புவது தயவுசெய்து ஒன்று அரசாங்கமே பொது விநியோக முறையை எடுத்து, T.N.C.S.C. மூலம் நடத்துங்கள். இல்லையென்றால் T.N.C.S.C. ஊழியர்களுக்கு என்ன சம்பளம் தருகிறீர்களோ அந்தச் சம்பளத்தை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் பொது விநியோகத் திட்டத்தை அமலாக்குகிற கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கும் வழங்குங்கள். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை செய்ய வேண்டுமே தவிர, இரண்டையும் செய்யாமல் நீங்கள் இழுத்தடிப்பது அப்படியே அந்தத் துறை புதைந்து போவதற்கு வழி வகுத்துவிடும். எங்களுடைய A.I.T.U.C. சார்பில் சமீபத்தில் A.I.T.U.C.-னுடைய கூட்டுறவுத் துறையின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ருக்மாங்கதன் என்கிற தோழர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் தினமணியில், புதை மணலில் எப்படி இந்தக் கூட்டுறவுத் துறை புதைக்கப்பட்டிருக்கிறது என்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வைக்கு அது சென்று இருக்கக்கூடும். நான் மீண்டும் காலம் கருதி அவற்றை குறிப்பிட விரும்பவில்லை. அவற்றை



2000 மே 3] [திரு. கே. சுப்பராயன்]

மீண்டும் மாநில அரசு பரிசீலிக்க வேண்டும். அதுதான் எங்களுடைய A.I.T.U.C.-னுடைய கோரிக்கை என்ற முறையில் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோல Purchase, அதாவது கொள்முதல் செய்வதிலும், விற்பதிலும் அரசாங்கத்தினுடைய தலையீடு, இடையூறு, அந்தத் துறை நலிவதற்கும் நஷ்டம் அடைவதற்கும் காரணமாக இருக்கிறது. கொள்முதல் செய்வதிலேயும், விலைகளைத் தீர்மானித்துக் கொள்வதிலேயும் அந்தக் கூட்டுறவுத் துறைக்கு உரிய அதிகாரத்தை வழங்குவதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும்.

அதேபோல துறையின் உயர் மட்டத்தில் பல பெரிய பெரிய திருட்டுகள் நடக்கின்றன. அந்தத் திருட்டுகளைப் பற்றி எல்லாம் நாம் கவலைப்படாமல் ரேஷன் கடை ஊழியர்கள் பல இடங்களில் தேடிப் பிடிக்கப்படுவதால் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே கூட சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக சொல்லப்பட்டிருக்கிற விஷயத்தில், புதிய தாக்குதலுக்கு ஆளாகப்போவது அந்தக் கடை ஊழியர்கள்தான். நான் தயவுசெய்து மாநில அரசுக்குத் தெரிவிக்கிறேன். நீங்கள் அவர்களுடைய அளவைகளில் முறைகேடு இருப்பதாகக் கருதினால், 'பாக்கெட் சிஸ்டத்தை' அமலாக்குங்கள். பாக்கெட் சிஸ்டத்தை அமலாக்கினால், அவர்களில் யாரும் எதுவும் செய்ய முடியாது. பாக்கெட் சிஸ்டத்தை அமலாக்குவதன் மூலம் ஜனங்களுக்குக் குறைவான முறையில் பொருள் போகிறது என்ற குற்றச்சாட்டிற்கும் இடம் இல்லாமல் போய்விடும். இந்த எளிய தொழிலாளிகள் பாதிக்கப்படுவதும் தடுக்கப்படும். எனவே, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குறிப்பிட விரும்புவது என்னவென்றால், சென்ற முறை நான் பேசினேன், மதுரை அர்பன் வங்கியைப் பற்றி. மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட சொன்னார்கள். இடையிலே குறுக்கிட்டுச் சொன்னார்கள். மதுரையில் நகர கூட்டுறவு வங்கியில் ஆட்களை வேலைக்கு சேர்த்ததில் கடுமையான முறைகேடு இருந்தது என்று கடந்த முறை இதே பேரவையில் தெரிவித்தேன். அந்த முறைகேடு இப்போது முறையாக்கப்பட்டுவிட்டதுதான் துரதிர்ஷ்டம். ஒரு சட்டவிரோதம்

[திரு. கே. சுப்பராயன்] [2000 மே 3

சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. அந்த வகையில் ஒரு விபரீதம் நடந்திருக்கிறது. அமைச்சர்கூட அன்றைக்குக் குறுக்கிட்டுச் சொன்னார்கள். அதாவது 81 பேர்தான் அந்த வங்கிக்குத் தேவை. எவ்வளவு பேர் எடுத்திருக்கிறார்கள் தெரியுமா? அதற்கு மேல் 139 பேர் எடுத்திருக்கிறார்கள். தேவை 81 பேர்தான். அதற்கு மேல் எடுத்திருக்கிறார்களே, அவர்களில் பலருக்கு கூட்டுறவுப் பயிற்சியே இல்லை. ஒரு சிலர் Employment Exchange-லேயிருந்து call for செய்யப்படாமலேயே எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு முறைகேடு நடந்திருக்கிறது. இந்த முறைகேட்டை நடத்திய குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டேன். மாநில அரசால் சம்பந்தப்பட்ட செயலாளர்மீது விசாரணை நடைபெற்று வருகிறது என்று அமைச்சர் சொன்னார். இப்போது அந்த சம்பந்தப்பட்ட செயலாளரின் நடவடிக்கை, சட்டவிரோத நடவடிக்கையை மாநில அரசு சட்டபூர்வமாக்கிவிட்டதே, அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

அதேபோல நான் இங்கே நிறைவாகக் குறிப்பிட விரும்புவது, மாதிரி கூட்டுறவுச் சட்டம். ஏன் இந்த அரசாங்கம் அச்சப்படுகிறது என்றே புரியவில்லை. ஜனநாயகத்தைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறீர்கள். ஜனநாயகத்தைப் பற்றி சொல்வது எளிது, செய்வது கடினம். எப்பொழுதுமே எளிய ஒன்று சொல்வதுதானே, அப்படிச் சொல்லிவிட்டுப் போக வேண்டாம். உண்மையிலேயே இந்த அரசு ஜனநாயக நெறிமுறைகளின் மீது தீராக் காதல் கொண்டிருந்தால், கூட்டுறவுத் துறை அதனுடைய மெய்யான நோக்கத்தைச் சென்றடைகிற பொருத்தமான கருவியாக சமூக வாழ்வில் விளங்க வேண்டுமென்று கருதினால், வெளி மார்க்கெட்டில் வர்த்தகச் சூதாடிகளால் விலைகள் ஏற்றப்பட்டு, நாட்டு மக்கள் வழிப்பறி செய்யப்படுவதைத் தடுக்கிற பாதுகாப்புக் கேடயமாக இந்தக் கூட்டுறவுத் துறை விளங்க வேண்டுமென்று கருதினால், மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை இந்த மாநிலத்தில் சட்டமாக்குங்கள். இந்த மாநிலத்தில் நீங்கள், மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை சட்டமாக்கவில்லை என்றால், நீங்கள், ஜனநாயக ரீதியாக கூட்டுறவுத் துறையை நடத்த விரும்பவில்லை என்ற அர்த்தமே தவிர, வேறு தட்டிக் கழிப்புகள் பயன்படாது.

இதற்காக கமிட்டி போட்டிருக்கிறீர்கள் என்றால், என்ன அர்த்தம்? 10 மாதத்தில் ஒரு குழந்தை பிறந்தால் பரவாயில்லை. இது துரியோதனன்



2000 மே 3] [திரு. கே. சுப்பராயன்]

மாதிரி காலம் கடந்துகொண்டேயிருந்தால் என்ன பொருள்? விபரீதமான பிரசவம் தானே நடக்கும்? எனவே, விபத்துப் பிரசவம், விபரீதப் பிரசவம் நடக்காமல் சுகப்பிரசவம் நடக்க வேண்டுமானால், மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றினால்தான் மாநில அரசு கூட்டுறவுத் துறையில் தலையிடுவது நிறுத்தப்படும். கூட்டுறவு அங்கத்தினர்கள் முறைப்படி தங்கள் கடமைகளை ஆற்றி வர வேண்டும். அவர்கள் முறைப்படி கடமை ஆற்றவில்லை என்றால், கூட்டுறவுச் சங்க உறுப்பினர் பொறுப்பிலேயிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டுவிடுவார்கள். இத்தகைய நல்ல அம்சங்கள் உண்மையிலேயே பாதுகாக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-10

நான் இன்னொரு விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். T.N.C.S.C.-யில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது அல்லவா? நெல் கொள்முதலில் ஏற்படுகிற இழப்பை கோதுமை, சர்க்கரை விற்பனை ஈடுகட்டுகிறது என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் தேங்காய் கொள்முதல் செய்யக்கூடாதா? தேங்காய் கொள்முதல் செய்து ஆட்டப்படுமானால் வெளி மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை மிக அதிக அளவில் உயர்ந்து நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மாநில அரசு எல்லா பொருள்களையும் T.N:C.S.C. மூலம் கொள்முதல் செய்து தரமான பொருள்களை நியாயமான விலைக்கு நாடு முழுவதும் விநியோகிக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாரதிதாசனை ஒப்புக்கொண்டவர்கள்; இந்த மாநிலத்தை ஆளுகிற ஆட்சி பாரதிதாசனை ஒப்புக்கொண்ட ஆட்சி. அந்த பாரதிதாசன் தான் சொன்னார்.

'எள் முதல் அரசினர் கொள்முதல் செய்க,
எப்பாங்கும் கடை வைத்து விற்பனை செய்க'

என்று சொன்னாரே அந்தப் பொருள் வெற்றுக் கவிதை எழுத்துக்குள் நின்றுவிட்டதா? ஏன் அவற்றை நடைமுறைப்படுத்த இயலாதா? அவற்றை நடைமுறைப்படுத்தினால் விலையேற்றம் என்ற தீங்கிலிருந்து பொதுமக்களை காப்பாற்றுவதற்கு பயன்படும் அல்லவா? எனவேதான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் T.N.C.S.C. மூலம் அத்தியாவசிய பொருள்கள் முழுவதையும் நீங்களே ஒட்டுமொத்த கொள்முதல் செய்து அவற்றை சில்லரைக் கடைகளின்மூலம், ரேஷன் கடைகளின் மூலம் நாடு முழுவதும் விநியோகிப்பீர்களானால்

இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் கிடைக்கும்; இந்தக் கட்சிக்கு மேலும் செல்வாக்குக் கூடும். அந்த நல்ல காரியத்தை சிந்திப்பீர்களா என்று கேட்டுக்கொண்டு நிறைவாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

இந்தக் கூட்டுறவுத் துறையில் நடைபெற்றிருக்கின்ற பல்வேறு ஊழல்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பூரிலேகூட வளர்மதி கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கு 14 இலட்சம் ரூபாய் கொடுக்கவில்லை. நான் திரும்பவும் அவற்றின் முக்கியத்துவம் கருதிச் சொல்ல விரும்புகிறேன். ரேஷன் கடை ஊழியர்களை தயவுசெய்து கிரிமினல் நடவடிக்கைக்கு உள்ளாக்காதீர்கள். அவர்களைக் காப்பாற்ற பாக்கெட் சிஸ்டத்தைக் கொண்டுவாருங்கள். திருப்பூர் வளர்மதியில் 14 இலட்சம் ரூபாய், சிந்தாமணியில் 2 கோடி ரூபாய். இப்படி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல இலட்சங்கள், தொழிலாளியிடம் பிடிக்கப்பட்ட பணத்தை உரிய துறைக்கு செலுத்தாமலேயே பயன்படுத்தி வருவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்.

**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கையின்மீது பேசக்கூடிய வாய்ப்பு பெற்றமைக்கு நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உழவர் சந்தை, சமத்துவபுரம், வருமுன் காப்போம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற அகிலம் போற்றும் பல நல்ல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வரும், தமிழர்களுடைய நலனையே தன்னுடைய நலனாக நினைத்து அல்லும் பகலும் அயராது உழைக்கும் உன்னதத் தலைவர், தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அற்புதமாகத் தயாரித்து, அதை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்தது அனைத்து தரப்பினருடைய பாராட்டுகளைப் பெற்றதோடல்லாமல், அகில இந்தியத் தலைவர்கள் மத்தியிலும் பாராட்டு பெற்ற ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கை ஆகும். இதனைத் தொடர்ந்து இன்று நடைபெறுகின்ற கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கை. திராவிட இயக்கக் கொள்கைகளை, இலட்சியங்களை



நிறைவேற்றும் வகையிலே பெண்களுக்கு சொத்திலே சம பங்கு உரிமை, அதைப்போல கூட்டுறவுத் துறையானாலும், உள்ளாட்சித் துறையானாலும் தேர்தலிலே 30 விழுக்காடு இட ஒதுக்கீடு தந்து இப்போது பெண்களுக்கு அத்தனையிலும் முன்னுரிமை அளிக்கின்ற அரசாக இந்த அரசு திகழ்கிறது. மகளிருக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலே சேமிப்புடன் கூடிய சிறு வணிகக் கடன் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்து, அதனை மாநகராட்சி, நகராட்சிப் பகுதியிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை மேலும் விரிவாக்குகின்ற வகையிலே பேரூராட்சி மற்றும் கிராமப்புற சிற்றூராட்சிகளிலும் விரிவுபடுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல 1998-99 ஆம் ஆண்டு தவணை தவறிய கடனை கூட்டுறவு வங்கிகள் மூலம் குறிப்பிட்ட கால வாய்தாவில் செலுத்திய உறுப்பினர்களுக்கு 6.25 விழுக்காடு வட்டி ஊக்கத் தொகை வழங்கிய ஆட்சிதான் இது.

அதைப்போல 1999-2000 ஆண்டுக்கு கூட்டுறவுக் கடனில் மேற்படி 6.25 விழுக்காடு வட்டி ஊக்கத் தொகையை இன்னும் அதிகமாக புள்ளி 0.75 விழுக்காட்டை கூட்டி 7 விழுக்காடாக வழங்கிய ஆட்சிதான் இது. இதனால் இப்போது ஏறத்தாழ 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைகின்றார்கள். ஆனால், அந்த 7 சதவீத ஊக்கத் தொகையைக் கட்டிவிட்டு அதற்குப் பின்னால் திரும்பப் பெறுவதற்குப் பதிலாக அருள்கூர்ந்து அந்த 7 சதவீத வட்டியை, ஊக்கத் தொகையை முன்னரே கழித்துக் கொண்டு கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்து, தலைவர் கலைஞர் அவர்கள், முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு Kissan Credit Card Scheme அதாவது, விவசாயிகள் கடன் அட்டைத் திட்டம் என்பதை இப்போது அறிவித்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் தற்போது கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு எந்த ஆட்சியிலேயும் இல்லாத புதுமை இது. இந்த Kissan Credit Card Scheme என்று சொன்னால் Pass book with Cheque Book என்று இருக்கிறது. அதோடு இப்போது விவசாயிகள் 45,000 ரூபாயைக் கடனாகப் பெற்றார்கள் என்று சொன்னால்,

[திரு. எஸ். ஆர். சிவலிங்கம்] [2000 மே 3

தேவையுள்ளபோது, தேவையான அளவு ஆயிரம் ரூபாயோ, 2,000 ரூபாயோ, உரம் வாங்க வேண்டுமானாலும் சரி, அல்லது பூச்சி மருந்து வாங்க வேண்டுமென்றாலும் சரி, அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ளும் வகையிலே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது விவசாயிகளால் பெரிதும் பாராட்டக்கூடிய இந்தத் திட்டத்தினால் நாங்களும் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகின்றோம்.

அடுத்து, இன்றைக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் சொல்கின்றபோதுகூட விற்பனைச் சங்கங்களெல்லாம் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின் றார்கள். இப்போது விற்பனைச் சங்கங்களெல்லாம் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால், கடந்த கால ஆட்சியிலே, 1992 ஆம் ஆண்டிலே அன்றைக்கு ஒரு சட்டத்தை, வரி கட்டவேண்டும் என்று, சேல்ஸ் டேக்ஸ் கட்ட வேண்டுமென்ற ஒரு வரி விதிப்பினை விதித்த காரணத்தினாலேதான் இப்போது அந்த விற்பனைச் சங்கங்களெல்லாம் அழிந்து கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான். இன்றைக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், அதைப்போல பதிவாளர் அவர்களும், செயலாளர் அவர்களும் இங்கே இருக்கின்றார்கள். நிச்சயமாக இந்தச் சட்டத்தினை, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த விற்பனைச் சங்கத்தைப்போல வேளாண்மைத் துறையிலே இயங்கக்கூடிய, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் 1992 ஆம் ஆண்டிலே சட்டம் போடப்பட்டது. ஆனால், 1998 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்ற காரணத்தினாலே இப்போது அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அந்தச் சட்டம் இல்லை. ஆனால், இப்போது வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு அந்தச் சட்டம் இருக்கின்றது என்று சொன்னால், இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும், அதைப்போல விற்பனைச் சங்கங்களும் விவசாயிகளின் நலன் கருதி, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களை விற்கும்போது இடைத் தரகர்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு செயல்படுகின்றவைதான் இவை இரண்டும். ஆகவே, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குண்டான அந்த G.O. 330-ஐ, அந்த அரசாணையைப் போல இந்த வேளாண்மை உற்பத்திச் சங்கத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே விலக்களித்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2000 மே 3] [திரு. எஸ். ஆர். சிவலிங்கம்]

அடுத்து, இப்போது சேலம் நகரக் கூட்டுறவு வங்கி என்று சொன்னால், எங்களுடைய சேலம் மாநகரத்திலேயே மட்டும் அல்ல, இப்போது தமிழகத்திலேயே அது ஒரு சிறந்த நகர வங்கி என்று சொன்னால் மிகையாகாது. 1906 ஆம் ஆண்டு அந்த வங்கி ஆரம்பிக்கப்பட்டு இப்போது மிக நல்ல முறையில், அதாவது சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு வந்த பின்னர் ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்குமேல் வைப்புத் தொகை அந்த வங்கியிலே இருக்கின்றது. ஆனால், 1936 ஆம் ஆண்டு ஒரு பழமையான கட்டடத்திலே ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கும் அதிலேயே இயங்கிக் கொண்டு வருகின்றது. ஏறத்தாழ 12 கிளைகள் அதற்கு இருக்கின்றன. அதற்கு ஒரு புதிய கட்டடத்தை, அந்த வங்கியினுடைய கட்டட நிதியிலேயிருந்து கட்டுவதற் காகப் பலமுறை உங்களிடத்திலே அனுமதி கேட்டிருக்கின்றார்கள். ஆகவே, அருள்கூர்ந்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நீங்கள் அனுமதி வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, அந்த வங்கியினுடைய 12 கிளைகளிலே, குகை என்கின்ற பகுதியிலேயுள்ள கிளைக்கு ஏறத்தாழ 36 இலட்சம் ரூபாய்க்கு ஒரு கட்டடத்தை வாங்கி, அதை ரிசர்வ் வங்கியினுடைய ஆணைக்கேற்ப சில மாற்றங்களைச் செய்வதற்காக அனுமதி கோரப்பட்டு, அந்தக் கட்டடத்தில் அந்தக் கிளை இயங்க முடியாமல் இருக்கின்றது. 36 இலட்சம் ரூபாய்க்கு கட்டடம் வாங்கப்பட்டு அந்தக் கட்டடம் இன்றைக்கு (மணியடிக்கப் பெற்றது) அருள்கூர்ந்து இன்னும் 5 நிமிடங்கள் கொடுக்க வேண்டும். அந்த 36 இலட்சம் ரூபாய்க்கு அந்தக் கட்டடத்தையும் வாங்கி, இப்போது அந்த நகரக் கூட்டுறவு வங்கியினுடைய அந்தக் கிளை அதனைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கின்றது. அதனை ரிசர்வ் வங்கியினுடைய ஒப்புதலுக்கேற்ப மாற்றியமைப்பதற்கும் அனுமதி வழங்கிட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே இப்போது நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ தமிழ்நாட்டிலே 16 கூட்டுறவுப் பள்ளிகள் இயங்கினால்கூட, சேலத்திலே என்னுடைய தொகுதியிலே இயங்கக்கூடிய அந்த நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி தமிழகத்திலேயே மிகச் சிறந்த முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின்மூலம் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆனால், அந்தப் பயிற்சிப் பள்ளியை இப்போது ஒன்றியத்தோடு இணைக்க வேண்டுமென்று முன்மொழிவு கேட்டு அனுப்பியிருக்கிறார்கள். நிச்சயமாக அது தனித்து இயங்க வேண்டுமென்ற என்னுடைய அன்பான வேண்டுகோளை வைக்கின்றேன்.

பிற்பகல் 12-20

அதேபோல, சேலத்திலே 4 கோடி ரூபாயிலே நமக்கு நாமே திட்டத்திலே, இப்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, ஓர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக கட்டப்படுகிற அந்தக் கட்டடத்திற்காக ஒரு கோடி ரூபாய் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கூட்டுறவுத் துறையானாலும் பொது மக்கள் சார்பாக நிதி வசூல் செய்யப்பட்டது. அந்த வகையிலே கூட்டுறவுத் துறையின் சார்பாக சேலம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களாலும் தங்களால் முடிந்த அளவு பொது நல நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது. ஆனால் இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தான் தலைவராக ஏற்றுக்கொண்டு அரசாணை வெளியிடப்பட்டு அந்தக் கூட்டுறவுத் துறையிலிருந்து நிதி பெறப்பட்டது. ஆனால் நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியிலிருந்து கொடுக்கப்பட்ட அந்த ஒரு இலட்சம் ரூபாய்க்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. ஆகவே, அருள்கூர்ந்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே அந்த அனுமதியையும் வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

அதுபோல, ஒரு கட்டடம் கட்டுவதற்காக ஒரு தொகையைக் கடனாகக் கேட்கலாம் என்று சொன்னால் ஒரு 10 இலட்சமோ 15 இலட்சமோ ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடன் கேட்டால் அந்த வங்கியில் 5 இலட்சம் அல்லது 6 இலட்சம் தருகிறார்கள் என்று சொன்னால், அதற்கு சர்வீஸ் சார்ஜாக, அந்த 15 இலட்சம் ரூபாய்க்கு, எவ்வளவு கடன் கேட்கிறார்களோ அந்தத் தொகைக்கு சர்வீஸ் சார்ஜ் வாங்குகிறார்கள். ஆனால் எந்தத் தொகை கடனாக வழங்கப்படுகிறதோ, அந்தக் கடன் வழங்கப்பட்ட தொகைக்கு மட்டும் அருள்கூர்ந்து அந்த சர்வீஸ் சார்ஜ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மண்ணெண்ணெய் பங்க். இப்போது சேலம் மாவட்டத்திலே 20 மண்ணெண்ணெய் பங்க்குகள் அறிவிக்கப்பட்டு ஏறத்தாழ 15 பங்க்குகள் நல்ல முறையிலே நடைபெறுகின்றன. ஆனால், நகராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மண்ணெண்ணெய் பங்க்குகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. ஆனால், அதை கிராமப்புறத்திலே வைக்கும்போது அந்த 3 லிட்டர் வாங்குவதற்காக ஏறத்தாழ 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் அளவிலே நடந்து வந்து அந்த





மண்ணெண்ணெய் பங்க்கிலே வாங்குவதற்காக தாய்மார்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அதை எளிமைப்படுத்துகிற வகையிலே அந்தத் தாய்மார்களுக்கு இந்த அரசு நிச்சயமாக அவரவர்கள் இடத்திலேயே, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தந்த ஊராட்சி மன்றத்திலேயே மண்ணெண்ணெய் பங்க்குகளை அமைத்து, அந்த ஊராட்சிமன்றத்திற்கு உரியவர்கள் மட்டும் மண்ணெண்ணெய் பெற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் பொது விநியோகத் துறை, உணவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துகளை இங்கு நான் முன் வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன் தள்ளுபடி தொடர்பாக நான் இந்த அவையிலே ஏற்கெனவே வலியுறுத்தியிருந்தாலும், இந்த அரசு, நபார்டு வங்கியைக் காரணம் காட்டி கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்ய முடியாது, அபராத வட்டியை மட்டும் இரத்து செய்கிறோம் என்று சொல்லி, அதோடு மட்டுமல்ல கடன் முழுவதையும் கட்டுபவர்களுக்கு 7 சதவிகித ஊக்கத் தொகை வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் 7 சதவிகித ஊக்கத் தொகையை நபார்டு வங்கி ஆட்சேபிக்காமல் அனுமதிக்கும்போது இந்த மாநில அரசு வட்டி முழுவதும் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்கிற அளவுக்கு கணக்கிட்டு 7 சதவிகித ஊக்கத் தொகையைக் கூடுதலாக, குறைந்தது 25 சதவிகிதம், 20 அல்லது 25 சதவிகிதம் ஊக்கத் தொகை என்று அறிவித்து விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் வாங்கி இருக்கின்ற கடன்களுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருப்பதைப் போல, கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலிருந்து கடன் பெற்றிருக்கிற நடுத்தர, ஏழை மக்களுக்கும் அவர்கள் பெற்றிருக்கிற கடன்களுக்கு வட்டியையாவது, குறைந்தபட்சம் அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 60,000 ரூபாய் வீடு கட்டுவதற்காக வாங்கியிருக்கும் ஒரு விவசாயிக்கு, சாதாரண நடுத்தர விவசாயிக்கு அபராத வட்டி மட்டும் 90,000 ரூபாய்க்கு வந்துவிடுகிறது. ஆக, 1,50,000 ரூபாய்க்கு அவர் வீடு ஜப்தி செய்யப்படுகிறது. எனவே, இந்த அபராத வட்டியால் இப்படிப்பட்ட சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவதைக் கருத்தில்கொண்டு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வட்டி தள்ளுபடி சலுகையை அறிவித்திட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, எங்களுடைய தொகுதி சம்பந்தமாக ஓரிரு பிரச்சினைகளைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக, ஒரு கூட்டுறவு நியாயவிலைக் கடையில் பிரைமரி கடை, பிரதான ஷாப் என்று சொல்வார்களே, அந்த முழுநேரக் கடையிலிருந்து பகுதிநேரக் கடையாகப் பிரிப்பதற்கு 250 கார்டுகள் இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். உள்ளபடியே அதைப்போல 250 கார்டுகள் உள்ள ஒரு கடையைப் பிரித்துக் கொடுத்து விடுகிறோம். ஆனால், அதே கடையிலிருந்து மற்றொரு ஊருக்கான 250 கார்டுகள் இருந்தால் அதைப் பிரித்துக் கொடுக்க அனுமதிப்பது இல்லை; பகுதி நேரக் கடை வைப்பதற்கு அனுமதிப்பது இல்லை. காரணம், ஒரு கடையிலிருந்து ஒரு பகுதிநேரக் கடைதான் பிரித்துக் கொடுக்க முடியும் என்று விதி இருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆகவே, 250 கார்டுகள் வைத்திருக்கிற ஒரு கிராமத்தவர்கள் பலன் அடைந்து, அதேபோல் மற்றொரு கிராமத்தவர்கள், அவர்களும் 250 கார்டுகள் வைத்திருப்பவர்கள்தான், இந்த விதிமுறையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இப்படிப்பட்ட நேரங்களில் அந்த விதிகளைத் தளர்த்திட வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். ஒரு கடையிலேயிருந்து ஒரு கடைதான் என்ற எண்ணிக்கையைக் குறிப்பிட்டுச் சொல்லாமல், அதில் எத்தனைக் கடைகள் வந்தாலும் பரவாயில்லை, 250 கார்டுகள் இருந்தால் போதும், அதை பகுதிநேரக் கடையாக உருவாக்கிக் கொள்ளலாம், அமைத்துக்கொள்ளலாம் என்ற உத்தரவினை நீங்கள் வழங்கிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி சில இடங்களிலே சிறிய அதிகார எல்லைக்குட்பட்டதாகவும், பல இடங்களிலே





மிக அதிக அளவிலே எண்ணிக்கையில் ஏராளமான கிராமங்களை உள்ளடக்கியதாகவும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களாகவும் இருக்கின்றன. உள்ளாட்சித் துறையிலே எப்படி பெரிய ஊராட்சிகளைப் பிரிப்பதற்கு இப்போது அரசு சில முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறதோ, அதேபோல இந்தப் பெரிய வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய எல்லைகளையும் நீங்கள் ஆய்வு செய்து பிரிக்க வேண்டிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை எடுத்து, அவை பிரிக்கப்பட வேண்டியவை என்று நினைத்தால் பெரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை நீங்கள் பிரித்திட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு குளிர்பதனக் கிட்டங்கிகளை சில இடங்களிலே ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆனால், எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்திலே, குறிப்பாக என்னுடைய நத்தம் தொகுதியிலே இந்தக் குளிர்பதனக் கிட்டங்கி வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிற விவசாயிகள் ஏராளமான அளவிலே இருக்கிறார்கள். புளி மிக அதிக அளவிலே அந்தப் பகுதியிலே விளைகின்ற காரணத்தினால் அதற்காக தனியார் துறையை நாடி மதுரை, தேனி போன்ற பல பகுதிகளுககு எடுத்துச் செல்வதால் அவர்களுக்குக் கூடுதல் சுமை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்காக அந்தப் பகுதியிலே ஒரு A.C. கூடம் மட்டுமல்ல, இரண்டு A.C. கூடங்களைக் கட்டினால்கூட அதற்குத் தேவை இருக்கிறதென்ற காரணத்தினால், அந்த அளவிற்குத் தேவை மிக அதிகமான அளவிலே இருக்கிற காரணத்தினால், அரசு நத்தம் பகுதியிலே ஒரு குளிர்பதனக் கிட்டங்கியைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ரேஷன் கடைகளிலே, குடிமைப் பொருட்கள் வழங்குகின்ற அனைத்துக் கடைகளிலேயும், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, என் தொகுதி என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை, எல்லா இடங்களிலேயும் பொருட்கள் பற்றாக்குறையால் மக்களுக்கு முறையாக விநியோகிக்கப்படுவதில்லை. பல கடைகளிலே அளவு குறைவாக வழங்கப்படுகிறது. அதேபோல, இதற்குப் பல காரணங்கள் சொன்னாலும், இதற்கு எல்லாம் மூலக் காரணம் பல இடங்களிலே போலி ரேஷன் கார்டுகள் புழக்கத்திலே, நடைமுறையிலே இருக்கின்றன என்பதுதான். அந்தப் போலி ரேஷன் கார்டுகளைக் கண்டறிந்து, அவற்றையெல்லாம்

[திரு. இரா. விசுவநாதன்] [2000 மே 3

நீக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்திலே, இந்தப் போலி கார்டுகளை நீக்குகின்றபோது சிலர் உண்மையாகவே சில நேரங்களிலே வீட்டை விட்டு வெளியே சென்றிருப்பவர்கள், அதிகாரிகள் அப்போது ஆய்விற்கு வரும்போது அந்த நல்ல மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். அவ்வாறு அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

போலி கார்டுகளைக் கண்டறிவதில் அங்கே இருக்கக்கூடிய விற்பனையாளர்களைக் கேட்டாலே போதும். ஆகவே, விற்பனையாளர்கள் மூலம்தான் போலி கார்டுகள் நடைமுறையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அதையெல்லாம் கண்டறிந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மத்தியத் தொகுப்பிலிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கிற மண்ணெண்ணெய் மற்றும் அரிசி போன்றவையெல்லாம் இன்று 15 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று நீங்களே பலமுறை இங்கே கூறியிருக்கிறீர்கள். மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி முழுமையான அளவுக்கு நீங்கள் அரிசியையும், மண்ணெண்ணெயையும் பெற்று அனைத்தையும் முறையாக மக்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல.(குறுக்கீடு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திலே ஒதுக்கீடு செய்கின்றபோது 80 சதவீதம்தான் ஒதுக்கீடு செய்கிறார்கள். அதிலே 20 சதவீதம் குறைவாக வருகின்றபோது கிராமங்களில் பதில் சொல்லமுடியாமல் தவிக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? இந்த அலாட்மெண்ட் குறித்து அரசினுடைய நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல இன்று கூட்டுறவுப் பணியாளர்களைப் பொறுத்த அளவிலே கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 20 வருட காலமாக வேலையில்லாமல், ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். இப்போது கூட்டுறவுத் துறையிலே வேலைவாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. பல



2000 மே 3] [திரு. இரா. விசுவநாதன்]

இடங்களில் இன்னும் பணியாளர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட காலியிடங்களில் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களை, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மூப்பின் அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு அரசு தகுந்த ஆணை வழங்கி உதவிட வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அந்தக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரே ஒரு முக்கியமான பிரச்சினை. கடலூர் மத்திய கூட்டுறவு வங்கியின் 36 வங்கிக் கிளைகளுக்கும், தலைமையிடத்திற்கு 5-ம் ஆக, கணினி மயமாக்கவேண்டும் என்பதற்காக, சாப்ட்வேர் என்று சொல்கிற மென்பொருள் வாங்குவதிலே ரூ. 10 இலட்சத்திற்கு டெண்டர் விடப்பட்டு அங்கே பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ரூ. 10 இலட்சம் அளவில் அந்த கணினி சாப்ட்வேர் சப்ளை செய்த அதே நபர், திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கியின் பத்து கிளைகளுக்கும்–அங்கே 16 கிளைகள் இருக்கின்றன, இருந்தாலும் 10 கிளைகளுக்கு மட்டும் டெண்டர் கேட்டு இருக்கின்றார்கள். அதேபோல தலைமையிடத்திற்கும் சேர்த்து அதே நபர் 7 இலட்சம் ரூபாய்க்கு சாப்ட்வேர் சப்ளை செய்வதற்கு டெண்டர் கொடுத்திருக்கிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுமாதிரி ஒரு குற்றச்சாட்டு சொல்லும்போது முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி அனுமதி வாங்கித்தான் சொல்லவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இப்போது நீங்கள் சொல்கிறீர்களே, ** என்று. நீங்கள் இப்போது என்ன சொன்னீர்கள்? ** என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்? முன்கூட்டியே அனுமதி பெற்று சொல்லியிருந்தால் அமைச்சரிடம் சொல்லி பதில் சொல்லச் சொல்லியிருப்பேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 மே 3

*பிற்பகல் 12-35*

**திரு. இரா. விசுவநாதன்:** **

**திரு. சி.டி. தண்டபாணி:** Point of order.

**திரு. இரா. விசுவநாதன்:** **

**திரு. சி.டி. தண்டபாணி:** டெண்டர் யார் வேண்டுமானாலும் எடுக்கலாம்.

**திரு. இரா. விசுவநாதன்:** தயவுசெய்து நான் சொல்ல விரும்புவது, **

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொன்னால், கடலூரிலே 10 கிளைகளுக்கு 10 இலட்சம் ரூபாயிலே செய்து தருகிற நிறுவனம், அதேபோல திண்டுக்கல்லிலே 7 இலட்சம் ரூபாயிலே செய்து கொடுக்கிற நிறுவனம், அந்த அளவிலே 50 இலட்சம் ரூபாயிலே டெண்டர் கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்; அதுவரை அவர் சொன்னது நியாயம். ** அதிலே உள்ளபடியே தவறு நடக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம், அதிலே ஒன்றும் மாற்றம் இல்லை. ஆனால், அதேநேரத்தில் அவருடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வது என்பது வேண்டுமென்றே அவரை இதிலே சேர்ப்பதாக இருக்கிறது. தயவுசெய்து அந்தக் குறிப்பை சபைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் பெயரைக் குறிப்பிடவில்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** நான் பெயரைக் குறிப்பிடவில்லை. இன்னும் சொல்லப்போனால், அங்கே இருக்கிறவருடைய பெயரைக் குறிப்பிடவில்லை. ** ஆகவே,

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 மே 3]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தம் இல்லாத ஒருவரை குற்றம் சாட்டுவதற்கு என்ன ஆதாரத்தை அவர் வைத்திருக்கிறார்? ** (குறுக்கீடு) ஆண்டவனும் கிடையாது, ஒன்றும் கிடையாது. வேண்டுமென்றே ஒருவரை தவறாகச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன குற்றச்சாட்டுகள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். எல்லோருக்கும் சேர்த்து சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள், ஏற்கெனவே இந்த அவையில் அறிவித்திருக்கிறார்கள். எந்தக் குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தாலும் பேரவைத் தலைவரிடம் முன்கூட்டியே அனுமதி பெறாமல் இங்கு வந்து பேசினால் அது அவைக் குறிப்பில் இடம் பெறாது என்று பேரவைத் தலைவர் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறார்.

**திரு. இரா. விசுவநாதன்:** குற்றச்சாட்டு சொல்லவில்லை. அது நடைபெறாமல் இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டுக்கு உரிய காரியம் நடைபெறப் போகிறது என்று சொல்கிறார். அவர் நீண்டகாலம் ஜோசியராக இருந்திருப்பாரோ என்னவோ எனக்குத் தெரியாது. குற்றச்சாட்டுக்கு உரிய காரியம் நடைபெறப் போவதாக சொன்னாலும்கூட, அது குற்றச்சாட்டு என்ற அடிப்படையிலேதான் சட்டமன்றத்தின் உள்ளே நுழைகிறது, அந்தக் கருத்து. ஆகவே, அப்படி ஒரு கருத்தைச் சொல்லவேண்டுமென்றால் அதற்கு ஆதாரம் இருக்கிறதா? உங்களுக்கு ஆதாரம் இருப்பதாக நினைத்துத்தான் எதிர்காலத்திலே நடைபெறக்கூடும் என்று நீங்கள் பேசுகிறீர்கள். நடைபெறக்கூடும் என்பது குற்றச்சாட்டு ஆகவேண்டும் என்று சொன்னால், இங்கே பதிய வேண்டுமென்றால் அந்தக் குற்றச்சாட்டுக்கு முன்கூட்டி, அவைத் தலைவரிடத்திலே நீங்கள் அனுமதி பெறவேண்டும். இல்லையானால் அந்தக் குறிப்பு எதுவும் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் ஏறக்கூடாது

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்பதால், நீக்கவேண்டுமென்று முன்னவர் என்ற முறையில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். பேரவைத் தலைவர் அனுமதி பெறாமல் இங்கே சொல்லப்படுகிற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, திரு. ஐ. கணேசன்.

**திரு. இரா. விசுவநாதன்:** நடந்து இருப்பதாகச் சொல்லவில்லை. நடக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நடக்கக் கூடாது என்றாலும்கூட, இப்படியெல்லாம் குறை ஏற்படக் கூடாது என்று சொல்லலாம். குற்றச்சாட்டு என்கிற கருத்து வரக் கூடாது.

**திரு. இரா. விசுவநாதன்:** நடக்கக் கூடாது என்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். இதில் என்ன தவறு?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதற்கு பேசக்கூடிய முறை வேறு இருக்கிறது.

**திரு. இரா. விசுவநாதன்:** இதில் ஒன்றும் தவறு இல்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேசக்கூடிய முறை வேறு இருக்கிறது. இப்படியெல்லாம் குறைபாடு நடைபெறக் கூடாது என்று அமைச்சரிடத்திலே நான் வலியுறுத்துகிறேன் என்று சொல்லுங்கள். அது நடைபெற்றுவிடும், நடைபெறுவதாகத் தெரிகிறது, எதிர்காலத்தில் நடக்கக்கூடும் என்பது முறையல்ல. எதிர்காலத்திலே சில இடத்தில் பெரிய இடத்திலே இருக்கிறவர்கள்கூட நாட்டைவிட்டு ஓடிவிடக்கூடும் என்று சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எதிர்காலத்தில் என்ன நடக்கக்கூடும் என்பதைக் குற்றச்சாட்டுபோல சொல்லக் கூடாது. குற்றச்சாட்டு மாதிரி சொல்லாமல் நிருவாகத்தில் குறை ஏற்படக் கூடாது என்று நீங்கள் சொல்லுங்கள், அது வேறு.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. இரா. விசுவநாதன்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிறது. மற்றவர்கள் எல்லாம் பேச வேண்டும். (குறுக்கீடு) இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசுக்கு ஒரு வேண்டுகோள் வைத்திருக்கின்றேன். அதாவது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஆகவே, நீக்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கின்றேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அரசு–

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். இந்தச் சபையை ஜனநாயக நெறிமுறைப்படிதான் நாங்கள் நடத்திக்கொண்டு வருகிறோம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசிலே நடைபெற்றதுபோல எந்தத் தவறும் நடைபெறாமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

**திரு. இரா. விசுவநாதன்:** தவறு நடக்கக் கூடாது என்பதற்காக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். ஏற்கெனவே ஜனநாயக முறைப்படிதான் இந்தச் சபையை நடத்துகிறோம். பொதுப் பணித் துறை சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் ஓர் ஆவணத்தை பேரவைத் தலைவரிடம் காட்டி, அதை அமைச்சரிடம் காட்டி, அன்றைக்கு முறைப்படி விவாதம் நடைபெற்றது, பதிலும் கிடைத்தது. நீங்கள் அந்தமாதிரி நடந்துகொள்ளுங்கள். அதைவிட்டுவிட்டு, நடைபெறப்போகிறது, நடைபெறப்போகிறது என்று தேவையில்லாமல் வெளியில் இருக்கிறவர்களை எல்லாம் இழுத்துப் பேசுவது நன்றாக இல்லை. அது அவைக் குறிப்பில் இடம் பெறாது.

**திரு. இரா. விசுவநாதன்:** குறிப்பிட்ட தவறு நடக்கக் கூடாது என்று வேண்டுகோள் வைக்கிறேன். வேண்டுகோள் வைக்கக் கூடாது என்று எப்படி–

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன வார்த்தை யாரோ ஒருவரைக் குறிப்பிடுவதாக, மறைமுகமாகக் குறிப்பிட்டு அவர் மூலமாக இந்தத் தவறு நடக்கக் கூடாது என்று சொன்னால், நான் ஏதாவது ஒரு காரணத்தாலே உங்களிடம் பேசுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்போது மாண்புமிகு உறுப்பினர் போகிறபோது வழியில் திருடக் கூடாது என்று சொன்னால் அது உங்களுடைய மரியாதைக்குரிய வார்த்தையாகுமா? ஆகவே, அந்த மாதிரியான வார்த்தை அவைக்குறிப்பில் இடம் பெறக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் உணவு மானியக் கோரிக்கையின்மீது பேச அழைத்த துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆதிமனிதன் வாழ்க்கையின் தோற்றம்கூட கூட்டமாகக் கூடி உறவாடி வாழ்ந்தான் என்பது வரலாறு. கூட்டுறவு என்பது தன்னுடைய அங்கம் முழுவதும் பயன்பட வழங்கும் வாழையைப் போல, தென்னையைப் போல குணம் கொண்ட நல்ல அமைப்பாகும். இதைப பயன் படுத்துவதில், பயன்படுத்திக்கொள்வதில் சில சிக்கல்கள் இருக்கலாம். ஆனால், இதன் மொத்த நோக்கம் மிக மிக உயர்ந்தது என்பதனை இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்து உறுப்பினர்களும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே குறிப்பிட்டதுபோல ஒருசில சிக்கல்கள் என்னுடைய தொகுதியிலே, எடப்பாடி தொகுதியிலே நடந்து கொண்டிருக்கின்றன என்பதனை இந்த மாமன்றத்திலே, இந்த அவையிலே பல முறை எடுத்துரைத்திருக்கிறேன். இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய சுவர்களுக்கு, கதவுகளுக்கு, இந்த பெஞ்சுகளுக்கு வாய் இருந்தால் கணேசன் சொல்லக்கூடிய இந்தக் குறைபாட்டினை கேட்டிருக்கும். ஆனால், இந்த அமைச்சர் மட்டும் அதை மறுப்பது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. எத்தனையோ காரியத்தை நெஞ்சாரப் புகழ்ந்தவன் இந்த கணேசன். ஆனால், உங்களுடைய குறைபாடுகளை, இந்த அரசினுடைய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டத் தவறினால், எடப்பாடி பொதுமக்கள், எனக்கு வாக்களித்தது தவறாகிவிடும் என்பதற்காக நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 12-45*

துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். முதல்முதலாக, 1996-லே நம்முடைய தங்கமான அமைச்சர், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த தங்கபாண்டியன் அவர்கள், என்னுடைய கேள்விக்கு 23-8-1996 அன்று, கொங்கணாபுரம் கூட்டுறவு சொசைட்டி எவ்வளவு பெரிய சொசைட்டி, அதைப் பிரிக்கவேண்டுமென்று சொன்னபோதே, அவர் சொன்னார். 23-8-1996-லேயே அவர் சொன்னார். நிச்சயமாகப் பிரிக்கப்பட வேண்டும், பெரிய பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரிக்கும்போது, தாலுகாக்களை எல்லாம் பிரிக்கும்போது, கிட்டத்தட்ட அறுபதாயிரம் ஜனத்தொகை கொண்ட இந்தக் கூட்டுறவு சொசைட்டியைப் பிரிப்பது தவறில்லையென்று 23-8-1996-லே இதே அவையிலே கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த தங்கபாண்டியன் சொன்னதை, இந்த அமைச்சர் அவர்கள் நான்கு ஆண்டு காலமாக நிறைவேற்றவில்லை யென்றால், என் நெஞ்சம் எப்படிப் பதறும் என்பதனைச் சிந்திக்கவேண்டும்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பிரிக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். அதைத் தெரிந்துகொண்டுதான் (சிரிப்பு) அதிகமாகக் கோபித்துக்கொள்கிறார் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு (குறுக்கீடு) முதலமைச்சரே சொல்லிவிட்டார். அதற்குத் தகுந்தாற்போல (குறுக்கீடுகள்) மேலும் கணேசன் அவர்கள் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால், இந்த அவையினுடைய நேரம் கருதி மிக வேகமாக உறுப்பினர்கள் பேசி முடிக்க வேண்டும். நடக்கக்கூடிய காரியத்துக்கு அதிக நேரம் எடுக்க வேண்டாம், மற்றதைப் பேசலாம்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது கொங்கணாபுரம் சங்கத்தைப் பிரிக்க வேண்டுமென்பது. அவர் கேட்டு, அவரும் அதற்குப் பிரித்துத் தருகிறேன் என்ற உறுதியைத் தந்திருக்கிறார். அதற்கு அடுத்த ஆண்டும் அதே கேள்வி கேட்கின்றபோது, இன்றைக்கு தமிழ்நாட்டிலே மிக நல்ல ஒரு சங்கமாக இருக்கிறது கொங்கணாபுரம் சங்கம்; தமிழ்நாட்டிலே முதன்மைச் சங்கமாக இயங்கிக் கொண்டிருக்கிறது; அதைப் பிரிக்கின்றபோது, அது எங்கே பழுதுபட்டுவிடுமோ, எங்கே நஷ்டம் அடைந்துவிடுமோ (குறுக்கீடுகள்) கொஞ்சம் நேரம் இருங்கள். நான் பதில் சொன்ன உடனே சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் பாட்டுக்கு வேகமாக எழுந்திருக்கிறீர்களே?

(குறுக்கீடு) ஜோசியம் அல்ல, கொஞ்சம் இருங்கள், கணேசன் கொஞ்சம் இருங்கள். ரொம்ப வேகப்படாதீர்கள். கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) இங்கு அதை அதிகாரிகள் ஆய்வு செய்து அதை இப்போது பிரித்துத் தரலாம் என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பிரித்துத் தரவேண்டுமென்று சொல்லி, காலையிலே கணேசன் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன், உங்களுக்கு இப்போது பிரித்துத் தருகிறேன் என்று. இப்போதே (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுதான் இவ்வளவு வேகமாக... (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கு ஆண்டு காலமாக நடந்து வந்த போராட்டம் இன்று என்னுடைய மனதில் மூண்டு எரிந்துகொண்டிருந்த தீ, நம்முடைய பேராசிரியர் மூலமாகவும், (சிரிப்பு) நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் மூலமாகவும், இன்னும் சொல்லப்போனால், தமிழ் நாட்டினுடைய 4½ ஆண்டுகால சரித்திரத்திலே மிகச் சிறப்பான முறையிலே, இந்த ஆறு கோடி மக்களுடைய உள்ளக் குமுறல்களைப் புரிந்து, ஆட்சி நடத்திக்கொண்டு வரக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதிமக்கள் சார்பாக நன்றியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்; ஒத்துக்கொண்டார். (சிரிப்பு)

அதேபோல், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதை ஒத்துக்கொண்டதற்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றிகலந்த வணக்கத்தை இந்த அவையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கும் அமைச்சர் அவர்களுக்கும்-எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். எனக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நல்ல நீண்ட நட்புத்தான். ஆனால், இந்த ஒரு விஷயத்தில்தான் கொஞ்சம் மாறி இருக்கிறது. இன்று அது கூடிவிட்டது என்று சொல்லி, அதேபோல எடப்பாடியிலே பண்டகசாலை, கொங்கணாபுரத்திலே பண்டகசாலை இருக்கிறது. அது மிகவும் நலிவடைந்த ஒரு பண்டகசாலை. அந்தப் பண்டகசாலைக்கு 13 கடைகள் இருக்கின்றன; அவற்றில் 17 பேர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நலிவடைந்த சங்கத்தைப் பிரித்து— (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறேன்;



அதிலே 14 பேர்களுக்கு வேலை உறுதி செய்து வேறு சங்கத்திலே கொடுத்து இருக்கிறார்கள். 3 பேர்களுக்கு 4 மாத காலமாக வேலை கொடுக்கவில்லை. அவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும்; வேலை உறுதி செய்ய வேண்டும் என்று அரசு அதிகாரிகளை, கூட்டுறவுத் துறை அதிகாரிகளை, செயலாளரிலிருந்து, அமைச்சரிலிருந்து அத்தனை பேரையும் அணுகியும் 4 மாத காலமாக வேலை கொடுக்கவில்லை. பாரதி சொல்லுவார், 'தனி ஒருவனுக்கு உணவு இல்லை என்றால், ஜகத்தினை அழித்திடுவோம்' என்று. ஆனால், 4 மாத காலமாக 4 குடும்பங்களுக்கு உணவு இல்லையே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? இதுபற்றிய விண்ணப்பங்கள் அதிகாரிகள் அத்தனை பேருக்கும் கொடுக்கப்பட்டதே; அமைச்சருக்கு கொடுத்து இருக்கிறேனே; ஆனால், இதுவரை அவர் இதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இன்றாவது அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள்கூட (குறுக்கீடு) மண்ணெண்ணெயைப் பற்றி மிகத் தெளிவாகச் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் நுகர்வோர்களுக்காக 1,768 கோடி ரூபாயை அரசாங்கம் தன் பொறுப்பு எடுத்துக்கொண்டு—அவ்வளவு பெரிய தொகையை வழங்குகிறார்கள். இருப்பினும் இந்த மண்ணெண்ணெயினுடைய தேவை, மொத்தத் தேவை மாதத்திற்கு 80,539 கிலோ லிட்டர். அதிலே மத்தியத் தொகுப்பில் இருந்து கிடைப்பது 77,108 கிலோ லிட்டர். மீதி பற்றாக்குறை 3,431 கிலோ லிட்டர். அதையும் 5 சதவீதம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய முதல்வர் அவர்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டு இருக்கிறார்கள். சொல்லப்போனால், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதை மிகமிக முக்கியமான ஒரு கொள்கை முடிவாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொள்கை முடிவெல்லாம் நான் எடுக்க முடியாது.

**திரு. ஐ. கணேசன்:** உங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்கிறேன். துணைத் தலைவர் எடுக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்; உங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்கிறேன். 100 சதவீதம் அளிப்பதாக இருந்தால்கூட பற்றாக்குறை 3,431 கிலோ லிட்டர் தான். ஆனால் ஒவ்வொரு

[திரு. ஐ. கணேசன்] [2000 மே 3

மாதமும் ரேஷன் கடையிலே மண்ணெண்ணெய் ஊற்றும்போது பலருக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவே இல்லை. இது ஏன் என்று தெரியவில்லை. 3,431 கிலோ லிட்டருக்காக நாடு பூராவும் பிரச்சினை. இதிலே என்ன தவறு நடக்கிறது என்பதைக் கண்டறிந்து அரசாங்கம் தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) 100 சதவீதம் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய சுப்பராயன் அவர்கள் பேசியபோது மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அதே கருத்தை நான் மிக ஆணித்தரமாக, உறுதியாக இந்த மாமன்றத்திலே பதிய வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். முருகராஜ் குழு அறிக்கையில் தமிழகத்தில் 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பணிபுரியும் 7 ஆயிரம் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தினை 8-1-1997-லே பரிந்துரை செய்துள்ளார்கள். ஆனால், அந்த ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றி இந்த அரசு ஏன் தாமதம் செய்கிறது? இதனால் அரசுக்குப் பெரும் சுமை வந்துவிடாது என்பதையும் இந்த மாமன்றத்தின் மூலம் சொல்லி, இன்று இதற்கு ஒரு நல்ல முடிவினை ஏற்படுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

கூட்டுறவுத் துறை வங்கிகளிலே, சங்கங்களிலே 20 வருடங்களாக நிரப்பப்படாமல் 50 ஆயிரம் இடங்கள் காலியாக உள்ளன. இந்தப் பணி நியமனத்திற்கு வேலைவாய்ப்பு பதிவு அலுவலக மூப்பு அடிப்படையிலே— நேற்றே அறிவித்தார்கள்; அதற்கு நன்றி—வேலை வாய்ப்பினை தகுதி அடிப்படையிலே, மூப்பு அடிப்படையிலே வழங்க வேண்டும்; மைலாப்பூரில் உள்ள தொழில் மற்றும் நிருவாக வேலைவாய்ப்பு அலுவலக கூட்டுறவு பயிற்சி பெற்றவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். முறையாக ஊழல் நீங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே செயலாளர் பதவிகள் நேரடியாக நியமிக்கப்பட வேண்டும். இந்தக் கூட்டுறவுத் துறை நிச்சயமாக, மிகச் சிறப்பாக, அதுவும் 1,700 கோடி ரூபாயை வாரி வழங்கி, நமக்கு மத்திய அரசு என்ன, எந்த அரசாங்கம் இடையூறு அளித்தபோதிலும் தமிழ் மக்களுக்கு நியாயமான விலையில் முன்னால் அறிவித்தபடி ரூ. 3.50-க்கு அரிசி வழங்கக்கூடிய இந்தத் தமிழக அரசையும், முதல்வரையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நெஞ்சார பாராட்டி அமர்கிறேன்.



2000 மே 3] பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எல்லாத் துறைகளையும் தனியார் மயமாக்குவது என்று ஒரு நிலை ஏற்பட்டதற்குப் பின்னரும் உணவுப் பாதுகாப்பு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இன்றைக்கு மாறியிருக்கிறது.

1999 ஆம் ஆண்டைய இந்திய மனித மேம்பாட்டுக் கழகத்தினுடைய அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், பொது விநியோக முறை நகர்ப்புற ஆதிக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உணவுப் பொருள்கள் விநியோகத்தைப் பொறுத்தவரையில் Public Distribution System பொறுத்தவரையில், எந்த நோக்கத்தோடு Public Distribution System கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கமே இன்றைக்கு கிராமங்களைப் பொறுத்தவரையில் அடிப்பட்டுப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது.

தமிழ்நாடு ஜனநாயக மாதர் சங்கம் இது சம்பந்தமாக ஒரு ஆய்வை நடத்தியது. 14 மாவட்டங்களில் அவர்கள் நடத்திய ஆய்வினைத் தொடர்ந்து வந்திருக்கிற அறிக்கையிலே என்ன குறிப்பிடப் பட்டிருக்கிறதென்றால், ரேஷன் கடைகளுக்கு முழு சப்ளை வரவில்லை. 100 சதவீதம் என்ற முறையிலே அந்தப் பொருள்கள் வரவில்லை. அதன் காரணமாக ரேஷன் கார்டுகளை வைத்துக்கொண்டு பொருள் வாங்கப் போகிறவர்களுக்கு 80 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு உள்ளேதான் பொருள்கள் வழங்கப்படுகின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கடைகளிலே கேட்டால் எங்களுக்கு ஸ்டோர்ஸிலிருந்து தருகிற நேரத்திலேயே அளவு குறைவாகத்தான் தருகிறார்கள். 100 சதவீதம் தருவதில்லை. ஆகவே, நாங்களும் 100 சதவீதம் தர முடியாது என்று சொல்கிற நிலை இப்போது கிராமங்களில் இருந்து கொண்டிருக்கிறது. பொது விநியோக முறையின்கீழ் உணவுப் பொருள்கள் விநியோகத்தைப் பொறுத்தவரையில் பெரிய அளவில் கிராம மக்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கு இணைந்தாற்போல ரேஷன் கார்டுகளும் எல்லா மக்களுக்கும் கொடுக்கப்படவில்லை. ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்களே இங்கே

பதில் சொன்னார்கள். அப்போது ஒரு இலட்சத்திற்கும் மேலான மனுக்கள் பெண்டிங்கிலே இருந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார். அப்படி மனுக்கள் பல கொடுக்கப்பட்டு பல மாதங்கள் ஆனதற்குப் பிறகும் ரேஷன் கார்டுகள் வழங்கப்படாத ஒரு அவல நிலை தமிழகத்திலே உள்ள பல்வேறு பகுதிகளிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். உணவுப் பொருள்கள் என்பது அனைவருக்கும் உத்தரவாதமாக கிடைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் சொல்கிற நேரத்திலே இன்றைக்கு அமலில் இருக்கிற கூட்டுறவுச் சட்டம் என்பது ஜனநாயக விரோதச் சட்டமாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஜனநாயக முறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றுவதற்கு அனுமதிக்காத ஒரு சட்டமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அது 1983-லே உருவாக்கப்பட்ட ஒரு சட்டம். ஏனென்றால் ஜனநாயக முறையிலே இவை பணியாற்ற முடியாத அளவிற்கு ஒரு நிலை இந்தச் சட்டத்தினாலே உருவாக்கப்பட்டிருக்கிறது.

பதிவாளர் என்பவர் ஒரு சர்வாதிபதியாக உள்ளவர் என்பது என்னுடைய கருத்து. இந்தச் சட்டப்படி அவர் சர்வாதிபதி. இன்று பல விஷயங்களைப் பொறுத்தவரையில் அவருடைய அனுமதி வேண்டும். ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்றால் அவருடைய அனுமதி பெற வேண்டும். ஒரு கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் அவருடைய அனுமதி பெற வேண்டும். உதாரணமாக ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் அருமனையில் ஒரு கூட்டுறவு வங்கி இயங்கி வருகிறது. Agricultural Co-operative Bank. அவர்கள் டிரேடு வழியாக சம்பாதித்த பணத்தை வைத்துக்கொண்டு ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்டால் பல மாதங்கள் ஆனபின்பும் அது கிடப்பிலே போடப்பட்டிருந்தது. கடைசியிலே நாங்கள் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்த பிறகுதான் அதைக் கட்டுவதற்கான உத்தரவு கொடுக்கப்பட்டது. இப்போது என்னவென்றால் அதிலே கல் பாவுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கோப்பு போனால் இணைப் பதிவாளர் மேசையிலே 3 மாதமாக அது நிலுவையில் இருக்கிறது. எதனால் இவ்வளவு காலதாமதம் வருகிறது என்பது தெரியாது.



பிற்பகல் 1-00

அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தேவையான ஆட்களை நியமனம் பண்ணுவதற்கு கேட்டால், அனுமதி கொடுக்கவில்லை. உணவுப்பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிற கடைகளில் நியமனம் செய்ய வேண்டிய ஆட்களை நியமனம் செய்யவில்லை என்றால் மக்கள் விடமாட்டார்கள். ஆகவே, அந்த சொசைட்டியிலே கொஞ்சம் ஆட்களை நியமனம் செய்தார்கள். அதற்கு அந்த Joint Registrar சிபாரிசு செய்த அடிப்படையில் அந்தக் கூட்டுறவு சங்கத்தையே கலைத்துவிட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. இன்னொன்றை நான் சொல்கிறேன். பெரியகல்வராயன், வேம்பு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டத்தில் தேர்தல் நடைபெறுகிறது. திரு. பொன்னுசாமி என்பவர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தேர்தல் அதிகாரி ஒரு சர்டிபிகேட் கொடுக்கிறார். சட்டப்படி அந்தத் தேர்தல் நடந்தவுடனே தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு பொறுப்பு கொடுக்க வேண்டும். ஆனால் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. 15 நாட்கள் அப்படி டாட்ஜ் பண்ணியதற்குப் பிறகு, அவருக்கு ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார்கள். அதாவது ஏற்கெனவே இருந்த தலைவர் அவர்கள் disqualify ஆனது குறித்து ஓர் அப்பீல் போடப்பட்டிருக்கிறது. அந்த அப்பீல் நிலுவையில் இருப்பதால் உங்களுடைய தேர்தல் செல்லாது என்று கடிதம் கொடுக்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப் பட்டவருக்கு குறைந்தபட்சம் இதுசம்பந்தமாக தான் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்வதற்கு அவகாசம் கொடுக்க வேண்டாமா? அந்த மாதிரி ஒரு நிலை.

இப்போது நான் என்னுடைய கருத்தை சொல்ல விரும்புகிறேன். நான் விசாரித்த பிறகு வந்த கருத்து என்னவென்றால் ஏற்கெனவே அங்கே சங்கத்திலே செக்ரட்டரியாக இருக்கிறவர் பெரிய ஊழல் பேர்வழி. அந்த பொன்னுசாமி என்பவர் தலைவராக வந்தால், செக்ரட்டரி மீது பல நடவடிக்கைகள் வரும். அதனால் அவருடைய ஏற்பாட்டின் அடிப்படையில் இப்படி ஒரு கடுதாசி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த பிரசிடெண்டுக்கு பொறுப்பு கொடுக்காமல் தட்டிக்கழிக்கின்ற ஏற்பாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இன்று கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதற்குத் தேவையான சிப்பந்திகளை நியமனம்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மே 3

பண்ணுவதற்கு உள்ள நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு ஏற்கெனவே 2 சதவீதம் மேல் வருமானம் இருக்கிற இடத்திலே நியமனம் பண்ணலாம் என்று இருக்கிறது. ஆனால், அதற்குக்கூட இவர்களுடைய அங்கீகாரம் வேண்டுமென்ற நிலை வருவதன் காரணமாக நாம் சொசைட்டிகளுக்குத் தேவையான சிப்பந்திகளை காலாகாலத்தில் நியமனம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

நான் ஒன்றைச் சொல்கிறேன். அருமனை கூட்டுறவுச் சங்கத்தைக் கலைத்துவிட்டவர்கள், அதேநேரத்தில் பல கூட்டுறவுச் சங்கங்களில் இப்படி சிப்பந்திகளை நியமனம் பண்ணியிருக்கிறார்கள். அவர்களைக் கண்டுக்கொண்டதாகவே இல்லை.

இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகம்பாரா என்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே மிகப் பெரிய கொள்ளை நடந்தது. ஓர் ஆண்டுக்கு மேல் ஆகிவிட்டது. போலீஸ் கம்ப்ளைண்ட் செய்யப்பட்டது. இன்னும் எந்த நடவடிக்கையும் வரவில்லை. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் காசு போட்டவர்கள் அவர்களுக்கு பண்டங்கள் எல்லாம் போய்விட்டன. அதற்கு நட்டயீடு வாங்குவதற்கு காவல் துறை ஏதாவது இவர்களை கண்டுபிடிக்க முடியாது என்ற ஒரு சர்டிபிகேட் கொடுக்கவில்லையென்றால் வாங்க முடியாது. ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. அது பெண்டிங்கில் இருந்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் நம்முடைய தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை வைத்திருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்கிறார்கள். இப்படிப் பிடித்து கூட்டுறவுச் சட்டப்படி நிர்வாகம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கலாம். இன்று சென்னையில் இருக்கிற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் பிடித்தம் செய்த பணத்தில் 14 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். அமைச்சர் அவர்களை சந்தித்து ரெப்ரசன்டேஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது. எந்தப் பிரயோஜனமும் இல்லை. *(மணியடிக்கப்பெற்றது)*. நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றத்திற்குப் போய், அங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இரண்டு மாத காலத்திற்குள் அந்தப் பணத்தைக் கொடுத்து முடிக்கப்பட வேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே எந்த நடவடிக்கையும் வரவில்லை. ஒரு இலட்சம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.



2000 மே 3] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்தநேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, பல கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவிலே வாகனங்கள் வாங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போக்குவரத்துக் கழகக் கூட்டுறவுச் சங்கம் இதற்கான அனுமதி கேட்டதற்கு பிறகு அவர்களுக்கு அது மறுக்கப்படுகிறது. இந்த முறையிலே இந்த difference ஏற்படுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல இன்று நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் டைரி மற்றும் புத்தகங்கள் எல்லாம் சென்னையில் இருக்கிற Co-operative Central Press-லே தான் அச்சிட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு அவர்கள் அச்சடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு டைரி 59 ரூபாய் சார்ஜ் பண்ணுகிற நேரத்திலே வெளியிலே இதே டைப் டைரி 'டிப்டாப்' அல்லது 'ஒலிம்பிக்' போன்ற கம்பெனிகள் 42 ரூபாய்க்கு கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றன.

ஒரு டைரிக்கு 17 ரூபாய், இப்படி கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்ளையடிப்பது நியாயம்தானா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

அதேமாதிரி ஒரு Ledger Book வெளியிலே 420 ரூபாய்க்கு கிடைக்கிற ஒரு புக்கை இவர்கள் 800 ரூபாய்க்கு charge பண்ணுகிறார்கள். இப்படி கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கொள்ளையடிப்பதற்கு இன்னொரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்துவது சரியல்ல.

அதேபோன்று, கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிறவர்கள், பேங்க் பணம் கேட்கிறார்கள். கேட்கிற நேரத்திலே District Co-operative Bank-லேயிருந்து கேட்கிறார்கள். District Co-operative Bank எங்கேயிருந்து பணம் வாங்குகிறார்கள் என்றால், Tamil Nadu Central Co-operative Bank-லேயிருந்து பணம் வாங்குகிறார்கள். அவர்கள் எங்கேயிருந்து வாங்குகிறார்கள் என்றால் Reserve Bank-லேயிருந்து வாங்குகிறார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், இந்த சொசைட்டிகளுக்கு, Direct-ஆக Reserve Bank-லேயிருந்து வாங்குவதற்கான ஏற்பாடு செய்ய முடியாதா? அப்படி வருகிற நேரத்திலே இடையிலே ஒன்று, இரண்டு பேர்களுக்கு கொடுக்க வேண்டிய அந்தப் பணத்தை குறைத்து அந்த உறுப்பினர்களுக்கு குறைந்த Interest-லே, பணம் கடனாக கொடுக்கப்படுகிற ஒரு நிலை உருவாக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது, கூட்டுறவுச் சங்கங்களிலே ஏராளமானவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான முறையிலே சம்பளம் வழங்கப்படவில்லை. சம்பளத்தைப் பொறுத்தவரை நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். Public Service Commission ஏற்பாடு செய்வதைப்போல, கூட்டுறவுச் சங்கங்களின் நியமனத்தைப் பொறுத்தவரையில், அவர்களுடைய ஊதியத்தைப் பொறுத்த அளவில், Service Commission-னுக்கு அது விடப்பட வேண்டும். மாநில ரீதியாகவே Service Commission அந்த ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களது சம்பளத்தைப் பொறுத்த அளவில் வழிமுறைகள் செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே முருகராஜ் கமிட்டி என்ற பெயரில் ஒரு கமிட்டி இந்த கூட்டுறவு வங்கிகளிலேயும், சொசைட்டிகளிலேயும் வேலை செய்யக்கூடியவர்களுக்கு பென்ஷன் கொடுப்பது சம்பந்தமாக, சம்பளம் கொடுப்பது சம்பந்தமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு தகவல். அவர்கள் அறிக்கையும் கொடுத்துவிட்டார்கள். அது இன்னும் அமலுக்கு வரவில்லை. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்கிற ஊழியர்களுடைய, கூட்டுறவு வங்கிகளில் வேலை செய்கிற ஊழியர்களுடைய ஊதியம், பென்ஷன் போன்ற விஷயங்களைப் பொறுத்த அளவிலே, சரியான முறையில் அதை வழிமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, Housing பொறுத்தவரையில் தென் ஆற்காடு மாவட்டத்தில், போக்குவரத்து தொழிலாளர்கள் ஒரு சொசைட்டியை வைத்துக் கொண்டு 52 ஏக்கர் நிலத்தை வாங்கினார்கள். ஆனால், இன்னும் அந்த இடத்தை சொசைட்டியிடம் ஒப்படைக்க அதிகாரிகள் தயாராக இல்லை. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் கூட்டுறவுச் சங்கம் தேர்தல் நடத்துவதிலேகூட முறைகேடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நம்முடைய Local Bodies அமைக்கப்பட்டிருப்பதைபோல இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்துவதற்கு ஒரு தேர்தல் ஆணையத்தை இதற்கு என்று சொல்லி தனியாக அமைத்து, அந்த ஆணையத்தின் பொறுப்பிலே தேர்தல் நடத்தக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழகத்திலே விஷயங்கள் நடக்கும் என்று சுட்டிக்காட்ட ஜனநாயகப்பூர்வமாக விரும்புகிறேன்.

ஒரு விஷயம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏற்கெனவே மனு கொடுத்திருக்கிறேன். எங்கள் மாவட்டத்தில் ஒரு பயிற்சி Institute



இருந்தது. அந்த Institute-லே கொஞ்சம் மாணவர்களை எடுத்தார்கள். அந்த மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதிலேகூட பெரிய ஊழல் நடந்திருக்கிறது; முறைகேடுகள் நடந்திருக்கின்றன. சரியான முறையிலே அந்தத் தேர்தல் நடக்கப்படவில்லை என்று சொல்லி, உயர்நீதிமன்றம் அந்தத் தேர்வு செல்லாது என்று சொல்லி வேறு புது ஆட்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதிலே பல மாணவர்கள் பல ஆயிரங்களை கொடுத்து தாங்கள் தேர்வு வாங்கியதாகச் சொல்கிறார்கள். இப்போது அந்தப் பணமும் இல்லை. அவர்கள் படிக்க முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மாணவர்களுக்கு அவர்களது படிப்பைத் தொடர்வதற்கு, ஏதாவது ஒரு ஏற்பாட்டை நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்துகொடுக்க வேண்டும் என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக விவாதத்தை முடித்து வைப்பவர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே, இடையிலே என்னை ஏன் விட்டு விட்டீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுங்கட்சியிலே இரண்டு பேர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை.

**திரு. மு. அப்பாவு:** நான் விரைவில் பேசி முடித்து விடுகிறேன். (மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.கே. லட்சுமணன் மற்றும் திரு. மு. அப்பாவு ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேர்களும் எழுந்து நின்று இருவரும் நான் பேசுகிறேன், நான் பேசுகிறேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? திரு. வி.கே. லட்சுமணன், நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 1-10*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** துணைத் தலைவர் அவர்களே, அப்பாவு அவர்களுக்கு 5 நிமிடங்கள் கொடுங்கள், அவர் மிகவும் தயார் செய்துகொண்டு வந்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி கொடுத்தால், இந்தப் பக்கம் இரண்டு பேர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டியிருக்கும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அவ்வாறே கொடுங்கள். தாராளமாக கொடுங்கள். கூட்டுறவு மானியத்திலே பேச விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி வாய்ப்பு கொடுத்தால் 1½ மணிக்கு அவையை முடிக்க முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அவர்களையும் பேசச் சொல்லுங்கள். அங்கே ஒருவரை பேசச் சொல்லுங்கள், இங்கே ஒருவரை பேசச் சொல்லுங்கள். 5 நிமிடங்களில் உரையை முடித்து விடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 நிமிடங்கள் என்று கேட்டு வாங்கி, பிறகு அரை மணி நேரம் பேசுகின்றீர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நல்ல சாப்பாடு கொடுத்திருக்கிறார்கள். 5 நிமிடங்களில் நீங்கள் முடிக்கச் சொல்லும் நேரத்தில் உரையை முடித்துவிடுவார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, 5 நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, ஈரோடு மாவட்டம் பவானி சட்டமன்றத் தொகுதியிலுள்ள கவுந்தம் பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, சலங்கைப்பாளையம் பேரூராட்சிக்கு தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய கடன்களை எல்லாம் இரத்து செய்ய முடியாது என்று அரசு பிடிவாதமாக இருந்து கொண்டிருக்கிறது. 7 சதவிகிதம் வட்டியை ஊக்கத் தொகையாகக் கொடுத்து இரத்து செய்கின்றபோது நபார்டு வங்கி அதை ஏன் பெற்றுக்கொள்கிறது? அதேபோல் மீதி 93 சதவிகிதத்தைக் கொடுத்தால்—ஊக்கத் தொகையாகவே கொடுத்து— நம்முடைய முன்னாள் மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு. சோம்பால் அவர்கள், 1998 ஜூலை மாதம் பாராளுமன்றத்திலே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கும், நிலவள வங்கிகளுக்கும்



கிட்டத்தட்ட 67 ஆயிரம் கோடி ரூபாயை தருவதற்கு ரிசர்வ் வங்கியினுடைய துணை ஆளுநர், ஜெகதீஷ் கபூர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டார்கள். பொதுத் துறை வங்கிகளுக்கும், கிராமிய வங்கிகளுக்கும் அந்தப் பணம் மறு நிதியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கும், நம்முடைய நிலவள வங்கிகளுக்கும் ஏன் அது மறுக்கப்பட்டிருக்கிறது? மத்திய அரசிடம், மாநில அரசு கேட்காமல் மௌனமாக இருப்பதனுடைய நோக்கம் என்ன? ஆகவே, விவசாயிகளுடைய நலனில் உண்மையிலேயே அக்கறை இருந்தால் இந்த மறு நிதியை தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கும், நிலவள வங்கிகளுக்கும் பெற்று 7 சதவிகித ஊக்கத் தொகையை நபார்டு வங்கி பெற்றுக் கொண்டதைப் போன்று இதையும், மீதி இருக்கின்ற கடன்களையும் முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென்று விவசாயிகள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரேஷன் அரிசிக் கடத்தல் என்பது தொடர்ந்து நடைபெறுகின்ற ஒரு சமாச்சாரமாக ஆகிவிட்டது. பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி தூத்துக்குடியில் 1,000 டன்கள் அரிசி ஒரு கிட்டங்கியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, இதுவரை யாருமே கைது செய்யப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, மார்ச் மாதம் 25ஆம் தேதி 350 மூடைகள் அரிசி அதே தூத்துக்குடியில் ஒரு தனியார் கிட்டங்கியில் எடுக்கப்பட்டு அதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதைதான், மார்ச் மாதம் 19ஆம் தேதி நம்முடைய மத்திய அரசினுடைய, இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் விட்டல் அவர்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய மாவட்டமான திருச்சியிலே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தமிழகத்தில் பொது விநியோகத் துறைக்கு வழங்கிய உணவில் 36 சதவிகிதம் அரிசியிலும், 31 சதவிகிதம் சர்க்கரையிலும் பொது விநியோகத் துறை உயர் அதிகாரிகள் ஊழல் செய்துள்ளார்கள் என்ற கருத்தை மிக வருத்தத்தோடு தெரிவித்துள்ளார்கள். ஆகவே, இந்தப் பொது விநியோகத் துறையில் இருக்கிற உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இவ்வளவு பெரிய ஊழல் நடைபெறவில்லை என்பதை இந்திய இலஞ்ச ஒழிப்புத் துறையினுடைய இயக்குநர் விட்டல் அவர்கள் திருச்சியிலே ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் 1000 டன்கள் அரிசி, 350 மூடைகள் அரிசி, 420 டன்கள் அரிசி எல்லாம் களவாடப்பட்ட பின்பும் இதுவரை எந்த அதிகாரிகளுக்கும் சம்பந்தம்

[திரு. மு. அப்பாவு] [2000 மே 3

இல்லை என்று கூறி முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பதைப்போல வைத்து இருப்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் தேதி கோவில்பட்டியில் டி.எஸ்.ஓ. ராஜகோபால் அவர்கள் கொலைதான் செய்யப்பட்டிருக்கிறார் என்று மருத்துவப் பரிசோதனை அறிக்கை கூறியபின்பும்கூட இன்னும்—அவர் ஒரு சிறுபான்மை இன செட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தால்—அவரைக் கொலை செய்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அதற்கு சி.பி.ஐ. விசாரணை தேவை என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, இவ்வளவு அரிசி கடத்தலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள்? ஏன், இந்த அரசுக்குத் தெரியவில்லையா? அமைச்சருக்குத் தொடர்பில்லாமல் இருக்குமா என்பதை மட்டும் இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, ஆகவே, அமைச்சர் அவர்கள்...

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அவையிலே கடந்த சில நாட்களுக்கு முன்பு, கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் சொன்னார்கள். அவர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலையிலேயிருந்து நான் பேசாமல், அப்படிப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்பட்டால், ஒரு பாதிக்கப்பட்ட விவசாயி என்ற நிலையிலே என்னுடைய குரலை நான் ஒலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 10 நிமிடங்கள் எதிர்க்கட்சியினர் தங்கள் காதுகளை என் பக்கத்திலே தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய நாநயத்தால் அந்த நியாயமில்லாத கோரிக்கையைக்கூட அழகாக எடுத்துச் சொன்னீர்கள். ஆனால், அதன்மூலம் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால், விவசாயிகளுடைய நாணயம் கெட்டுப்போகும்; நம்பிக்கை கெட்டுப்போகும் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவசரகாலச் சட்டத்தின்போதுதான்



2000 மே 3] [திரு. ம. சண்முகம்]

தனியாருடைய கடன்கூட தள்ளுபடி செய்யப்படும் என்ற நிலை ஏற்பட்டபோது, விவசாயிகளெல்லாம் பொதுமக்கள் மத்தியிலே நம்பிக்கை இழந்தார்கள். எந்தவிதமான கடன்களையும் வாங்கமுடியாத நிலை ஏற்பட்டது. ஆகவேதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்; அந்தக் கோரிக்கையை நீங்கள் கைவிட்டுவிடுங்கள். ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருக்கின்றன. ஒரு பக்கம் விவசாயிகளுக்கு நாம் கடன்களைப் பெற்றுத் தருவது; இன்னொரு பக்கம் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நியாயமான விலை வழங்குவது. எவ்வளவோ திட்டங்கள் மூலம் இன்றையதினம் விவசாயிகளுக்கு வாழ்வு செழிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. உழவர் சந்தை மூலமாகவும், கால்நடை சிகிச்சை மூலமாகவும் இன்றையதினம் பல்வேறு வகைகளிலே விவசாயிகளுடைய வருமானம் பெருகிக் கொண்டிருக்கிறது. அதேபோல, நான் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறந்தார்கள் என்பதெல்லாம் இன்றையதினம் மாறிப்போய், 1989ஆம் ஆண்டிற்கு பிறகு இலவச மின்சாரம் அறிவித்ததற்குப் பின்புதான் மாதாமாதம் அவர்களுடைய கடன் தொல்லைகளெல்லாம்போய், வளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், அந்த வளமான விவசாயிகளுடைய வாழ்க்கையிலே நீங்கள் குறுக்கிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நிதிநிலை அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 30-6-1999-க்கு முன்பு வாங்கிய கடனுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பிறகு வெளியிட்ட கூட்டுறவுத் துறை உத்தரவிலே, அந்தக் கருத்து சற்று மாறுபட்ட கருத்தாக இருக்கிறது. ஆகவே, 30-6-1999 வரை தவணை கடந்த கடனை 30-6-2000-க்குள் செலுத்துகின்ற விவசாயிகளுக்கு நீங்கள் அபராத வட்டியைக் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதோடு 30-6-1999-க்குப் பிறகு வருகின்ற தவணைகளை நடப்புத் தவணைகளாகக் கருதி 30-6-2000-க்குள் செலுத்துகின்ற விவசாயிகளுக்கு அந்த 7 சதவிகித ஊக்கத்தொகையைத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுக்குப் பல்வேறு துறைகள் இருந்தாலும்கூட, உணவுத் துறையும், கூட்டுறவுத் துறையும்தான் மிக முக்கியமானவை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவுத் துறை என்பது இதயத்தைப் போன்றது. மற்ற துறைகளெல்லாம் அதற்கு இரத்த நாளங்களைப் போன்றது.

எங்கேயாவது அடைப்பு ஏற்பட்டால், கண்டிப்பாக இதயம் பாதிக்கப்படும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே, உணவுத் துறையைப் பற்றிச் சொல்கின்றபோது, பொதுப்பணித் துறையைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. "நீரின்றி அமையாது உலகு" என்று சொல்வார்கள். அந்த வகையிலே, நீராதாரத்தைப் பெருக்குகின்ற வகையிலே, ஏரி குளங்களெல்லாம் தூர் எடுக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அவர்களுடைய வாழ்க்கையை செழிப்படையச் செய்திருக்கிறார்கள். ஆகவே, இன்றையதினம் விவசாயிகளெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள்; அதே பழமொழியை மாற்றிச் சொல்கிறார்கள். "நீரின்றி அமையாது நல்லாட்சி; கலைஞர் இன்றி அமையாது நல்லாட்சி" என்று இன்றையதினம் உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் என்றென்றும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல, உணவுத் துறையைப் பற்றிச் சொல்கின்றபோது, இன்றையதினம், இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திலே நமது மாநில உணவு உற்பத்தி இருக்கிறது. எதிர்பார்த்ததைவிட, இந்த ஆண்டு 98 இலட்சம் டன் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது. ஆகவே, கண்டிப்பாக அரிசி விலை உயராது என்பதிலே எந்தவித ஐயப்பாடும் இல்லை. இப்போதுகூட நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே 10 மாதங்களுக்குத் தேவையான அரிசி இருப்பு இருக்கிறது. அந்த 10 மாதங்களுக்கான அரிசி மட்டுமல்லாமல், மாதந்தோறும் மத்திய அரசிடமிருந்து 1 இலட்சம் டன்களை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல துறைக்கு, நன்கு பணியாற்றிக் கொண்டிருக்கிற துறைக்கு நாம் பாராட்டு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்.

வங்கிகளைப் பற்றிச் சொல்கிறபோது, வங்கிகளிலுள்ள பணியாளர்கள் எவ்வளவோ இடர்பாடுகளுக்கு ஆளாகிறார்கள். பணி நியமனம் கண்டிப்பாகப் போடவேண்டுமென்ற நிலையிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. பதிவு மூப்பு என்பதைவிட, வங்கிகளில் இன்றையதினம் நாளொருமேனியாக, புதுப்புது கணக்கு முறைகளெல்லாம் வந்துகொண்டு இருக்கின்றன. கணினி வந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, பதிவுமூப்பு என்பதைச் சற்று மறுபரிசீலனை செய்து, தகுதி அடிப்படையில், தனியாக ஒரு வாரியம் அமைத்து, ஆசிரியர் தேர்வாணைய வாரியம்போல அமைத்து, கூட்டுறவு நிறுவனங்களிலே பணியாளர்களை நியமிக்க



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே ஏற்கெனவே உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தை அளிக்க வேண்டும். அந்த ஓய்வூதியத்தை மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு மட்டுமல்ல, மாநில, ஊரக வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கும் நீங்கள் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட்டி தள்ளுபடி செய்வதிலேகூட மாநில நிலவள வங்கி 75 சதவிகிதத்தையும், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் 25 சதவிகிதத்தையும் ஏற்றுக் கொள்வதாக இருக்கிறார்கள். ஆகவே, அந்த வங்கிகளுக்கு இருக்கிற நிதிச் சுமையை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகிற போது, அந்தக் கடனீட்டுப் பத்திரங்களுக்காக அரசு உத்தரவாதத்திற்கு, அரசு அரை சதவிகிதம் நிதி பெறுகிறது. அந்த வகையிலே, கிட்டத்தட்ட பல கோடி ரூபாய் அரசுக்கு நிதியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. அந்தக் கடனீட்டுப் பத்திரங்களுக்காக வசூலிக்கிற அந்த அரை சதவிகித பணத்தை கண்டிப்பாக நீங்கள் இரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு என்று சொன்னால், அது விவசாயத்திற்கு மட்டும்தான் என்றிருந்த நிலைமை மாறி, இன்று கூட்டுறவுத் துறையிலே பல்வேறு பிரிவுகள் ஏற்பட்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். இப்போது விவசாயிகள், கூட்டுறவுக் கடனை ஒட்டுமொத்தமாக தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஆதரித்து நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. கோவிந்தன், திரு. கணேசன், திரு. ஜி.கே. மணி ஆகியவர்கள்கூட, இந்த விவசாயக்

கடனை முற்றிலுமாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நான் இதை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், சென்ற ஆண்டு சிறுகுறு விவசாயிகளுக்காக வட்டி ஊக்குவிப்புத் தொகையாக 6¼ சதவிகிதம் அரசு வழங்குவதற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்குகின்றபோது, அவர்கள் ஏறத்தாழ 6 கோடியே 58 இலட்சம் ரூபாயை மட்டும்தான் பயன்படுத்திக் கொண்டார்கள். மீதியுள்ள பணத்தை, அதாவது 8 கோடியே 42 இலட்சம் ரூபாயைப் பயன்படுத்த முடியவில்லை என்று சொன்னால், அதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏதோ, பணம் வேண்டாம் என்று அல்ல; முழுக் கடனையும் செலுத்துவதுதான் அவர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். ஆனால், முழுக் கடனையும் செலுத்துவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, அவர்கள் அந்த வட்டி ஊக்குவிப்புத் தொகையைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகையினால், இந்தப் போராட்டம் எழுந்திருக்கிறது; நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள்கூட, எதிர்க்கட்சித் தலைவரோடு கலந்து பேசி, இதற்கு ஒரு முடிவு காண்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவிலே காண்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நபார்டு வங்கி நமக்கு கடன் கொடுக்கிறது. நபார்டு வங்கி, ஸ்டேட் வங்கிக்கு கடன் கொடுக்கிறபோது, 5 சதவிகிதம் வட்டி வசூலிக்கிறது. அதேபோல், மாநில வங்கி மாவட்ட வங்கிக்குக் கடன் கொடுக்கிறபோது, 7 சதவிகிதம் வட்டி வசூலிக்கிறது. அந்த மாவட்ட வங்கி, கிராமத்திலே இருக்கிற தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்குக் கடன் கொடுக்கிறபோது, 8 சதவிகிதம் வசூலிக்கிறது. தொடக்க வேளாண்மை...(குறுக்கீடு)

**திரு. சி.டி. தண்டபாணி:** துணைத் தலைவர் அவர்களே, மாநில வங்கிக்கு 5-1/2 சதவிகிதத்திற்கு கொடுக்கிறது. மாநில வங்கி, 5-3/4 சதவிகிதத்திற்கு, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நான் இறுதியாக இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, விவசாயிகளிடமிருந்து 12 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் வரை வட்டி வசூலிக்கிறது. ஆகவே, இடையிலே இருக்கிற 10 சதவிகித வட்டியானது, இடையிலே இருக்கிற மாநில வங்கி, மத்திய வங்கி ஆகியவற்றிற்குச் சென்று



விடுகிறது. நான் இங்கே அரசைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், நபார்டு வங்கியானது, மாநில வங்கி வழியாக இந்தக் கடனைக் கொடுக்காமல், நேரடியாக மாவட்டத்திற்கு கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்; அதன் மூலமாக வட்டி குறையுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுச் சட்டம். தற்போது 1983 ஆம் ஆண்டு சட்டம் அமலிலே இருக்கிறது. அரசாங்க அதிகாரிகள், Self Reliant Co-operative Act என்ற ஒரு சட்டத்தை அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே திட்ட கமிஷன் Model Co-operative Act, மாதிரி கூட்டுறவுச் சட்டம் என்ற ஒன்றை அறிவித்திருக்கிறது.

பிற்பகல் 1-25

சென்ற ஆண்டு இதையெல்லாம் பரிசீலிப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலே அதைப் பற்றிய பேச்சே இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அண்டை மாநிலங்களிலே, இது மட்டுமல்ல, இன்னும் பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. Multi State Co-operative Societies Act இருக்கிறது. அதேபோல Mutually Aided Co-operative Societies Act இருக்கிறது. இப்படி பல சட்டங்கள் மூலமாக ஒருவர் தன்னுடைய சங்கத்தைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்றபோது, இந்த Model Co-operative Societies Act-ஐ மட்டும் ஏன் நம்முடைய அரசு அலுவலர்கள் ஒரு வெறுப்போடு பார்க்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. அவர்களே கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு Model-Bye-Law-வைப் போட்டேன் என்கிறார்கள். Model Bye-Law-வைத் தயார் செய்கிற நீங்கள் ஏன் அந்த Model Co-operative Societies Act-ஐப் பரிசீலிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை இந்த Model-Bye-Law கூட—உண்மையாகவே, இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்தினால் இந்த Bye-Law-க்களைத் தயார் பண்ணுகிற பொறுப்பு பதிவாளருக்கு இருக்காது. பதிவாளருக்கு வேலை பதிவு பண்ணுவது மட்டும்தான். அதற்கு மேலே, எந்த வேலையும் பதிவாளருக்கு இருக்க முடியாது, இருக்கக்கூடாது என்பதுதான் இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினுடைய விதி. இன்னும் பல விதிகள் இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி நான் சொல்ல விரும்பவில்லை, அது எல்லோருக்கும்

தெரியும். மாதிரி கூட்டுறவுச் சட்டம் என்று சொன்னால் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், கூட்டுறவாளர்கள் மீது இருக்கிற அவநம்பிக்கையின் காரணமாக உயர் அலுவலர்கள், இன்றைக்கு அவர்களாகவே அங்கே Bye-Law-வை தயார் செய்து, கிராமங்களுக்கும், மற்ற இடங்களுக்கும் அனுப்புகிறார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன், எந்தச் சங்கமாவது, இந்தச் சங்கத்திற்கு 2 யானை வாங்கலாம் என்று தீர்மானம் போட்டு இருக்கிறார்களா? எந்தச் சங்கமாவது இதைப்போல ஒரு ஊதாரிச் செலவு செய்வதற்கு ஒரு Bye-Law திட்டம் கொண்டு வந்திருக்கிறார்களா? யாரும் கொண்டு வரவில்லை. ஆக, உங்களுக்கு எப்படி அக்கறை இருக்கிறதோ, அவ்வளவு அக்கறை அங்கே இருக்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கும், மற்றவர்களுக்கும் நிச்சயமாக இருக்கிறது. ஆகையினால், அண்டை மாநிலங்களைப்போல, இங்கேயும் சீக்கிரமாக இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு நீங்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வேண்டுமென்று நான் கேட்டபோது, அரசாங்கம் எழுத்து மூலமாக எனக்கு அதை வழங்க முடியாது, தேவையில்லை என்ற சொல்லியிருக்கிறது. ஆனால், அண்மையிலே நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தல் முறையைப் பார்த்தால் நான் இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதில் அரசியல் கட்சியினுடைய சின்னம் மட்டும்தான் இல்லை. மற்றபடி நடைபெற்ற தேர்தல் முழுக்க முழுக்க அரசியல் கட்சிகளால் நடத்தப்பட்ட தேர்தல்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. இதில் இரகசியமெல்லாம் ஒன்றும் கிடையாது. ஒருவேளை நேரடியாக இல்லாமல் இருக்கலாம். கொடி இல்லாமல் இருக்கலாம், கோஷம் இல்லாமல் இருக்கலாம், சுவரொட்டி இல்லாமல் இருக்கலாம். ஆனால் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தல் நிச்சயமாக அரசியல் ரீதியாக நடைபெற்றதுதான் என்று சொன்னால், அதை யாரும் சந்தேகப்பட வேண்டிய அவசியம் கிடையாது என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

குறிப்பாக, இந்த எண்ணெய் வித்துக்கள் சங்கம், பால் வளச் சங்கம், இந்தச் சங்கங்களுக்குத்தான் சில விதிகள் உண்டு. அங்கே இயக்குநராக போட்டி போடுகின்றவரோ அல்லது வாக்காளரோ இப்படித்தான் இருக்க



வேண்டும், அங்கே அவர்கள் 120 நாள் பால் ஊற்றி இருக்க வேண்டும் அல்லது 300 லிட்டர் பால் ஊற்றியிருக்க வேண்டும். இப்படியெல்லாம் சட்டம் உண்டு. வேறு எந்த சொசைட்டிக்கும் எந்தச் சட்டமும் கிடையாது. இதனால் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம் என்ற நிலை இருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தத் தேர்தல் முறை, வேட்பு மனு தாக்கல் செய்கின்ற காலத்திலேயிருந்து, தேர்தல் முடியும் வரை, அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இடைவெளி மிகமிகக் குறைவு. வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்கு, கொடுக்கப்படுகிற கால அவகாசம் மிகமிகக் குறைவு. யாருக்கெல்லாம் ஆள் வசதி இருக்கிறதோ, அவர்கள் 100 பேர்களைக் கொண்டுபோய் கியூ வரிசையிலே நிறுத்தி விட்டால், யாருமே விண்ணப்பமே வாங்க முடியாது. அதுதான் நடந்தது. நான் நேரடியாகப் பார்த்தேன்; அதில் சந்தேகம் எல்லாம் கிடையாது. ஆகையினால், இந்த முறையை மாற்றி பொதுத் தேர்தல் எப்படி நடக்கிறதோ, அதேபோல இந்தக் கூட்டுறவுத் தேர்தலும் நடத்தினால்தான் இது உண்மையான ஜனநாயமாக இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தக் கூட்டுறவுத் துறை ஒரு மிகப் பெரியத் துறையாக வளர்ந்து வருகிற துறையாக மாறி விட்டது. இதிலே, உணவுத் துறை, நுகர்பொருள் துறை எல்லாம் கலந்திருக்கிறது. ஆக, நான் இங்கே கேட்டுகொள்ள விரும்புவதெல்லாம், இந்தத் துறையை இரண்டாகப் பிரித்து, கூட்டுறவுத் துறைக்கு ஓர் அமைச்சர், உணவு, நுகர்பொருள் துறைக்கு ஓர் அமைச்சர் என்று இரண்டு அமைச்சர்கள் மூலமாக, இது நிர்வகிக்கப்படும் என்று சொன்னால், அது இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது-

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அமைச்சர் அவர்கள் ஒருமுறை பேசுகின்றபொழுது, 13 ஆயிரம் கோடி ரூபாய் வைப்புத் தொகை இருப்பதாக, மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். எனக்கு

[திரு. வி.கே. லட்சுமணன்] [2000 மே 3

அது பெருமையாகப்படவில்லை. நான் பெரிய ஆபத்தாக நினைத்தேன். காரணம், இந்தப் பணம் எப்படி வந்தது என்று நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எல்லா N.B.F.C.-யும், அதாவது Non-Banking Financial Companies, இவையெல்லாம் தோற்றுப்போன பின்னாலே, இவையெல்லாம் பொதுமக்கள் பணத்தைச் சூறையாடிய பின்னாலே, இன்றைக்குப் பொது மக்கள் தங்களுடைய பணத்தை எங்கே வைப்பது என்ற நிலை ஏற்பட்ட பின்னாலே, எல்லோரும் கூட்டுறவு வங்கியிலே வைக்கிறார்கள். அங்கே வட்டி விகிதம் அதிகம். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? அதை சரியான முறையில், நீங்கள் முதலீடு செய்யவில்லையென்று சொன்னால், உங்களுக்கு சரியான வட்டி கிடைக்காது. ஆகவே, வட்டி கிடைக்காதது மட்டுமல்ல, யாரேனும் ஒரு நாள், திடீரென்று வந்து, என்னுடைய fixed deposit-ஐ திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், சில சமயம் கொடுக்க முடியாமல்கூட போய் விடலாம் என்பதை நான் உங்களுக்கு எச்சரிக்கையாக நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த நுகர்பொருளை பொறுத்தமட்டிலே, நிறைய மினரல் வாட்டர் வந்திருக்கிறது. ஆனால், எந்த மினரல் வாட்டரும் I.S.I. standard-ல் இருப்பதாகத் தெரியவில்லை. ஆக, இந்த நுகர்பொருள் துறையானது, மினரல் வாட்டருக்கு I.S.I. standard இருக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கடைகளிலே வழங்கப்படுகின்ற பில்களிலே கடைசியிலே Goods once sold will not be taken back என்று ஒரு வரி இருக்கும். இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தரத்திற்கு நான் உத்தரவாதம் அல்ல, விலைக்கும் நான் உத்தரவாதம் அல்ல என்பதைத்தான் காட்டுகிறது. திருப்பிக் கொடுத்தால் வாங்க மாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆக, தரமான பொருளை, நியாயமான விலைக்கு நான் விற்கிறேன் என்று பெருமையோடு, உறுதியோடு சொல்லிக்கொள்ளக்கூடிய வணிகர் வேண்டும். அப்படிப்பட்ட நிலையை இந்த நுகர்பொருள் வழங்கல் துறை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

13 இலட்சம் போலி ரேஷன் கார்டுகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆக, இந்தத் துறையைப் பிரிக்கின்றபொழுது, இந்தப் போலி ரேஷன் கார்டுகளை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2000 மே 3] [திரு. வி.கே. லட்சுமணன்]

நான் சென்ற முறை இங்கே பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னேன். நரிமணத்திலே நில வாயு கிடைக்கிறது. குஜராத்திலே, இதுபோன்று நிலவாயுவை வைத்துதான், கலோலிலே, காண்ட்லாவிலே பெரிய யூரியா தொழிற்சாலைகளை IFFCO மூலம் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இங்கேயும் அதுபோல உரத்தொழிற்சாலையை ஏற்படுத்த நீங்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கூட்டுறவுப் பணியாளர்களுக்கு, எல்லோரும் கேட்டுக்கொள்வதுபோல, ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று நானும் கேட்டு, அரிய வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு நுகர்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத் துறையின் சார்பில் ஐந்தாவது முறையாக மானியக் கோரிக்கை வைக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த, எங்களது பெரும் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, எங்களது குடும்பத் தலைவர் அவர்களை வணங்கி, என்னுடைய பதிலுரையை நான் தொடங்குகின்றேன்.

இங்கே உரையாற்றிய 10-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொன்னாலும், த.மா.கா. கட்சியைச் சேர்ந்த நமது அப்பாவு அவர்கள் மட்டும், அரிசி கடத்தப்படுகிறது, அப்படி கடத்தப்படுகின்றபோது, இதிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும் தொடர்பு இல்லாமல் இருக்குமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டு அமர்ந்தார்.

நான், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற போது 'குறுக்கிட வேண்டாம் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் கடைசியிலே பதில் சொல்லுங்கள்' என்று அவர் சொன்ன காரணத்தால், மற்ற எந்த உறுப்பினர்களுக்கும் நான் இடையிலே குறுக்கிட்டு என்னுடைய விளக்கத்தைச் சொல்ல விரும்பவில்லை, சொல்லவில்லை. ஏதோ அப்பாவு அவர்கள் சொல்லிவிட்டார், நாங்கள் அதற்குப் பயந்து, அவர்களுக்கு பதில் சொல்லுகிறோம் என்று தயவுசெய்து எந்த உறுப்பினரும் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால், எங்களை

[திரு. கா. நா. நேரு] [2000 மே 3

அமைச்சராக நியமித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேர்மையாக ஆட்சியை நடத்த வேண்டும், குறிப்பாக அமைச்சர்கள் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதிலே உங்களைக் காட்டிலும் அதிகமான அக்கறை செலுத்துகிறவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-35*

அவருக்குப் பயந்துதான் இந்த இலாகாவிலே நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அரிசி கடத்தல் என்று காலையிலே பத்திரிகையிலே வருமானால், நாங்கள் பத்திரிகை படிப்பதற்கு முன்பாகவே முதலமைச்சர் படித்து காலை 6¾ மணியளவிலே தொலைபேசியில் அழைத்தால், ஏதோ நம்முடைய இலாகாவைப் பற்றி இன்றைக்கு வந்திருக்கிறது, முதலமைச்சர் அழைக்கிறார் என்று எண்ணுகின்ற அளவிற்கு எங்களையெல்லாம் இயக்கிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் இருக்கின்ற காரணத்தினாலேதான் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு 5 ஆண்டு காலம் தொடர்ந்து உணவு, கூட்டுறவுத் துறையிலே நாங்களும் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி எங்களை மட்டும் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல் துறையினுடைய அதிகாரிகளை இந்த 4 ஆண்டு காலத்திலே 100-க்கும் மேற்பட்ட முறை நேரடியாக அழைத்துப் பேசி, ஆய்வு செய்து இந்தத் துறையை ஒழுங்காக நடத்துவதற்கு எங்களுக்குப் பேருதவி புரிந்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்குப் பயந்து இந்த விளக்கத்தை உங்களுக்கு நான் சொல்கிறேன்.

ரேஷன் அரிசி கடத்தப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஒரு பக்கம் பார்த்தால், எங்களுக்கு ரேஷன் கார்டு வரவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு பக்கம் போலி அட்டைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைக் களைய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு பக்கம் அரிசி கடத்தப்படுகிறது நீங்கள் கவனிக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்தில் ஏன் 80 சதவிகிதம்தான் அரிசி தருகிறார்கள், ஏன் 100 சதவிகிதம் தரவில்லை என்று சொல்கிறார்கள். இப்படி ஒன்றுக்கொன்று முரண்பாடு இருக்கின்ற காரணத்தினாலேதான் இந்தப் பணியிலே சில இடங்களில் சில ஊழியர்கள் செய்கின்ற தவறு இறுதியாக உயர் அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும் தொடர்பு என்ற வகையிலே பத்திரிகையிலே வந்தவுடனே



2000 மே 3] [திரு. கா. நா. நேரு]

எதிர்க்கட்சிகள் உடனடியாக இந்தப் பிரச்சினையை கையிலே எடுத்துக்கொள்கிறார்கள். குறிப்பாக 1 கோடியே 57 இலட்சம் அட்டைகள் புழக்கத்தில் இருக்கின்றன. ஆனால், மத்திய அரசும், மாநில அரசும் எடுத்த கணக்குப் பிரகாரம், 1 கோடியே 46 இலட்சம் குடும்பங்கள்தான் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குடும்பத்திலே தலைமகன் திருமணம் ஆகியிருந்தாலும்கூட அவருக்குத் தனி அட்டை வழங்கலாம் என்று சொன்ன காரணத்தினால் கூடுதலாகத் தரப்பட்டிருக்கிறது. எவ்வளவோ விழிப்புணர்வுடன் செயல்பட்டாலும்கூட ஒரு பெரிய பணி என்கின்றபோது, பல்வேறு இடங்களிலே தவறு ஏற்படுகிறது. அந்தத் தவறை நேர் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தால், எடுக்கின்றபோது உண்மையாக இருக்கின்றவர்கள் சிலபேர் பாதிக்கப்படுகிறார்கள். அதிலேதான் நாங்கள் கொஞ்சம் சுணக்கம் காட்ட வேண்டியிருக்கிறது. இன்றைக்கு ஓர் ஊரை எடுத்துக்கொண்டு, அந்த ஊரில் முழுமையாக அங்கே இருக்கின்ற கார்டுகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று சொன்னபோது, உடனடியாக 100 பேர்கள் யார், யார் போலி கார்டுகளை வைத்திருக்கிறார்களோ அவர்களே தாலுகா அலுவலகம் முன்போ, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்போ எங்களுடைய அட்டைகள் வரவில்லை என்று ஒரு போராட்டத்தை நடத்துகிறார்கள். அப்படி போராட்டத்தை நடத்தினால் எதிர்க்கட்சிக்காரர்கள் உடனடியாக அரிசி அட்டைகூட வழங்குவதற்கு உங்களுக்கு வக்கு இல்லையா என்று கேட்கிறார்கள். அதிலே எங்களுக்குக் கொஞ்சம் சுணக்கம் காட்ட வேண்டியிருக்கிறது. அதுதானே ஒழிய, எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்குமானால் உண்மையிலேயே ஓரிரு மாதங்களிலே முழுமையாக அதை நாங்கள் சரி செய்துவிட முடியும். இருந்தாலும் எவ்வளவு குற்றங்கள், குறைகள் சொன்னாலும், அந்தப் பணியைத் தொடர்ந்து முதலமைச்சருடைய ஆணைக்கிணங்க செய்து கொண்டு இருக்கின்றோம். இந்த ஆண்டு முதலமைச்சர் ஓர் உத்தரவு தந்திருக்கிறார். ஒவ்வொரு தொகுதியாக எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு தொகுதியையும் ஆய்வு செய்யுங்கள். குடும்பத் தலைவரே நேரடியாக ஒரு மாதத்திற்கு பொருள்களைப் பெறக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டத்தை உருவாக்குங்கள் என்று சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு அதை உருவாக்கி, போலி அட்டைகளை முழுமையாக ஒழிப்பதற்குரிய முயற்சியை நிச்சயமாக நாங்கள் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே சொன்னார் திரு. அப்பாவு, அரிசி கடத்தலிலே நடவடிக்கை எடுக்கவில்லை. என்று. அரிசி தூத்துக்குடியிலிருந்து கண்டெய்னரில் கடத்தப்பட்டது. தூத்துக்குடியிலிருந்து ஜெகசீதன் என்பவர், அவர் பெங்களூரிலே இருப்பவர், அவரோடு கோபாலன் என்கிற பாலகோபாலன், பழனிச்செல்வம் இணைந்து ரேஷன் அரிசி, ஏற்கெனவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து தரம் குறைந்த அரசியை ஏலமாக எடுத்து, அந்த அரிசியோடு ரேஷன் அரிசியையும் கலந்து, உடனடியாக இலங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்கிறார். இலங்கையிலே அவருக்கு சரியான விலை கிடைக்கவில்லை. உடனடியாக பெங்களூருக்குச் செல்ல வேண்டும் என்று சொல்லி, அந்தக் கண்டெய்னரிலே ஏற்றி பெங்களூருக்குக் கொண்டு செல்கிறார். எங்களுக்கு செய்தி வந்தவுடன் இராணுவம் போல விரைந்து செயல்பட்டு, அந்த அரிசியையும் கைப்பற்றியிருக்கிறோம். அதிலே சம்பந்தப்பட்ட 12 பேர்களிலே 9 பேர்களைக் கைது செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, 6 லாரிகளைக் கைப்பற்றியிருக்கிறோம். இதுவரை இந்த உணவுத் துறையிலே இல்லாத அளவிற்கு கைது செய்யப்பட்ட நபர்கள் கிட்டத்தட்ட 75 நாட்களாக சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அது இந்த அரசு எடுத்த நடவடிக்கை; முதலமைச்சர் எடுத்த நடவடிக்கை. அதுமட்டுமல்ல, அதற்குப் பிறகு கோவில்பட்டியிலே பிடிப்பட்ட சரக்கு-அதே நபருடைய கணக்குப்பிள்ளை என்கிற காரணத்தினால் அவரையும் கைது செய்து, அந்த அரிசியையும் கைப்பற்றியிருக்கிறோம். ஒரு இடத்திலே 5 அட்டைகள் இருந்தால்கூட போலி அட்டைகள் என்று எடுத்துக்கொண்டால் ஒரு மூட்டை வந்துவிடும். இப்படி ஆங்காங்கே இருக்கின்ற சிறிய சிறிய அளவிலே செய்கின்ற குற்றம் ஓர் இடத்திலே பெரியதாகச் சேர்கிறது. அப்படிப் பெரியதாகச் சேர்கின்ற நேரத்திலேதான் எங்களுடைய கவனத்திற்கு வர முடிகிறது. அதனால்தான் இந்த ஆட்சி வந்தவுடன் முதலமைச்சர் அவர்கள் மிகவும் கவனமாக D.G.P. level-ல் இதற்கு ஓர் அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். I.G. அளவிலே அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இப்போது Food cell-ஐப் பலப்படுத்த வேண்டுமென்று எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, அனுமதியும் வழங்கியிருக்கிறார்கள். அதனால் இப்போது தமிழ்நாடு முழுவதும் நிச்சயமாக கடந்த காலத்தைவிட 10,000 டன்கள் குறைவாக அரிசி வழங்கப்படுகிறது. காரணம் என்னவென்றால் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். போலியான கார்டுகளை கண்டுபிடிப்பதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்ற காரணத்தினால் தான் இன்றைக்கு அது நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 1-40

இங்கு பேசியபோது உணவு, கூட்டுறவுத் துறையில் நம்முடைய குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கையை நான் சொன்னேன். வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்கள் 64,98,999 பேர். வறுமைக்கோட்டிற்கு மேலே இருக்கின்றவர்கள் 91,23,595 பேர். புதிதாக வந்திருக்கின்ற மனுக்கள் 1,36,000. ரேஷன் அட்டைகள் வழங்கவில்லை என்று சொன்னார்கள். ரேஷன் அட்டைகளை வேகவேகமாக வழங்குகின்றபோது போலி அட்டைகள் இலகுவாக வந்து விடுகின்றன. அதனால்தான் கொஞ்சம் ஆய்வுசெய்து வழங்க இருக்கிறோம். விரைவிலே உண்மையாக இருக்கின்றவர்களுக்கு வழங்கிவிடுவோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 1.57 கோடி அட்டைகளுக்கு கூட்டுறவுக் கடைகள் - முழு நேரக் கடைகள் 21,183; பகுதிநேரக் கடைகள் கிட்டத்தட்ட 3,356; வாணிபக் கழகம் நடத்துகின்ற முழுநேரக் கடைகள் 1,090; பகுதிநேரக் கடைகள் 19; அதேபோல மற்றவை, பெண்கள் நடத்துகின்ற முழுநேரக் கடைகள் 271; பகுதிநேரக் கடைகள் 50; மகளிர் சங்கங்கள் நடத்துகின்ற கடைகள் 210; நடமாடும் கடைகள் 36. ஆக, இந்தக் கடைகளின் மூலமாக ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன்கள் அரிசி, 30,000 டன்கள் கோதுமை, 28,000 டன்கள் சர்க்கரை, 82,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை நாம் வழங்கிக்கொண்டு வருகிறோம். இதில் மைய அரசின் ஒதுக்கீடு ஒவ்வொரு மாதமும், இந்த ஏப்ரல் மாதம் முதற்கொண்டு வறுமைக் கோட்டிற்குக் கீழே, வறுமைக் கோட்டிற்குமேலே என்று கணக்கிட்டு, 1,30,020 டன்கள் அரிசி மத்திய அரசிலிருந்து வருகிறது. கோதுமை 20,000 டன்கள் வருகிறது. சர்க்கரை 26,033 டன்கள் வருகிறது. மண்ணெண்ணெய் 77,108 கிலோ லிட்டர் வருகிறது. இதை ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 210 இடங்களிலிருந்து 50,000 பணியாளர்களைக் கொண்டு, தினமும் 5,000 வாகனங்களிலே 30 நாட்களிலும் விநியோகிக்கின்ற அளவிற்கு, இந்த இரண்டு துறைகளினுடைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலே சென்ற ஆண்டு 1999-ல் மட்டும் 22,08,000 டன்கள் அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் கோதுமை 1,01,000 டன்களும், சர்க்கரை 3,02,000 டன்களும், மண்ணெண்ணெய் 9,17,000 கிலோ லிட்டரும் இந்த 26,000 கடைகளிலே வழங்கியிருக்கிறோம். தொடர்ந்து இந்தப் பணிகளைச் செய்கின்றபோது ஆங்காங்கே சிறு தவறுகள் நடந்தாலும்கூட, அதில் கவனமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் காரணமாக கிட்டத்தட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்போது

[திரு. கா. நா. நேரு] [2000 மே 3

பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்; தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். இதிலே இவ்வளவு அரிசி வருகிறது. வேறு எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மட்டும் ஏகபோக கொள்முதலிலே 10,84,980 டன்கள் நெல்லும், இணை கொள்முதலிலே 82,020 டன்களும் நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். அப்படிப் பார்த்தால் அரிசியினுடைய கையிருப்பு மட்டும் கிட்டத்தட்ட 10-¼ இலட்சம் டன்கள் நம்மிடம் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. அடுத்த 10 மாதங்களுக்குத் தேவையான அளவிற்கு அரிசி நம்மிடம் கையிருப்பிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் மிகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லை கொள்முதல் செய்கிறபோது நமது நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நேரடியாக மில்கள் இருக்கின்றன. அந்த மில்கள் இதுவரை இல்லாத அளவிற்கு ஒவ்வொரு ஆண்டும் 1996-97-லே 2,67,000 டன்கள் அரைவை செய்தன. 1997-98-லே 2,30,000 டன்கள் அரைவை செய்தன. 1998-99-லே 2,07,000 டன்கள் அரைவை செய்தன. இந்த ஆண்டு, 1999-2000-ல் கிட்டத்தட்ட 3,59,608 டன்கள் அரைவை செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எங்களுடைய பணி இந்த 23 மில்களிலும் இதுவரை இல்லாத அளவிற்கு நாங்கள் இதை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதையும் மிகப் பெருமையோடு இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இங்கே சொன்னார்கள், நெல் எல்லாம் நிறைய கொள்முதல் செய்து வீணாகிறது என்று. நமது தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் 5,60,000 டன்கள் சேமித்து வைப்பதற்கு இடம் இருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 6 இலட்சம் டன்கள் வைக்கலாம். ஆனால், திடீரென்று 12 இலட்சம் டன்கள் வாங்கினால் வைப்பதற்கு இடம் இல்லை. அதனால்தான் இந்த ஆண்டு தொடர்ந்து அந்த சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மூலமாக 27,000 டன்கள் வைக்க புதிய கோடவுன் கட்டுவதற்குரிய வசதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அது கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-45*

நெல் கொள்முதல் செய்கின்றபோது நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாட்டிலே கடந்த ஆண்டு 20 இடங்களிலே கட்டப்பட்டன. தொடர்ந்து இந்த ஆண்டிலே 2 இடங்களிலே கட்டப்பட்டாலும், கடலூர் பகுதியை முன்னுரிமையாக எடுத்து,



2000 மே 3] [திரு. கா. நா. நேரு]

தொடர்ந்து கட்டுவோம் என்ற அந்த உறுதியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வாணிபக்கழகத்தின் சார்பாக கடந்த காலத்தைவிட அமுதம் பல்பொருள் அங்காடி மூலமாக இந்த ஆண்டு பொருள்கள் விற்பது, 20 கோடி ரூபாய்க்கு விற்றிருக்கிறோம் என்பதை நான் இங்கு பெருமையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உணவுத் துறையிலே ஒரு காலத்திலே நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புத் துறையிலே ஆறே ஆறு சங்கங்கள் இருந்தன. இந்த ஆண்டு 300 சங்கங்கள் உருவாகியிருக்கின்றன. அதற்கு தமிழ்நாடு அரசால் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கு பெருமையாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதையெல்லாம்விட இன்றைக்கு நாம் உரம் தயாரிப்பதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து ஒரு புதிய திட்டததை உருவாக்கியிருக்கிறோம். அதுவும் ஒரு காலத்திலே இங்கு அரைக்கப்படுகின்ற 'ஹஸ்க்' என்று சொல்லப்படுகின்றதை, விற்றது போக நெல் அவிப்பதற்காக உண்டாக்குகின்ற உமிக் கரியை அகற்றுவதே நமக்கு ஒரு பெரிய வேலையாக இருந்தது. அந்த உமிக் கரியை அகற்றுவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து பணம் தந்து அகற்றவேண்டிய சூழ்நிலை இருந்தது. அதை இப்பொழுது உயிர் உரம் தயாரிக்கின்ற வகையிலே வேளாண் வல்லுநர்களைக் கலந்து பேசி இந்த ஆண்டு முதல் கட்டமாக இந்தியாவிலே முதன் முதலாக அந்த உயிர் உரத்தையும் தயாரிக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இங்கு 'ஹஸ்க்' இதுவரை இந்த விலைக்கு விற்றதே கிடையாது. 1 கோடியே 62 இலட்சம் ரூபாய்க்கு அந்த உமியை நாங்கள் விற்றிருக்கிறோம். அதுவும் இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வருவாயாக வந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லோரும் சொன்னார்கள், எடை குறைகிறது என்று. எங்கு குறைகிறது? நாம் மத்திய தொகுப்பிலிருந்து எடுப்பதிலிருந்து மாநில கிட்டங்கியிலிருந்து வருகின்ற வரை, கூட்டுறவுக் கடைக்கு வருகின்ற வரை ஒவ்வொரு இடத்திலும் எடை குறைகிறது, முக்கியமாக கிட்டங்கியிலே எடை குறைகிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு இந்த அரசு வந்தவுடன் 420 இடங்களிலே புதிய தராசுகளை நம்முடைய முதலமைச்சர்

[திரு. கா. நா. நேரு] [2000 மே 3

அவர்கள் வாங்கித் தந்தார்கள். Avery தராசு. ஆனால், இப்பொழுது அதையும் மாற்றிவிடுகிறார்கள் என்ற காரணத்தால் அதை கம்ப்யூட்டர் தராசாக இந்த ஆண்டு முழுமையாக மாற்றச் சொல்லியிருக்கிறார். முதல் கட்டமாக, 2,417 தராசுகளில் கிட்டத்தட்ட 282 தராசுகள் கம்ப்யூட்டர் முறையிலே எடை போடுகின்ற தராசுகளாக மாற்றப்படும். ஒரு தராசுக்குக் கிட்டத்தட்ட 10,000 ரூபாய் செலவு செய்கிறோம். இங்கு சென்னையைப் பொறுத்த அளவு முதல் கட்டமாகச் செய்கிறோம். படிப்படியாக முழுமையாக, எடையே திருட முடியாத அளவுக்கு அந்தப் பணியைச் செய்கிறோம் என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களிடம் பணிபுரிகின்ற தொழிலாளர் தோழர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனையை நாங்கள் செய்து தருகிறோம். அதேபோல இதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு விழிப்புப் பணிக் குழு ஏற்கெனவே கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இதுவரை தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட் டவர்களை ஆய்வு செய்தபோது 80 பேர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது வாணிபக் கழகத்திலே மட்டும். குற்றக் குறிப்பாணை 356 பேர்கள் மீது வழங்கப்பட்டிருக்கிறது. பணி மாற்றம் செய்யப்பட்டவர்கள் 20 பேர்கள்.

இந்தியாவிலேயே சுமை தூக்கும் பணியாளர்களை நிரந்தரப்படுத்திய ஒரே அரசு நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். எப்படி அவர்களைப்போய் வேலை வாங்குவது? நிரந்தப்படுத்திவிட்டால் அவர்கள் வேலை செய்வார்களா என்றெல்லாம் சொன்னார்கள். துணிந்து முதலமைச்சர் சொன்னார். அதிலே இதுவரை கிட்டத்தட்ட 1,603 தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தியிருக்கிறோம். 10 ஆண்டுகாலம் தொடர்ந்து பணியாற்றிய தொழிலாளர்களை. தொடர்ந்து இருக்கின்ற அத்தனை தொழிலாளர்களையும் அவர்களுடைய பையோடேட்டா சரியாகத் தராத காரணத்தால் நிரந்தப்படுத்த முடியவில்லை. இந்த ஆண்டு அவர்கள் அனைவரையுமே நிரந்தரப்படுத்திவிடுவோம் என்ற உறுதியை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தினக்கூலிப் பணியாளர்கள். இப்போது நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே 800 பேர்கள் பணியாற்றுகிறார்கள். இதுவரை 20 ஆண்டுகாலம் ஆனாலும்கூட, எந்த அரசுமே அவர்களை நிரந்தரப்படுத்தவில்லை. கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு முதற்கொண்டு அவர்களைப் படிப்படியாக நிரந்தரப்படுத்த வேண்டும் என்று



2000 மே 3] [திரு. கா. நா. நேரு]

சொல்லியிருக்கிறார்கள். 50 பேர்களை இந்த ஆண்டு முதற் கட்டமாக நிரந்தரப்படுத்தியிருக்கிறோம். தொடர்ந்து அனைவரையுமே நிரந்தரப்படுத்துவோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலே 17 இலட்சம் குடும்ப அட்டைகள்; 17 இலட்சம் குடும்பங்களுக்கு, மேலாக கிட்டத்தட்ட அதிகமான அளவுக்கு இது, ஒரு மண்டலமாக இருந்து செயல்படுகின்றபோது நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. இதை இரண்டு மண்டலங்களாகப் பிரித்து, வேலையைப் பிரித்து அனைவருக்கும் நல்ல முறையிலே பொருள்கள் கிடைக்கின்ற வகையிலே சென்னை மண்டலத்தை இரண்டு மண்டலங்களாக இந்த ஆண்டு முதல் பிரிப்போம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

கட்டுமானப் பிரிவிலே தொடர்ந்து திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற இடங்களிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் தனி அலுவலகக் கட்டடமும், இரண்டு இடங்களிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், 29,000 டன்கள் கொள்ளளவுள்ள கிட்டங்கிகளும் இந்த ஆண்டு கட்டுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து 20 இடங்களிலே கட்டப்படுகின்ற அந்தக் கிட்டங்கிகள், வாணியம்பாடி, சங்கராபுரம், போச்சம்பள்ளி, குன்னம், செந்துறை, வேதாரண்யம், பெரியகுளம், ஆண்டிப்பட்டி, போடிநாயக்கனூர், சிவகாசி, குடவாசல், வால்பாறை, செய்யூர், திருக்கழுக்குன்றம், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திட்டக்குடி, மேட்டூர், பவானி, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இடங்களிலே இந்த ஆண்டு கட்டப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நவீன அரிசி ஆலை. ஏற்கெனவே கடந்த ஆண்டு 800 டன்கள் கொள்ளளவுள்ள புதிய நவீன அரிசி ஆலையை உருவாக்குவோம் என்று சட்டமன்றத்திலே அறிவித்திருந்தோம். ஆனால், அதைச் செயல்முறைப்படுத்துவதிலே எங்களுக்கு கொஞ்சம் இடைஞ்சல் இருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று Joint Sector என்கின்ற அளவிலே புதிய கொள்கையை வகுத்து, நுகர்பொருள் வாணிபக் கழகமும் தனியாரும் சேர்ந்து புதிய மில்களை உருவாக்கி இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்ற அத்தனை நெல்களையும் அவர்கள் மூலமாக அரைத்துக்கொள்வது என்ற ஒரு புதிய முடிவை எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கா. நா. நேரு] [2000 மே 3

இங்கே பேசிய அத்தனைபேருமே சொன்னார்கள்; கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; கூட்டுறவு கடனைத் தள்ளுபடி செய்கின்றபோது இந்த அரசு ஏன் 7 சதவிகிதம் தள்ளுபடி செய்திருக்கிறது; கூடுதலாகச் செய்துதரலாமே என்று சொன்னார்கள். 7 சதவிகிதத் தள்ளுபடி செய்ததற்கே அரசு சார்பாக 50 கோடியே 62 இலட்சம் ரூபாயை நமது முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி, முதற்கட்டமாக நேற்று 10 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். அதைவிட தவறுதல் வட்டி என்று எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 89 கோடி ரூபாயை கூட்டுறவு நிறுவனங்களே தள்ளுபடி செய்திருக்கின்றன கிட்டத்தட்ட 139 கோடி ரூபாயை வட்டித் தொகையாகக் கூட்டுறவு நிறுவனங்களும் அரசாங்கமும் தந்திருக்கின்றன. இந்த அளவிற்குச் செய்கின்றபோது, தொடர்ந்து அதை ஒழுங்காகச் செலுத்துவார்களே யானால், மேலும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவே அதைச் செலுத்துவதற்கு, அதைத் தள்ளுபடி செய்வதற்கு வேண்டிய முயற்சியை எங்களால் இயன்ற அளவுக்கு நாங்கள் செய்து தருவோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வோராண்டும் குறுகியகால கடனுக்காக எவ்வளவு தொகை என்று நாங்கள் நிர்ணயிக்கிறோம். இந்த ஆண்டு குறுகிய காலக் கடனுக்கு 1,200 கோடி ரூபாய் வழங்குவதற்காகக் குறியீடு நிர்ணயித்திருக்கிறோம். அதேபோல மத்திய காலக் கடனுக்கு 110 கோடி ரூபாயும், நீண்டகாலக் கடனுக்கு 300 கோடி ரூபாயும் வழங்குவதற்கு இந்த ஆண்டுக்கான குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இந்தப் பணியைச் செய்வோம். இப்போது வசூல் எல்லாம் ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது. நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் சொன்னார்கள். எங்கள் பகுதியில் இருக்கின்ற ஊரக வளர்ச்சி வங்கியிலே ஜப்தி செய்கிறார்கள் என்று. விவசாயிகள் என்றால் நிச்சயமாக ஜப்தி செய்யக்கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தால், நாங்கள் அந்த நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். ஆனால், பிற தொழில்களைச் செய்யக்கூடியவர்கள், வசதி படைத்தவர்கள்கூட கட்டாதபோது, நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது. அதையும் ஜப்தி என்ற அளவில் இல்லாமல், அவர்களை நேரடியாகச் சந்தித்து கேட்கச் சொல்லித்தான் சொல்லியிருக்கிறோம். அந்த வகையிலே தொடர்ந்து 40 சதவிகிதம் என்ற அளவிலே 7, 8 வங்கிகளில் வசூலாகி இருக்கிறது. மீதம் இருக்கின்ற வங்கிகளும், நேற்றுகூட கூட்டம் போட்டு அவர்களிடம், தொடர்ந்து வசூல் செய்தால்தான் இந்த ஆண்டு நபார்டு வங்கியிலேயிருந்து வாங்கி, பணம் ஒழுங்காகக் கொடுக்க முடியும் என்பதைச் சொல்லியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.



2000 மே 3] [திரு. கா. நா. நேரு]

இங்கே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள், மிகவும் நலிவடைந்திருக்கின்றன என்று. அது உண்மைதான், ஒத்துக்கொள்கிறோம். ஆனால், அன்றைக்கு இருந்ததைக் காட்டிலும் இன்றைக்கு அவை சிறப்பாகப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றன. 20 ஆண்டுகாலம் ஆனால்கூட அந்தச் செயலாளர்களை மாற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு உத்தரவு தந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காமன் கேடர்களாக்கி, அனைவரையும் மாற்றக்கூடிய தகுதியிலே அவர்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து, ஏற்கெனவே கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 300 கட்டடங்கள் புதிதாகக் கட்டுவதற்கு, 50 சதவிகித மானியத்தோடு கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்தார்கள். தொடர்ந்து இந்த ஆண்டும் 200 கட்டடங்களைக் கட்டுவதற்குப் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் புதிதாகத் தொடங்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த ஆண்டு 19 வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இப்போது 14 வங்கிகள் தொடங்கப்பட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்பார்களேயானால் பெரிய சங்கங்களைப் பிரித்து, அவர்களுக்கு உடனடியாகத் தொடங்குவதற்குரிய அனுமதியை நாங்கள் வழங்குவோம். இதை பவானி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றியும் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். விரைவிலே அவருக்கும் அந்த அனுமதி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு இப்போதெல்லாம் எல்லா வங்கிகளிலுமே நகையைப் பிடிக்கின்ற பணி வந்துவிட்டது. அதனால்தான் முதலமைச்சர் சொன்னார், 8 கோடி ரூபாய் மானியம் தந்து அத்தனை வங்கிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட பெட்டக வசதியை நாங்கள் செய்து தந்திருக்கிறோம். Grill gate வசதியை செய்து தந்திருக்கிறோம். கிட்டதட்ட அந்தப் பணி 1,653 வங்கிகளிலே 1,197 வங்கிகளில் முடிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-55

அதேபோல, ஊரக வளர்ச்சி வங்கிகள் 181-க்கு 50 கட்டடங்கள் கட்டுவதற்கு நமது தலைவர் அவர்கள் அனுமதி தந்தார்கள். அதிலே 18 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வங்கியினுடைய தலைவர்களுக்கு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக அவர்களுக்கு அதிகார வரம்பு உயர்த்தப்படுகிறது. இரண்டு இலட்சம் ரூபாய் வரை தலைவர்களே கடன் வழங்கலாம் என்ற அதிகாரத்தை அவர்களுக்கு இந்த ஆண்டு முதல் வழங்குகிறோம் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர வங்கிக் கட்டடங்கள், நகர வங்கிகள் 127 இடங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே ரிசர்வ் வங்கியினுடைய அனுமதிக்காக 4 இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த 4 இடங்களிலும் இந்த ஆண்டு புதிதாக நகர வங்கி தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நகர வங்கி அத்தனையும் கணினிமயமாக்கப்பட அந்த வசதி இந்த ஆண்டு செய்து தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்தியக் கூட்டுறவு வங்கி 23. இதிலே நாமக்கல் மாவட்டத்திலே புதிதாக இன்னும் ஒரு மாதத்திலே ஆரம்பிக்க இருக்கிறோம். திருவள்ளூர் மாவட்டம், கரூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம், இன்னும் தேனி மாவட்டம் முதற்கொண்டு ஏற்கெனவே பிரிப்பதற்காக அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்திற்கு தனி அதிகாரிகள் நியமித்த அத்தனை இடங்களிலுமே தனியாக மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படும் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மத்தியக் கூட்டுறவு வங்கியிலே 12 ஆண்டு காலம் தொடர்ந்து ஒரே இடத்திலே பணியாற்றினால் அவருக்கு ஒரு தனி increment வழங்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வைப்பு நிதியைப் பற்றிச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 1996-ல் தலைவர் அவர்கள் நான்காவது முறையாக பொறுப்பேற்றபோது கூட்டுறவுத் துறையிலே வைப்பு நிதி 4,862 கோடி. இப்போது 13,903 கோடி ரூபாய் வைப்பு நிதியாக அத்தனை கூட்டுறவு வங்கிகளிலும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் தலைவர்களும் கேட்டார்கள், நேற்று



கூட்டம் போட்டு, எங்களுக்குக் கடன் தருகின்ற வரம்பை உயர்த்தித் தர வேண்டும்; விவசாயம் அல்லாத மற்ற தொழில்களுக்கும் நாங்கள் இந்தப் பணத்தை வழங்க வேண்டும்; அதேபோல, எங்களிடம் இருக்கின்ற உபரி நிதியை தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளிலோ அல்லது மத்திய அரசு நிறுவனங்களிலோ, அரசு நிறுவனங்களிலோ முதலீடு செய்வதற்கு எங்களுக்கு அனுமதி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு கமிட்டி நேற்று போடப்பட்டிருக்கிறது. 15 நாட்களுக்குள்ளாக அறிக்கை தரச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியினுடைய அறிக்கை வந்த பிறகு ICICI போன்ற பாங்க் நிறுவனங்களைக் கலந்தாலோசித்து, அந்தத் தலைவர்களுக்கெல்லாம் அந்த அதிகாரம் வழங்கப்படும் என்பதையும் இந்தநேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தலைவர் அவர்கள் ஜனவரி 1 ஆம் தேதி ஒரு புதிய திட்டத்தை, கூட்டுறவிலே மகளிருக்கான சிறுவணிகக் கடன் திட்டத்தை ஆரம்பித்தார்கள். இதுவரை 92,851 மகளிர்கள் அதிலே பயன் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக வழங்கப் பட்டிருக்கின்ற தொகை 9 கோடியே 19 இலட்சம் ரூபாய், கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொகையை மேலும் இப்போது கிராமப் பகுதிகளுக்கும் வழங்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து அந்த மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் இந்த ஆண்டு கிராமப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று கூட்டம் நடந்தபோது தலைவர்கள், வங்கிகளின் தலைவர்கள் சொன்னார்கள். முழு தொகையைக் கட்டிய பிறகுதான் வட்டி அரசு தருகிற ஊக்கத் தொகையை வழங்க முடியும் என்று கூட்டுறவுச் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் விவசாயிகளிடம் வசூல் செய்கின்றபோது 7 சதவிகிதத்தையும், தவறுதல் வட்டியையும் தள்ளுபடி செய்து வாங்கினால்தான் எங்களுக்குச் சரியாக இருக்கும் என்று சொன்னார்கள். அதேபோல வசூல் செய்வதற்குரிய முயற்சியை— கூட்டுறவுச் சட்டத்தையே மாற்றி உடனடியாக அவர்கள் வசூல் செய்கிற அந்தச் சலுகை அவர்களுக்குத் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உபரி நிதியுள்ள வங்கிப் பணியாளர்களுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு இலட்சம் ரூபாய் தனிநபர் கடனே வழங்கலாம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, TANFED நிறுவனம் சொன்னார்கள்; ஏன் தேங்காயைக் கொள்முதல் செய்யக் கூடாது; ஏன் மற்ற விளைபொருட்களை அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து நீங்கள் விநியோகிக்கக்கூடாது என்று சொன்னார்கள். தேங்காயை NAFED நிறுவனத்திற்காக TANFED நிறுவனமே கொள்முதல் செய்கிறது. கிட்டத்தட்ட எவ்வளவு தேங்காய் பருப்புகள் இருந்தாலும் அதைக் கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு இப்போது செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து, தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே தேவை என்றாலும், அந்தப் பகுதியிலே வந்து நாங்கள் கொள்முதல் செய்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கடந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்திலே I.C.D.P.யிலே எடுத்து அந்தப் பகுதியில் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு திருவாரூர் பகுதியை அந்த I.C.D.P.-யிலே எடுத்து, அந்தப் பகுதிக்குத் தேவையான அத்தனை அடிப்படை வசதிகளையும் செய்து தருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மிகவும் நலிவுற்றிருக்கின்றன. அந்தப் பண்டகசாலைகளை உய்விப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் அதேபோல 16 பெட்ரோல் பங்குகளை மத்திய அரசு இப்போது நமக்கு வழங்கியிருக்கிறது. அதை அந்த மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு இந்த ஆண்டு வழங்குவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

இங்கே, அந்த மொத்த விற்பனைப் பண்டகசாலையைப் பற்றி முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 36 இருக்கின்றன. 11 இலாபகரமாக இருக்கின்றன. இவற்றிலே புதியவை 6. இலாபத்திலே இயங்கியவை 5. இப்படி 11 சங்கங்களைத் தவிர மற்றச் சங்கங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு அதற்குக் காரணம் இல்லையா என்றார். இந்த அரசு அதற்குக் காரணம் இல்லை. 23 ஆண்டுகாலம் தேர்தல் நடத்தவில்லை. கடந்த காலத்தில் இருந்த அமைச்சர் பெருமக்களுடைய வழிகாட்டுதல் அதுபோல இருந்தது. அதிகாரிகள் பேரிலே முழுமையாகக் குறை சொல்ல முடியாது. அமைச்சர் பெருமக்கள் என்ன சொல்கிறார்களோ அதைச் செய்கிறார்கள் அதிகாரிகள். விற்காத பொருட்களை கமிஷன் வருகிறது என்ற





காரணத்திற்காக, கோவை சிந்தாமணியிலே பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை வாங்கிய காரணத்தாலேதான் இப்போது அது நஷ்டம் அடைந்தது. நடவடிக்கை எடுக்கவில்லையா என்றால், கூட்டுறவு ஒன்றியத்திலேயிருந்து 3 கோடி ரூபாயைப் பணமாக கோவை சிந்தாமணிக்கு மட்டும் தான் வழங்கியிருக்கிறோம். 6 சங்கங்கள் புனரமைப்புக்காக எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், அடுத்த கட்டமாக 16 சங்கங்களை எடுக்கவிருக்கிறோம். அது நபார்டுவுடன் பேச்சு வார்த்தையிலே இருக்கிறது. அதற்கு இடையிலே, அவர்களிடம் உபரியாக இருக்கின்ற நிலங்களை விற்பதற்கு இந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதை விற்று கடனை அடைத்து ஒழுங்காக இலாபகரமாக நடத்துவதற்கு, மிக விரைவிலே கோவை சிந்தாமணியினுடைய தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பேசிக்கொண்டிருக்கிறோம். இன்னும் 15 நாட்களிலே முடிந்துவிடும் என்ற அந்தத் தகவலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே எல்லாவற்றையும்விட, பேசியவர்கள் எல்லாம் நியாயவிலைக் கடைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். மத்திய அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கியிருக்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதை அனுதாபத்தோடு கவனிக்கிறேன்; நிதித் துறைச் செயலாளருடன் இசைந்து பேசி நல்லதொரு முடிவு எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே அவர்களுடைய ஊதியம் மாற்றியமைக்கப்படும் என்பதை மட்டும் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இதையெல்லாம்விட முக்கியமாக விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி இருக்கின்றவர்களுக்கு, இந்த ஆண்டு ஒரு புதிய திட்டமாக பயிர் காப்பீட்டுத் திட்டத்தை நாம் விவசாயிகளுக்காக அறிமுகப்படுத்துகிறோம். மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து இந்தப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்றது. நல்லதொரு வரப்பிரசாதமாக விவசாயிகளுக்கு அமையும். அது இந்த ஆண்டு முதல் 180 வட்டங்களிலே தமிழ்நாட்டிலே முதல் கட்டமாக அமல்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ந்து, மாவட்ட அச்சகங்கள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் 3 இடங்களிலே புதியதாக அமைக்கப்படும். கடந்த ஆண்டு 5 இடங்களிலே பட்டயப் பயிற்சிக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. தொடர்ந்து இந்த

[திரு. கா. நா. நேரு] [2000 மே 3

ஆண்டு திருவண்ணாமலையிலே வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்; காஞ்சிபுரத்திலே வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி வாய்ப்புள்ள இடங்களிலே எல்லாம் இந்தக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக் கல்லூரி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஆட்களையெல்லாம் வேலைக்கு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக் கிறார்கள்; பதிவு மூப்பு அடிப்படையிலே கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற காலிப் பணியிடங்கள் அத்தனையும் நிரப்ப வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அது இரண்டு நாட்களுக்கு முன்பு உத்தரவாக வழங்கப்பட்டிருக்கிறது. அத்தனை இடங்களிலும் employment seniority பிரகாரம் பணி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே 183 வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். 183 வெட்டுத் தீர்மானங்களையும் நான் ஒவ்வொன்றையும் தனிப்பட்ட முறையிலே படித்திருக்கிறேன். ரேஷன் கடைகள் புதியதாகத் தொடங்கப்பட வேண்டும். (குறுக்கீடு) சொல்கிறேன். ரேஷன் கடைகள் புதியதாகத் தொடங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் சொன்னார்கள். தனிப்பட்ட முறையிலே உறுப்பினர் அவர்கள் எந்த இடம் முக்கியம் என்று சொல்லி, எழுதித்தந்தால் அந்த இடத்தில் கடை அமைக்க அனுமதிதர நாங்கள் தயாராக இருக்கிறோம்.

முத்தாய்ப்பாக இந்தக் கூட்டுறவுத் துறையிலே இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓய்வூதியத் திட்டத்தை கூட்டுறவுத் துறைப் பணியாளர்களுக்காக அறிமுகப்படுத்தச் சொல்லி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஆய்வு செய்யப்பட்டு இந்த ஆண்டு முதல் அந்த ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என்பதையும் நான் விளக்கமாகத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, அரசு கோரிய தொகையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்கள் ஒவ்வொன்றையும் நான் படித்திருக்கிறேன். நிச்சயமாக அவற்றையெல்லாம், நல்லதையெல்லாம் அறிவுரையாக ஏற்று இந்தத் துறை நடக்கும் என்று சொல்லி, மானியத் தொகை வழங்குமாறு அன்போடு கேட்டு அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2000 மே 3]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய பேர்களுக்கு clarification இருக்கிறது. எல்லோரும் முக்கியம்தான்.

**திரு. கே. சுப்பராயன்:** Relevant clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் relevant-ஆகத்தான் கேட்பார்கள். இந்த House-லே relevant இல்லாமல் பேசுபவர்கள் யார்? (சிரிப்பு)

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23— கூட்டுறவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

[2000 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.



2000 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்பெற்றதாகக் கருதப் படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கூட்டுறவு பற்றிய 23ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 66,48,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நுகர் பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1868,12,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அறிவிப்புகள் — தொடர்ச்சி

### (ஆ) பேரவை அலுவல்களில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்த அட்டவணையின்படி, 5-5-2000 வெள்ளிக்கிழமையன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் மற்றும் பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் ஆகியவை குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்தது. 11-5-2000 வியாழக்கிழமையன்று கைத்தறியும், துணித் தொழிலும் மற்றும் கதர் - கிராமத் தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்தது.

இப்போது அவை 5-5-2000 அன்று கைத்தறியும், துணித் தொழிலும் மற்றும் கதர் - கிராமத் தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கையும், 11-5-2000 அன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் மற்றும் பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக் கோரிக்கையும் எடுத்துக்கொள்ளப்படுவதாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2000 மே 3

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-5-2000) காலை 9-30 மணிக்குக்கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

174. மானியக் கோரிக்கை எண் 23-கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ்,ஆங்கிலம்)

175. மானியக் கோரிக்கை எண் 34 - உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

176. கூட்டுறவுத் துறைக்கான 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

177. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து எட்டாவது அறிக்கை (1999-2000)

178. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை (1999-2000)

179. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பதாவது அறிக்கை (1999-2000)

180. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை (1999-2000)

181. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து இரண்டாவது அறிக்கை (1999-2000)



## இணைப்பு-I

[73ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கூட்டுறவுத் துறையின் கொள்கைக் குறிப்பு

### கோரிக்கை எண் 23

### 2000-2001

### அத்தியாயம்–1

**கூட்டுறவு ஒரு கண்ணோட்டம்**

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற

—அய்யன் திருவள்ளுவர்

பிறர்க்கு உதவிடும் பண்பாகிய 'ஒப்புரவு' என்பதைவிடச்
சிறந்த பண்பினை இன்றைய உலகிலும், இனிவரும்
புதிய உலகிலும் காண்பது அரிது.

—தலைவர்

உலகெங்கும் கூட்டுறவு அமைப்புகள் பொருளாதார வளர்ச்சிக்கான செயலாக்கமிக்கதும் ஆற்றல் வாய்ந்ததுமான கருவியாக விளங்குகின்றன. கடந்த பல ஆண்டுகளில், பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட நிலைகளில் போதுமான வளர்ச்சியை தமிழகக் கூட்டுறவு இயக்கம் கண்டுள்ளது. பொருளாதார நடவடிக்கையில் கூட்டுறவுகள் தொடாத முக்கிய துறை எதுவுமில்லை. வேளாண் கடன், சந்தைத் தலையீடு, வேளாண்மைப் பொருட்களுக்கான ஆதரவு விலை மற்றும் பொது விநியோகம் போன்ற பல முக்கிய கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கான கருவியாகக் கூட்டுறவுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் சிறிய தொடக்கத்திலிருந்து கடந்த ஆண்டுகளில் வலிமையுடன் வளர்ந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 1904 ஆம் ஆண்டு திரூர் கிராமத்தில் தொடங்கப்பட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கம் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கத்தின்

[2000 மே 3

வருகையைத் தெரிவித்து மாநிலத்தில் குறிப்பாக விவசாயிகளின் குடும்பங்களுக்கான சேவையில் ஒரு புதிய அத்தியாயத்தை திறந்து வைத்தது. வேளாண்மை வங்கிகளிலிருந்து விற்பனைச் சங்கம் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை வரை பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவுகள் மக்களுக்கு சேவை புரிகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 1.40 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் பொது விநியோகத் திட்டத்தினை மாநிலம் முழுவதும் நடத்துவதில் கூட்டுறவுகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

### கூட்டுறவுக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்

ஒருவர் பலருக்காக, பலர் ஒருவருக்காக என்பதே கூட்டுறவின் மையக் கொள்கையாகும். இக்கொள்கை மூலம் நட்பையும் ஒத்துணர்வையும், ஒருவருக்கொருவர் உதவும் எண்ணத்தையும், கூட்டுச்சார்பையும் கூட்டுறவுகள் வளர்க்கின்றன. குடும்பத்திலுள்ள இதர உறுப்பினர்களின் நலனில் பங்குகொள்ளும் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுக் குடும்ப அமைப்பில் கூட்டுறவின் சுவடுகளைக் காண முடியும். அதைப் போன்றே கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும், இதர உறுப்பினர்கட்கு உதவ வேண்டுமென்றும், அவர்கள் ஒன்று சேர்ந்து திடத் தன்மையும், வளமையும் அவர்களுக்காகக் கொண்டு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய தேசியப் பண்பாட்டின் ஒரு பகுதியாக தற்போது கூட்டுறவு இயக்கம் உள்ளது. சுதந்திரத்துக்குப் பின் 'எங்கும் கூட்டுறவு, எதிலும் கூட்டுறவு' என்ற முழக்கத்திற்கேற்ப, கூட்டுறவு இயக்கம் அனைத்து சக மற்றும் பொருளாதார துறையில் வளர்ச்சியடைந்து பிரமிக்கத்தக்க வெற்றி பெற்றுள்ளது.

### சனநாயகப் பேறு

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு 194 மத்திய சங்கங்களுக்கும், 18 தலைமைச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தி, இச்சங்கங்களின் அதிகாரிகள் நிர்வாகத்தினை முடிவுக்குக் கொண்டுவந்ததன் மூலம், கூட்டுறவுகளில் சனநாயக முறையினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ளது. தனி அலுவலர்களின் நிர்வாகத்தின்கீழ் 5 ஆண்டுகளுக்கு மேல் இருந்துவந்த 23,286 தொடக்கக் கூட்டுறவுகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டது. உரிய முறையில் மகளிர்க்கு 30 சதவீதம்,



2000 மே 3]

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் பிரதிநிதித்துவம் வழங்கி மொத்தத்தில் 1,75,000 உறுப்பினர்கள் இந்த கூட்டுறவுகளில் இயக்குநர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நமது மாநிலத்தில் கூட்டுறவுகளின் ஒப்புவமையற்ற சேவையை அங்கீகரிக்கும் முகத்தான், இப்கோ நிறுவனத்தின் 1998-99 ஆம் ஆண்டுக்கான 'சஹகாரிட்டா பந்து' என்ற விருது தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நன்மதிப்பு, நமது சிறப்புமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே உரித்தாகும்.

### வேளாண்மைக் கடன்

கடந்த ஆண்டுகளில் 4,582 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கூட்டுறவுகள் வேளாண்மைக் கடனுடன் தொடர்பு கொண்டுள்ளன. விவசாயிகட்கு அவர்களுடைய விவசாய நடவடிக்கைக்குக் கடன் வழங்கும் முதன்மைப் பணியைக் கூட்டுறவுகள் மேற்கொண்டுள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய காலக் கடன்களை வழங்கியதோடல்லாமல், தொடக்க வேளாண்மை மற்றும ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் மத்திய மற்றும் நீண்டகாலக் கடன்களை வழங்கியுள்ள நிலையில் கடந்த ஆண்டுகளில் வேளாண்மைக் கடன் வழங்கும் எல்லை விரிவடைந்துள்ளது.

தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எனும் மூன்றடுக்கு திட்ட முறையில் வேளாண்மைக் கடன் வழங்கும் முறை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி (நபார்டு) வங்கியிலிருந்து பெறப்பட்ட வேளாண்மைக் கடன் நிதி குறைவான வட்டி விகிதத்தில் விவசாயிகட்கு வழங்கப்படுகிறது. விவசாயக் கடன் வழங்கும் இந்த மூன்றடுக்கு அமைப்பு இலகுவான கடன் வழங்கலை உறுதிபடுத்தியுள்ளது. வட்டியின் ஒரு குறைந்த பங்கினை வங்கிகள் தங்கள் சேவைக்காக வைத்துக்கொண்டு விவசாயிகட்கு சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்குகின்றன.

உரிய நேரத்தில் கடன், போதுமான கடன், நட்புடன் கூடிய சேவை மற்றும் குறைந்த செலவில் கடன் ஆகியவையே கூட்டுறவுக் கடன் அமைப்பின் தனி முத்திரைகளாகும். இது தவிர கூட்டுறவு அமைப்பிலுள்ள வங்கி நிறுவனங்கள், பொது வைப்புகள் மூலம் நிதி

திரட்டி இதனை கிராம மற்றும் நகர்ப்புறத்திலுள்ள மக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் பண்ணை சாராக் கடன்களை வழங்குகின்றன. 1996-97-லிருந்து குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் மூலம் ரூ. 3,780 கோடி அளவில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கியுள்ளன.

**வைப்புத் தொகை நிலைமை**

31-3-1996 அன்று ரூ.4,859 கோடி என்றிருந்த வைப்புத் தொகையை முன் எப்போதும் இல்லாத வகையில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.8360.95 கோடி அதிகரித்து 31-1-2000 அன்று ரூ. 13,219.95 கோடி வைப்புத் தொகையினை மாநிலத்தில் உள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் திரட்டியுள்ளன. கடந்த நான்காண்டுகளில் இந்த வளர்ச்சி விகிதம் 172 சதவீதம் ஆகும்.

**சொத்து உருவாக்குதல்**

சொத்து உருவாக்குதலைப் பொறுத்தவரையில், கடந்த மூன்றாண்டுகளில் ஐந்து நகர கூட்டுறவு வங்கிகள் ரூ.1.12 கோடி மதிப்பிற்கு அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடங்களைக் கட்டியுள்ளன அல்லது வாங்கியுள்ளன. 35 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ. 2.97 கோடி மதிப்பிற்குப் பொது வடிவமைப்பில் அவற்றின் சொந்த மனைகளில் நவீன வங்கிக் கட்டடங்களைக் கட்டியுள்ளன. அலுவலகங்கள் கட்டுவதற்காக, ஒரு மனை சராசரியாக ரூபாய் மூன்று இலட்சத்தில், 43 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ரூ. 1.29 கோடி மதிப்பிற்கு மனைகளை வாங்கியுள்ளன. 8 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு ரூ.1.04 கோடி மதிப்பிற்குச் சொந்த அலுவலகங்களைக் கட்டியுள்ளன. தலைமை அலுவலகத்தைக் கட்டுவதற்காக மூன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் ரூ.4.71 கோடி மதிப்பிற்குக் காலிமனைகளை வாங்கியுள்ளன. மேலும் ரூ.7.04 கோடி மதிப்பிற்குக் கிளை அலுவலகங்களைக் கட்டுவது முன்னேற்றத்தில் உள்ளது.

முசிறி மற்றும் ஓமலூரில் புதிய நகரக் கூட்டுறவு வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன. மிகச் சிறந்த முறையில் விவசாயிகளின் தேவையை நிறைவேற்றும் வகையில் 11 மாவட்டங்களில் 19 புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.



**மிகை நிதி**

அனைத்து வகையான கடன் வழங்கும் நடவடிக்கைகளுக்கும், வெளியிலிருந்து மறுநிதிக் கடனை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிலை மாறி, முதலீடு மற்றும் கடன் வழங்குவதற்கான புதிய வாய்ப்புகள் குறித்து எண்ணிப் பார்க்கும் அளவுக்கு தற்போது பெரும்பான்மையான மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் உபரிநிதி குவிந்துள்ளன.

**நவீன வங்கி முறை**

இதர வங்கி நிறுவனங்களைப் போலல்லாமல், கூட்டுறவு நிறுவனத்தில் உறுப்பினருடைய கடன் தேவைக்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து தலைமைக் கூட்டுறவு வங்கி வரை வைப்பு நிதி திரட்டுதல், முதலீடு உள்ளிட்ட நவீன வங்கி முறைகளை மேற்கொண்டு வந்துள்ளன. கூட்டுறவு வங்கிகளில் குறிப்பாக நகர மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் சிறப்பாகச் செயலாற்றுகிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கணினி மயமாக்குதலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

**வறுமை ஒழிப்புத் திட்டம்**

நலிவடைந்த பிரிவினரைப் பொறுத்தவரை, 'ஸ்வர்ண ஜெயந்தி, ரோஜ்கர் யோஜனா' மற்றும் சிறு விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் கடன் வழங்கி அவர்களை முன்னேற்றும் முயற்சியில் கூட்டுறவு நிறுவனங்கள் தீவிர பங்கு வகிக்கின்றன. உறுப்பினராவதற்கான சிறப்பு ஊக்கத் தொகையும், விளிம்புத் தொகை உதவியும் பெண்கள் மற்றும் நலிவடைந்தோர்க்கு வழங்கப்படுகின்றன.

**சிறு வணிகக் கடன்**

சிறுதொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்கென சேமிப்புடன் இணைந்த சிறு வணிகக் கடன் திட்டம் என்ற புதிய திட்டம் சனவரி 1999 முதல் மாநிலம் முழுதும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 22-3-2000 வரை 65,853 பயனாளிகளுக்கு ரூ. 6.51 கோடி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக நலிவடைந்த பிரிவினர் மற்றும் ஏழைப் பெண்களை அதிக அளவில் உறுப்பினர்களாகக் கூட்டுறவு

அமைப்பில் கொண்டுவருவதற்கு வட்டியில்லாத விளிம்புத் தொகை அரசால் வழங்குவதன் மூலம் அரசால் தொய்வில்லாத விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தன்னுதவிக் குழுக்களுடன் இணைந்து சிறு வணிகக் கடன் திட்டத்தை கிராமப்புறங்களில் அறிமுகப்படுத்துவதற்கு தமிழக அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. சேமிப்பு மற்றும் பெண்களுக்குக் கடன் வழங்குவதை ஊக்குவிப்பதில் இத்தன்னுதவிக் குழுக்கள் ஈட்டிய வெற்றியை வைத்துப் பார்க்கும்போது மாநிலத்தில் உள்ள கிராமப்புற பெண்களுக்கு குறிப்பிடத்தக்க பயன்களை இப்புதிய திட்டம் கொண்டு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வட்டி ஊக்கத் திட்டம்**

விவசாயிகள் தங்களுடைய நடப்புக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தி வருடத்திற்கு 6.25 சதவீதம் வட்டி ஊக்குவிப்புத் தொகையைப் பெற அவர்களை ஊக்குவிக்க 1999 ஆம் ஆண்டு வட்டி ஊக்கத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தியதால் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால் வசூல் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**விவசாய கடன் அட்டை திட்டம்**

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை வங்கிகள் மூலம் செயற்படுத்தும் பொருட்டு விவசாயக் கடன் அட்டை திட்டம் என்ற புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம்**

ஒருங்கிணைந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக 1999-2000 ஆண்டு ராபி பருவத்திலிருந்து செயற்படுத்தும்பொருட்டு தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம் எனும் புதிய திட்டத்தை இந்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது. இத்திட்டம் கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு உணவுப் பயிர், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிகப் பயிர்களான கரும்பு மற்றும் உருளைக் கிழங்கு போன்றவைகளுக்கும் கொண்டுவரப்படுகிறது. மேலும் அடுத்த மூன்றாண்டுகளில் தோட்டக்கலைப் பயிர்கள் அனைத்தும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். இத்திட்டத்தை மாநிலத்தில் செயற்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது.



**நிறுவன நிதி**

நாட்டின் வேளாண்மைக் கடன் அமைப்பில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி பலம் பொருந்திய ஆதாரமாக உள்ளது. போதிய அளவு கடன் வழங்குதல் மற்றும் வசூலிப்பதற்கான தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் முயற்சிகளுக்கு கடன் பெருக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகிய இரண்டும் ஊக்குவித்துள்ளது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் இணைந்து கூட்டுறவுக் கடன் அமைப்பின் எதிர்கால திட்டமானது வசூல் முறையைப் பலப்படுத்துவது, செயற்படா சொத்துக்களைக் குறைப்பது, கணக்கு மேலாண்மையில் புதிய முறையைப் பின்பற்றுவது ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும். இந்த வகையில் வரும் ஆண்டுகளில் வேளாண்மைக் கடனில் நிறைய முன்னேற்றங்களையும் அதிக அளவில் மாற்றங்களையும் கண்கூடாகக் காணலாம்.

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் தொடக்கக் கூட்டுறவுகளின் வணிக நடவடிக்கையை அதிகரிக்கும் குறிக்கோளுடன் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு நடப்பாண்டில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தற்போது செயற்படுத்தப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை இராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் திட்ட அறிக்கை மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவில் விவாதிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

பிரதான நடவடிக்கைகளான பண்ணை, சேவைப் பிரிவு மற்றும் இவை சார்ந்த துறைகளுக்குப் பழங்குடியினரைக் கொண்டுவரும் நோக்கில் அவர்கட்குச் சலுகை வட்டியில் கடன் மற்றும் மானியம் வழங்குவதற்கு ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் வனத் துறை

[2000 மே 3

ஒத்துழைப்புடன் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள்**

நெறிமுறைக்கு அப்பாற்பட்ட பதுக்கல், அதிகவிலை மற்றும் கறுப்புச் சந்தை ஆகியவற்றுக்கான தடுப்புச் சுவராக நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் முக்கியக் குறிக்கோள் வெளிச்சந்தையில் விலையின் நிலைத்தன்மையைப் பேணுதல் மற்றும் நியாயமான விலையில் நுகர்வோர்களுக்குப் பொருள்கள் கிடைக்கச் செய்வதே. உண்மை என்னவெனில் எப்போதெல்லாம் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் உணவுப் பொருள் மற்றும் காய்கறிகளை வழங்குவதற்கு அரசு, நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளையே சார்ந்துள்ளது. பொது விநியோகத் திட்டத்திற்கான முதன்மைச் சங்கங்களாகவும் இந்த நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் முக்கிய பங்காற்றுகின்றன. பதுக்கல், கறுப்புச் சந்தை மற்றும் கொள்ளை இலாபம் பெறும் வியாபாரிகளிடமிருந்து, பொதுமக்களைப் பாதுகாக்கும்பொருட்டு ஏறக்குறைய அனைத்து மாவட்டங்களிலும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலைகளும், நியாயவிலையில் பொருள்களை வழங்கி வருகின்றன. அதிக அளவு பணியாளர்கள் மற்றும் குறைந்த செலவில் கடன்பெற இயலாததால், இலாபகரமாக செயல்பட இயலாமல் உள்ள சில நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகட்கு சிறப்பு உதவி வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தவும் வியாபார நடவடிக்கைக்காக தேவைப்படும் கூடுதல் நிதியைப் பெறுவதற்கும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் அசையாச் சொத்துக்களை விற்பதற்கான ஒரு கருத்துருவும் உள்ளது. தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் பணியிலிருந்து விலகுவதற்கு சில பணியாளர்கள் இணங்கச் செய்யப்பட்டு வருகின்றனர்.

**பொது விநியோகத் திட்டப் பணியாளர்களுக்குப் பயிற்சி**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஆதரவுடன், பொது விநியோகத் திட்டத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர் மற்றும் பணியாளர்கட்குப் பயிற்சியளிக்கும் பெருந்திட்டம் ஒன்று மார்ச் 2000-ல் ஆரம்பிக்கப்பட்டது. மண்டல இணைப் பதிவாளர்கள், மாவட்ட விநியோக அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்



2000 மே 3]

கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர்கள் போன்ற மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு மார்ச் 1-ல் முதல் கட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டாம் நிலை அலுவலர்களான துணைப் பதிவாளர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மண்டல மேலாளர்களுக்கு இரண்டாம் கட்டத்தில் மார்ச் 8 மற்றும் மார்ச் 9 தேதிகளில் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இறுதிக் கட்டத்தில் மாநிலத்தில் உள்ள நியாயவிலைக் கடை விற்பனையாளர்களுக்கு மார்ச் 12-ல் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிகளில் 5,051 அலுவலர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சித் திட்டத்தினால் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டில் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்படும் என்றும், மக்கள் சார்ந்த இத்திட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**மாதிரி சட்டம்**

கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைத் தன்மைக்கு ஒத்திருக்கும் வகையிலும், கூட்டுறவுகள் பொருளாதார நிறுவனங்களாகச் சிறப்பாகச் செயற்படுவதை உருவாக்கும் வகையிலும், மாதிரி மாநில கூட்டுறவுச் சங்கங்களுக்கான சட்டமுன்வடிவு ஒன்றைப் பரிந்துரைக்கும்பொருட்டு தேர்ச்சி பெற்ற கூட்டுறவாளரான திரு. சௌதிரி இராம் பிரகாஷ் தலைமையில் குழு ஒன்றினை மத்திய திட்டக் குழு ஏற்படுத்தியது. அதன்படி இக்குழு வரைவு மசோதா ஒன்றைத் தயாரித்தது. இந்த வரைவு மசோதா நகலை, மத்திய திட்டக் குழு மாநில அரசுகளுக்கு அனுப்பியது.

ஆந்திரப் பிரதேசம் பரஸ்பர உதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் ஐதராபாத்திலுள்ள கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தயாரித்த மேற்கோள் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் தற்சார்புடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கான வரைவு மசோதா ஒன்றை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அனுப்பினார்.

நீதிபதி இராமானுஜம் தலைமையிலான நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் ஊழல் தடுப்புக்கான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டபோது, மத்திய திட்டக் குழுவிடமிருந்து பெறப்பட்ட வரைவு மாதிரி சட்டம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட வரைவு தற்சார்புடைய

சங்கங்களுக்கான கூட்டுறவுச் சட்டம் ஆகியவற்றிலுள்ள முக்கிய கூறுகளைக் கவனத்திற்கொண்டு, நடைமுறையிலுள்ள 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கு உரிய திருத்தங்களைக் கொண்டுவர அரசு முடிவுசெய்தது. இம்முடிவினைத் தொடர்ந்து, இதை விரிவாக ஆராய்ந்து, நடைமுறையிலுள்ள 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கு உரிய திருத்தங்களைப் பரிந்துரைக்கும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்ட உடன் இப்பொருள் மேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

**சாதனை மற்றும் திட்டம்**

கூட்டுறவுத் துறையின் முக்கிய நோக்கங்களின்கீழ் வேளாண் கடன், விளை பொருட்களின் விற்பனை, உரம் மற்றும் நுகர்பொருள்களின் விநியோகம் ஆகியவை முதன்மையான பணிகளாகும். இப்பணிகளில் *1999-2000* ஆண்டில் *31-1-2000* வரையில் எய்திய முன்னேற்றம் மற்றும் *2000-2001* ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | விவரம் | 1999–2000 ஆண்டுத் திட்டம். | 1999–2000–இல் அடைந்த முன்னேற்றம் 1–4–99 முதல் 31–1–2000 வரை | 2000–2001 ஆம் ஆண்டுக்கான உத்தேச திட்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) (ரூபாய் கோடியில்) |
| 1. | குறுகிய கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | 1050.00 | 680.58 | 1200.00 |
| 2.(அ) | நடுத்தர கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | 100.00 | 67.96 | 110.00 |
| (ஆ) | நகையீட்டுக் கடன் வழங்குதல் | 3900.00 | 2563.22 | 4400.00 |
| (இ) | சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவு கடன் வழங்குதல் | 150.00 | 187.14 | 170.00 |
| (ஈ) | வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடன் | 80.00 | 22.33 | 90.00 |
| 3. | நீண்ட கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | 273.46 | 115.67 | 300.80 |
| 4. | தொழில் புரிவோர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடன்கள் | 130.00 | 30.37 | 135.00 |
| 5. | வீடுகட்ட கடன் வழங்குதல் | 110.00 | 108.37 | 115.00 |
| 6. | இரசாயன உரங்கள் வழங்குதல் | 260.00 | 227.33 | 320.00 |
| 7. | வேளாண் விளைபொருட்கள் விற்பனை | 575.00 | 344.31 | 625.00 |
| 8. | நுகர்பொருட்கள் சில்லரை விற்பனை செய்தல் | 2140.00 | 1670.45 | 2250.00 |
| 9. | கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சுப்பணி செய்தல் | 24.00 | 17.04 | 25.00 |
| 10. (அ) | விற்பனையுடன் இணைந்த கடன் வசதி | 1.20 | 0.78 | 1.25 |
| (ஆ) | நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்த கடன் வசதி | 5.50 | 4.98 | 5.75 |
| 11. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/ பழங்குடியினர்களுக்கு நிதியுதவி அளித்தல் (லாம்ப்ஸ்) | 21.60 | 10.25 | 19.40 |
| 12. | கிடங்கு கொள்திறன் வசதியைப் பயன்படுத்துதல் (இலட்சம் மெட்ரிக் டன்னில்) | 5.50 | 5.41 | 5.75 |



**வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு**

கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் *1998-99* ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவுகள், *1999-2000* ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு, *1999-2000* ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும்

[2000 மே 3

*2000-2001* ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| திட்டத்தின் விவரங்கள் (1) | 1998-99 ஆம் ஆண்டின் மொத்த செலவு (2) | 1999-2000 ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு (3) | 1999-2000 ஆண்டின் திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு (4) | 2000-2001 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| அ. மாநிலத் திட்டப் பணிகள் | | | | |
| 1. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் | 0.0414 | 0.0924 | 0.0746 | 0.0362 |
| 2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் பாதுகாப்பு நிதி மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களில் முதலீடு உட்பட) | 36.2070 | 2.1417 | 23.4119 | 1.5774 |
| 3. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 0.5960 | 0.5331 | 0.5576 | 0.0961 |
| 4. பழங்குடியினர் துணைத் திட்டம் | 0.9000 | 0.9000 | 0.9000 | 0.9000 |
| 5. சிறப்புக் கூறுகள் திட்டம் | 0.2496 | 0.2500 | 0.2500 | 0.2500 |
| மொத்தம் | 37.9940 | 3.9172 | 25.1941 | 2.8597 |
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய அரசும் மாநில அரசும் சமமாக பங்கேற்கும் திட்டங்கள் | 0.3710 | 1.1011 | 0.2011 | 0.1008 |
| இ. தன்னாட்சி நிறுவனங்கள் நிதியுதவி பெறும் திட்டங்கள் | 6.9684 | 4.8334 | 4.9708 | 2.4235 |
| ஈ. திட்டத்தில் சேராதது | 51.3220 | 48.0506 | 54.7448 | 64.4879 |
| மொத்தம் | 96.6554 | 56.9023 | 85.1108 | 69.8719 |



2000 மே 3]

**2000-2001 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள்**

**1. சிறிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு நிதியுதவி**

நுகர்வோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பண்டக சாலைகள் பொது வியாபாரத்தினை மேற்கொள்ள கூடுதலாக சில்லறை விற்பனை நிலையங்களை படிப்படியாக தொடங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். *2000-2001* ஆம் நிதியாண்டில் பெரியமேடு கூட்டுறவுப் பண்டகசாலை (சென்னை), சத்திரப்பட்டி கூட்டுறவுப் பண்டகசாலை (விருதுநகர் மாவட்டம்), முன்னாள் படை வீரர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை (நீலகிரி மாவட்டம்), திருவாரூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (திருவாரூர் மாவட்டம்) மற்றும் மணலி புதூர் கூட்டுறவுப் பண்டகசாலை (திருவள்ளூர் மாவட்டம்) ஆகிய ஐந்து பண்டகசாலைகளுக்கு சிறிய அளவிலான சில்லரை விற்பனை நிலையங்கள் அமைக்க தலா ரூ.*0.60* இலட்சம் வீதம் மொத்தம் ரூ.*3.00* இலட்சம், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவியாக அளிக்கப்படவுள்ளது.

**2. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் அங்கத்தினர்களின் கடன் பெறும் தகுதியை உயர்த்துவதற்காக கூடுதல் பங்குத்தொகைக்கான வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள நலிந்த பிரிவினைச் சார்ந்த மகளிர் உறுப்பினர்கள், தாங்கள் கடன் பெற தேவையான பங்குமூலதனத்தை முதலீடு செய்வதற்கே சிரமப்படுகிறார்கள். அங்கத்தினர்களின் கடன் வாங்கும் சக்தி, அவர்தம் பங்கு மூலதனத்தைப் பொறுத்தே உள்ளதால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மகளிர் உறுப்பினர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகப்படுத்துவதற்காக வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இதன்படி *2000-2001* ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் *2,500* மகளிர் உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.*250* வீதம் ரூ.*6.25* இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படவுள்ளது.

**3. கூட்டுறவு நகர வங்கிகளில் மகளிர் அங்கத்தினர்களின் கடன் பெறும் தகுதியை உயர்த்துவதற்காக கூடுதல் பங்குத்தொகைக்கான வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள *1,000* மகளிருக்கு, அவர்களது பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்காக,

[2000 மே 3

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ.500 வழங்கப்படும். இதன்பொருட்டு 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

4. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலுள்ள பெண் உறுப்பினர்களுக்கு கடன் பெறும் சக்தியை அதிகரிக்க பங்குமூலதனத்திற்காக வட்டியில்லாக் கடன் உதவி வழங்குதல்

கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் 200 பெண் உறுப்பினர்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடன்பெறும் தகுதியை அதிகரிப்பதற்காக தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பங்கு மூலதனம் அளிக்க ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.1,000 வீதம் வட்டியில்லாக் கடன் உதவி வழங்கப்படும். 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

## அத்தியாயம் – 2

## கூட்டுறவுக் கடன்

### (அ) குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்

**1. கடன் கட்டமைப்பு**

மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் மத்திய கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மை அல்லாத பிற திட்டங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக), கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய கால மற்றும் மத்திய கால கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றது.

**2. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி**

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905 ஆம் ஆண்டு முதல் அதன் உறுப்பினர் சங்கங்களின் வாயிலாக வேளாண் மற்றும் வேளாண் சாரா நோக்கங்களுக்காக கடன்களை வழங்கிவருகிறது. இது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் நிதியை வேளாண்மைக்காக குறுகிய கால மற்றும் மத்திய கால கடனாக வழங்கி



2000 மே 3]

வருவதுடன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அவைகளின் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு தனது சொந்த நிதியிலிருந்து காசுக் கடன் வழங்குகிறது.

இந்த வங்கி, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலை/சர்க்கரை ஆலைகளுக்கும் காலக் கடன் நிதியுதவியும், ஏனைய தலைமை கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடி நிதியுதவியும் அளித்து வருகிறது.

மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த "தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு" என்ற நிதி ஒன்றினை தலைமை வங்கி பராமரித்து வருகிறது. 31-1-2000 அன்றைய நிலவரப்படி இந்நிதியில் ரூ. 620.76 இலட்சம் உள்ளது.

31-1-2000-ம் தேதியில் தலைமை வங்கியின் பங்குமூலதனம் அரசின் பங்குத்தொகையான ரூ.1.26 கோடியுடன் சேர்த்து ரூ.26.56 கோடியாகவும், ஒதுக்கிய நிதி ரூ.178.20 கோடியாகவும், வங்கியின் வைப்புத்தொகை ரூ.2,505.42 கோடியாகவும் உள்ளது. 1999-2000 ஆண்டில் 31-1-2000 வரை இவ்வங்கி ரூ.2,398.42 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் மாநில வங்கி ரூ.2.51 கோடி அளவில் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**3. மத்திய கூட்டுறவு வங்கிகள்**

மாநிலத்தில் 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கிளைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவை கூட்டுறவுகளுக்கும் கிராம மக்களுக்கும் பெரும் பணியாற்றி வருகின்றன. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் பெற்றும், வேளாண் தேவைகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கடன் வழங்குகின்றன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடம் நிதியுதவி பெற்று கடன்கள் வழங்குகின்றன.

இந்த வங்கிகள், வேளாண் சாரா தொழில்களுக்கு லாரிகள், பேருந்துகள், கணினிகள், மண்வாரும் இயந்திரங்கள் வாங்கவும், வீடு கட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், உறுப்பினர்களின்

குழந்தைகள் மருத்துவம், பொறியியல் தொழிற் கல்வி பயிலவும் கடன் உதவி அளித்து வருகிறது.

31-1-2000-ம் தேதியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில், அரசு பங்குத் தொகையான ரூ.61.58 கோடியையும் சேர்த்து பங்குத் தொகை ரூ.269.67 கோடி, ஒதுக்கிய நிதிகள் ரூ.399.50 கோடி, வைப்புத் தொகைகள் ரூ.5,672.41 கோடியாகவும் உள்ளன. இவற்றின் நடைமுறை மூலதனம் ரூ.7,220.82 கோடி அளவை எட்டியுள்ளது.

**4. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

நாளது தேதியில் மாநிலத்தில் 4,582 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 15 மாதங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய குறுகிய காலக் கடன்களையும், 3 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய பால்பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல் முதலான வேளாண் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தர காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. நடுத்தர காலக் கடன்களில் ஏறத்தாழ 65 விழுக்காடு கடன் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றது. 10 ஏக்கர் வரை சொந்த ஜாமீன்பேரில் பதிவு செய்யப்பட்ட கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு கடனளவுகளுக்கு ஏற்ப பயிர் கடன் வழங்கப்படுகிறது. நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், எள், காய்கறி வகைகள், பூச்செடிகள் முதலான இதர பயிர்களுக்கும் நபர் ஜாமீன் பேரில் ரூ.45,000 வரை கடன்கள் வழங்கப்படுகின்றன.

31-1-2000-ம் தேதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ.2,672.22 கோடி வைப்புத் தொகை திரட்டியுள்ளன.

இவ்வங்கிகள், வேளாண் நிலம், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்குதல் போன்ற பிற வேளாண் காரியங்களுக்கும் கடன் வசதி அளிக்கிறது. இவ்வங்கிகள், நுகர்பொருட்கள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள், இருசக்கர வாகனங்கள், டிரக்குகள், வீட்டுமனைகள் வாங்கவும், வீடுகளைப் பழுதுபார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்கு சேவை மையங்கள் தொடங்கவும், தமது வைப்புத் தொகைகளைப் பயன்படுத்தி கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.



**5. கடன் வழங்கு பணிகள் முன்னேற்றம் :**

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் 1997-98 மற்றும் 1998-99 மற்றும் 1999-2000-ம் ஆண்டு ஜனவரி 2000 வரை ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன்கள் வழங்கும் பணியில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:-

| ஆண்டு | குறுகிய கால பயிர்/ சாகுபடிக் கடன்கள் | | துணைத் தொழில்களுக் கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்த கடன்கள் (குறுகிய மற்றும் நடுத்தர) |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | முன்னேற்றம். | குறியீடு | முன்னேற்றம். | |
| (1) | (2) | (3) | (4) (ரூ. கோடியில்) | (5) | (6) |
| **எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்** | | | | | |
| 1992-93 | 300.00 | 340.86 | 55.00 | 45.75 | 386.61 |
| 1993-94 | 350.00 | 439.54 | 50.00 | 52.65 | 492.19 |
| 1994-95 | 450.00 | 561.74 | 55.00 | 61.99 | 623.73 |
| 1995-96 | 560.00 | 561.37 | 60.00 | 65.17 | 626.54 |
| 1996-97 | 680.00 | 592.40 | 65.00 | 66.37 | 658.77 |
| **ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்** | | | | | |
| 1997-98 | 800.00 | 697.99 | 70.00 | 100.74 | 798.73 |
| 1998-99 | 925.00 | 732.12 | 100.00 | 117.13 | 949.25 |
| 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 1050.00 | 680.58 | 100.00 | 67.96 | 748.54 |

மேற்கண்ட ஆண்டுகளில் வேளாண்மை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு வந்துள்ள கடன் தொகையின் அளவு சீராக அதிகரித்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. வளர்ந்துவரும் வேளாண் கடன் தேவைகளைக் கருத்தில்கொண்டு 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.1,200.00 கோடி அளவிற்கு குறுகிய கால கடன்கள் வழங்கவும், ரூ.110.00 கோடி

[2000 மே 3

அளவிற்கு நடுத்தர காலக் கடன்கள் வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

இதேபோன்று பண்ணைசாரா நோக்கங்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக, 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டு ஜனவரி 2000 வரை வழங்கப்பட்ட கடன் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | பண்ணைசாராக் கடன்கள் வழங்குதல் | |
|---|---|---|
| | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் |
| | (ரூ. கோடியில்) | |
| 1997-98 | 20.60 | 6.60 |
| 1998-99 | 25.48 | 33.49 |
| 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 38.62 | 52.09 |

2000-2001 ஆம் ஆண்டு பண்ணைசாரா தொழில்களுக்கும் மற்றும் சிறு சாலைப் போக்குவரத்து இயக்குபவர்களுக்கும் ரூ.170.00 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல் :**

மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி, கூட்டுறவுகள் வழங்கும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்குக் குறையாமல் சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/ பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 67 விழுக்காடு அளவிற்கும் நடுத்தர காலக் கடனில் 95 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டில் ஜனவரி 2000 வரை நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:-



2000 மே 3]

| வ.எண் | விவரங்கள் | ஆண்டு | குறியீடு (விழுக் காடு) | சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | | | நலிந்த பிரி வினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) | வழங்கப் பட்ட மொத்த கடனின் விழுக்காடு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | குறுகிய காலக் கடன் | 1997-98 | 67 | 429.47 | 61.5 |
| | | 1998-99 | 67 | 461.13 | 63.0 |
| | | 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 67 | 410.20 | 60.3 |
| 2. | நடுத்தர காலக் கடன் | 1997-98 | 95 | 89.97 | 89.3 |
| | | 1998-99 | 95 | 99.52 | 85.0 |
| | | 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 95 | 53.06 | 78.1 |

1999-2000 ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும், நடுத்தர காலக் கடனில் 30 விழுக்காடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கிட திட்டமிடப்பட்டது. ஜனவரி திங்கள் 2000 வரையில் இக்கடன்கள் முறையே 12 விழுக்காடு அளவிற்கும் 17 விழுக்காடு அளவிற்கும் வழங்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும், மத்திய காலக் கடனில் 30 விழுக்காடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7. கிசான் கடன் அட்டைத் திட்டம் :**

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட கிசான் கடன் அட்டைத் திட்டத்தை மாவட்ட மத்திய

கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த திட்டத்தின்கீழ் விவசாயிகள் விவசாய இடுபொருட்களான விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றை உடனடியாக வாங்க இயலும். மேலும் உற்பத்தி செலவிற்கு உடனடியாக பணமும் பெறமுடியும். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் விவசாயி கடன் அட்டைத் திட்டத்தை தற்போது செயல்படுத்தி வருகின்றன. 29-2-2000 தேதி வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 16,357 விவசாயிகளுக்கு கடன் அட்டைகளை வழங்கி, அவற்றிற்கு 2,090.96 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வழங்கியுள்ளன.

**8. ஆதிதிராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்**

குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் பெற்று தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் திட்டத்தினை 1981-82 ஆம் ஆண்டிலிருந்தே அரசு செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் பங்கு மூலதனம் செலுத்துவதற்காக, ஒவ்வொரு, உறுப்பினருக்கும் ரூ.100 மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.110.00 இலட்சம் அரசு மானியத்துடன் 1,10,000 பேர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த உதவித் திட்டம் 1988-89 ஆம் ஆண்டில் மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு வரை 1,25,092 பேர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு ரூ.125.092 இலட்சம் மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது. இதுவரை 2,35,092 ஆதிதிராவிடர்களுக்கு மாநில / மத்திய அரசால் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**9. கூட்டுறவு கடன் அமைப்பினை வலுப்படுத்த வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம்**

ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்கு போதிய நிதி உதவி அளிக்கப்பட வேண்டிய உயரிய நோக்கத்தின் அடிப்படையில், குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடனமைப்புகளை வலுப்படுத்த வகுக்கப்பட்டுள்ள மைய அரசின் கொள்கை முடிவின்படி, குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டங்கள் செயல்டுத்துவதற்கென வழிகாட்டி நெறிமுறைகளை தேசிய வங்கி அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில், குறுகிய காலக்



கடனமைப்பைப் பொறுத்தவரையில், 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரையிலும் நீண்டகால கடனமைப்பைப் பொறுத்தமட்டில் 1994-95 முதல் 1997-98 ஆம் ஆண்டு வரையிலும் கூட்டுறவு வங்கிகளால் வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

வளர்ச்சி செயல் திட்டங்களை முழு அளவில் செயல்படுத்திடவும், நிதி மற்றும் பிற ஆதரவுகளை நபார்டு வங்கியிடமிருந்து பெற்றிட வகை செய்யவும், மாநில அரசு, மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் சேர்ந்து, தனித்தனியே தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள செயல் திட்டங்கள் மாநில அளவிலான ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பெரும்பான்மையான செயல் திட்டங்களில் நடவடிக்கை முடிவெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் காலம் 31-3-1999 அன்று முடிவுற்றதால், அரசின் அறிவுரைகளின்படி, குறுகிய காலக் கடன் அமைப்பிற்கான ஆண்டு ஒப்பந்தம் நபார்டு வங்கி மற்றும் தலைமை வங்கிக்கிடையே செய்துகொள்ளப்பட்டுள்ளது.

அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும், தன்னாற்றல் கொண்டவைகளாகச் செய்வதே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். தன்னாற்றல் திட்டங்களை உருவாக்க மண்டல இணைப் பதிவாளர்களின் தலைமையில் மாவட்டந்தோறும் சிறப்பு பணிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள் 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை தன்னாற்றல் குன்றியவை என அறுதியிட்டு, அவற்றை பிற வங்கிகளுடன் இணைத்துவிடவோ அல்லது அவற்றைக் கலைத்துவிடவோ பரிந்துரை செய்துள்ளன. இத்தகு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எதிர்கால செயல்பாடு குறித்து முடிவு செய்யும் பொருட்டு, அவற்றின் செயல்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் செயலிழந்த 14 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஏற்கெனவே கலைக்கப்பட்டு விட்டன. 6 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தன்னாற்றல் பெற்றுவிட்டன. 31-1-2000 தேதிகளில் 98 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தன்னாற்றல் குன்றியவையாக உள்ளன. இவ்வங்கிகளை வலுப்படுத்தத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2000 மே 3

1994-95-ல் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடங்கப்பெற்ற காலத்திலிருந்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு தேசிய வங்கியின் நீண்டகால இயக்க நிதியிலிருந்து நிதி உதவி பெற்று, அரசு பங்கு மூலதன உதவி அளித்து வருகிறது. இந்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | நிறுவனங் களின் எண்ணிக்கை | ஒப்பளிக் கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில் | நிறுவனங் களின் எண்ணிக்கை | ஒப்பளிக் கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | நிறுவனங் களின் எண்ணிக்கை | ஒப்பளிக் கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
| 1994-95 | 8 | 4.71 | 705 | 4.76 | - | - |
| 1995-96 | 5 | 2.65 | 1640 | 15.25 | 79 | 3.96 |
| 1996-97 | 16 | 8.23 | 851 | 3.27 | 51 | 3.33 |
| 1997-98 | 5 | 3.61 | 922 | 3.52 | 52 | 4.02 |
| 1998-99 | 10 | 7.91 | 973 | 4.27 | 20 | 1.81 |

**10. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புத் தொகைக்கு உத்தரவாதம் அளிக்கும் திட்டம்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை உத்தரவாதத் திட்டம் ஒன்று 1-4-1992 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி வைப்புதாரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி வைப்புத்தொகை திரட்டும் நோக்கத்துடன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புத் தொகைகளுக்கு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உத்தரவாதம் அளிக்கின்றன.

வங்கிகளின் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படவும் வைப்புத் தொகையை திரும்பப் பெறுவதற்கு வழிவகை செய்யவும் இதற்கென ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் உத்தரவாத நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வைப்புத் தொகைக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் உத்தரவாத நிதிக் கட்டணம் செலுத்தப்படவேண்டும்:—



2000 மே 3]

| | |
|---|---|
| அ. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | 0.15 விழுக்காடு |
| ஆ. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | 0.10 விழுக்காடு |
| இ. மாநிலக் கூட்டுறவு வங்கி | 0.05 விழுக்காடு |

இத்திட்டம் தொடங்கிய நாளான 1-1-1992 முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்டுள்ள வைப்புத் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

| தேதியன்று | வைப்புத் தொகை அளவு (ரூ. கோடியில்) | வளர்ச்சி சதவீதம் |
|---|---|---|
| 31-3-1993 | 357.09 | 22 |
| 31-3-1994 | 465.69 | 30 |
| 31-3-1995 | 598.60 | 29 |
| 31-3-1996 | 827.84 | 38 |
| 31-3-1997 | 1180.75 | 43 |
| 31-3-1998 | 1645.85 | 39 |
| 31-3-1999 | 1980.87 | 20 |
| 31-1-2000 | 2672.22 | 35 |

**11. கடன் வசூல் பணி**

எந்த ஒரு கூட்டுறவு கடன் நிறுவனமும், தாம் வழங்கிய கடன்களை தவணை தேதிக்குள் வசூல் செய்வதை தலையாயக் கடமையாக கொள்ளவேண்டும். கூட்டுறவு கடன் நிறுவனங்களின் நிதிநிலைத் தன்மை, கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதைப் பொறுத்துத்தான் அமையும். கடன் வழங்குத் திட்டங்களில் ஓரளவிற்கு தவணை தவறிய கடன்கள் இருப்பது தவிர்க்க இயலாதது என்ற போதிலும், எந்த ஒரு கடன் வழங்கு நிறுவனமும், அதிக அளவு தவணை தவறிய கடன் நிலுவையைத் தாங்க இயலாது. தவணை தவறிய கடன் அளவினை கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதி சுழற்சி செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, அதனால் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிவிடும் சூழ்நிலை உருவாகக்கூடும். அத்துடன், அவற்றின் வியாபாரத்தை மேம்படுத்த இயலாத

[2000 மே 3

நிலையும் ஏற்பட்டுவிடும். தாங்கள் பெற்ற கடனை தவணை தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான், அவர்களால் பருவகால வேளாண்மை தேவைகளுக்குத் தொடர்ந்து மேலும் கடன் வசதி பெற இயலும். ஆகவே, தேசிய வங்கியிடமிருந்து முழு அளவில் மறுநிதியுதவி பெற ஏதுவாக வசூல் பணியைத் தீவிரப்படுத்தவும், தவணை தவறிய கடன்களின் அளவைக் குறைப்பதற்கும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் முயற்சி செய்து வருகின்றன.

கடன் தொகைகளை கூட்டுறவுகளுக்குத் திருப்பிச் செலுத்துமாறு உள்ளூர் செய்தித்தாள்களில் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், தவணை தவறிய கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

| தேதியன்று | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அளவில் | | |
|---|---|---|---|
| | நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில் தவணை தவறிய நிலுவையில் சதவீதம் |
| 1. | 2. | 3. (ரூபாய் கோடியில்) | 4. |
| 30-6-1990 | 941.31 | 398.34 | 55.6 |
| 30-6-1991 | 1091.85 | 404.63 | 43.7 |
| 30-6-1992 | 1114.32 | 444.06 | 41.4 |
| 30-6-1993 | 1435.79 | 398.71 | 31.8 |
| 30-6-1994 | 1533.63 | 397.62 | 27.5 |
| 30-6-1995 | 1719.94 | 418.80 | 24.8 |
| 30-6-1996 | 2048.95 | 576.30 | 29.8 |
| 30-6-1997 | 2236.74 | 653.69 | 28.7 |
| 30-6-1998 | 2982.01 | 835.83 | 32.4 |
| 30-6-1999 | 3382.94 | 905.77 | 32.2 |



2000 மே 3]

### 12. வட்டி ஊக்குவிப்புத் திட்டம்

*1-7-1998* மற்றும் *30-9-1999* வரை உரிய காலத்திற்குள் தாங்கள் பெற்றக் கடனை வட்டியுடன் முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றினை அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்படி நடப்புக் கடன்தொகையில் *6.25* சதவிகிதம் வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

அரசு வழங்கிய ரூ.*15.00* கோடியில் *1,47,654* சிறு மற்றும் குறு விவசாயிகள் *6.58* கோடி ரூபாய் அளவிற்குப் பயன்பெற்றுள்ளனர். பயன்படுத்தப்படாத தொகை ரூ.*8* கோடி மற்றும் ரூ.*42.00* இலட்சம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சார்பாக மாநிலத் தலைமை வங்கியால் முறையே *17-11-1999* மற்றும் *31-1-2000*ஆம் தேதிகளில் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டன. எனினும் இத்திட்டத்தினை மேலும் நீட்டிக்கும் வகையில் *30-6-1999*-க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு *30-6-2000*-க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் சிறிய, பெரிய அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது.

மேலும் திருப்பிச் செலுத்தப்படும் நடப்பு கடன் தொகை வட்டியில் கடந்த ஆண்டு *6.25* சதவிகிதம் ஊக்குவிப்புத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு *7* சதவிகிதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கெனவே முழுக் கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இத்திட்டத்தால் சுமார் *10* இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 13. நகைக் கடன்

கிராமப் பகுதிகளில் வாழ்ந்து வரும் நலிவுற்ற பிரிவினர் தமது அவசரத்தேவைகளுக்காக அதிக வட்டிக்கு அடகு வணிகர்களிடம் கடன் பெற்று அவதியுறும் நிலையைக் களையும் நோக்கத்தில், அவர்கட்கு கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. *1999-2000* ஆம் ஆண்டில் ரூ.*3900.00* கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டு, *31-1-2000* வரை ரூ.*2563.22* கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

[2000 மே 3

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.4,400.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 14. சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்

நமது மாநிலத்தில் செயல்பட்டுவரும் கூட்டுறவு வங்கிகளும் மற்றும் பல்வேறு வணிக வங்கிகளும் வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் கடன் அளித்து வருகின்றன. ஆயினும் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் சிறு வியாபாரம் செய்து வாழும் ஏழை எளிய மக்களுக்கு வங்கிகள் வழங்கும் கடன் வசதிகள் இன்னும் முழுமையாக அவர்களைச் சென்றடையவில்லை. அதிக வட்டிக்கு கடன் பெற்று அன்றாடம் வியாபாரம் செய்து தமது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் இத்தகைய ஏழை எளிய மக்களுக்கு பொருளாதாரப் பாதுகாப்பு என்பது இன்றளவும் கனவாகவே உள்ளது. எனவே கூட்டுறவு வங்கிகளின் மூலம் இத்தகைய மக்களுக்கு குறிப்பாக சிறு வணிகம் செய்துவரும் மகளிர்தம் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், அதேநேரத்தில் சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடையே உருவாக்கிடவும், கூட்டுறவு வங்கிகள் மூலம் செயல்படுத்த அரசு ஒகு புதிய கடன் திட்டத்தை உருவாக்கி, அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்திற்கு மகளிர் சேமிப்புடன் இணைந்த சிறு வணிகக் கடன். திட்டம் என்று பெயர்.

இத்திட்டத்தின்கீழ், பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்வோர் மற்றும் பெட்டிக்கடை நடத்தும் மகளிரும், தேவைக்கேற்ப ரூ.100, ரூ.200, ரூ.500, ரூ.1,500 என்ற அளவில் அதிகபட்சம் ரூ.5,000/- வரை கடன் வசதி பெறலாம். பயனாளிகளின் தேவைக்கேற்ப தினசரி காலை அல்லது மாலை நேரத்தில் கடன் வழங்கப்படும். நூறு ரூபாய் கடனுக்கு அவர்கள் தினசரி ஒரு ரூபாய் மட்டுமே செலுத்த வேண்டி வரும். இந்த ஒரு ரூபாயிலும் 85 காசுகள் அவர்களது சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். மீதமுள்ள 15 காசுகளில் 10 காசுகள் சேவைக் கட்டணமாகவும், 5 காசுகள் வட்டிக்காகவும், வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படும் 10 காசுகள் தற்போது இத்திட்டத்தினை செயல்படுத்தும் வங்கிகளின் முடிவுக்கு விடப்பட்டுள்ளது. வங்கிகள் சேவைக் கட்டணம் வசூலிப்பதில்லை என்று முடிவு செய்தால், சேவைக் கட்டணமான 10 பைசாவும் பயனாளிகளின் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். ஆறு மாதங்களுக்குப் பிறகு பயனாளிகள் அவர்கள்



2000 மே 3]

சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையை வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் கடன்பெறும் பயனாளிகள் ஒருவருக்கொருவர் பிணைநின்று கடனைத் திருப்பிச் செலுத்த பொறுப்பேற்கலாம். பயனாளிகள் தமது வசதிக்கேற்ப அவர்களே நேரில் வந்து கடன் தொகையை வங்கியில் திருப்பிச் செலுத்தலாம் அல்லது அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்திலேயே வங்கி அலுவலரிடம் தொகை செலுத்தலாம்.

சிறு வணிகக்கடன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 22-3-2000 வரையில் 65,853 நபர்களுக்கு ரூ.6.51 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து ஊரகப் பகுதிகளில், சுய உதவிக் குழுக்கான சிறுவணிகக் கடன் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளன.

## 15. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்

தமிழ்நாட்டில் 1985-86ஆம் ஆண்டு முதல் இயற்கை சீற்றங்களினால் பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஒருங்கிணைந்த பயிர் ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் வழங்கிய பயிர்க்கடனில் 100 விழுக்காடு, பயிர்க்கடன் அதிகபட்சமாக ரூ.10,000 வரையில் அறிவிக்கை செய்யப்படும் வட்டாரங்களில் நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள் ஆகிய பயிர்களுக்குக் கட்டாயமாக ஈட்டுறுதி செய்யப்படுகிறது. ஒருங்கிணைந்த பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக 1999-2000 ராபி பருவத்திலிருந்து செயல்படுத்த தேசிய வேளாண்மை ஈட்டுறுதித் திட்டம் ஒன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் கடன் பெறும் விவசாயிகள் மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளுக்கும் உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் வணிகப் பயிர்களான சர்க்கரை மற்றும் உருளைக்கிழங்கு மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களுக்கு மூன்று வருட காலத்திற்குள் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சோதனைமுறை பயிர் ஈட்டுறுதித் திட்டம் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 24 வட்டாரங்களில் அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டம் சோதனை முறையில் கடன் மற்றும் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 100 சதவிகித மானியத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு 8:2 என்ற சதவிகிதத்தில், பிரிமியத் தொகையைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மாநில அரசு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.58.00 இலட்சம் பிரிமியத்திற்கு மானியம் அளித்துள்ளது. மேலும் இந்த நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஈட்டுறுதி வழங்க ரூ. 4,42,77,521 மாநில அரசின் பங்காக வழங்கப்பட்டுள்ளது.

1999-2000 ஆம் ஆண்டிற்கு பிரிமியம் மானியமாக மாநில அரசு ரூ. 20.53 இலட்சம் ஒருங்கிணைந்த பயிர் ஈட்டுறுதித் திட்டத்திற்கு அனுமதித்துள்ளது.

**(ஆ) நீண்ட காலக் கடன் வழங்கும் அமைப்பு**

நீண்ட காலக் கூட்டுறவு கடன் அமைப்பில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாநில அளவில் தலைமை வங்கியாகவும், 181 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்டம்/வட்டார அளவிலும் செயல்படுகின்றன. இவை தமது உறுப்பினர்களுக்கு வேளாண்மை காரியங்களுக்காகவும், சிறு பாசனத்திட்டம், தோட்டப்பயிர் மற்றும் மலைப்பயிர் வளர்த்தல், கோழி வளர்த்தல், பால்பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டி வாங்குதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற வேளாண் சார்ந்த காரியங்களுக்காவும் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன. மேலும் சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் கிணறுகளைப் பழுதுபார்த்தல், பாசனத்திற்கு நீர்க் குழாய்கள் அமைத்தல், டிராக்டர் மற்றும் விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல், கால்நடை தொழுவம் மற்றும் பண்ணை வீடு கட்டுதல் போன்ற காரியங்களுக்கும் நீண்டகாலக் கடன் வழங்குகின்றன. இத்தகைய கடன்களை திரும்பச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையாகும்.

**1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியை சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் தமிழ்நாடு



கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி திரட்டுகிறது. மாநில மற்றும் மத்திய அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத் ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வணிக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் பிற மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சாதாரண கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. தேசிய ஊரக வளர்ச்சி வங்கி மாநில மற்றும் மத்திய அரசுகள் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன.

1995-96 முதல் ரூ. 10.00 இலட்சங்கள் வரை அனுமதிக்கப்பட்ட மறுநிதி வசதியின் அளவு, ரூ. 15.00 இலட்சங்களாக தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே ரூ. 15.00 இலட்சங்களுக்கு மேல் மறுநிதிபெறும் திட்டங்களுக்கும், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களுக்கும் மட்டுமே தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் தேவைப்படும். தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் தயாரிக்கப்பட்டு மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | ஆண்டு | பரிந்துரைக் கப்பட்ட திட்டங்கள் | வழங்கப் பட்டதொகை (ரூபாய் கோடியில்) | நபார்டு வங்கியால் அனுமதிக்கப் பட்ட திட்டங்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 1997-98 | 6 | 0.83 | 3 | 0.40 |
| 2. | 1998-99 | 14 | 4.37 | 13 | 4.33 |
| 3. | 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 5 | 0.71 | 4 | 0.64 |

31-1-2000 அன்றைய நிலவரப்படி வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூ. 235.16 கோடி அளவில் இருந்தது. இதன் விவரம் பின்வருமாறு:—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. பங்கு மூலதனம் | 36.43 |
| 2. சட்டரீதியான ஒதுக்கீடு | 30.85 |
| 3. மற்ற ஒதுக்கீடுகள் (தவணை கடந்த கடன் உள்பட) | 167.88 |
| மொத்தம் | 235.16 |

சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள் ஒவ்வொரு வரிசையும் முதிர்வடையும்போது, அவற்றை மீட்க ஏதுவாக, இவ்வங்கி 'கடனீட்டு பத்திரமீட்பு நிதி' ஒன்றினை பராமரித்து வருகிறது. அந்நிதியில் 31-1-2000 அன்றைய தேதியில் ரூ. 26.43 கோடி நிலுவையாக உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் செயல்படும் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு, பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்தும், திட்டங்களினால் விவசாயிகளுக்கு கிடைக்கப்பெற்ற பலன்கள் குறித்தும் ஆய்வு செய்கிறது. 31-1-2000 தேதியளவில் 445 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

**2. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்**

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கத் தேவைப்படும் நிதி ஆதாரத்தை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளிக்கிறது.

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஒன்பதாவது திட்டக் காலத்தில் அளித்துள்ள நீண்டகாலக் கடன்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-



| திட்டக்காலம் | ஆண்டு | திட்டம் (ரூபாய் கோடியில்) | சாதனை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் | 1997-98 | 226.00 | 191.60 |
| | 1998-99 | 248.60 | 212.51 |
| | 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 273.46 | 115.67 |

நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிற துறைகளிலும் கடன் வழங்க தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**(i) பண்ணை சாரா துறைகளில் நிதி வசதி அளித்தல்**

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், கிராம கைவினைஞர், கைத்தொழில் வல்லுனர்கள் மற்றும் சிறு தொழில் செய்வோருக்கு பண்ணை சாராக் கடன்கள் வழங்கும் திட்டத்தினை 1990-91ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றன. இக்கடன் உதவியின்கீழ் கிராம மக்கள் வேலைவாய்ப்பு பெறுவதன் மூலம் தமது வருமானத்தை கணிசமான அளவில் பெருக்கி பயன் அடைகின்றனர். தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வழங்குவதற்கான தகுதிகளை கருத்தில்கொள்ளாமல், நபார்டு வங்கி 100 சதவீதம் மறு நிதியளிக்கிறது. இத்திட்டத்தின்படி அதிகபட்ச தனிநபர் கடன் அளவு கூட்டுக் கடன்கீழ் ரூ.2.00 இலட்சம் என்றும், ஒருங்கிணைந்த கடன் கீழ் ரூ. 15.00 இலட்சம் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கடந்த மூன்று வருடங்களில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள பண்ணைசாராக் கடன்கள் குறித்த விவரமும், 2000-2001ஆம் ஆண்டுக்கான குறியீடும் கீழே தரப்பட்டுள்ளன:-

[2000 மே 3

| ஆண்டு | கடன் வழங்கப்பட்ட விவரம் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1996-97 | 78.11 |
| 1997-98 | 75.54 |
| 1998-99 | 83.07 |
| 1999-2000 (31-1-2000 வரை) | 40.40 |
| 2000-20001 (குறியீடு) | 142.11 |

(ii) **கிராமப்புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்குக் கடன் வழங்குதல்**

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், சரக்குப் பேருந்து, வேன், கார், ஆட்டோ ரிக்ஷா முதலான வாகனங்கள் வாங்குவதற்கு பண்ணை சாராக் கடன் திட்டத்தின்கீழ் கடன் வழங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் வாகன மதிப்பீல் 85 சதவீதம் கடன் வழங்கப்படும்.

(iii) **சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி**

நலிந்த பிரிவினர்களுக்கு 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு<br>1. | வழங்கப்பட்ட மொத்த கடன்<br>2. | நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன்<br>3. | வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடனின் விழுக்காடு<br>4 |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| 1997-98 | 191.60 | 36.83 | 19.2 |
| 1998-99 | 212.51 | 41.82 | 19.7 |
| 1999-2000 (31-1-2000 வரை) | 115.67 | 10.35 | 11.0 |



2000 மே 3]

**4. கடன் வசூல்**

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி, அவற்றின் கடன் வசூலைப் பொறுத்தே அமைகின்றது. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சூன் திங்கள் 30 ஆம் நாள் அன்று கேட்புத் தொகையில் குறைந்தது 60 விழுக்காட்டிற்கும் குறையாமல் வசூல் செய்யாவிடில் அவை வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெற வாய்ப்பு இல்லை. இருந்தபோதிலும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வரையறையற்ற மறுநிதி பெற நிர்ணயித்துள்ள வசூல சதவீத வரம்பை 65 சதவீதமாக 1999-2000 ஆம் ஆண்டிற்கு உயர்த்தியுள்ளது. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாப நிலை அடைவதற்கும் முடிவில் நிலைத்திருக்கக்கூடிய நிலையை அடைவதற்கும் தவணை கடந்த நிலுவையை அதிக அளவில் வசூலிப்பது மிகவும் அவசியமாகும். இருப்பினும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுவதும், வாங்கிய கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் பெற்றவர்கள் அக்கறை காட்டாததும் தவணை தவறிய கடன் தொகை அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாகும். எனவே, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கடன்தாரர்களை நேரில் சந்தித்து முனைப்புடன் இசையச் செய்து அவர்களுடைய கடனை வசூல் செய்யவேண்டியுள்ளது.

தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் 1998-99-ஆம் ஆண்டின் கடன் வசூல் 47.0 சதவீதம் மட்டும் ஆகும். இம்மாநிலத்தில் பெரும்பான்மையான இடங்களில் நிலவிய மோசமான பருவநிலை, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வசூல் பணியினை இவ்வருடம் பாதித்துள்ளது. 1998-99-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களின் நடப்பு கேட்புத் தொகையான ரூ.30.29 கோடியை ஒத்திவைக்க ஒரு முன்மொழிவு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் தேசிய வங்கி மேற்படி கோரிக்கையை ஏற்கவில்லை. இருப்பினும் தேசிய வங்கியின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 31-1-2000 ஆம் தேதியன்று கேட்பிற்கான வசூல் 15.6 சதவீதமாக உள்ளது.

[2000 மே 3

கடந்த மூன்று ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் அளவில் தவணை கடந்த கடன் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:

| தேதி அளவில் | கடன் நிலுவைத் தொகை (ரூ. கோடியில்) | தவணை கடந்த நிலுவைத் தொகை (ரூ. கோடியில்) | நிலுவை கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-6-1997 | 694.43 | 150.51 | 53.0 |
| 30-6-1998 | 786.05 | 201.65 | 56.5 |
| 30-6-1999 | 907.31 | 233.46 | 53.0 |
| 31-1-2000 வரை | 956.83 | 326.47 | 84.4 |

## 5. பொய்த்த கிணறுகள் இழப்பீடு நிதி திட்டம்

பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதி என்ற திட்டம் 1-7-1986 முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு 100 விழுக்காடு அளவிற்கு இந்நிதியிலிருந்து இழப்பீடு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் அசலுக்கான மானியம் மாநில மற்றும் மத்திய அரசுகளினால் சரிசமமாக பகிர்ந்துகொள்ளப்படுகிறது. வட்டிப் பகுதியைப் பொறுத்தமட்டில் தேசிய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திட்டங்கள் சார்ந்த கடனாக இருந்தால் அவ்வங்கியும் சம்பந்தப்பட்ட வங்கியும், செலவினை சம அளவில் பகிர்ந்துகொள்கின்றன. இதர சாதாரண திட்டம் சார்ந்த கடன்களாக இருந்தால் வட்டித் தொகை சம்பந்தப்பட்ட வங்கிகளின் சொந்த நிதியிலிருந்து தள்ளுபடி செய்யப்படுகின்றன. 1993-94 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கான நிதியுதவியினை மத்திய அரசு நிறுத்திவிட்டது. எனவே, மாநில அரசு தொடர்ந்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-1-2000 வரை 305 பொய்த்த கிணறுகளுக்கு ரூ.48.62 இலட்சம் அளவிற்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



2000 மே 3]

### (இ) நகர்ப்புறக் கடன்

தற்போது தமிழகத்தில் 126 நகர கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவ்வங்கிகள் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் தரப்புப் பிரிவினரிடமிருந்து வைப்புத் தொகைகளை சேகரித்து அவற்றை பயன்படுத்தி நகர்ப்பகுதிகளைச் சார்ந்த சிறுவியாபாரிகள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும், நடுத்தரப் பிரிவினைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்கும், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடல் போன்றவற்றிற்கும் கடன் வழங்கி உதவி வருகின்றன. 1-4-1999 முதல் 31-1-2000 வரையில் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு குறுகிய கால மற்றும் மத்தியகாலக் கடனாக ரூ.1103.53 கோடி அளவிற்குக் கடன்களை இவ்வங்கிகள் வழங்கி உள்ளன. இவ்வங்கிகளின் வைப்புத் தொகை 31-1-2000 அன்றைய நிலவரப்படி ரூ.2369.90 கோடி ஆகும். இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி, இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை துறைகளுக்கு வழங்கிட வேண்டும். அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும் இருந்திடல் வேண்டும்.

## 2. அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்

நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன்பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வட்டியில்லாக் கடனாக ரூ.500/- வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து 1998-99 ஆம் ஆண்டு வரை நகரக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 14,017 நபர்களுக்கு ரூ.70 இலட்சம் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது.

அதேபோன்று நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள பெண் உறுப்பினர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ.500/- வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 1,000 பெண் உறுப்பினர்களுக்கு கடன் வழங்க ரூ. 5 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தினை தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் வேளாண்மை சார்பற்ற கடன்கள்**

நகர கூட்டுறவு வங்கிகள் வேளாண்மை சாரா பிரிவினைச் சார்ந்த குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன. வேளாண்மை சாரா சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ரூ.80.00 கோடி அளவிற்குக் கடன் வழங்க திட்டமிடப்பட்டது. 31-1-2000 வரை ரூ.96.43 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 57,333 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

**அத்தியாயம் - 3**

**தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக நிதியுதவியுடன் விவசாயம் மற்றும் அது தொடர்புடைய பிரதம கூட்டுறவுகளின் வணிக அளவை பன்முகப்படுத்தி பெருக்கும் நோக்கத்துடன் மாநிலத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சங்கத்தை அடிப்படையாகக்கொள்ளாமல் பகுதி சார்ந்த அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் கூட்டுறவுகளின் உள்ளமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட முக்கியமான நோக்கங்களுக்கு உதவி அளிக்கப்படுகின்றன:—

1. திட்ட அறிக்கை தயாரித்தல்
2. உள்ளமைப்பு வசதிகளை உருவாக்குதல்
3. வங்கிகளிலிருந்து நிதி உதவி பெறுவதற்காக நடைமுறை மூலதனத்தை அதிகரிக்க விளிம்புத்தொகை உதவி அளித்தல்
4. தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் சம்பளம் பெறும் மேலாண்மையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்





5. உறுப்பினர் கல்வி மற்றும் விளம்பரம் செய்தல்
6. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் செயல்மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை அளித்தல் மற்றும்
7. மின்னணு விவர வகைப்பாட்டு முறை உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் திட்ட செயலாக்கம்.

விருதுநகர், தென்னாற்காடு, கோயமுத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த அரசு இதுவரை ஒப்பளித்துள்ளது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மாவட்டம் விருதுநகர் மாவட்டமாகும். 1989 ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டு, 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத்திட்டம் முடிவடைந்தது. ரூ.861.36 இலட்சம் மொத்தச் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ரூ.1,508.207 இலட்சம் திட்ட மதிப்புடன் 1992-93 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ரூ.1506.969 இலட்சம் மொத்தச் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 31-3-1997 அன்று முடிவடைந்தது.

கோயமுத்தூர், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை முறையே ரூ.1081.07 இலட்சம், ரூ.1,160.25 இலட்சம் மற்றும் ரூ.816.58 இலட்சம் மதிப்பளவில் செயல்படுத்த அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ.1,123.88 இலட்சம் மதிப்பளவில் செயல்படுத்த அரசு ஒப்பளித்தது. முதலாண்டுத் திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ.983.32 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்த ஒப்புதலளித்துள்ளது.

[2000 மே 3

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ.687.03 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பளிக்க மற்றும் முதலாண்டுத் தொகையை விடுவிப்பது குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திருவாரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, இம்மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. புதுடில்லி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக ஒப்புதலுடன் திருவாரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட அறிக்கை மாநில அளவு குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

## அத்தியாயம்-4

### கூட்டுறவின் மூலம் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய நிறுவனங்கள், இரசாயன உரங்கள் மற்றும் இதர விவசாய இடுபொருட்களான விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய உபகரணங்களை 4,355 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 82 மேலாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நடத்தும் 5,678 சில்லறை உர விற்பனை நிலையங்கள் வழியாக தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்துவருகின்றன. இவ்விடுபொருட்கள் சங்க உறுப்பினர்கள் பெறும் பயிர் கடனில் பொருட்பகுதியாகவும், சங்க உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கு ரொக்க விற்பனை மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன.

1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் ஜனவரி 2000 வரை விநியோகம் செய்யப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் இடுபொருட்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—



2000 மே 3]

| ஆண்டு | இரசாயன உரங்கள் (ரூபாய் கோடியில்) | விதைகள் (ரூபாய் கோடியில்) | பூச்சிக்கொல்லி மருந்துகள் (ரூபாய் கோடியில்) | விவசாய உபகரணங்கள் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1998-99 | 237.49 | 2.38 | 2.98 | 0.57 |
| 1999-2000 (ஜனவரி 2000 வரை) | 227.33 | 2.21 | 2.70 | 0.59 |
| 2000-2001 குறியீடு | 320.00 | 3.00 | 5.00 | 1.10 |

1970 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்தால் நிறுவப்பட்ட உரக்கலவை ஆலை, நாளொன்றுக்கு சராசரியாக 120 டன் என்.பி.கே. உரக்கலவையைத் தயாரித்து வருகிறது. இவ்விணையம் மாநிலத்தில் மேலும் 8 இடங்களில் உரக்கலவை மையங்களை நடத்திவருகிறது.

1999-2000 ஆம் ஆண்டில் ஜனவரி 2000 வரை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்ற நிறுவனங்களும் விற்பனை செய்த வேளாண் இடுபொருட்களின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | பொருள் | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வழங்கியது | | பிற நிறுவனங்கள் வழங்கியது | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு மெட்ன் என்.பி.கே. டன்னில் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு மெட்ன் என்.பி.கே. டன்னில் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு மெட்ன் என்.பி.கே. டன்னில் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | இரசாயன உரங்கள் | 16,787.3 | 18,907.24 | 31,673 | 3,826.16 | 1,99,546 | 22,733.40 |
| 2. | பாமணி உர உற்பத்தி | 16,897.0 | 1,207.49 | - | - | 16,897 | 1,207.49 |
| 3. | பாமணி உர விற்பனை 17:17:17 | 16,897.0 | 1,207.49 | - | - | 16,897 | 1,207.49 |
| 4. | பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கியது | - | 114.58 | - | 155.14 | - | 269.72 |
| 5. | விதைகள் வழங்கியது | - | 38.85 | - | 181.98 | - | 220.83 |
| 6. | வேளாண் கருவிகள் வழங்கியது | - | 7.56 | - | 51.33 | - | 58.89 |

[2000 மே 3

## அத்தியாயம் -5

## கூட்டுறவு விற்பனை, பதனிடல் மற்றும் பண்டகச் சேமிப்பு

### கூட்டுறவு விற்பனை

தற்போது தமிழ்நாட்டில் 114 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. 1959 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக மாநிலத்தில் ஏனைய மாவட்டங்களில் தொடக்க கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாக சேவை செய்துவருகிறது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத் தேவைகளை திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் நிறைவு செய்து வருகிறது.

பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளைபொருட்களை கொள்முதல் செய்யும் இவ்விணையம், விளைபொருட்களுக்கு ஆதரவு விலைகளை வழங்கும் வகையில் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தில் முகவராக தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. 26,640 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 35 சொந்த கிடங்குகளையும், 21,355 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 36 வாடகை கிடங்குகளையும், சென்னையில் பேசின் பிரிட்ஜில் 1,350 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள ஒரு குளிர்பதன கிடங்கினையும், சென்னை கோயம்பேட்டில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள மற்றொரு குளிர்பதன கிடங்கினையும், ஆக 2 குளிர்பதன கிடங்குகளையும தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நடத்திவருகிறது.

### (அ) வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் அங்கத்தினர்களுக்கு விவசாய விளைபொருட்களை பதனிடுதல், சேமித்தல் மற்றும் இடைத்தரகர்களின் தலையீடின்றி நல்ல விலைக்கு அவர்களது வேளாண் விளைப்பொருட்களை விற்பதற்கும் உதவிபுரிகின்றன. வேளாண் பொருட்களை ஏலவிற்பனை மூலம் வியாபாரிகளுக்கு விற்கும் பணியிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பணியிலும் இச்சங்கங்கள் ஈடுபடுகின்றன. தமிழ்நாடு



2000 மே 3]

கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் விளைபொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அவற்றை விற்பனைச் செய்வதுடன், சந்தை விலை சாதகமாக அமையும்போது வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வேளாண் விளைபொருட்களை பெரிய அளவில் விற்பனை செய்கிறது.

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு 1998-99 ஆம் ஆண்டில் (தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உட்பட) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடும் மற்றும் சனவரி 2000 வரை எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்களும் பின்வருமாறு:-

| வரிசை எண் (1) | பொருள் (2) | 1999-2000 ஆம் ஆண்டுக்குறியீடு (3) (ரூ. இலட்சத்தில்) | சனவரி 2000 முடிய எய்திய முன்னேற்றம் (4) (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நெல் மற்றும் அரிசி | | 12,49.66 |
| 2. | உணவு தானியங்கள் | | 274.16 |
| 3. | பருத்தி | | 8,977.78 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | | 1,895.36 |
| 5. | பருப்பு வகைகள் | 35,000.00 | 715.47 |
| 6. | மிளகாய் மற்றும் புளி | | 204.87 |
| 7. | வாசனைப் பொருட்கள் | | 72.32 |
| 8. | காய்கறிகள் | | 1,609.43 |
| 9. | மற்றவை | | 3,244.87 |
| 10. | கரும்பு | 22,500.00 | 16,187.31 |
| | கூடுதல் | 57,500.00 | 34,431.23 |

2000-2001 ஆம் ஆண்டிற்கான வேளாண் விளைபொருட்களின் விற்பனை குறியீடு ரூ.625.00 கோடி என குறியீடு நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## (ஆ) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

[2000 மே 3

இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கடன் பெறும் உறுப்பினர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலும் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்களின் பொருட்கள் அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலைக்கு பகிரங்க ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து விற்பனைத் தொகையிலிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்குச் செலுத்திவிடுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டிற்கு குறியீடு ரூ.1.20 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டதில் சனவரி 2000 முடிய முன்னேற்றம் ரூ.0.78 கோடி, 2000-2001-க்கான ஆண்டுக் குறியீடு ரூ.1.25 கோடி அளவுக்கு நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

## (இ) நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைத்தல்

உற்பத்தியாளர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்யவும், நுகர்வோருக்கு அத்தியாவசியமானப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றது.

1999-2000 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு ரூ.550 இலட்சம் ஆகும். சனவரி 2000 முடிய ரூ.498.11 இலட்சம் மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் கூட்டுறவு மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன. இவ்வினத்தில் 2000-2001 ஆம் ஆண்டுக்கான குறியீடு ரூ.575.00 இலட்சம் என நிர்ணயிக்கப்படவுள்ளது.

## (ஈ) விளைபொருட்களை ஈடாகப் பெற்று கடன் வழங்குதல்

சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல இலாபம் பெற ஏதுவாக, அதுவரை அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குத் தேவையான கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் சனவரி வரை ரூ.972.57 இலட்சம் அளவிற்கு கடன்கள்



2000 மே 3]

வழங்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.1000.00 இலட்சம் குறியீடாக நிர்ணயிக்கப்பட உள்ளது.

## பதப்படுத்தும் அலகுகள்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுகள் நடத்தி வரும் கீழ்க்காணும் பலவகைப்பட்ட பதனிடும் அலகுகள் விவசாயிகளுக்கு பதனிடும் வசதிகளை குறைந்த செலவில் செய்து தருகின்றன. அவைகளுக்கு பங்குமூலதனமாகவும் கடனாகவும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப் படுகிறது. மேலும் மாநில அரசும் நிதி உதவி அளித்துவருகிறது.

| வரிசை எண் | பதப்படுத்தும் அலகுகளின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | அரிசி அரைவை ஆலை | 35 |
| 2. | பருத்தி அரைவை ஆலை | 17 |
| 3. | கடலை உடைப்பு இயந்திரங்கள் | 13 |
| 4. | எண்ணெய் தொகுப்பு மற்றும் எண்ணெய் பிழியும் ஆலை | 14 |
| 5. | பழம் பதப்படுத்தும் அலகு | 3 |
| 6. | காப்பி அரைவை ஆலை | 3 |
| 7. | காப்பி சுத்தப்படுத்தும் ஆலை | 1 |
| 8. | மரவள்ளி கிழங்கு ஆலை | 1 |
| 9. | மஞ்சள் அரைவை ஆலை | 2 |
| 10. | மாவு ஆலை | 4 |
| 11. | பருப்பு ஆலை | 2 |
| 12. | சேமியா அலகு | 2 |
| 13. | குளிர்பதன கிடங்கு | 2 |
| 14. | புளி பதப்படுத்தும் அலகு | 1 |
| 15. | சீயக்காய் அரைவை ஆலை | 2 |
| 16 | விதை பதனிடும் அலகு | 2 |
| 17. | சோப்பு உற்பத்தி ஆலை | 1 |
| | மொத்தம் | 105 |

[2000 மே 3

இந்த ஆலைகள் 1998-99ஆம் ஆண்டில் 43,980 மெட்ரிக் டன் பொருட்களையும் 1999-2000 ஆம் ஆண்டில் சனவரி 2000 முடிய 31,479 மெட்ரிக் டன் பொருட்களையும் பதப்படுத்தியுள்ளன.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக மேட்டுப்பாளையத்தில் ரூ. 87.50 இலட்சம் செலவில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு ஒன்றினையும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக கோயம்பேடு வணிக வளாகத்தில் ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் 750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் குளிர்பதன கிடங்கு ஒன்றினையும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(3) பண்டக சேமிப்பு கிராமிய மற்றும் விற்பனை கிடங்குகள்**

30-6-1992 வரை III உலக வங்கியின் கூட்டுறவுப் பண்டக சேமிப்புத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடங்குகள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. பின்னர் 1-7-1992 முதல் IV உலக வங்கியின் கூட்டுறவுப் பண்டக சேமிப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டது. கூட்டுறவுகளுக்கு கிடங்கு கட்ட நிதியுதவி அளிக்கப்படவில்லை.

31-12-1999 ஆம் தேதி நிலவரப்படி உள்ள கிடங்குகளின் எண்ணிக்கையும் அவற்றின் கொள்ளளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| • | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (மெ. டன் இலட்சம்) |
|---|---|---|
| (அ) ஊரக கிடங்குகள் | 5,055 | 5.75 |
| (ஆ) விற்பனைக் கிடங்குகள் | 261 | 1.33 |
| (இ) நுகர்வோர் கிடங்குகள் | 50 | 0.31 |
| மொத்தம் | 5,366 | 7.39 |



2000 மே 3]

## அத்தியாயம் – 6

## நுகர்வோர் கூட்டுறவு

**1. அமைப்பு**

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு கட்டமைப்பானது, தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 36 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளையும், தொடக்க நிலையில் 2,971 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,557 தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் கொண்ட மூன்றடுக்கு அமைப்பாக தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டமைப்பு இயங்கி வருகிறது.

**2. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் தமது முக்கிய நோக்கத்திற்கு இணங்க அண்மையில் உள்ள இதர மாநிலங்களிலிருந்து வேளாண் விளை பொருட்களை அதன் உற்பத்தியாகும் இடத்திலேயே கொள்முதல் செய்திட தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. சந்தையில் நிலவும் விலையை நிலைப்படுத்திட, இவ்விணையம் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் கூட்டு வர்த்தக முறையில் சேர்ந்து 100 மெ.டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமானது மொத்த மற்றும் தொடக்க நிலையிலான பண்டகசாலைகள் விற்பனை செய்வதற்கு பெரிய அளவில் பட்டாசு கொள்முதலுக்கு ஏற்பாடு செய்வதுடன் காகித கொள்முதல் மற்றும் விநியோகப் பணியும் செய்து வருகிறது. மாநிலத்திலுள்ள கூட்டுறவு அச்சகங்களின் காகித கொள்முதலானது ஒருங்கிணைக்கப்பட்டு இவ்வியாபாரத்தில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்**

புதிதாக அமைக்கப்பட்ட கரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவள்ளூர் மற்றும் தேனி மாவட்டங்களில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

நலிவுற்ற கூட்டுறவு மொத்த பண்டகசாலைகளைப் புனரமைக்க அரசு செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் தலைமையின்கீழ் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, முதற்கட்டமாக மாற்றி அமைத்த புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கோயமுத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, சந்திரசேகரபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, திருச்சிராப்பள்ளி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை, திருச்சி மாவட்ட அமராவதி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை மற்றும் பூங்கா நகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைப் பணியாளர்களுக்கென ஓர் தன்விருப்ப ஓய்வுத் திட்டம் வரையப்பட்டு இதற்காக ரூ. 460 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 303 பணியாளர்கள் பண்டகசாலையிலிருந்து தன்விருப்ப ஓய்வு பெற்றுள்ளனர்.

மேலும் பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக சரக்கு வைப்பு மேலாண்மை, விற்பனை மேலாண்மை, கொள்முதல் மேலாண்மை மற்றும் மேலாண்மை கணக்கு முறை, நிர்வாக கணக்கு வைப்பு முறை ஆகியவற்றில் அவர்களுக்குப் பயிற்சியளித்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் கணினி மயமாக்குவதை அறிமுகப்படுத்துவதற்காக அனைத்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் பயன்படுத்தும் வகையிலான ஓர் 'மென்பொருள்' சாப்ட்வேர் ஒருங்கிணைப்பு உருவாக்கிடவும் அப்பணியினை நடேசன் கூட்டுறவு கல்லூரியிடம் ஒப்படைத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள்**

சீரான மற்றும் முறையான கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு இவ்வியக்கத்தில் பெருமளவிலான இளைஞர்களின் ஈடுபாட்டின் அவசியத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது. இது கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியத்தினை புதிய தலைமுறையினர் புரிந்து கொண்டு கூட்டுறவு இயக்கத்தில் விளக்கொளியாகத் திகழ உதவும். எனவே, மாணவர்





கூட்டுறவுப் பண்டகசாலைகளின் முன்னேற்றத்திற்கு பெருமளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**(ii) நுகர்பொருள் சில்லறை விற்பனை**

நுகர்பொருட்களை பொது மக்களுக்கு விற்பனை செய்வது இத்துறையின் பெரும் நோக்கங்களில் ஒன்றாகும். 1999-2000 ஆம் ஆண்டில் (சனவரி 2000 திங்கள் வரை) ரூ. 1670.45 கோடி அளவிற்கு நுகர்பொருள்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(iii) சந்தை தலையீடு**

அத்தியாவசியப் பண்டங்களின் பற்றாக்குறை அதிகமாக அதிகமாக, நுகர்வோர் கூட்டுறவின் பணியும், பொறுப்பும் கூடுகிறது. பொருட்களின் விலை உயரும் போது, பொது மக்களும், அரசும் நுகர்வோர் கூட்டுறவையே பாலைவனத்தில் ஓர் சோலையாக நோக்குகின்றனர். பற்றாக்குறை ஏற்பட்டபோது, வெங்காயம் மற்றும் காய்கறிகள் உயர்ந்துவரும் விலையை குறைக்க அவைகளை வாங்கி பொது மக்களுக்கு அவைகள் உடனடியாகவும் மலிவாகவும் கிடைக்கத் தேவையான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. சில அத்தியாவசியப் பொருட்கள் விலை வெளிச்சந்தையில் உயர்ந்த நேரத்தில் அரசு இதனை ஆராய்ந்து விலையேற்றத்தைத் தடுக்கவும் விலையேற்றத்தைக் கண்காணிக்கவும் ஒரு விலை கண்காணிப்புக் குழுவை அரசுத் தலைமைச் செயலாளரின் தலைமையில் ஏற்படுத்தியது. அவை மற்ற மாநிலங்களிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை அவசர தேவைக்கேற்றாற் போல் வாங்கி கூட்டுறவுப் பண்டகசாலைகளில் விநியோகிக்க வழிமுறைகளை உருவாக்கும். வெளி மாநிலக் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் இணைந்து கொள்முதல் செய்ய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனங்கள் பொது மக்களின் நலன் கருதி தேவைக்கேற்ப 400 மெ.டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்து நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் வழங்கியுள்ளது.

**(iv) மதுபான விற்பனை**

நுகர்வோர் கூட்டுறவுகள் எதிர்கொள்ளும் சவால்கள் மிகவும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. அதன் நோக்கம் நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்வதே என்பதால் மது அருந்தும்

நுகர்வோர்களுக்கும் சேவை செய்ய அது மறுக்கவில்லை. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகளால் மதுபானக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இலாபகரமான வர்த்தகமானது நட்டமடைந்த சில பண்டக சாலைகளில் இலாபம் ஈட்ட உதவியது. அதேசமயம் தரமான மதுவினை மலிவு விலையில் கிடைக்கவும் உதவி செய்தது. 'டாஸ்மாக்' அளித்திடும் மதுவகைகளை மட்டும் விற்பதன் மூலமாக கூட்டுறவுகள் ஆயத்தீர்வை மூலமாக அரசுக்கு வருமானத்தை உயர்த்த தன்னளவில் உதவியது.

## அத்தியாயம் – 7

### பொது விநியோகத் திட்டம்

நியாயவிலைக் கடைகளை நடத்த தனியார் எவருக்கும் உரிமம் அளிக்கப்படவில்லை என்பது இம்மாநில பொது விநியோகத் திட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

பொதுமக்கள் பெரும் அளவில் பயன்படுத்தும் அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் கோதுமை உபபொருள்களான ரவை, மைதா மற்றும் சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை 140 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,863 நகர்ப்புற மற்றும் 16,602 கிராமப்புற நியாயவிலைக் கடைகளின் மூலமாக விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சனவரி 2000 நிலவரப்படி கூட்டுறவுச் சங்கங்களால் 21,465 நியாயவிலைக் கடைகள் நடத்தப்படுகின்றன.

இவற்றுடன் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பெறும் 3,879 பகுதிநேர நியாயவிலைக் கடைகள், வெகுதொலைவில் உள்ள குடும்பங்களுக்கு சேவை செய்கின்றன. மகளிரால் 205 மகளிர் துணை விற்பனை நிலையங்கள் நடத்தப்படுகின்றன. 36 நடமாடும் நியாயவிலைக் கடைகள் மலைப்பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கும் சேவை புரிகின்றன. குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப்படுகின்றன. மண்ணெண்ணெய் விநியோகத்தைச் சீரமைக்க 174 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள், 1998-99 ஆம் ஆண்டில்





ரூ.1,341.96 கோடி மதிப்பிற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகித்துள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில், ஏப்ரல் 1999 முதல் சனவரி 2000 வரை, இவை ரூ. 1,171.96 கோடி மதிப்புள்ள அத்தியாவசிய பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு கீழ்வருமாறு விநியோகித்துள்ளன:-

| வ.எண் | பொருள். | 1998-99 விநியோகிக்கப்பட்ட | | 1999-2000 சனவரி 2000 வரை | |
|---|---|---|---|---|---|
| | | அளவு மெ. டன்னில் | மதிப்பு (ரூபாய் கோடியில்) | அளவு மெ. டன்னில் | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | அரிசி | 1814182 | 696.92 | 1727104.00 | 617.10 |
| 2. | சர்க்கரை | 264266 | 329.10 | 252565.00 | 303.07 |
| 3. | கோதுமை | 133542 | 74.73 | 67402.00 | 49.01 |
| 4. | மண்ணெண்ணெய் (கி.லிட்டரில்) | 644840 | 196.51 | 6195.87 | 173.48 |
| 5. | பாமாயில் | 1971 | 10.95 | 313.00 | 0.92 |
| 6. | ரவை | 11486 | 10.76 | 74.20 | 7.79 |
| 7. | மைதா | 26139 | 22.99 | 20576.00 | 20.59 |
| | மொத்தம் | | 1341.96 | | 1171.96 |

### புதிய நியாயவிலைக் கடைகள் திறத்தல்

புதிய நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கான வழிமுறைகள் மார்ச் 1997இல் அரசால் நிர்ணயிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வரன்முறைகள் வழங்கப்பட்ட பிறகு 1,241 முழுநேர நியாயவிலைக் கடைகளும் 1,951 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் தமிழகம் முழுவதும் திறக்கப்பட்டுள்ளன. அரசு நிர்ணயித்துள்ள வரன்முறைகள் பூர்த்தியாகும் இனங்களில், புதிய நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடந்த ஆண்டே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்** [2000 மே 3

நியாயவிலைக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்கும்போது ஏற்படக்கூடிய அளவு குறைபாடு, குறித்த காலத்தில் வழங்காமை போன்ற குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு மண்ணெண்ணெயை மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் மூலமாக வழங்கும் ஒரு புதிய திட்டத்தில் 1997 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையமும், அருகில் உள்ள ஐந்து அல்லது ஆறு நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள சுமார் 5,000 முதல் 10,000 வரையான குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெயினை வழங்கும்.

இத்திட்டம் முதலில் சென்னையில் 1997 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நகராட்சி பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் 500 விற்பனை நிலையங்களை ஏற்படுத்திட அரசு திட்டமிட்டுள்ளது.

## அத்தியாயம் – 8

## தனிவகைச் சங்கங்கள்

**1. கூட்டுறவு அச்சகங்கள்**

தமிழ்நாட்டில் மொத்தம் 25 கூட்டுறவு அச்சகங்கள் இயங்கிவருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப் பணிகளையும், அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் (ஊராட்சி ஒன்றியம், நகராட்சி முதலியன) ஆகியவற்றின் அச்சுப் பணிகளையும் மேற்கொள்கிறது.

31-3-1999 தேதிய நிலவரப்படி, கூட்டுறவு அச்சகங்களின் மொத்தம் 11,833 உறுப்பினர்கள் உள்ளனர். செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ.93.80 இலட்சம் ஆகும். 1999-2000 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.24 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. அதில் சனவரி 2000 முடிய ரூ.17.04 கோடி எய்தப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.25.00 கோடியாக நிர்ணயிக்கப்படவுள்ளது.



2000 மே 3]

கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், அவை நவீன கருவிகள், இயந்திரங்கள் வாங்குவதற்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 1996-97 ஆம் ஆண்டில், சென்னை மத்தியக் கூட்டுறவு அச்சகத்திற்கும், கோவை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கும் ரூ.5.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1997-98ஆம் ஆண்டில் வடாற்காடு மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கும், புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கும் ரூ.6.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகங்களுக்கு ரூ.4.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கூட்டுறவு அச்சகம் மற்றும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு அச்சகம் இவை ஒவ்வொன்றிற்கும் ரூ.5.00 இலட்சம் நிதியுதவி பகுதி-2 திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டது.

**2. உப்பு தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்**

உப்பு உற்பத்தியாளர்களின் ஏழ்மை நிலையைப் போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உன்னத நோக்கத்துடன் "உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்" உருவாக்கப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கிவரும் 10 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 5 சங்கங்கள் பிரத்தியேகமாக ஆதிதிராவிட மக்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

'தாட்கோ' திட்டத்தின் கீழ் அரசால் வழங்கப்பட்டுள்ள நிதி உதவி மூலம் அயோடின் கலந்த உப்பு உற்பத்தி செய்தல் உட்பட பல்வேறு திட்டங்கள் இச்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்**

தற்போது இம்மாநிலத்தில் 212 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 40 விழுக்காடு சங்கங்கள் தர்மபுரி, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ளன. மொத்தம் உள்ள தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் 40 தொழிலாளர் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக மட்டுமே இயங்கி வருகின்றன. ஒப்பந்த அடிப்படையில், வேலைவாய்ப்பினை அளித்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உயரிய பணியில் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்களுக்குத் தேவையான பங்கு மூலதனம்,

[2000 மே 3

நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை அளித்தல் முதலான பல்வேறு இனங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்தில், புதிய தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

**4. இதர தனி வகைச் சங்கங்கள்**

முடிதிருத்துதல் மற்றும் சலவைத் தொழில்களை செய்யும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது 12 சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**5. மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு**

பழங்குடியினர் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தற்போது தமிழ்நாட்டில் 18 "மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்" செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் பழங்குடியினத்தைச் சேர்ந்த 73,535 நபர்களும், பழங்குடியினரல்லாத 6,015 நபர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு இச்சங்கங்களுக்கு 'பழங்குடியினர் துணைத் திட்டத்தின்' கீழ் தொடர்ந்து நிதி உதவியினை வழங்கி வருகின்றது. இச்சங்கங்கள் விவசாயம் மற்றும் பிற உற்பத்தி காரியங்களுக்காக வட்டியில்லாக் கடன்களை அளிக்கின்றன. இச்சங்கங்களின் மூலம் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில், பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து மானியம், வாகன ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகனப் பராமரிப்பு மானியம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகிறது. இச்சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சில புதிய திட்டங்களுக்கும் அரசு மானிய நிதி உதவி வழங்கி வருகிறது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1996-97 வரை) பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களுக்கு மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிதிஉதவியாக ரூ.415.88 இலட்சம் வழங்கியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத்



2000 மே 3]

திட்ட காலத்தில், 1997-98 ஆம் ஆண்டில் ரூ.84.64 இலட்சம், 1998-99 ஆம் ஆண்டில் ரூ.90.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.174.64 இலட்சம் அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.90.00 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | கடன் வழங்கியது | வேளாண் விளைப் பொருள் கொள்முதல் | வேளாண் இடுபொருள் வழங்கியது | சிறுவனப் பொருள் சேகரம் | நுகர்பொருள் விநியோகம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் | | | (ரூ. இலட்சத்தில்) | | |
| 1992-93 | 409.88 | 71.65 | 93.52 | 87.23 | 309.67 |
| 1993-94 | 492.04 | 90.04 | 105.07 | 92.26 | 415.07 |
| 1994-95 | 641.23 | 100.64 | 101.25 | 88.65 | 481.04 |
| 1995-96 | 790.80 | 122.22 | 123.56 | 112.95 | 476.90 |
| 1996-97 | 847.07 | 135.98 | 125.62 | 67.85 | 580.61 |
| ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் | | | | | |
| 1997-98 | 734.52 | 123.77 | 110.08 | 46.08 | 427.01 |
| 1998-99 | 580.82 | 61.43 | 115.00 | 64.96 | 511.52 |
| 1999-2000 (சனவரி 2000 வரை) | 321.55 | 79.92 | 26.34 | 92.00 | 505.94 |

[2000 மே 3

## அத்தியாயம் - 9

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 1. மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப் பணிகள்

கூட்டுறவு இயக்கம் செம்மையான முறையில் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்காணிக்கவும், பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், அலுவலர் அல்லாதவர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளிக்கவும், கூட்டுறவு பற்றிய விளம்பரங்கள் ஆகிய பணிகளைச் செய்திடவும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டங்களில் உள்ள 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும், கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றில் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது பொது மக்களுக்கும் பயிற்சியளிக்கின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் (1) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (2) கூட்டுறவு கல்வி நிதி எனும் இரு நிதிகளைப் பராமரித்து வருகிறது.

அனைத்து மாநில தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்களிடமிருந்து வசூலிக்கும் தொகையான வருடாந்திர சந்தா, கூட்டுறவு வெளியீடுகள் மூலம் கிடைக்கும் வருமானம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிகளுக்கு பிற சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படும் நிதிகளையும் கொண்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தனது பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை திரட்டுகிறது.

கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பயன்கள் குறித்து மக்கள் தெளிவுற அறிந்திட புத்தக வெளியீடுகள், கண்காட்சிகள், விளம்பரச் சுவரொட்டிகள், திரை அரங்குகளில் ஸ்லைடுகள், திரைக் காட்சிகள் முதலான வசதிகளைப் பயன்படுத்தி, கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்பும் நடவடிக்கைகளைப் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மேற்கொள்கின்றது. மேலும் உறுப்பினர் கல்வி நிகழ்ச்சிகளையும், மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளையும் கூட்டுறவு ஒன்றியம் வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் வழியாக நடத்தி வருகின்றது.



2000 மே 3]

அனைத்துத் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு கூட்டுறவுக் கொள்கை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றியும், கூட்டுறவுகளின் செயல்பாடு பற்றியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் பி.ஏ. (கூட்டுறவு), எம்.ஏ. (கூட்டுறவு), பி.காம்., மற்றும் எம்.காம்., பட்டப் படிப்புகளில் கூட்டுறவைப் பாடமாகப் படித்து சிறந்து விளங்கும் மாணவ/மாணவியர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வழங்குவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கல்லூரி அளவில் கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சியை பெரிதும் ஊக்குவிக்கிறது.

### 2. கூட்டுறவுப் பயிற்சி

இளநிலை அலுவலர்களுக்கு, கூட்டுறவுப் பயிற்சி அளிக்க மாநிலத்தில் 10 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றுடன் 1998-99 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் புதிதாக ஒரு கூட்டுறவு மேலாண்மை நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், நாகர்கோவில் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தொடங்க தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. தற்போது மாநிலத்தில 16 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு மேலாண்மை நிலயங்கள் கூட்டுறவு தொடர்பாக பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுத் துறையினைச் சார்ந்த பணியாளர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் கூட்டுறவுப் பாடத்தில் பட்டயப் பயிற்சியும், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக்கல்வி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியும், அளிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கு நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்திலும், மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்திலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் 210 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு, அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினைப் பெற ஏதுவாக, இவ்விரு கூட்டுறவு மேலாண்மை

[2000 மே 3

நிலையங்களில் உயர்நிலை கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டது.

சென்னையை, அடுத்துள்ள மாதவரத்தில், விவசாயக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம் ஒன்று தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது. இது கூட்டுறவுக் கடன் சங்க அலுவலர்களுக்குத் தேவையான முழுநேரப் பயிற்சிகளையும், குறுகிய கால கூட்டுறவுப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களை உற்சாகப்படுத்தும் முகத்தான், அவர்கள் சுயவேலைவாய்ப்பு தேடிக்கொள்ளும் வகையில் ஏற்ற தொழில் பயிற்சியினை அளிக்கும் நோக்கத்துடன் தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொழில் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 1-4-1997 முதல் இத்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நடத்திவரும் கல்வி மற்றும் தொழில் கூட்டுறவுப் பயிற்சி சங்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. 1997-98 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் மற்றதொரு தொழிற் பயிற்சிப் பள்ளி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் தொடங்கப்பட்டு உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடியில் 2000-2001 ஆம் ஆண்டில் பாலிடெக்னிக் ஒன்றைத் தொடங்குவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

## அத்தியாயம் - 10

### நிறைவுரை

கூட்டுறவு அமைப்புகள் விவசாயிகளுக்கு வேளாண் கடன் வழங்குதல், இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல், நுகர்வோர் பணிகள், சந்தை விலைகளை நிலைப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து செய்து வருகின்றன. கூட்டுறவு அமைப்புகளுக்கு சனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பிறகு இந்த அமைப்புகள் மேலும் புத்தொளி பெற்று உத்வேகத்துடன் செயல்பட்டு வருகின்றன. மக்களின் அன்றாட



2000 மே 3]

வாழ்க்கையில் ஓர் அங்கமாக விளங்கும் கூட்டுறவு இயக்கம் சமுதாய வளர்ச்சிக்கு பெருமளவில் முக்கிய பங்காற்றி வருகிறது.

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

-அய்யன் திருவள்ளுவர்

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும்,
நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை
தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக்
காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

-கலைஞர் உரை

## இணைப்பு - 1

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வரிசை எண் (1) | சங்கங்களின் வகைகள் (2) | சங்கங்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள் | 6 |
| 2. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 23 |
| 3. | மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் | 36 |
| 4. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 1 |
| 5. | மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் | 29 |
| 6. | கூட்டுறவு அச்சகங்கள் | 25 |
| 7. | கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் | 16 |
| 8. | தொடக்க கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 114 |
| 9. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 4,582 |

| வரிசை எண் (1) | சங்கங்களின் வகைகள் (2) | சங்கங்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 10. | பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 18 |
| 11. | தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 181 |
| 12. | கூட்டுறவு நகர வங்கிகள் | 126 |
| 13. | பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 1,892 |
| 14. | தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்பட) | 3,557 |
| 15. | தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 212 |
| 16. | ஊரக மின்சார கூட்டுறவுச் சங்கங்கள் | 3 |
| 17. | இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 319 |
| | | 11,139 |

## இணைப்பு - 2

31-3-1998 அன்றைய நிலவரப்படி பலவகையான கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்குமூலதனம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வரிசை எண் (1) | நிறுவனத்தின் பெயர் (2) | 31-3-'99-ல் நிலுவை(ரூபாயில்) (3) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 15,78,68,500 |
| 2. | தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி | 1,26,61,000 |
| 3. | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் | 2,14,88,000 |
| 4. | தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் | 1,15,35,945 |



| வரிசை எண் (1) | நிறுவனத்தின் பெயர் (2) | 31-3-'99-ல் நிலுவை(ரூபாயில்) (3) |
|---|---|---|
| 5. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 10,25,000 |
| 6. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 47,71,35,540 |
| 7. | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் | 6,29,63,994 |
| 8. | பெரிய அளவிலான பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 63,78,436 |
| 9. | தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 13,91,514 |
| 10. | ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் | 42,00,000 |
| 11. | கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,40,000 |
| 12. | பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,68,000 |
| 13. | உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் | 2,01,846 |
| 14. | உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,40,000 |
| 15. | கூட்டுறவு அச்சகங்கள் | 14,53,790 |
| 16. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 58,12,790,049 |
| 17. | தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 89,72,509 |
| 18. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 11,38,42,698 |
| 19. | நகர கூட்டுறவு வங்கிகள் | 9,52,176 |
| 20. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 12,80,63,770 |
| 21. | காமராஜர், கடலூர், விழுப்புரம், கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் | 38,99,35,425 |
| 22. | கால்நடைத் தீவன கூட்டுறவுச் சங்கம் | 30,00,000 |
| | | 1,98,61,36,212 அல்லது 198.61 கோடிகள் |

[2000 மே 3

## இணைப்பு-II

[391 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**கோரிக்கை எண் 34**

## உணவு நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

### அத்தியாயம் - 1

### முன்னுரை

*பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்*
*தீப்பிணி தீண்ட லரிது.*

*(227)*

-அய்யன் திருவள்ளுவர்

### பொருளுரை

*பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசியென்னும் கொடிய நோய் அணுகுவதில்லை.*

-கலைஞர்

ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய அறைகூவல்களாக அமைவது, பசியும், ஊட்டச்சத்து குறைவுமாகும். மக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்தை மேம்படுத்துவதே நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும் என்பதனை நன்கு உணர்ந்துள்ளதால், இந்த அரசு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தேவைப்படும் சத்தான உணவினை வழங்குவதற்கு முக்கியத்துவம் அளித்துவருகிறது. நியாயவிலைக் கடைகள் வாயிலாக இன்றியமையாப் பொருட்களைச் சமமாகப் பங்கிட்டு அளிப்பதன் மூலம் அனைத்துப் பிரிவு மக்களுக்கும், குறிப்பாக, ஏழை எளியோருக்கு நேரிடும் சிரமங்களைக் குறைப்பதற்கு மாநில அரசு பெரும் முயற்சி செய்து வருகின்றது.



2000 மே 3]

*1.2.* ஒரு நாடு அல்லது மாநிலத்தின் உணவுக்கு உத்தரவாதம் என்பது (Food Security) அனைத்துப் பிரிவு மக்களுக்கும், தமது உடல் நலம் காத்து நல்வாழ்வு வாழ அவர்களுக்குத் தேவையான அளவிற்கு, சத்தான உணவு தங்குதடையின்றி எல்லா நேரங்களிலும் கிடைக்கப்பெறுவதற்கு உறுதி அளிப்பதாகும். உணவுக்கு உத்தரவாதம் என்பது பல்வேறு கூறுகள் அடங்கப் பெற்றதாகும். அவை, தேவைக்கேற்ப உணவுப் பொருள் எப்பொழுதும் கிடைக்கச் செய்தல், உணவுப் பொருட்கள் தங்குதடையின்றி எளிதில் பெறுதல், பொருட்கள் தரமுடையதாக இருத்தல் மற்றும் எளியோரும் வாங்குகிற வகையில் விலையினை வரம்பிற்குள் அமைத்தல் என்பவையாகும். ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் தேவையான அளவுக்கு உணவினைப் பெறுவதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொருவரின் வாங்கும் திறனையும் அறிந்து, அதன்படி, வழங்குதல் என்பது உணவு வழங்கல் மேலாண்மையில் முக்கியமானதாகும்.

*1.3.* அகில இந்திய அளவில் சராசரியாக ஒரு ஹெக்டேரில் அதிக அரிசி உற்பத்தியில் முதன்மை வகிக்கும் மாநிலமாக நமது மாநிலம் இருந்த போதிலும், இங்கு உற்பத்தியாவதைக் கொண்டு நம் மாநிலத்தின் அனைத்து மக்களின் உணவுத் தேவையினை நிறைவு செய்ய இயலவில்லை. கூடுதல் தேவையினை ஈடுசெய்ய, பிற மாநிலங்களில் இருந்து பெற வேண்டியுள்ளது. ஆகையினால், ஏழை எளிய மக்களுக்கு பொருட்களை பெறமுடிகின்ற விலையில் வழங்குவதன் வாயிலாக, உணவுக்கு உத்தரவாதத்தை அளிப்பதால் பொது விநியோகத் திட்டம் மிக முக்கிய பங்கு வகித்து, அனைத்து மக்களுக்கும் உணவுக்கு உத்தரவாதம் அளித்து வருகின்றது. பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியை, மைய அரசு ஒதுக்கீட்டின் வாயிலாகவும், காவிரிப் பாசனப் பகுதிகளில் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாயிலாக நெல் கொள்முதல் செய்தும் ஈடுசெய்யப்படுகின்றது. வெளிச் சந்தையில், தேவைக்குக் குறைவாக உள்ள பற்றாக்குறை அரிசியை, தனியார் வியாபாரிகள், வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து வருவதன் வாயிலாக சரி செய்யப்படுகின்றது.

*1.4.* இம்மாநிலத்தின், ஆண்டு உணவுக் கொள்கை, அந்தந்த ஆண்டில் எதிர்ப்பார்க்கப்படும் மொத்த நெல் உற்பத்தி, மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியின் அளவு, வெளிச் சந்தையில் நிலவும் அரிசியின் விலை, நெல் கொள்முதல் முறை, அவ்வப்பொழுது மைய அரசு அறிவிக்கின்ற உணவுக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகின்றது.

*1.5.* சுருங்கக் கூறின், இம்மாநிலத்தின் உணவுக் கொள்கை கீழ்க்கண்டவாறு மூன்று நோக்கங்களை உள்ளடக்கியதாகும்:

(அ) அனைத்துப் பிரிவு மக்களுக்கும் குறிப்பாக, ஏழை எளிய மக்களுக்கு போதுமான அளவிற்கு உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்:

(ஆ) நியாயமான விலையிலும், தங்கு தடையின்றியும் உணவுப் பொருட்கள் வழங்கல்; மற்றும்

(இ) இன்றியமையாப் பொருட்களை வாங்க இயலும் விலையில் கிடைக்கச் செய்தல்.

*1.6.* மேற்கூறிய நோக்கங்களை எய்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்து, பின்வரும் அத்தியாயங்கள் விளங்குகின்றன.

## அத்தியாயம் – 2

## பொது விநியோகத் திட்டம்

*2.1.* தமிழக மக்களுக்கு, இன்றியமையாப் பொருட்களை அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலும், அப்பொருட்களை ஏழை, எளிய மக்கள் வாங்க இயலும் விலை வரம்பிற்குள்ளும், அவர்கள் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் தரமுடையதாக வழங்குவதே பொது விநியோகத் திட்டத்தின் குறிக்கோளாகும். இம்மாநிலத்தில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் உள்ள நியாயவிலைக் கடைகள் வாயிலாக அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்களை அரசு வழங்கி வருகின்றது.

*2.2.* கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் பரந்த அளவில் ஒருங்கிணைந்து கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்தும் 26,515 நியாயவிலைக் கடைகள் வாயிலாக, ஏறத்தாழ 1.56 கோடி குடும்ப அட்டைதாரர்களின் தேவையினைப் பொது விநியோகத் திட்டம் நிறைவு செய்து வருகிறது. சென்ற ஆண்டில், மொத்தமாக 22,08,013 டன்கள் அரிசியும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1,84,001 டன்கள் அரிசியும் விநியோகிக்கப்பட்டது. சென்ற ஆண்டு மாதமொன்றுக்கு சராசரியாக விநியோகிக்கப்பட்ட சர்க்கரை/கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள்/மண்ணெண்ணெய்



**நியாய விலைக் கடைகளில் ஒளிக்குறியீடு தேர்ந்தறியும் கருவி முறைத் திட்டம்:**

*2.53.* நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டில் பொது மக்களால் பெரும்பான்மையாக சொல்லப்படும் புகார்களான உரிய அளவில் வழங்காமை, இரட்டிப்புப் பட்டியல், கூடுதலாக வழங்கல் ஆகிய குறைகளைக் களைவதற்காக ஒளிக்குறியீடு தேர்ந்தறியும் கருவி முறைத் திட்டத்தினை ஒரு முன்னோடித் திட்டமாக சென்னை, விழுப்புரம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள சுமார் 110 நியாயவிலைக் கடைகளில் மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் பட்டியலின் விவரங்கள் கணினி ஸ்கேனர் மூலமாக பதிவு செய்யப்படுகின்றது. இத்திட்டம் 30-06-2000 வரை நடைமுறையிலிருக்கும். அதன் பிறகு, இத்திட்டம் குறித்து திறனாய்வு செய்து மற்ற மாவட்டங்களிலும் விரிவுபடுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

## அத்தியாயம்–3

## கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துதல்

*3.1.* ஒருசில இன்றியமையாப் பொருட்களை பொது மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யவும், பதுக்கல், கள்ளச் சந்தை போன்றவற்றைத் தடுக்கவும் மைய அரசு 1955 ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தை இயற்றியது.

*3.2.* 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ், மாநில அரசு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள உணவுத் துறை தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் பின்வருமாறு:—

1. 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்துதல்) ஆணை.
2. 1977ஆம் ஆண்டு பயிறு வகைகள் சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் (சேமிப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணை.
3. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக் காட்டி வைத்தல் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல்) ஆணை.

4. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தர நிர்ணயம்) ஆணை.

5. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை (வணிகத்தை முறைப்படுத்துதல்) ஆணை.

6. 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் (எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு) ஆணை.

7. 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

8. 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல், அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.

9. 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

10. 1993 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

11. 1993ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்ச விலை நிர்ணயம்) ஆணை; மற்றும்

12. 1998ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை.

3.3. உணவுப் பொருட்கள் வழங்கல் துறை அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்ற புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்தி வருகின்றனர். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் காவல் துறைத் தலைவர் பதவி ஒன்றும் காவல் துறை கண்காணிப்பாளர் பதவி ஒன்றும் 09-12-99 முதல் உருவாக்கப்பட்டு குடிமைப் பொருள் குற்ற புலனாய்வுப் பிரிவு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை எய்துவதற்காக கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் ஒரு மூத்த காவல் துறை அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் இப்புலனாய்வுப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

3.4. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ், 1999 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் பற்றிய விவர அறிக்கை இணைப்பு-3 மற்றும் 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம்—4

## நுகர்வோர் நல நடவடிக்கைகள்

4.1 இன்று நுகர்வோர் இயக்கம் மிக வேகமாக வளர்ந்து வரும் இயக்கமாக உள்ளது. பொது மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், நுகர்வோர் பாதுகாப்பு கோரும் பொது மக்கள் அதிக அளவில் பயன்பெற அரசு போதிய ஊக்கமளித்து வருகிறது. நுகர்வோர் இயக்கம் கிராம அளவில் வள சற்றேறக்குறைய 300 தன்னார்வ நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. அவை நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வுகளை அனைத்துப் பகுதிகளுக்கும் குறிப்பாக கிராமப் புறங்களில் ஏற்படுத்தி வருகின்றன. நுகர்வோர் உரிமைகள் குறித்து, தேசிய சேவைத் திட்டத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தல், சிறு கையேடுகள் அச்சிடல், நுகர்வோர் விழிப்புணர்வு பெருக மாநில அளவில் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இவ்வியக்கத்தில் சீரிய பணியாற்றுவோருக்கு அரசு மாநில விருதுகள் வழங்கிவருகின்றது. நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ள நடப்பாண்டில், 2000-2001-ல் ரூ. 10 இலட்சத்தினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

4.2. 28-02-2000 அன்று மாநில நுகர்வோர் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் போக்குவரத்து, ரெயில்வே, தொலைபேசி மற்றும் மின்சாரம் போன்ற துறைகளில் நுகர்வோரின் குறைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-ம் நாள் "உலக நுகர்வோர் உரிமைகள் தினம்" கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 15-03-2000 அன்று நுகர்வோர் தினம் சேலத்தில் கொண்டாட மாநில அரசு ரூ. 1.50 இலட்சம் வழங்கியுள்ளது.

### நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்:

4.3. 1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னையில் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

4.4. மாவட்ட அளவில் தனித்தியங்கும் 12 மாவட்ட குறைதீர் மன்றங்களும், 12 மாவட்டங்களில் இரு மாவட்டங்களுக்கு ஒரு தலைவர்

[2000 மே 3

என்ற அடிப்படையில் சேர்ந்தியங்கும் 6 நுகர்வோர் மாவட்ட குறைதீர் மன்றங்களும் கீழ்க்கண்டவாறு தற்பொழுது செயல்பட்டு வருகின்றன.—

| வ. எண் | தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள் | வ. எண் | சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை-தெற்கு | 1. | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 2. | சென்னை-வடக்கு | 2. | சேலம் மற்றும் தர்மபுரி |
| 3. | திருச்சிராப்பள்ளி | 3. | காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் |
| 4. | ஈரோடு | 4. | திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை |
| 5. | மதுரை | 5. | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| 6. | விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்) | 6. | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |
| 7. | கன்னியாகுமரி (நாகர்கோவில்) | | |
| 8. | கோயம்புத்தூர் | | |
| 9. | நீலகிரி | | |
| 10. | கடலூர் | | |
| 11. | தஞ்சாவூர் | | |
| 12. | நாகப்பட்டினம் | | |

4.5. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட திருவாரூர், திருவள்ளூர், கரூர், பெரம்பலூர், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய ஆறு மாவட்டங்களுக்குத் தனித்தனியே மாவட்ட குறைதீர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

4.6. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்புகள் 5, 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்—5

### விலைவாசி நிலவரம்

5.1. 1998 ஆம் ஆண்டில் பருவ நிலை பாதிக்கப்பட்டதனால் பல்வேறு இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தி கணிசமாகக் குறைந்தது. அதன் விளைவாக, நாடு முழுவதும் வெளிச்சந்தையில் இன்றியமையா-



2000 மே 3]

பொருட்களின் விலைகள் மிகவும் உயர்ந்து காணப்பட்டன. இதனால், பொதுமக்கள் குறிப்பாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள், குறிப்பாக வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவற்றின் விலைகள் மிகவும் அதிக அளவில் உயர்ந்தன.

5.2. 1998-99 ஆம் ஆண்டில், குறிப்பாக பருப்பு, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்ந்து காணப்பட்டன. இத்தகைய பொருட்களை இறக்குமதி செய்து இவற்றின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மைய அரசும் மாநில அரசும் மேற்கொண்டன.

5.3. 1999-2000 ஆம் ஆண்டில் அனைத்து இன்றியமையாப் பொருட்களின் விலைகளும் நிலையாக இருந்தன. மேலும், நல்ல அறுவடையின் காரணமாகவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ததன் காரணமாகவும், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் இறங்குமுகமாக இருந்தன. ஆயினும், நெல் உற்பத்தித் தொடர்பான பல்வேறு காரணங்களினாலும், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தியதன் காரணமாகவும் அரிசியின் விலை சற்று உயர்ந்தது.

5.4. நாடு முழுவதும் இன்றியமையாப் பொருட்களின் விலை ஏறுமுகமாக இருந்தபோது, தலைமைச் செயலரின் தலைமையில் விலைவாசி கண்காணிப்புக் குழு ஒன்றை 27-11-1998 அன்று அரசு ஏற்படுத்தியது. இக்குழு வாரம் ஒரு முறை கூடி, காய்கறிகள் உள்ளிட்ட அனைத்து உணவுப் பண்டங்களின் விலைவாசி நிலவரத்தை ஆய்வு செய்து, அதனடிப்படையில் விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு, மாநில அரசும் பிற நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசனை வழங்குகிறது. இக்குழு விலைவாசி நிலவரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

## அத்தியாயம்—6

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

6.1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாநில அரசின் சார்பாக உணவு தானியங்கள் உணவுப் பொருட்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தும்,

வாங்கியும், கிடங்குகளில் பாதுகாத்தும், பதப்படுத்தியும், பொது மக்களுக்கு வழங்குவது என்ற அரசின் தீர்க்கமான கொள்கை முடிவினைச் செயற்படுத்த ஏற்படுத்தப்பட்டது.

6.2. விவசாயிகளிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், அதன் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாகக் கொள்முதல் செய்யப்படும் நெல், இக்கழகத்தின் கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்நோக்கத்திற்காக 195 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 16 இலட்சம் செலவில் இரு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லானது மாதமொன்றுக்கு 43,600 டன்கள் அரைவைத் திறன் கொண்ட, இக்கழகத்திற்குச் சொந்தமான 23 நவீன அரிசி ஆலைகள் வாயிலாகவும், தனியார் அரைவை முகவர்கள் வாயிலாகவும் பதப்படுத்தப்பட்டு, அரைவை செய்யப்படுகிறது. அரசின் மொத்த முகவரான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாலின், எண்ணெய் ஆகியவற்றை எடுக்கிறது. மேலும், இக்கழக நியாய விலைக் கடைகளின் வாயிலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகமும் செய்து வருகிறது.

6.3. அறுவடைக் காலங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லினைச் சேமித்து வைப்பதற்கும் மற்றும் மையத் தொகுப்பிலிருந்து பெறப்படும் இன்றியமையாப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் போதுமான சேமிப்பு வசதிகள் உள்ளன. மேலும், இக்கழகத்தால் பொது விநியோகத் திட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை சேமித்து வைக்கவும் இயலும். இக்கழகத்திற்கு மாநிலம் முழுவதும் பரவலாக சேமிப்புக் கிடங்கு வசதிகள் உள்ளன. இக்கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகளின் சேமிப்பு வசதியின் அளவு 6.20 இலட்சம் டன்கள் ஆகும். இதுதவிர, கூடுதல் கிடங்குகள் வசதி தேவைப்படின் இக்கழகம், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் போன்ற நிறுவனங்களிடமிருந்து கிடங்குகளை வாடகைக்கு எடுத்துக்கொள்ளும்.



6.4. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 35 கோடி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 31.68 கோடி. 1972ஆம் ஆண்டில் ரூ. 12 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வியாபார அளவு பல மடங்கு உயர்ந்து 1999-2000ஆம் ஆண்டில் ரூ. 2780 கோடியை எட்டியுள்ளது. "நட்டமும் இல்லை, இலாபமும் இல்லை" என்ற கோட்பாட்டின் அடிப்படையில், இக்கழகம் இயங்கி வருகிறது. சமுதாயத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்குப் பொருளாதார விலையை விட குறைந்த விலையில் அரிசி விற்பனை செய்வதால், ஏற்படும் நட்டமானது சர்க்கரை, கோதுமை, போன்ற பொருட்களை விற்பதால் ஏற்படும் இலாபத்திலிருந்தும், ஒவ்வொரு ஆண்டும் அரசால் வழங்கப்படும் மானியத் தொகையிலிருந்தும் சரிக்கட்டப்படுகின்றது.

6.5. நிர்வாக வசதியை முன்னிட்டு இக்கழகம், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மண்டலம் என 29 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலமும் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இக்கழகத்தில் சுமார் 13 ஆயிரம் நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

6.6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அதனால் நடத்தப்பட்டு வரும் 1,109 நியாய விலைக் கடைகள் வாயிலாக இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்து பொது விநியோகத் திட்டத்தில் முக்கிய பங்கினை வகிக்கிறது. மேலும், இக்கழகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் சிறைத் துறை பணியாளர்களுக்குப் பொருட்களை வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களுக்கும் பொருட்களை வழங்கி வருகின்றது. நுகர்வோர் சுயசேவைப் பிரிவு அங்காடி உட்பட, பல அமுதம் பல்பொருள் அங்காடிகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றது. இவ்வங்காடிகள் வெளி அங்காடிகள் விலையைவிடக் குறைவான விலையில் பொருட்களை விற்பனை செய்து, மாநிலத்தின் விலை நிலவரத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவி புரிகின்றன.

6.7. 1998-1999 ஆம் ஆண்டில் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்குப் போனசாக 8.33 சதவிகிதம் மற்றும் அன்பளிப்புத்

[2000 மே 3

தொகையாக 11.67 சதவிகிதம் ஆகியன அறிவிக்கப்பட்டன. இத்தொகை 1999 தீபாவளிப் பண்டிகையின்போது வழங்கப்பட்டது. 2000-ம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது, மேற்படி பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 350 வழங்கப்பட்டது.

## அத்தியாயம்–7

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

7.1. இந்திய திருநாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றம் காரணமாக மற்ற பல வசதிகளுடன் அறிவியல் முறையில் சேமிப்பு வசதியும் தேவை என்பதும் உணரப்பட்டது. "ஊரகக் கடன்" தொல்லையிலிருந்து விவசாயிகளைக் கரையேற்றி, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையே ஈடாக வைத்து, கடன் பெற வசதி செய்யலாமெனவும் கருதப்பட்டது. இவற்றினை நோக்கங்களாகக் கொண்டே தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தோற்றுவிக்கப் பட்டது.

7.2. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

அ. உணவு தானியங்கள் மற்றும் பிற அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களை, அறிவியல் முறையில் சேமித்து வைக்க வசதிகள் செய்தல்.

ஆ. முறையான விற்பனைக்கு ஏற்பாடு செய்தல், கழிவுகளை நீக்குதல் மற்றும் இடைத் தரகர்களைத் தவிர்த்தல்.

இ. சேமிப்புக் கிடங்குகளில் அளிக்கப்பட்ட பற்றுச் சீட்டு அடமானத்தின்பேரில் கடன் வசதி செய்து கொடுத்தல்.

7.3. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தெரிவு செய்யப்பட்ட 54 இடங்களில் சொந்தமாக சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்தி உள்ளது. 10 இடங்களில் வாடகைக்குக் கிடங்குகளை எடுத்துள்ளது. இதன் மொத்த சேமிப்பு அளவு 6.24 இலட்சம் டன்கள் ஆகும். இந்நிறுவனம் தூத்துக்குடி துறைமுகத்தில் ஒரு சுங்கப்பிணை சேமிப்புக் கிடங்கினை நடத்தி வருகின்றது. பூச்சித் தொற்றுதலைத் தவிர்த்தல் மற்றும் இருப்பினைப் பாதுகாத்தல் ஆகிய செயல்பாடுகளில் நவீன முறையைப் பின்பற்றுவதால், இந்நிறுவனம் வைப்பீடுதாரர்களிடையே அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இச்செயல்பாடுகள் இந்நிறுவனத்தின் அறிவியல் சேமிப்பு வசதியை பொதுமக்கள் மற்றும் வணிகர்களிடத்தில் செல்வாக்கு பெற்றுத் தருவதற்கு உதவி புரிகின்றன.



2000 மே 3]

7.4. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.761 இலட்சம் ஆகும். அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 800 இலட்சம் ஆகும். இந்நிறுவனத்திற்கு மாநில அரசும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் 50:50 விகிதத்தில் பங்கு மூலதனம் அளித்துள்ளன. 1998-99ஆம் ஆண்டிற்கு, பங்குதாரர்களுக்கு 3 சதவீதம் ஈவுத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

7.5. இந்நிறுவனம் வலுவான வணிகக் கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டு வருவதால் ஆரம்ப காலத்தைத் தவிர, பின்வரும் ஆண்டுகளில் இலாபத்தையே ஈட்டியுள்ளது. 1998-1999 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ. 245 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

7.6. 1998-1999 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ் அறிவிக்கப்பட்டது. இத்தொகை 1999 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்போது வழங்கப்பட்டது.

## அத்தியாயம்–8

## நிறைவுரை

8.1. இக்கொள்கை விளக்கக் குறிப்பில், மாநிலத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்க இவ்வரசால் எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. தரமான நல்ல வாழ்க்கையை மக்களுக்கு அமைத்துத் தருவதை உறுதி செய்வதுதான் இவ்வரசு மக்களுக்குத் தரும் உறுதிமொழியாகும். இவ்வகையில், அரசு எடுத்துவருகின்ற முனைப்பான கொள்கை

முடிவுகளும், அதனைப் பின்பற்றி எடுக்கப்படுகின்ற விரைவான நடவடிக்கைகள் மட்டுமே ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பாதுகாக்கவும் உதவுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழை மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு, மைய அரசு 2000-2001 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தியபோதும், இதனால் மாநில அரசுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச்சுமையைக் கருதாமல், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தாமல் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தற்போதைய விலையிலேயே தொடர்ந்து வழங்கப்படும் என்பதனை உறுதிபடத் தெரிவித்துள்ளார்கள். மேலும், 1999ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில், பொது விநியோகத் திட்டத்தில் அனைத்துப் குடும்ப அட்டைதாரர்களும் எந்த சிரமமுமின்றி அனைத்துப் பொருட்களையும் பெற மாவட்ட அளவில் நிலையான மாத அட்டவணை (Fixed Calendar System) ஒன்றை வரையறுத்து, அதனைப் பின்பற்றி இன்றியமையாப் பொருட்கள் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும், நியாய விலைக் கடைகளில் உள்ள பொருட்கள் இருப்பு போன்ற முழு விவரங்கள் அனைத்தும் பொதுமக்கள் அறியும் வண்ணம் உள்ளூர் விளம்பரத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

8.2.பொது விநியோகத் திட்டத்தில் வழங்கும் இன்றியமையாப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும், அப்பொருட்கள் முறையாக வழங்கவும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுப் பிரிவினை பலப்படுத்தி கூடுதல் பதவியை உருவாக்கி மூத்த கூடுதல் காவல் துறை இயக்குநரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இப்பிரிவினைக் கொண்டுவந்தது அரசின் மற்றொரு முற்போக்கான நடவடிக்கை ஆகும். இக்கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களால் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் உயரும் என்று இவ்வரசு உறுதியாக நம்புகிறது.



இணைப்பு–1

**நெல் கொள்முதல் விலை, கொள்முதல் முறை போன்ற விவரங்கள்**

| வ. எண் | பருவம் | நெல் கொள்முதல் விலை (குவிண்டாலுக்கு) | | | கொள்முதல் முறை | கொள்முதல் செய்த அளவு | ஊக்கத்தொகை/ இடை நிகழ்வுச் செலவு கொடுக்கப்பட்டது. |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் | | | |
| (1) | (2) | (3) | | | (4) | (5) | (6) |
| 1. | சம்பா 1996 | 360 | 375 | 395 | இணைக்கொள்முதல் | 1,34,000 | 10 (வட்டாரக் கிடங்கு கொள்முதல்)<br>5 (நேரடிக் கொள்முதல் நிலையத்தால்) |
| | குறுவை 1996 | 360 | 375 | 395 | ஏகபோகக் கொள்முதல் | 1,11,366 | 40(•) |
| 2. | சம்பா 1997 | 380 | 395 | 415 | ஏகபோகக் கொள்முதல் | 9,77,426 | 50(•) |
| | குறுவை 1997 | 415 | கிரேடு–ஏ 445 | | இணைக் கொள்முதல் | 7,00,659 | 35(••) |
| 3. | சம்பா 1998 | 415 | 445 | | இணைக் கொள்முதல் | 11,36,823 | 35(••) |
| | குறுவை 1998 | 440 | 470 | | இணைக் கொள்முதல் | 44,550 | 35(••) |
| 4. | சம்பா 1999 | 440 | 470 | | ஏகபோகக் கொள்முதல் | 10,50,099 | 50(•) |
| | குறுவை 1999 | 490 | 520 | | இணைக் கொள்முதல் | 1,63,180 | 35(••) |
| 5. | சம்பா 2000 | 490 | 520 | | ஏகபோகக்கொள்முதல் (23–12–1999 முதல் 20–03–2000) | 10,84,980 (20–03–2000 வரை) | 50(•) காவிரிப் பாசன பகுதிகள்<br>35(••) காவிரிப் பாசனப் பகுதி யல்லாத இடங்கள் |
| | | | | | இணைக் கொள்முதல் (21–03–2000 முதல் 30–06–2000) | 82,020 (21–03–2000 முதல் 15–04–2000 வரை) | 35(••) அனைத்துப் பகுதிகள் |

(•) ஊக்கத்தொகை (••) இடை நிகழ்வுச் செலவு

## இணைப்பு—2

### 1998 மற்றும் 1999—ஆம் ஆண்டுகளில் நுகர்வு செய்யப்பட்ட பொது விநியோகப் பொருட்களின் விவரங்கள்

| வ. எண் | மாதம் | அரிசி (டன்களில்) | | சர்க்கரை (டன்களில்) | | மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்) | | கோதுமை (டன்களில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1998 | 1999 | 1998 | 1999 | 1998 | 1999 | 1998 | 1999 |
| 1. | சனவரி | 191701 | 178356 | 23844 | 25424 | 71671 | 74431 | 8321 | 16269 |
| 2. | பிப்ரவரி | 184491 | 170723 | 23857 | 23964 | 71129 | 75438 | 12437 | 12661 |
| 3. | மார்ச் | 172913 | 172834 | 24144 | 25410 | 71726 | 76054 | 12072 | 9477 |
| 4. | ஏப்ரல் | 158723 | 170178 | 23686 | 26232 | 67591 | 76181 | 11072 | 8451 |
| 5. | மே | 155417 | 175209 | 22920 | 26236 | 68517 | 75626 | 11223 | 8682 |
| 6. | ஜூன் | 162081 | 186413 | 24059 | 26664 | 72509 | 76556 | 12174 | 7976 |
| 7. | ஜூலை | 179738 | 197226 | 25039 | 26328 | 74483 | 77644 | 13953 | 8211 |
| 8. | ஆகஸ்ட் | 183567 | 201221 | 25511 | 27393 | 73847 | 78211 | 14364 | 8179 |
| 9. | செப்டம்பர் | 185133 | 201750 | 26064 | 27309 | 76310 | 78504 | 15888 | 8138 |
| 10. | அக்டோபர் | 192290 | 183643 | 28141 | 27012 | 75360 | 75861 | 14683 | 7776 |
| 11. | நவம்பர் | 189499 | 180621 | 24977 | 32233 | 75292 | 76065 | 15590 | 6541 |
| 12. | டிசம்பர் | 192231 | 189839 | 25475 | 25709 | 77137 | 76482 | 15960 | 8356 |
| | மொத்தம் | 2147784 | 2208013 | 297717 | 319914 | 875572 | 917053 | 157737 | 110717 |



## இணைப்பு—3

### 1999—ஆம் ஆண்டில், 1955—ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கு குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்

| வருடம் 1999 | அரிசி | | வெளிச் சந்தை அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர பொருட்கள் மதிப்பு ரூ | மொத்த மதிப்பு ரூ. | சோதனைகளின் எண் | கைது செய்யப்பட்டவர்களின் எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | | | | |
| சனவரி | 2986 | 2941490 | 542 | 805570 | 1945 | 1505394 | 10941 | 92574 | 2958607 | 8303635 | 745 | 74 |
| பிப்ரவரி | 3079 | 3117502 | 414 | 621225 | 10507 | 2835117 | 14259 | 98797 | 2441330 | 9113971 | 804 | 73 |
| மார்ச் | 2099 | 2182279 | 818 | 1236675 | 2356 | 1643465 | 20308 | 207560 | 3085734 | 8355713 | 659 | 91 |
| ஏப்ரல் | 3328 | 2218341 | 948 | 1537190 | 1452 | 1273227 | 17889 | 167745 | 4259613 | 9456116 | 801 | 67 |
| மே | 3125 | 3496678 | 998 | 1470975 | 1566 | 1264528 | 3352 | 325642 | 4098976 | 10656799 | 883 | 104 |
| ஜூன் | 5959 | 6296227 | 352 | 534025 | 2949 | 2378474 | 18905 | 136719 | 6030732 | 15376177 | 921 | 172 |
| ஜூலை | 2479 | 3046980 | 304 | 509750 | 861 | 751550 | 11143 | 76165 | 4280226 | 8664671 | 805 | 148 |
| ஆகஸ்ட் | 3968 | 3420527 | 589 | 852750 | 1786 | 1477546 | 20685 | 196092 | 4512901 | 10459816 | 844 | 122 |
| செப்டம்பர் | 4210 | 4751546 | 463 | 694125 | 2586 | 2509152 | 88520 | 915352 | 5808022 | 14678197 | 986 | 116 |
| அக்டோபர் | 3580 | 3993490 | 594 | 818955 | 2575 | 3218586 | 20568 | 187757 | 2670370 | 10889158 | 958 | 99 |
| நவம்பர் | 4871 | 5617603 | 335 | 552125 | 1035 | 887694 | 11876 | 111322 | 6305027 | 13473771 | 1149 | 114 |
| டிசம்பர் | 4682 | 4638712 | 301 | 451500 | 1261 | 896675 | 21538 | 148631 | 6861220 | 12996738 | 1115 | 155 |
| மொத்தம் | 44366 | 45721375 | 6658 | 10084865 | 30879 | 20641408 | 259984 | 2664356 | 53312758 | 132424762 | 10670 | 1335 |

## இணைப்பு—4

**1999—ஆம் ஆண்டில், 1955—ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்**

| மாதம் | பொ.வி.தி. அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர பொருட்கள் ரூ. | மொத்த மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | | |
| சனவரி | 2226 | 1958139 | 90 | 45750 | 3320 | 18837 | 751165 | 2773891 |
| பிப்ரவரி | 2855 | 3531326 | 942 | 278421 | 8486 | 85213 | 4609046 | 8504006 |
| மார்ச் | 4220 | 1056845 | 492 | 389752 | 30852 | 292539 | 4324681 | 6063817 |
| ஏப்ரல் | 3180 | 1745219 | 145 | 115840 | 7241 | 74802 | 137761 | 2073622 |
| மே | 2692 | 2370372 | 1073 | 422212 | 31192 | 350307 | 17729955 | 20872846 |
| ஜூன் | 3170 | 3065774 | 855 | 513445 | 19848 | 85426 | 763547 | 4428192 |
| ஜூலை | 8053 | 3307133 | 203 | 127689 | 197525 | 127908 | 1249894 | 4812624 |
| ஆகஸ்ட் | 3070 | 3311107 | 322 | 185117 | 9381 | 64225 | 583094 | 4143543 |
| செப்டம்பர் | 3326 | 3297990 | 603 | 180675 | 9551 | 69915 | 309546 | 3858126 |
| அக்டோபர் | 2435 | 2577009 | 493 | 337408 | 25410 | 240436 | 1144517 | 4299370 |
| நவம்பர் | 3391 | 3777277 | 1667 | 1223225 | 20396 | 165265 | 920721 | 6086488 |
| டிசம்பர் | 3973 | 4063353 | 719 | 408346 | 13038 | 93605 | 382745 | 4948049 |
| மொத்தம் | 42591 | 34061544 | 7604 | 4227880 | 376240 | 1668478 | 32906672 | 72864574 |



## இணைப்பு—5

**மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தில் 1999—ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**


| 1999 மாதம் | மேல் முறையீடு மனு | | | | அசல் மனு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நுகர்வோருக்கு | | | | நுகர்வோருக்கு | |
| | தொடுக்கப்பட்டவை | தீர்ப்பு வழங்கப்பட்டவை | சாதகம் | பாதகம் | தொடுக்கப்பட்டவை | தீர்ப்பு வழங்கப்பட்டவை | சாதகம் | பாதகம் |
| சனவரி | 50 | 70 | 20 | 50 | 13 | 12 | 6 | 6 |
| பிப்ரவரி | 70 | 86 | 16 | 70 | 16 | 16 | 8 | 8 |
| மார்ச் | 85 | 77 | 26 | 51 | 21 | 23 | 4 | 19 |
| ஏப்ரல் | 70 | 76 | 37 | 39 | 57 | 23 | 5 | 18 |
| மே | 90 | 11 | 5 | 6 | 42 | 3 | 1 | 2 |
| ஜூன் | 75 | 0 | 0 | 0 | 22 | 0 | 0 | 0 |
| ஜூலை | 160 | 0 | 0 | 0 | 22 | 0 | 0 | 0 |
| ஆகஸ்ட் | 50 | 0 | 0 | 0 | 22 | 0 | 0 | 0 |
| செப்டம்பர் | 103 | 0 | 0 | 0 | 15 | 0 | 0 | 0 |
| அக்டோபர் | 56 | 48 | 20 | 28 | 15 | 3 | 1 | 2 |
| நவம்பர் | 30 | 119 | 53 | 66 | 13 | 12 | 1 | 11 |
| டிசம்பர் | 198 | 0 | 0 | 0 | 34 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 1037 | 487 | 177 | 310 | 292 | 92 | 26 | 66 |

## இணைப்பு—6

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் 1999–ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**

| 1999 மாதம் | தொடக்கத்தில் நிலுவையில் உள்ளவை | தொடுக் கப்பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப் பட்டவை | நிலுவையில் உள்ளவை | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|
| சனவரி | 6323 | 342 | 6665 | 333 | 6332 | 203 | 130 |
| பிப்ரவரி | 6332 | 487 | 6819 | 450 | 6369 | 245 | 205 |
| மார்ச் | 6369 | 625 | 6994 | 400 | 6594 | 200 | 200 |
| ஏப்ரல் | 6594 | 429 | 7023 | 366 | 6657 | 225 | 141 |
| மே | 6657 | 317 | 6974 | 264 | 6710 | 135 | 129 |
| ஜூன் | 6710 | 503 | 7213 | 418 | 6795 | 163 | 255 |
| ஜூலை | 6795 | 517 | 7312 | 344 | 6968 | 155 | 189 |
| ஆகஸ்ட் | 6968 | 352 | 7320 | 302 | 7018 | 189 | 113 |
| செப்டம்பர் | 7018 | 546 | 7564 | 299 | 7265 | 143 | 156 |
| அக்டோபர் | 7265 | 404 | 7669 | 331 | 7338 | 167 | 164 |
| நவம்பர் | 7338 | 483 | 7821 | 410 | 7411 | 190 | 220 |
| டிசம்பர் | 7411 | 559 | 7970 | 537 | 7433 | 219 | 318 |
| மொத்தம் | 81780 | 5564 | 87344 | 4454 | 82890 | 2234 | 2220 |






படம் 1
FIG. 1